
# பாரதத்தில் செழித்த வைணவம்



த. கோவேந்தன்

# பாரதத்தில் செழித்த வைணவம்

- ஒரு தத்துவப் பார்வை -

த. கோவேந்தன்

வேமன் பதிப்பகம்
19, நியூ காலனி, ஜோசியர் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
☎ 2821 1134

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| பெயர் | பாரதத்தில் செழித்த வைணவம் |
| தொகுபபு ஆசிரியா | த கோவேந்தன் |
| உரிமை | பதிப்பகத்தாருக்கே |
| மொழி | தமிழ் |
| நூல வகை | வரலாற்று ஆன்மீகம் |
| பதிப்பு | முதற்பதிப்பு |
| பதிபபாணடு | 2005 |
| தாள | 14 4 கி கி வெள்ளைத் தாள் |
| நூலின அளவு | டெம்மி (14 x 21 5 செ மீ) |
| எழுத்து | 12 5 புள்ளி |
| பக்கம் | 176 |
| வெளியீடு | **வேமன் பதிப்பகம்**<br>9, நியூ காலனி, ஜோசியர் தெரு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34<br>☎ 2821 1134 |
| ஒளியச்சு | வேமன் பிரிண்டர்ஸ்,<br>சென்னை |
| அச்சு | ரவிராஜா ஆப்செட்,<br>சென்னை – 14 |

**விலை : ரூபாய். 70.00**

# பதிப்புரை

**வை**ணவ இலககிய உலகில் தம் எழுத்துப் பணியில் பல நூல்களை ஆழ்வாாகள் ஆயவு மையம் மூலம் வெளிகொணாந்தவா் மறைந்த தமிழறிஞா் புலவா் த. கோவேந்தன. தம் இறுதிகாலத்தில் எழுதிய நூலே உங்கள் "கைகளில தவழும்" பாரதத்தில செழித்த வைணவம என்ற நூல்.

எழுததுப் பணியை தம் இறுதி நாள் வரை இடையறாது சோா்வினறி செய்தவா் புலவா் த. கோவேந்தன் தம் இறுதிக் காலத்திறகுள் இந்நூல் வெளிவர மிகுந்த ஆா்வம் கொண்டிருந்தாா். ஆனால் இயலவில்லை. அவா் மறைக்குபின் அவரது இரண்டாம் புதல்வா் எழிலமுதது இதனை செபபனிட்டு நூல் வடிவம் பெற பெரிதும் உதவினாா். அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனறும் நனறி.

வைணவ இலக்கிய உலகில் இந்நூல் தனி முத்திரையைப் பதிக்கும் என நம்புகிறேன்.

அன்புடன

**எல். ஆர். வேலாயுதம்**

# மகன் தந்தைக்காற்றும் உதவி...

**வை**ணவம் உலகம் தமிழுக்கு தந்த அருட் கொடைகள் ஏராளம். தமிழ் மொழிவளத்தில் எண்ணிலடங்கா சொற்பெருக் கினை அள்ளி அள்ளி வழங்கியது வைணவ இலக்கியங்கள்.

வைணவம், இறை உணர்வில் இந்தியா முழுதும் உள்ள மக்களை ஒன்றிணைத்தது; வளப்படுத்தியது; செழுமைக்கு வித்திட்டது எனலாம்.

இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுககும மூதத மொழி களான சமஸ்கிருதத்திலும், தமிழிலும் வைணவ சமயத்தின் இலக்கியங்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளர்ந் தன; செழித்தன, அதன்விளைவாய் சமஸ்கிருதத்திலிருந்து விஞ்ஞானம், வேதங்கள், சாஸ்தி ரங்கள், சித்தாந்தங்கள் தமிழில் உருவாகி தமிழுலகுக்கு, தமிழ் மக்களுக்கு அரும்பெரும் காவியங்கள், நாடகங்கள்கிடைத்தன.

தமிழ்மக்களின் உள்ளத்தில் இறை உணர்வை, தமிழ் உணர்வை போதித்து மனத்தளவில் மனிதனை செழுமை படுத்தின. இதனின் வெளிப்பாடாய் பாரதி தமது வாக்காக, போதமாக" ஆன்ற மொழியினுள்ளே உயர் ஆரியத்துக்கு நிகரென வாழ்ந்தேன்" என்று பாடுகிறார்.

வைணவ நெறியல் இராமானுஜர் காலத்துக்குப் பின் அது புதுவடிவமும், புதிய உத்வேகமும் பெற்றது. இராமனுஜரது விசிஷ்டாத்வைதம் மனிதர்களிடத்தில் அன்பு நெறியையும், ஒருமைப்பாட்டையும் இணைத்து இறை உண்மையை வெளிப்படுத்தியது.

இராமனுஜர் காலத்துப் பிறகு தமிழகத்தில் வைணவம் இரு வேறு கருத்துமுறைகளை கொண்டிருந்தாலும். இருமையில் ஒருமையை கொண்டாடியது அது மட்டு மல்லாது அவருக் குப் பின்தோன்றிய இராமனந்தர் இநதியாவின் வடக்கே வைண வத்தை பரப்பி பஞ்சாப், வங்கம் முதலிய பகுதிகளில் ஒரு இயக்கமாக உருவெடுத்தார்.

இராமானந்தரைத் தொடர்ந்து கபீர், தாது, துளசிதாஸ், ஸ்ரீசைதன்யர், ஞானதேவர், நாமதேவர் ஆகியோர் வைணவ நெறியை அவரவர் சித்தத்துக்கு ஏற்ப செழுமைப் படுத்தி இந்தியாவின் சமயவளர்ச்சிக்கும், மெய்ப் பொருளியில் வளர்ச்சிக்கும் மனிதனின் உள்ளுணர்வினை செழுமைப் படுத்தி உண்மை, அன்பு, மனிதநேயம், அழகு ஆகிய நிலைத்தப் பண்புகளின் நிலைக்களனாய் நின்று பெருந் தொண்டாற்றினர்.

இதற்குகெல்லாம் மூலகாரணமான வடமொழியில் அதாவது சமஸ்கிருதத்தில் உருவான வேதம் மனிதனின் அறிவு சிறப்பினை செழுமைப்படுத்தி இறைவன் மனிதனுள் ஒருவனாகவும், மனிதனே இறைவனாகவும் இரண்டரக் கலந்து உலகில் அன்பு, அறநெறியை போதித்தது. இதனாலேயே சமஸ்கிருத்ததை "வேதம் நன்றாக செய்யப் பெற்ற முழுமையான மொழி" என்று கூறுகின்றனர். இத்தகைய செழுமை பெற்ற வைணவத்தை தமக்கே உரிய நடையில் ஆய்ந்துள்ளார் என் தந்தையார் புலவர் கோவேந்தன்.

இராமனுஜரை தொடர்ந்து சமய இலக்கியத்தில், வைணவ நெறியில் இறையைத்தேடிய சான்றோர்களின் இலக்கியப் பணியை, மக்கள் பணியை மேற்கொண்ட இந்திய சமய பெரியோர்களின் கருத்தியலை, இறை நெறியியலே ஆய்வு நோக்குடன் விவரித்துள்ளார்.

தம் இறுதிக் காலத்தில், மருத்துவ மனையில் சேரும் முன்பு இந்நூலை எழுதி முடித்து அச்சுக்கு தயார் நிலையில் வைத்திருந்த தந்தை நூல் வடிவம் பார்க்காமலே காலமானார்.

வைணவ நெறி என்பது தமிழக மக்களுக்கு மட்டும் உரியது அல்ல. அது இந்தியாவும் ஏன் உலகுக்கும் அதனை ஒழுகும் மக்களுக்கும் வழிகாட்டும் நெறி என்பதை இந்நூல் விவரிக்கிறது.

இதனை வெளியிட முன்வந்த விக்னேஷ் வெளியீடு பதிப்பகத்தார் வேலாயுதம் அவர்கட்கு தமிழ் கூறும் வைணவ உலகம் பாரட்டும், போற்றும்.

அன்புடன்

**கோ. எழில்முத்து**

# பொருளடக்கம்


| | பக்க எண். |
|---|---|
| 1. கடவுள் கருத்துலகம் | 7 |
| 2. உண்மையைப் பற்றிய கொள்கை | 18 |
| 3. பிரபஞ்ச ஆராயச்சி | 31 |
| 4. உள்ளத்தியல் | 33 |
| 5. விடுதலைக்கு வழி | 39 |
| 6. மாத்வரின் பிரம்ம மெய்ப்பொருளியல் | 55 |
| 7. பிரம மெய்ப்பொருளியல் விளக்கம் | 77 |
| 8. பிரம்ம பொருளியலின் வளர்ச்சி | 89 |
| 10. வைணவக் கொள்கையில் வேதாந்தம்... | 95 |
| 11. வல்லபரின் வைணவ வேதாந்தம் | 117 |
| 12. சைன்யரின் பேதா பேதம் | 145 |

# கடவுடன்
# கருத்துலகம்

இன்னும் வேதாந்தம் நம்மிடை வாழ்கின்ற மெய்ப்பொருளாக விளங்குகிறது. வேதாந்தம், பெரு வழக்கத்தின் ஊடாக விளங்குதற்குக் காரணம் வேதாந்தம் தனித்த கொள்கையாக மட்டும் அல்லாமல் வாழ்க்கை நெறியாகவும் இயல்பாக ஆய்கின்ற ஆழ்ந்த சிந்தனை யாகவும், வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்துக்கு உரிய வழியாகவும் வேதாந்தம் விளங்குகிறது. வேதாந்தக் கருத்துமுறைகளுள் மூன்று கருத்து முறைகள் பெரிதும் ஆளுமையுடையன. அவை அத்துவிதம், துவிதம், விசிஷ்டாத்தைவிதம் என்பனவாகும்.

அத்துவிதம், பெருவழக்கத்தில் இருத்தலால் வேதாந்தம் சில சமயங்களில் அத்துவிதம் என்றே கருதப் பெற்றது. துவிதம், கடவுட்கொள்கையை மெய்ப்பொரு ளியல் முறையில் மிகவும் சிறப்பாக விளக்குவதாகும். துவிதத்தில் சில சித்தாந்தங்கள் பிடிவாதமாகக் கடைப் பிடிக்கப் பெறுகின்றன. உலகம் உண்மையை என துவிதம் ஏற்கின்றது. எனினும் துவிதம் இறை உண்மையை ஏற்கும் மெய்ப்பொருளை முறையில் மிகவும் சிறப்பாக விளக்கு கிறது. துவிதத்தில் சில சித்தாந்தங்கள் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. உலகு உண்மையைத் துவிதம் ஏற்கின்றது. எனினும் துவிதம் இறை உண்மையை ஏற்கும் மெய்ப்பொருளின் விளக்கங்களின் சிறந்த

ஒனறாகக கருதப்படுகின்றது. இராமனுஜரின் விசிஷடாத் வைதம் அன்பு நெறியிலேயையும இறை உண்மையையும் ஒருங்கினாணந்து ஒறறுமை உணர்வை வழங்குவதாகும். இரு வேறு கருததுகளிடையே இணககம காணும் கருதது முறைகளை பினபற்றுவோராலும திறன ஆய்வோராலும் பகுத்துணரப் பெறுகின்றன.

விசிஷடாதவைதம சமய உலகில் ஸ்ரீ வைஷ்ணவம் எனப்படும, மெய்ப்பொருளியலை நன்கு விளக்குகின்ற ஞானிகள் பலர் விசிஷ்டாத வைததைச் சிறப்போடுகூடிய அத்துவிதம் என்றும், தழுவிய அத்துவிதம் என்றும் குறிக்கின்றனர்.

இவர்கள் விசிஷ்டாத்வைதத்தின்முக்கியக் கொள் கையாக விளங்குகின்ற ஒன்றை ஊடாக மறக்கின்றனர். விசிஷ்டாத்து விதத்திற்கு ஜீவன் பொருளாகவும் அடை யாளகவும் ஒருங்கே விளங்குகிறான். இதனை மறுத்து விசிஷ்டாத் வைதத்தை சிறபபோடு கூடிய அத்துவிதம் என்றோ அடை மொழிகேற்ற அத்துவைதம் என்றோ கூறுவது பொருந்தாது.

துவைதம், ஜீவனும் பிரமமும் வேறுபட்டிருப்பதை வறுபுறுததுகின்றது. பேதாபேதம் என்பது ஜீவனும் பிரமமும் ஒன்றே என்றும்; ஜீவனும் பிரமமும் வேறு பட்டன என்னும் ஒருங்கே வற்புறுத்துகின்றது. பேதாபேதம் என்பது 'அனைத்து இறைக் கொள்கையாகும்' Pantheism விசிஷ்டாத்வைதம், துவைதம், பேதாபேதம் அனைத்து கொள்கையவற்றின் வேறானதாகும். ஏனெ னில் இறைவன் அனைத்துயிர்களிலும் அகத்தே, ஆன்மாவாக விளங்குகின்றார் என்றும் அகத்து விளங்கு வதோடு இறைவன் அனைத்து உயிர்களையும் கடந்து விளங்கு கின்றார் என்றும் கூறுகிறது.

உள்பொருளும அதன பண்பும் ஒன்றே. பிரமம் எல்லையற்றது. அதே சமயததில் எலலைக்குட்பட்டும்

ஆனமாவை அழிக்காது. அதன் எல்லைகடடபட்ட தன்மையை மாற்றி எல்லைக்குடபடடு பிரமமாகச செய்ய வல்லது இது; இவற்றால் உளபொருள் பிரமம ஏனப பெறும். தொன்று தொடடு விசிஷடாதவைதம் மரபுகளோடு தொடர்புடையதாகும். வரலாற்று வளர்சசி குடபடடு விசிஷ்டாதவைதம சிறநத விளககம பெற்றுளளது. இககாரணஙகளால். விசிஷ்டாதவைதம என்ற மரபுகளோடு தொடாபுடையதாகும். வரலாறறு வளர்ச்சி நிலைகளில விசிஷ்டாத்வைதம் சிறந்த விளககம பெற்றுள்ளது. இக்காரணங்களால் விசிஷ்டாதவைதம் முக்கியமாகச் சமயம் குறித்த மெய்ப்பொருளியலாகும்; இதில் அறிவும் நம்பிக்கையும் ஒன்றி, இது அறிவினால் பெற்ற நம்பிக்கை ஆகிறது.

“எநத ஒன்றை அறிவதால் அனைதையுமஅறியலாமோ, அநத ஒன்று யாது?” இது குறிதத சிக்கலை ஆய்வதே விசிஷ்டாத்வைததின் குறிககோளாகும. விசிஷ்டாத்வைதம் மேற்குறிதத கேள்விக்குத் தரும் விடை; ‘பிரமம்’ என்பதாகும். பிரமத்தை அறிவதால் அனைத்தையும் ஒருங்கே அறியலாம் என்பது பொருள். உள் பொருள் அறியக்கூடியது; உணரக் கூடியது; அறிவால் உணர்ந்து கொள்ளதக்கதன்று எந்த ஒன்றை அறிந்தால் எல்லாவறறையும் அறியலாமோ, அந்த ஒன்றை அறிகின்ற முறைமையைப் பற்றிய பழைய விளக்கம், தைததிரீய உபநிடத்தில் வருணனுக்கும் அவரது மகன் பிருகுவிறகும் இடையே நிகழந்த உரையாடலில் காணப்பெறுகிறது. இவ்வுரையாடலில் ஆசிரியராக விளஙகும் வருணன்; சீடனிடம் இருந்து படிப்படியே உண்மையினை வெளிப் படுத்துகிறார். பிரமம, அனனமயம பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம, ஆனந்தமயம் எனறு படிப் படியாய் உரைக்கச் சீடன கறறலின் முறையின் மூலம் உண்மையினை உணரத் தலைப்படுகின்றான்.

விசிஷ்டாத்வைத வரலாறு மற்றைய வேதாந்தக் கருத்து முறைகளைப் போலவே நினைவுகூற முடியாத

தொல் மரபினைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளது விசிஷ்டாத்வைதம் மூன்று நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது உபநிடதங்களைத் தந்த பெரியோர், தம் உள்உணர்வினால் தெளிந்த உண்மைகளை முறைப் படுத்தி வேதாந்த சூத்திரங்களாக அமைத்த பாதராயணர், உபநிடத உட்கிடைமை விளக்கும் பகவத்கீதையின் ஆசிரியரான கிருஷ்ணர் ஆகியோர் விசிடாத்வைத்தால். தலைமையிடத்தைப் பெற்றனர். விசிஷ்டாத்வைத்தை வர லாற்று முறையில் முதலிலே விளக்கியவர் இராமனுஜரே.

இராமனுஜர், பிரம சூத்திரங்கட்குப் பேருரை கண்டவர். இப்பேருரைகள் வேதாந்த சங்கிரகம் எனவும், ஸ்ரீபாஷ்யம் எனவும் வழங்கப்பெறும் இப்பேருரைகட்கு இராமனுஜர், ஆசானாக இருந்து போதாயன விருத்தி யையும், பிரமிடர், தங்கர், குகதேவர் ஆகியோரது முற்பட்ட போதனைகளையும் தாம் ஆதாரமாகக் கொண்டுள்ள தைக் குறிக்கிறார். மேலும், ஸ்ரீவைஷ்ணவத்தின் தலை சிறந்த அனுபூபதியாகிய நம்மாழ்வார் போதனை களையும் இராமானுஜர் மேற்கொண்டுள்ளதைக் காணலாம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கி.பி. 824-ல் பிறந்த நாதமுனி, வடபுலத்தில் வழங்கிய பாகவத மரபினைச் சேர்ந்தவர் ஆவர். நாதமுனி, ஆழ்வார்களது தெய்வீகத் தமிழ்ப் பாடல்களை வேதாந்த நிலைக்கு உயர்த்தினார். உபயவேதாந்தம் என்னும் போதம் இதற்குத் துணை நின்றது. உபயவேதாந்தம் அக உணர்வினின்று எழுகின்ற மொழியையே உண்மையான ஆன்மிக மொழி எனக் உரைகின்றது. அவை பேச்சு வழக்கில் உள்ள வெறும் சொற்கள் அல்ல: (அவற்றைச் சொற்பொருளில் கொள்வதைவிட அச்சொற்களின் உட்பொருள் நாடி உள் உணர்வினின்றும் பிறந்தன எனக் கொள்ள வேண்டும்). நாதமுனிக்கு அடுத்து விசிஷ்டாத்வைதத்தைப் போதித் தவர் ஆளவந்தாராவர். ஆளவந்தார் நாதமுனியின் பேரர். விசிஷ்டாத்வைதத்தை விளக்கி வேதாந்த உண்மைகளை

நிறுவும் பாஞ்சராத்ரங்களை நிலைபெறச் செய்தார். இவர் இராமனுஜர் ஆளவந்தாருக்குப் பிறகு வேதாந்தத்தை விளக்குகின்ற விசிஷ்டாத்வைத்தின் சிறந்த ஆசிரியராக விளங்கினார்.

சங்கரர் பௌத்த நிர்வாணத்தைப் புதிய முறையில் விளக்கி, அத்வைத உண்மையை மெய்ப்பித்தார். சங்கரருக்குப் பிறகு தோன்றிய பாஸ்கரர், சங்கரது மாயக் கொள்கையினைக் தனது உபாதிக் கொள்கையினாலும் பேதாபேதக் கொள்கையாலும் மறுத்தார். பாஸ்கரருக்குப் பிறகு தோன்றிய யாதவர், பேதாபேதத்தைப் பெரிதும் ஏற்புடையதாக உலகு உண்மையை வற்புறுத்துவதாகச் செய்தார். இப்பொழுது இராமானுஜர் மெய்ப்பொருளிய லுக்குப் புதிய திருப்பம் தந்து இவற்றை இணைத்துக் காணும் தொகைக் காட்சியை வழங்கும் அன்பின் மெய்ப்பொருளியலை நிறுவவேண்டுவதாயிற்று.

இராமானுஜருக்குப் பிறகு சிறிது காலத்திற்குள் உபய வேதாந்தம் என்பதன் பொருளைப் பற்றி முரண் பாடுகள் தோன்றின. ஈஸ்வரனது இயல்பும், ஸ்ரீ என்பதன் இயல்பும் பக்தி, பிரபக்தி ஆகியவற்றின் பொருளும், கருத்து வேறுபாட்டுக் காரணமாயின. வேதாந்த தேசிகர் உபய வேதாந்தத்தின் இரு கூறுகளையும் ஒன்றுபடுத்தினர். பிள்ளைலோகாச்சாரியார் தமிழ் வேதாந்தத்தை வற்புறுத் தியவர், கடவுள் ஒருவரே என்றும் அவர் திருவருள், ஆற்றல் நிறைந்தவர் என்றும், இறை பணி நிற்றல் சமுதா யத்திற்கு அவசியம் என்றும் பிள்ளை லோகாச்சாரியார் வலியுறுத்துகிறார்.

உள்பொருள் (தத்துவம்) நன்மை (ஹிதம்) புருஷார்த் தம் அல்லது குறிக்கோள் என்ற தலைப்புக்களில் உப நிடதங்களில் விளக்கிய முறையைப் பின்பற்றியே விசிஷ்டாத்வைதம் இங்கு விளக்கப்பெறுகிறது. உபநிடத் தில் "பிரமத்தை அறிபவன் உயரிய நிலையை அடை வான்" என்றும் உள்பொருள் அல்லது தத்துவத்தின்

அறிவைப் பிரம்மாகவும், 'அசித்' என்றும் 'சித்' என்றும் அறிவதைக் குறிக்கிறது. பிரமத்தை அடையும் நெறி ஹிதம்' என்பதாகும். இவற்றைப் பற்றிய விளக்கம் விசிஷ்டாத் வைத்தில் அமைகிறது.

"நான் அறியக் கூடியது யாது?" "நான் செய்ய வேண்டுவது யாது? நான் எதிர்பார்க்கக்கூடியது யாது?" இவ்வாறு கருதுவதால், ஐயக் கொள்கை தவிர்க்கப் பெறுகிறது. புலன் கடந்த பொருளியல், அற இயல், சமய இயல் ஆகியவை ஒற்றுமை பெறுகின்றன. புலன் கடந்த பொருளியல், ஆய்வியலையும் உட்படுத்துகிறது. பிரமாணங்களை முறையாக ஆய்வதை யும், உள்பொருள் ஆய்வையும் புலன் கடந்த பொருளியல் ஒருங்கே கருந்துகிறது.

விசிஷ்டாத்வைதத்தில் காணப்பெறும் அற இயல் கருத்துகள் பிரமத்தை அறியும் சாதனங்களை அல்லது வழிகளைக் குறித்தனவாகும். விசிஷ்டாத்வைதத்தில் காணப்பெறும் அற இயல் கருத்துகள் பிரமத்தை அறியும் சாதனங்களை அல்லது வழிகளைக் குறிப்பனவாகும். விசிஷ்டாத்வைத்தில் காணப்பெறும், சமய உண்மைகள் முக்தியின் இயல்பை விளக்குவனவாகும்.

**அறிவு ஆராய்ச்சி இயல்**

உள் பொருள் அறியக் கூடியது. இக் கருத்து விசிஷ்டாத்வைத அறிவாராய்ச்சியியலை அறியத் திறவு கோல் போன்றதாகும். அறிவைத் தரிசனம் என்ற விரிவான பொருளில் கொள்ள வேண்டும். அது புலக்காட்சியால் கண்டவை, வழியளவையால் ஊகித்து அறிந்தவை, உள்உணர்வால் அறியும் பிரமஞானம் ஆகிய அனைத்தையும் உள் அடக்குவதாகும். உள்ளதிற்கும் அறிவதற்கும் இடையே நிரப்பவொண்ணாத இடைவெளி இருக்குமானால், அறிவதற்கு ஏதும் அமையாது. ஐயக் கொள்கை தவிர்க்க வொண்ணாதது ஆகும்.

'காண்ட்' அவர்கள் கூறும் உண்மை உலகுக்கும் தோற்ற உலகுக்கும் உள்ள மாறுபாட்டில் இந்த இடை வெளியைக் காணலாம். 'பிராட்லி' அவர்களது உள்பொருளுக்கும், தோற்ற உலகுக்கும் உள்ள மாறு பாட்டில் காணலாம்; சங்கரரது கடந்த உண்மைக்கும் (பாரமார்த்திக சத்தியம்) அனுபவ உலக உண்மைக்கும் (வியவகாரிக சத்தியம்) உள்ள வேறுபாட்டில் காணலாம். இவ்வாறு 'காண்ட்', 'பிராட்லி' 'சங்கரர்' போன்றோர் உண்மை உலகை அனுபவ உலகினின்று பிரித்து உணர்த்த வேண்டியவர் ஆயினர். இவ்வாறு வேறுபாடுகள் கண்டு விளக்க வேண்டிய இக்கருத்தினை இராமானுஜர் தவிர்க்கிறார்.

புலக்காட்சி, விஞ்ஞானம், மெய்ப்பொருளியல் ஆகிய மூன்று நிலைகளில் அறியப்படும் அறிவினை ஏற்புடையதாகக் கொள்கிறார். இம்மூன்று நிலைகளை யும் இராமானுஜர், பிரமம் உடனாக உணரப்பெறுவது என அறிதற்குத் தக்கனவாகக் கொள்கின்றார். முழுமையுடையது, அளவை நெறி நின்று பிரமத்தைப் பரமப் பொருள் என அறிதல் பிரம ஜிக்ஞாசம் (Brahma Jijnasasam) எனப்படும். இவ்வாறு அறிதல் பிரமத்தை உள் உணர்வினாலே அடைவதற்கு .வழிகாட்டும். (Brahmanuvaba) உள்பொருள் ஒன்று என்று உறுதியாக அறிதல், அறிவாகும். உள்பொருளை மறுப்பதும் உண்டு என்பதையும் இது ஏற்பதாகும். (உண்மையை ஒத்துக் கொள்வதாகும்) பிரமம் உண்மை ஆனால், பிரமத்தில் ஊன்றிய இவ்வுலகம் உண்மையாகும். நாம் பகுதியான ஒன்றினின்று முழுமை யான ஒன்றினை அறியலாம்.

அறிவினை அளத்தற்குரிய கருவியாக உண்மை அறிவினுள்ளே அமைகிறது. உண்மை உள்ளதாக இருக் கின்றது; படிப்படியே முழுமை அடைகிறது. உள்ளத் தினுடைய, என்றும் உள்ள பண்பாக, உண்மையை உணர்வதே முழு உணர்வாகும். இவ்வுணர்வினை அடை

தற்கு இராமானுஜர் பிரமத்தை அறிதற்குரிய வழிகள் அனைத்தையும் பயன்படுத்துகிறார். 'தர்ம பூதஞானம்' என்னும் தத்துவத்தைப் பயன்படுத்துகிறார். அளவை நெறியில் 'அப்பிரதக் சித்த விசேஷணம்' என்பதைப் பயன்படுத்துகிறார். இலக்கணச் செய்தியான 'சாமானாதி கரண்யம் என்பதைப் பயன்படுத்துகிறார். உலகு உண்மையை ஏற்கும் சத்கரியம்' என்பதைப் பயன்படுத்து கிறார்.

தர்மபூதஞானம் பற்றிய கொள்கை அல்லது அடைமொழிகேற்ற உணர்வு, ஆன்மாவிற்கு உரியது. இது விசிஷ்டாத்வைத அறிவு ஆராய்ச்சி இயலில், அடிப்படைக் காரணமாக உள்ளது; அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகின்ற ஒன்றைக் குறித்தாக விளங்குகிறது. தோன்றுகின்ற புற உலகு; ஆன்மா, பிரமம் ஆகிய இவற்றின் இயல்பைக் குறித்த விளக்கத்தைத் தர்மபூத ஞானக் கொள்கை தருகிறது.

ஆன்மாவிற்கு உணர்வு இன்றியமையாத பண்பாகும். உணர்வு என்பது ஆன் மாவைக் குறிப்பதே ஆகும். உணர்வின்றி ஆன்மா தன்னைத்தான் உணர்தல் இயலாது. ஆன்மாவினின்று உணர்வையும், உணர்வினின்று ஆன்மா வையும் பிரித் தறியலாம் எனினும் இவ்விரண்டும் பகுக்க ஒண்ணாதவை.

தன்னுணர்வு என்பது உணரும் ஆன்மாவைக் குறித் தாகும். ஆன்ம உணர்வையும் குறிக்கும்; அடிப்படையாக விளங்கும் அறிவையையும் குறிக்கும். பண்பாக விளங்கும் அறிவையும், இங்குப் பிரித்து அறிய வேண்டும். விளக்கின் ஒளியும் போல ஆன்மாவும், ஆன்ம உணர்வும் அமைகின்றன.

ஞானம் என்பது பொருளாகவும், பண்பாகவும் விளங்குகிறது. கதிரானது ஒளி கதிரவனின் பண்பாகும். அதே சமயத்தில் பல நிறங்களில் நிலைக்களமாகவும்

கதிரவன் ஒளி அமைகிறது. அனுபவ நிலையில், ஞானம் என்பது அகந்தையால் மறைகிறது; கருமத்தால் செயலிழ கிறது. பிறப்பொருள்களை புலப்படுத்துகிறது அகநிலை கட்குப் பிறப்பிடமாகின்றது; உள்ளத்து இயலால் ஆராய் கின்ற இயல்பு, இயல்பு இறந்தது, புலன் கடந்த பொருள் இயலைச் சார்ந்தது அகிய மூவகை மணநிலை களையும், இயல்பூக்க நிலையிலிருந்து, இயல்பு கடந்த பேருணர்வு நிலைவரையிலும் அனைத்தையும் ஒருங்கே ஞானம் கருதுகிறது.

மூவகை ஞான நிலைகள், விழிப்புணர்வு, கனவு, நல்லுறக்கம் ஆகியவை உள்ளத்தியல் கருத்துப்படி ஒரே வகை ஞானத்தின் வேறுபாடுகளாகும். இந்நிலைகள் தொடர்ச்சியாக அமைவன. ஒன்றுக்குள் ஒன்று முரணான அவித்தை, கருமம் ஆகிய தளைகளினின்று ஞானம் விடு தலை அடைகிறபொழுது விரிவுறுகிறது. பிரமத்தை உணரும் முழுமை பெற்ற உணர்வாக மலர்கிறது. (பிரம்மானுபவம்).

விசிஷ்டாத்வைதிகள் ஞானத்தைப் பற்றிக் கூறுவன வற்றை மேலே கண்டே அச்செய்திகளை நினைவிலே வைத்துத் தீர்ப்பு அல்லது இவற்றால் பெறும் கருத்து எவ்வாறு வழங்கப்பெறுகிறது என்பதைக் கண்டோம். ஆன்மா, என்றென்றும் தன்னொளியோடு கூடியது. ஆன்மாவின் இவ்வொளி ஞானமாகும். இது கருமத்தால் வரையறைக்கப்படுகிறது இந்த ஒளி அல்லது ஞானம், புற உலகைப் புலப்படுத்துகின்றது. புற உலகப் பொருள் களைத் தனித்தனியாகவோ அல்லது முழுமையாகவோ புலப்படுத்துகின்றது. தீர்ப்பு என்பது ஆன்மாவின் தன்னுனார்வினால் ஏற்படும் பிளவாகும். விளைவதாகும் காட்சிக்கு உரியதான தொட்டு அறியக்கூடிய புறவுலகால் தானே அமையும் பதிவு அன்று. அனைத்து வகை அறிவும் 'சவிகற்ப' அறிவேயாகும். இவ்வறிவு வரையறையுற்ற அறிவாகும். நிருவிகற்ப அறிவன்று.

நிருவிகற்ப அறிவு என்பது வரையறையற்ற காட்சி யாகும். இக்காட்சியில் வேறுபாடுகள் புலப்படுவது இல்லை. புறப்பொருள்கள் உணர்வதன் பொருட்டே இருப்பன என்பது, இராமானுஜர் கருத்து; அவை நமது உணர்வினுள் இருப்பன அல்ல.

ஞானம் புறப்பொர்ருள்களை ஒளிரச் செய்து புலப்படுத்துகின்றது. அறிவு ஆராய்ச்சி இயலிலே ஒரு கருத்துமுறை உலகு உண்மையை வற்புறுத்துவதாகும். மற்றொரு கருத்துமுறை புறஉலகு ஒருவனது கருத்தில் மட்டும் அமைவது என்னும் கருத்து முதற்கொள்கையை வற்புறுத்துவதாகும். இவ்விரு கருத்து முறைகளும், இருவேறு கருத்து எல்லைகளை உணர்த்துவனவாகும்.

முற்றிலும் மாறுபடுகின்ற இந்த இருவேறு கருத்துக்களைக் கொள்வதனால் நேரும் இடர்பாடினை, இராமனுஜர் தவிங்க்கின்றார். புறப்பொருள்கள் ஆன்மா உணர்வதன் பொருட்டே என்றும் புறப்பொருள்கள் உணர்வினுள் இருப்பன அல்ல என்றும் விளக்கி அவ்விடர்ப்பாட்டை எளிதில் தவிர்க்கின்றார். உலகு உண்மைக் கருத்தானது பொருள் புறத்து அமைவது என்றும், உணர்வினால் தெரிந்துகொள் என்றும் அமைகின்ற பொழுது பொருந்துலதேயாகும்

'புறஉலக உண்மை' கருத்தினால் ஆக்கமுறுவது என்று கூறினால் பொருந்தாது. கருத்து முதற்கொள்கை, உலகத்தைப் பற்றிய உணர்வு, புற உலகம், புறத்தே இருப்பதைக் கொண்டுணர்ந்தது அன்று. அதற்கு முன் னரே உள்ளது என்பதை வற்புறுத்துவதாகும். கருத்தி னால் ஆக்கமுற்றது புறவுலகு என்ற அளவில் கருத்து முதற்கொள்கை உண்மையாகும். உணர்விற்கு அயலாகப் பொருள் புறத்தே அமைவது என்பதைக் கருத்து முதற் கொள்கை மறுக்கிறதே.

அறிவு எப்பொழுது எழுகிறது? ஆன்மா, அல்லது 'சித்' என்பது ஆன்மா அல்லாத அல்லது 'அசித்'

என்பதனோடு உணர்வோன், உணரப்படும்பொருள் என்ற உறவிலே, அமைகிற பொழுது அறிவு எழுகிறது. ஒவ்வொரு தீர்ப்பின் அடிநிலைப் பொருளாக அமைவது, உள்ளத்தின் முழுமையுயாகும். இந்நிலையில் ஆன்மா பரமாத்மனாக்கும் அனைத்துச் சிந்தனையாளர்களுள் ளும், பொருள்களுகுள்ளும் ஒளிர்வதனாலும் இவை யனைத் தையும் கடந்த நிலையில் இருப்பது பரமாத்மா.

பரம் பொருள் குறித்து அடைமொழிகேற்ற கொள்கை, பிரதக்சித்த விசேஷ கொள்கை எனப்படும். இக்கொள்கை தீர்ப்பின் கருத்தை உண்மை நிலையில் (Ontological) உள்ளவாறும், அளவை நிலையில் (Logical) உள்ளவாறும் வெளிப்படுத்தும். "மனிதன், அறிவு உடையவன்" என்னும் உரையில் பயனிலையாக உள்ள அறிவுடைமை என்பது எழுவாயினின்று பிரிக்க வொணாத அல்லது முக்கியமான பண்பாகும்; எழுவாய் ஆகிய பொருளோடு தொடர்பு படுத்துவது மட்டும் அன்று பண்பு, பொருளில் தங்குகிறது; பொருட்தன்மையில் பங்குகொள்கிறது.

பண்பு பொருளினின்று வேறுபடினும் பொருளின் தன்மையில் பங்குகொள்கிறது. ஆன்மா அறிவுகொண்டு சிந்தனையை உருவாக்குகிறது. ஆன்மா விற்கு அறிவு பிறவுறாத பண்பாகும். அளவை, (பிரகாரம்) உள்ளத்தின், இயலில் வேர் கொண்டுள்ளது. ஒவ்வொரு உரையும் உள்பொருளை எழுவாயாகக் கொண்டுள்ளது. அளவை நெறியில் அறிவோனாக ஆன்மா அமைகிறது. (சித்) இவ்வான்மாவிற்கு அறிவு அல்லது உணர்வு பண் பாகிறது. சைதன்யம், உள்பொருள் குறித்த இயலில் பிரமம், அறியும் ஆன்மாவிற்கு,. ஆன்மாவாக அல்லது பரம் பொருளாக அமைகிறது (பிரகாரின்).

ஞனம் என்பது பண்பும் பண்புப்பொருளும் ஆவது போல,ஆன்மாவும் (சித்) பண்பும் பண்புடைப் பொருளு

மாகும். பரம்பொருளின் அல்லது பிரமத்தின் அடைமொழியாக ஆன்மா அமைகிறது. அளவை நெறியில் ஆன்மா பிரமத்தின் பிரகாரமாக அமைகிறது. அறநெறியில் ஆன்மா தனித்தன்மை பொருந்திய 'மொனடாக' (Monad) விளங்குகிறது. ஒவ்வொரு ஆன்மாவும் தனக்கென ஒரு தனித்தன்மையினை உடையதாகும். ஆன்மா, பரம்பொருளின் உறுப்பாகவும், உயிர்ப் பொருளாகவும், ஒருங்கே உள்ளது.

மேற்குறித்த உண்மையினை இலக்கண விதிகளும் வெளிப்படுத்துகின்றன. இலக்கணத்தில் 'சாமானாதி கரண்யம்' என்பது ஒரே இனத்தைச் சேர்ந்த நிலையினைக் குறிப்பது ஆகும். மீமாம்சகர்கள் பண்பைக் குறித்துத் தந்துள்ள விளக்கமும் இராமானுஜர் கொள்கையில் காணும் சாமானாதிகரண்யத்தை ஒத்தாகும்.

விசிஷ்டாத் வைதத்தில் காணப்பெறும் சாமானாதி கரண்யத்தின்படி ஒரு வாக்கியத்தில் அமையும் சொற்கள் வெவ்வெறு பொருளுடையனவாயினும் ஒரு பொருளையே குறிக்கும். எடுத்துக்காட்டாக இவன் தேவதத்தன் ஆவான். தேவதத்தன் யார் என்பதை, இந்த வாக்கியம் குறிக்கிறது, இவ்வாக்கியத்துள் அமையும் சொற்கள் அனைத்தும் ஒருங்கே தேவதத்தனை இணைப்புக் கொள்கையால் குறிக்கக் காண்கிறோம். கருத்திலே பிரிந்து ஒருமைகாண வேண்டுவது இல்லை.

மீமாம்சகர்கள் கருத்துப்படி, சொற்கள் பெரும் பிரிவையும், குணத்தையும் குறிப்பன. மேலும், சொற்கள், தனி ஒருவனையும், பொருளையும் முறையே குறிப்பனவாகும். எடுத்துக்காட்டாக இது ஒரு பசுவாகும். இதில் தனி ஒரு பசு குறிக்கப்பெறுகிறது. பசுத்தன்மையை உடைய பொருள் ஒன்றும் குறிக்கப் பெறுகிறது. (வியக்தி, குணி). உபநிடத மூல பாடத்தில் காணப்பெறும் மஹாவாக்கியம் ஆகிய 'அதுநீயே' என்பதிலும் மீமாம்சகர்கள் கூறும்

கருத்தினைத் தெளிவைக்கும். ஒரு பொருள் மற்றொரு பொருளின் உடலாகலாம். அல்லது பண்பும் ஆகலாம். ஒரு சொல் சரீரத்தைக் குறிப்பதாகலாம். இன்னும் ஒரு எடுத்துக் காட்டு: 'நீ' என்பது சரீரத்தைக் குறிக்கும். இங்கு சரீர மாவது சரீரத்தையுடைய ஜீவன் ஆகும். 'அது' என்பது பிரமத்தைக் குறிக்கும். 'பிரமம்' என்பது ஜீவனுள் விளங்கும் பரமாத்மா ஆகும். ஆகவே உயர்ந்த வேதாந்தப் பொருளில் அனைத்துச் சொற்களும் பொருள் அல்லது ஆள் அல்லது தெய்வம் ஆகியவற்றுள் எவற்றையேனும் குறிப்பதோடு பிரமத்தை அனைத்து ஆன்மாவிற்கும் முதலாக, மூலமாக ஆதாரமாக கொள்ளலாம்.

# உண்மையைப் பற்றிய கொள்கை

விசிஷ்டாத்வைத்தில் உண்மைப் பற்றிய கொள்கை, உள்ளது எதுவோ அதுவே என்கிறது. பாழாக வெற்று நிலையாக ஏதும் இல்லை. பரம்பொருள் என்பது பிரம்மயமாகும்; பிரமமும் மாயையையும் மாறுபடுகின்ற நிலை அன்று. பிரமம், உள்பொருள். பிரமத்தில் இவ்வுலகு நிலைபெறுவதால் இவ்வுலகும் உள்பொருளேயாகும். உள்பொருளும் பண்பும் ஒன்றேயாகும். எந்தப் பொருள் மேலும் மேலும் உண்மை நிலை அடைகிறதோ அந்த அளவுக்கு, அது உள்ளதாகும்.

'அசித்' அல்லது ஆன்மா அல்லாதது, மற்றங்கட்கு உட்பட்ட வண்ணம் இருக்கின்றது. இவ்வாறு இடை யாறாது மாற்றத்திற்கு உட்படுவதால் நிலையற்றது எனப்படும். 'சித்' அல்லது ஆன்மா என்றும் உள்ள பொரு ளாகும். ஆன்மா என்றும் உள்ளதாயினும் அதனின் உணர்வு சுருங்குகிறது விரிகிறது. இச் சுருக்கமும், விரிவும் கருமத்திற்கு ஏற்ப அமையும். ஆன்மா, நிலைத்து உள்ளது. உண்மையானது (சத்தியம்), பிரமம் என்றும் உள்ளது. தூயது, நிறை உள்ளது, பரம்பொருளாவது, உள்பொருள் அனைத்திற்கும் மேலான உண்மை (சத்தியஸ்ய சத்தியம்), உடையது உண்மை, நிதர்சனமாகும். ஒரு பொருள் எந்த அளவிற்கு நிதர்சனமோ அந்த அள்வுக்கு உண்மை உடையதாகும் உண்மை, விரிவு அடைந்து உள்ளது ஆகி,

பிரமம் ஆகின்றது. பிரமமே உள்பொருள். இப்பிரமமே அனைத்திற்கும் ஆதாரமாக அனைத்தையும் காப்பதாக அனைத்தின் இருப்பிற்கும் தளமாக விளங்குகிறது.

விசிஷ்டாத்வைதம் உலகு வாழ்வியல் யதார்த்தையும், (Realism) கருத்துருவாக்கத்தை (Idealism) பயன்பாட்டுணர்வையும், (Pragmatism) கொண்டு உண்மையை நாடுகிறது.

உண்மையாவது யாது? உண்மை ஒரு பொருளை உள்ளவாறு அறிதலே ஆகும். வாழ்க்கையின் தேவைகளை எவ்வாறு நிறைவுபடுத்துகிறது, என்பதைப் பொறுத்தே ஒன்றின் உண்மை, புலப்படும் ஒரு பொருளின் உண்மை நிலை, புலக்காட்சியோடு பொருந்தாது போகுமானால், அப்பொருளின் அமைப்பின் முழுமை மறுக்கப்படுகிறது. இப்பிறைவெள்ளி என்று தவறாக கருதுவதுபோல அது பொய்யென மறுக்கப் பெறுகிறது. பயன்வழிச் சோதனை சில இடங்களில் நன்குப் பொருந்துகிறது. கானல் நீர் நம்முடைய தாகத்தைத் தீர்க் காது. இங்கு உண்மையைப் பயன்வழிச் சோதனை மூலம் தேடுதல் பொருந்தும். கனவுகள் உள்ளத்தில் உண்மையி லேயே எண்ணச்செயலின் வழி நிகழ்வனவாகும்.

ஞானம், தூய்மை அடைகிற பொழுது பிரமத்தை உள்ளுணர்வினாலே தெளிபெறும். தெளிகின்ற ஞானம் நிறைவுறுகிறது. அனுபவ நிலையில் அறிவு முழுமையற்றதாகத் தனித்தனியே கூறுகளாக இருக்கக் காண்கிறோம். காட்சி, கருதல், உரை ஆகியவற்றை மேலேறும் படிநிலைகளாகக் கொள்ளுதல் ஆகாது.

புலக்காட்சியில் நாம் பெறுகின்ற அறிவு முழுமையானதன்று. எந்த அளவிற்குப் புலக்காட்சி உண்மையாகுமோ அந்த அளவிற்கு அதைக் கொள்ள வேண்டும். காரண, காரிய உறவின் முழுமை யைக் கருதுதல் அளவை

நிலைநாட்டுகிறது; காரணத்தை வரையறை செய்கிறது; காரணத்தால் காரியம் நிகழ்கிறது. என்பதைச் சுட்டி, காரணம் இது என்று குறிக்கிறது.

அறிவு, தனி உண்மைகளை ஏற்கிறது. ஆனால் இத் தனி உண்மைகள் பேருண்மையினைத் தரமாட்டா. உரை யளவை பல ஆன்மிக உண்மைகளின் தொகுதியாகும். சாத்திரங்கள் இத்தகைய உண்மைகளைத் தாங்கி நிற்கிறது. ஆன்மிக உண்மைகள் உண்மை நாட்டமுடையோரால் தேறத்தக்கனவாகவும், தேறப் பெற்றனவாகவும் அமை கிறது. இவ்வாறு அமையும் உண்மைகள், பொருந் தும் அறிவின் அடிப்படையாகும்.

மேலே குறிப்பிட்டபடி படிப்படியே உண்மை நிறைவடைவதை காணுகிறோம். மறுப்பின்மையை அடிப்படையாகக் கொண்டு இங்கு உண்மை விளங்க வில்லை. இங்கு உண்மை என்பது பொய்யாக நிறுவப் பெறுதற்கு உரிய நிலையில் இல்லாதது என்ற பொரு ளிலும் கருதவில்லை. அறிவின்மை அல்லது அவித்தை நம்மிடத்தில் இயற்கையில் உள்ள மறைப்பு அன்று.

அவித்தை என்பது கருமம் ஆகும். அது எல்லைக் குட்பட்ட ஜீவனின் நிறைவுறாத நிலையாகும். நிறைவுறாத நிலையில் அமையும் குறைகளைக் களைந்து வெற்றி காணுகிறபோது ஒருவன் பிரமத்தை நாடு வோனாக - விரும்பு வோனாகக் காணப் பெறுகிறான்.

**உண்மை இயல்**

விசிஷ்டாத்வைத 'உண்மை இயலின்' முக்கியக் கருத்து பரம்பொருளும் கடவுளும் ஒன்றெனக் கொள்வ தாகும். புலன் கடந்த பொருளியலில் பரம்பொருள், முழுமுதற் பொருளும் சமய உலகில் ஈஸ்வரன், சகுணப் பிரமமும் இவ்விரண்டும் ஒன்றே என விசிஷ்டாத்வைதம் கூறுகிறது. இதுவே விசிஷ்டாத்வைத உண்மை இயலின் முக்கியக் உண்மையாகும்.

நிர்க்குணப் பிரம்ம் எனவும் சகுணப் பிரமம் எனவும் வேறுபடுத்துவதை விசிஷ்டாத் வைதம் ஏற்பதில்லை. தொடர்பு காணும் எண்ணத்தின் இருமை நிலையைக் கடந்ததாக நிர்க்குணப் பிரமம் கருதப் பெறுகிறது. சகுணப் பிரமம் அல்லது ஈஸ்வரன் இதை உண்மைக் கொள்கை யில் உயர்ந்ததாகக் கருதப் பெறுகிறது. பெரு வழக்கமாக மனம் பரம்பொருளைத் தன் நிலையில் கருதிக் கண்ட உருவ நிலை சகுணப் பிரமம் ஆகும்.

சகுணப் பிரமத்திற்கும் நிர்க்குணப் பிரம்மத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விசிஷ்டாத்வைதம் ஏற்றுக் கொள்வதில்லை. பேதா பேதத்தை வற்புறுத்தும் பாஸ்கரர், 'யாதவர்' ஆகியோர் மேற்குறித்த சகுண, நிர்க்குணக் கருத்து நிலைகள் எவ்வாறு தம்முள் முரன் படுகின்றன என்று விளக்குகின்றனர். இவர்கள் முரண் பாடுகளைப் புலப்படுத்துவதற்கு உரையளவை, கருதல் அளவை, காட்சி அளவை ஆகிய மூன்றினைப் பயன் படுத்துகின்றனர். பிரமத்தை நிர்க்குண நிலையில் வைத்து வெறும் கருத்தியல் நிலையாக, உள்ளதும் இல்லாதும் ஒன்றாவதாகக் கருதுவதை மறுக்கின்றனர். உரையளவை, சாத்திரம் முதலில் சகுணப் பிரமத்தின் உண்மையை வற்புறுத்திப் பின்னர் அதனை ம்றுக்குமானால் தன்னைத் தானே மறுப்பதாகும். அல்லது தன்னுள் முரண்படுவ தாகும். அற, சமய உணர்வின் உண்மையினை மறுப்ப தாகவும் முடியும்.

இங்கு எது மறுக்கப்படுகிறது? உள்பொருள் எல் லைக்குட்பட்டது என்ற உண்மையே மறுக்கப்படுகிறதன்றி எல்லைக்குட்படுதலாகிய நிலை மறுக்கப்படுவதில்லை. பரம்பொருள் வரையறைகுட்படுகிறது. ஆனால் பரம் பொருள் இயல்பில், வரையறைகளில் வரையறை அற்றது. தோன்றுகின்ற புலக்காட்சிக்கு உட்படும் இட, கால வரையறைகளில் அடங்கும் உலகு, பொய்த்தோற்றம் உடையது. இல்பொருளாவது என்று கருதினால் அது

தவிர்க் வொணாத நிலையில் பிரபஞ்சமே இல்லை, என்று மறுக்கும் கொள்கையும் சூன்யவாதமும் ஆகிவிடும்.

இராமனுஜர், பாஸ்கரரின். நிர்க்குண சகுண இருமைக் கொள்கையை மறுப்பதை ஏற்கிறார். ஆனால் பாஸ்கரரது உபாதிகளைப் பற்றிய பகுதிகளை ஏற்ப தில்லை. உபாதிகள் பற்றி கொள்கை இறைவனுக்குக் குறையைக் கற்பிப்பதாகும் என்கிறார். மேலைநாட்டின் பிளோடினஸ் (Plotinas), ஸ்பினோஸா (Spinoze), ஹெகல் (Hegal), ஆகியோர் சொல்கின்ற பரம்பொருட் கொள்கைகள், பேதா பேதத்தைப் பெரிதும் ஒத்தனவாக அமைகின்றன. விசிஷ்டாத்வைத்தோடு ஒத்ததாகக் காணப் பெறவில்லை.

பிளோடினஸ் ஒன்றினின்று பல தோன்றுதல் கூடும் என்ற கருத்துடையவர். ஸ்பினோஸா உள்பொருள் ஒன்றெனவும் அவற்றின் மாறு நிலைகள் இரண்டு எனவும் கூறுகின்றார். ஹெகல். மாறுபடும் இயல்புடையவை, ஒன்றாகின்றன என்று கருதுகிறார். இக்கொள்கைகள் பாஸ்கரர் கொள்ளும் உபாதிக் கொள்கையின் பல்வேறு வடிவங்களாகும். பொசான்கே (Bosannaet) பரம்பொருள் கொள்கையை அடைமொழி யோடு சேர்த்து வழங்கு. கிறார். இக்கொள்கையும் பரம்பொருளிற்குக் குறை களைக் கற்பிப்பதாகும்.

வேதாந்தக் கொள்கைகளுள் பிரமத்தின் கடந்த நிலையைப் பிரபஞ்சத்தினோடு ஒத்தாகக் கருதுகின்ற எக்கொள்கையும் அனைத்திறைக் கொள்கையாகக் கருதப்பெறுவதற்கு இல்லை. வேதாந்தக் கொள்கையின் வரலாற்றிலே சங்கரரது வேதாந்தத்திற்கும் இடைவெளி கால இடையீடு காணப்பெறுகிறது. இக்கால இடை வெளினால் ஒரு மாற்றம் விளைகிறது. இம்மாற்றம் காலத்தினால் மட்டும் நிகழ்வதன்று, உண்மை இயலிலும் கருத்து மாற்றம் நிகழ்வதைக் காணுகிறோம்.

சங்கரரது வேதாந்தத்தில் பிரமத்தைக் கட்டுப்படுத்து வனவாகக் கருதுவது மித்தை என்று கூறிக் கட்டுப் பாடுகள் 'மித்தி யோபாதிகள்' என்று கூறப்பெற்றன. 'பாஸ்கரரது' பேதா பேதத்துள் உபாதிகள் உண்மை எனவும் கட்டுபடுத்துவன எனவும் கருதப்பெற்றன. 'யாதவரது' வேதாந்தத்தில் பரிணாமவாதம் அல்லது 'மாற்றக் கொள்கை' காணப் பெறுகிறது.

'நிம்பார்க்கர்' என்பவர். இருமையையும் ஒருமை யையும் துவைதத்தையும், அத்வைதத்தையும் ஒருங்கே துவைதாத்வைதமாக வழங்குகிறார். மேற்குறித்த வேதாந்த சிந்தனையாளர்களுக்குப் பிறகு இராமனுஜரது விசிஷ் டாத்வைதக் கொள்கை தோன்றுகின்றது.

இராமனுஜரது கருத்துப்படி, எல்லைக்குட்பட்ட ஆன்மாவே இவ்வாழ்வினில் நேருகின்ற பிழைகட்கும் தீமைகட்கும், பொறுப்பு ஏற்கவேண்டும் என்று கூறப் படுகின்றது. சங்கரர், அத்வைதத்தை அனுபவ நெறியிலே வழங்கியவர். வாசுதேவனை அதாவது அனைத்து ஆன்மாவை சங்கரர் போற்றுகின்றார். ஆகவே அனுபவ நெறியில் சங்கரருக்கும் இராமானுஜருக்கும் மிகுந்த வேற்றுமை இல்லை என்றே கூறலாம்.

'பிளோடினஸ்' என்ற மேலை நாட்டு அறிஞருக்கும், இராமானுஜருக்கும் சங்கரருக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் இல்லை. மேலைநாட்டு மெய்ப்பொருளி யலாருள் இராமனுஜரது கருத்தினைப் பெரிதும் ஒத்ததாக, 'பிளோடினஸ்' என்பவரது கருத்து அமைகிறது. 'பிளோடினஸ்' அனுபூதி நெறியிலே ஒரு பேரின்ப நுகர் வினைத் தனித்த நிலையில் சிறக்கப் போற்றுகின்ற ஒருவராகக் காணப்பெறுகிறார்.

இராமனுஜர் பிரமத்தைப் பரம்பொருள் என்றே கருதுகிறார். உள்பொருள் முழுமையான நிலையில்

பிரமம் ஆகும். உண்மை, நன்மை, அழகு, பேரின்பம் ஆகிய பண்புகள் அல்லது என்றென்றும் நின்று நிலவும் குணங்கள், பிரமத்தைத் தமது மூலமாகப் பிறப்பிடமாகக் கொள்கின்றன.

பிரமம் தனக்குவமையிலாதனாக நிறைவுடையோனாக, புழுதிலா, குறைவிலா, உள்பொருளாக அமையக் காண்கிறோம். அனைத்து நிறைவுகளையும் ஒருங்கே பிரமம் உடையதாகும். சத்தியம், ஞானம், அபாத பாவமத்வம், சுந்தரம், ஆனந்தம் ஆகிய நிறைவுகள் பிரமத்தின் குணங்களாகும். புலன்கடந்த பொருளியல் அறஇயல்,. அழகியல், அனுபூதி இயல், ஆகிய வெவ்வேறு இயல்களில் உயர்ந்த இலட்சியங்களாக கருதுவன அனைத்தையும் இது நிறைவேற்றுகின்றது.

சத்தியம் என்ற சொல் பிரமத்தை உள் பொருளாகக் குறிக்கும். ஜீவன், பல பிறவிகளை எடுப்பது, பிரகிருதி அழியும் இயல்பு உடையது. இவற்றினின்றும் பிரிந்து உணர்த்தவே, உள்பொருள் அனைத்திற்கும் உள்பொருளாக உள்ளது என்று கூறப்பெறுவதற்கு உரியதாகப் பிரமம் அமைவதைச் 'சத்திய' என்ற சொல் உணர்த்துகிறது. மாற்றங்கட்கு எல்லாம் நிலைக்களனாக, மாறாத நிலையில் என்றும் உள்ளதாகப் பிரமம் விளங்குகிறது.

உலகு கொள்ளும் பன்மைத் தோற்றங்களை விளக்கும் ஒன்று, பிரமம் ஆகும். பிரமம் ஒன்றும் அற்று இருப்பது அன்று; தனித்த முற்றொருமையை, கால தத்துவம் கடந்த நிலையை விளக்குவதாகும். பிரமம் என்றும் உள்ளது. ஒளிகளுக்கெல்லாம் ஒளி தருவதாகிய உணர்வு உடையது. பிரமம் தன்னுள் உறவுகள் அனைத்தையும் கொண்டுள்ளது. மறுத்தலாகிய முறைமையால் பெறுகின்ற பொருளற்ற தனி உணர்வாகப் பிரமத்தைக் கூறுதல் ஆகாது. எல்லை கடந்ததாகப் பிரமம் கருதப்

பெறுகின்றது எனின் ஆனந்தம் பிரம்மத்தின் குணம் எனக் கொள்ளல் வேண்டும்.

பிரம்மத்தைச் சரீரி என்று அழைக்கிறோம். சரீரி என்பது ஒரு உட்பொருள் ஒன்றைக் கொண்டது எனக் குறிக்கின்றது. பிரமம், அனைத்துயிர்க்கும், பொருட்கும், ஆதாரமாக விளங்குவது; அனைத்தையும் ஒழுங்குக் கட்டுப்படுத்துவது; அனைத்திற்கும் இலட்சியம் ஆவது; இம்மூன்றின் ஊடே நிலவும் ஒருமையாகப் பிரமம் கருதப்பெறுகிறது.

பிரம்ம் அனைத்து உயிர்க்கும் பொருட்கும், பிறப்பிட மாகிறது. 'சித்' 'அசித்' உயிருள்ளன, உயிரற்றன. அனைத் தையும் உள் நின்று இயக்குவதாகக் கட்டுப்படுத்துவதாக அல்லது வரையறை செய்வதாகப் பிரமம் அமைகிறது. இவை அனைத்தும் அதற்கு நிறைவளிப்பதற்கே உள்ளன. உபநிடதத்தில் 'அந்தர்யாமி வித்தை' என்பது பிரமம் அனைத்தையும் உள்நின்று இயக்குகின்ற உண்மையினை உணர்த்துவதாகும்.

இவ்வுண்மையினைப் புலப்படுத்தும் மூலபாடம் வருமாறு: "ஜீவனுள் உறைபவன், ஜீவனோடு உள்ளவன், ஜீவனால் அறியப்படாதவன், ஜீவன் பிரம்மத்திற்கு ஊடாக அமைகிறவன், ஜீவனை உள்ளிருந்து ஆள்கின் றவன், அனைத்துயிர்க்கும் ஆன்மா ஆவான்; என்றென் றும் உள்ளவன் ஆவான். அறியப்படாதவன், மனமும் புலன்களும் துணை செய்யாத நிலையிலேயே அறிபவன், அவனன்றி வேறு எவரும் அறிபவராக இல்லை.

பிரம்மத் திற்கு அயலாக உள்ள அனைத்தும் தீமையே. பிரமம் வாழ்வின் உட்பொருளாகும். பிரமம் வாழ்வை உள்ளி ருந்து இயக்குவோன் ஆகும். அடைவதற்குரிய நெறியாகவும், இலட்சியமாகவும் ஒருங்கே பிரமம் அமைகிறது. பிரமம் ஆதாரமாகும். நமது வாழ்வின் ஆதாரம் எனவும் குறிக்கலாம். பிரமத்தினிடத்து நமது

ஆதாரம் அமைவதால் நாம் பிரமத்தில் உயிர்ப்பதாகவும் இயங்குவதாகவும் வாழ்வின் சிறப்பினைக் காண்ப தாகவும் கூறலாம்.

உள்பொருள் அனைத்திற்கும் உள்ளத்துளமர்ந்த ஆதாரமாகப் பிரமம் விளங்குகிறது. உள்ளபொருள் அனைத்திற்கும், உள்பொருளாவது பிரமமே. ஆன்மீகத் தொடர்புக்கு மிக இன்றியமையாததாகிய ஆன்மாவிற்கும், இறைவனுக்கும் இடையே அமையும் உறவை இக்கருத்து உணர்த்துகின்றது.

"யாவும் இறையே, இறையே யாவும்" என்கிற அனைத்திறைக் கொள்கைப் போக்கை இது தவிர்க் கிறது. ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை இது ஏற்கிறது. ஆனால் ஆன்மாவும், இறைவனும் தனித்து உள்ளன என்பதை மறுக்கிறது. பிரமம் யாவற்றையும் கடந்தது என்பதை வற்புறுத்து வதற்காகவும் அறநெறிச் சமயம் வேண்டுமென்ற நோக்கத் திற்கு ஊக்கம் தருவதாகவும் அமைகிறது.

வேதத்துள் கடமையைச் செய்க என்பது கட்டளை யாக விளக்கப் பெறுவதைப் பூர்வமீமாம்சை நமக்கு உணர்த்துகிறது. இதிலிருந்து மாறுகின்ற நிலையை வேதாந் தத்துள் இறைவன் பிரபஞ்சமனைத்தையும் ஒழுங்குக் குள்ளாக்கின ஆள்வோனாகக் கருதுவது உணர்த்தும் பிரமம், அனைத்துயிர்க்கும் ஆன்மாவாக விளங்குகிறது என்பது ஆதாரமாக இருப்பதாகும்.

பிரமம் பிரபஞ்சத்தை ஒரு நியதிக்குள்ளாக்குபவன் என்பது, பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டு இயக்கு வோனாகக் குறிப்பதாகும். பிரமம் ஆட்சி புரிகிற தூயோனாக, நிறையுடையோனாக விளங்குகின்றான்; ஆகையால் புலன் இன்பங்களிலும் பாவச் செயல்களிலும் தோய்த்துள்ள மனிதனின் வேராகப் பிரமம் விளங்குகிறது.

ஈஸ்வரன் பிரபஞ்சத்தை அறநெறியில் இயக்கு வோனாக, ஜீவர்கட்குக் கருமத்தின்படி இன்ப துன்ப நுகர்வுகளைப் பகிர்ந்து தருவோனாக, கருமப் பயன்களை ஊட்டுவோனாக விளங்குகிறான்.

இறைவழி இயங்கும் அறநெறி, அறஆணை, மனம்போன போக்கிலே அமை வண அல்ல. இங்குத் தெய்வ அறநெறியில் கொடுமை இல்லை. ஜீவர்கள் தாம் புரிந்த கருமங்கட்கு ஏற்பப்பயன்களை ஈஸ்வரன் ஊட்ட நுகர்கின்றனர். அவரவர் கருமத்திற்குரிய பயன்களைத் தருவது, வரையறை செய்வது, கரும நியதியாகும். நேரும் பிழைகட்குப் பழி வாங்கும் சட்டம், கணித முறையிலும், சட்ட முறையிலும் அமைகின்றது. இங்குப்பிழை செய் வோன் மீள்வதற்கு வழியில்லை.

நம்பிக்கையுமில்லை. விசிஷ்டாத்வைதம் அறநெறி களை வற்புறுத்தும் சமயமாகும். உலகை ஆளுவோனாகிய ஈஸ்வரனை, உலகத்தை ரக்ஷிப்போனாக விசிஷ்டாத் வைதம் மாற்றுகின்றது. அறநேர்மையாகிய சரும நியாயம், தயையை, கிருபையை அடிப்படையாகக் கொண்ட சமயத்தில் நிறைவு காண்கிறது.

கிருபை, அறவழியில் அமையும் நிலைகளைத் தணிப்பது அன்று. படைக்க வேண்டும் என்ற ஆர்வம் இறைவனிடத்துக் கிருபையால் உந்தப்பெறுகிறது. இவ்வார்வம் அறமாகவும், அன்பாகவும் இருவகை வடிவம் கொள்கிறது. ஈஸ்வரன் உயிர்களித்துக் கொண்டி ருக்கும் பெருங்கருணையினால் உந்தப் பெற்றுப் பிரபஞ் சத்தில் நெருக்கடியான சூழ்நிலை அமைகின்ற பொழுது இறங்கி வந்து மனித உருக் கொண்டு, மனித இனத்தை உய்விக்கிறார்; இழந்த ஆன்மாவை மீண்டும் பெறுகின்றார்.

கடந்த நிலையில் உள்ள பிரமம் மூவகையான திடமான உருவங்களைக் கொள்கிறது. இவ்வுருவங்கள்

அனைத்தும் கிருபையினால் மேற்கொள்ளப் பெறுவன வாகும். இவ்வுருவங்கள் உண்மை உடையவை; நலம் மிக்கவை. ஈஸ்வரன் எல்லை கடந்த பிரபஞ்ச ஆன்ம வாகப் பிரபஞ்ச லீலை அல்லது படைப்பாகிய விளை யாட்டில் ஈடுபடுகிறான், பிரபஞ்சத்தின் படைப்பு, காப்பு அழிவு ஆகிய முத்தொழிலும் ஈஸ்வரனுக்கு விளையாட் டேயாகும். அனைத்து உயிர்களின் உள்ளம் தோறும் ஆட்சி புரிந்து அவ்வுயிர்களால் உள்ளுணர்வினாலே தன்னைத் தெளிதற்குரிய நிலையில் விளங்குகிறான். அன்பு, அறத் தின் நிலைகளாகிய நாராயணன் ஸ்ரீ என்னும் இரண்டு இப்பொழுது குறிக்கப்பெற்ற மூன்று வடிவங்களோடு பிரமத்தின் ஐவகைத் தோற்றங்கள் அமையக் காண்கிறோம்.

பிரமத்தை இலட்சியமாகக் கருதுகின்ற கருத்து, இறைவனது இயல்பினைப் புலப்படுத்துவதோடு இவ்வுல கில் இறைவனே அதற்குரியவன், முடிவான பேறு என்று குறிக்கும். ஆன்மா, 'சித்தாகும்'; இயற்கை 'அசித்' ஆகும். இவ்விரண்டும் இறைவனின் திருப்திக்காகவே இருப்பன வாகும். இறைவன் நெறியாகவும், நெறியினால் பெறு கின்ற இலட்சியமாகவும் விளங்குகிறான்.

ஆன்மா தன்னுணர்வோடு கூடியது; ஆன்மா விடு தலை உடையது. அற வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும், ஆன்மா விடுதலை உடையது என்பதை உணர்தல் வேண்டும். இவ்வுணர்வினால் பரமாத்மவே பிரபஞ்சத் தில் உண்மையிலேயே நாடகத்தை நடத்துவோன் என்று தெளிகிறது. இத்தெளிவு இறைவனது கருண்ணை வடிவான அருளாற்றலோடு ஆன்மாவை ஒன்றுபடுத்துகின்றது. இவ்வருளாற்றல் ஆன்மாவினைப் பழைய நிலைக்கு மீட்கின்ற கருத்துடையது, ஆன்மா, இறைவனது அருளாற் றலை உணர்ந்து தனது. அகந்தையை ஒழித்து, தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கிறது.

உண்மையான ஆன்மா கூறுவது, "நான் வாழ்கிறேன்; ஆனால் வாழ்வது நான் அல்லேன்; இறைவன் என்னுள்ளே வாழ்கிறான்;" என்பதாகும். இக்கருத்து மனித நிலையில் உள்ள செயலுரிமை உணர்விற்கும் தெய்வீகச் செயலுரிமை உணர்விற்கும் இடையே ஏற்படு கின்ற இருமையினை மாற்றுகிறது; இருமை கெடுகிறது.

பிரமம் 'புவனசுந்தரம்' என்று கூறப்பெறுகிறது. இதன் பொருள்: உயரிய அழகுடையோன் என்பதாகும். தலைசிறந்த அழகுடையவனாதல், அனுபூதி நெறிக்குப் பெரிதும் வேண்டுவதாகும். உண்மை, நன்மை ஆகிய பண்புகளைவிட அழகு, முக்கியமாகும். விசிஷ்டாத்வைதத் தில் அழகுணர்வின் அடியாக எழும் மெய்ப்பொருளியில் பாகவதத்தில் நிலைபெறுகிறது. ஆழ்வார்கள் அருளிச் செய்த தெய்வ நலம் வாய்ந்த பாடல்கள் பிரமத்தை ஸ்ரீகிருஷ்ணனாக, ஆன்மாக்களை இன்பத்துள் ஆழ்த்து வோனாக உடல் உணர்வினின்று அகற்றுவோனாக வலிய நீக்குவோனாக விளங்குகின்றன.

மேற்குறித்த செய்திகளால் விசிஷ்டாத்வைதத்தில் காணப்பெறும் பிரம்ம, அத்வைதத்தில் அனைத்திறைக் கொள்கையிலும் கடவுட் கொள்கையிலும் காணப்படும் பிரம்மத்தின் வேறானது என்பது விளங்கும். விசிஷ்டாத் வைதம் அடைமொழிகேற்ற அத்வைதம், சிறப்பொடு கூடிய அத்வைதம் தழுவிய அத்வைதம், என்று குறிப்பது தவறான உணர்வாகும்.

விசிஷ்டாத்வைதம் அனைத்து உயிர்ப் பொருள் ஒருமையைக் கூறுவது என்பதும், தவறேயாகும். வேதாந் தத்தின் தொகுப்புக் காட்சியினை விசிஷ்டாத்வைதம் வழங்குகிறது. விசிஷ்டாத்வைதம், பல கொள்கைகளின் திரட்டெனக் கொள்வதும், அதன் உண்மை நிலையினை அறியாது மயங்குவதாகும்.

விசிஷ்டாத்வைதம் மிக விரிவுடைய கொள்கை ஆதலால் நல்லன அனைத்தையும், உண்மையான அனைத்

தையும் பிற கருத்து முறைகளினின்றும் பிரிவுகளினின்றும் ஏற்பதாகும். உள்பொருள் ஒன்றே என்கிற கடுமையான ஒருமைக் கொள்கையையும், ஆள்வோன், இரக்ஷகன் என்னும் இருநிலைக் கொள்கையையும் ஒன்று சேர்க்கும் இடம், ஒன்றை ஒன்று சந்திக்கும் இடம் விசிஷ்டாத்வைதமாகும்.

உபநிடதங்களில் காணும் பிரமத்தை அல்லது நாராயணனை, பாஞ்சராத்தரத்தில் காணும் வாசுதேவனை, புராணங்களில் காணும் ஈஸ்வரனை, இதிகாசங்களில் காணும் அவதாரங்களை, அனுபூதி நெறியில் காணும் சுதந்தரத்தை, சமநிலையில் வைத்து ஒரே காட்சியாக விசிஷ்டாத்வைதம் காணுகிறது.

# பிரபஞ்ச ஆராய்ச்சி

**கா**ரண காரிய உறவு, பொறிஇயல் உலகிலும், நோக்க அமைவு இயலிலும், ஆன்மீகத் துறையிலும், நிகழ்ச்சிகள் ஒருநிலையாய் நிகழ்வதை உணர்த்தும். இக்காரணகாரிய உறவே அற உலகின் முன்னேற்றத் திற்கும் அடிப்படையாக விளங்குவது ஆகும். இந்தக் காரணகாரிய உண்மையினை அடிப்படையாகக் கொண்டது விசிஷ்டாத்வைதத்தில் காணும் பிரபஞ்ச அமைவியலாகும்.

பிரமம், பிரபஞ்ச ஒழுங்கின் ஆதார மாகும். பிரபஞ்சத்தைப் படைப்போனாக, சாப்போனாக, அழிப் போனாக பிரமம் விளங்குகிறது. பிரமம், பிரபஞ்சத்தில் கலந்தும், கடந்தும் விளங்குகின்றதால் பிரபஞ்சத்தின் ஆதாரமாகும்.

படைப்பு, ஒன்றுமற்ற வெறு மையினின்று நிகழும் நிகழ்ச்சி அன்று. அமைந்துள்ள ஆற்றலின் புலப்பாடே படைப்பாகும். மறைந்துள்ளது. தோன்றுகிறது; உள்ளதே, தோன்றும். இது சத்காரிய வாதமாகும். காரியம், காரணத்தோடு கால நிலைகளிலும் அளவை இயலிலும் முரணான தொடர்ச்சியாக அமைவதாகும். இவ்வுண்மை யினைச் சமய உலகிலே பொருத்திப்பார்த்தால், பிரம மாகிய காரணத்தை அறிகின்றபோது அனைத்தையும்

அறிதல் கூடும் என்று வேதாந்தம் முடிவு காண்பது, நமக்கு விளங்கும்.

பிரமம் உள்ளது; இணையற்றது; அது பலவாதல் வேண்டும் என்ற விருப்பத்தினை உள்பொருள் ஏற்கிறது; ஏற்கும்பொழுது, மாமரூப உலகமாக உருக்கொள்கிறது. படைப்பு ஆர்வமே, இதற்குக் காரணமாகும். இறைவன், படைப்பிற்கு முன்னால் நாமரூப வேறுபாடின்றி விளங்கு கிறார். இதே வகையில் படைப்பிற்குப் பிறகு பலவாகப் பிறப்பு உற்று, எல்லையில்லாத கால, இட உலகு ஆகவும், உயிர்களாகவும், இவையனைத்திற்கும் அக ஆன்மாவாக வும், இறைவன் விளங்குகிறான்.

பிரபஞ்சம், பௌதிக நிலையிலும், அற அமைப் பிலும், ஒரு ஒழுங்கு உடையதேயாகும். இவ்வொழுங்கு இறைவனது ஆற்றலால் அமைவதாகும். அறம் குன்றி மறம் ஓங்குகிற பொழுதெல்லாம், ஈஸ்வரன் பிரபஞ்சத்தை அழித்துத் தீமையி னின்று உலகைக் காக்கிறான். தீயன புரியும் ஆற்றல் ஜீவனின்று இறைவனது அருள் ஆற்றலால் நீங்குகிறது. தண்டனை, கிருபையின் விளைவாக இறுதி யில் அமைகிறது. படைப்பும், ஒடுக்கமும், மாறி மாறி இடையறாது தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமே இருக்கக் காண்கின்றோம். இவ்வாறு நிகழ்வதன் நோக்கம், ஆன்மா விடுதலை அடைவதற்கேயாகும்.

மாற்றங்கள் நிகழ்ந்தாலும், மாறாத ஒரு தொடர்ச்சி உண்டு என்பதைக் காரண காரியக் கொள்கை விளக்கு கிறது. இயற்கை (பிரகிருதி) மாற்றங்கட்கு உட்படுவதாகும் (பரிணாமம்). பரிணாமம் என்பது மறைந்துள்ள ஆற்றல் தோன்றுவதேயாகும். இது காரணம், காரியத்தோடு தொடர்ந்தே அமைகிறது. ஆன்மாவிற்கு நிறைவு நோக்கி முயற்சிகள் கொள்கின்ற உரிமை ஒழுக்க உலகிலே இருக்கக் காண்கிறோம்.

இயற்கை நிகழ்ச்சிகளை ஆன்மா வின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஏற்ப அமைக்கின்ற அக நோக்கு,

இறைவனுக்கு உண்டு. ஆன்மாவினைத் தன்னுடைய மயமாக உருவாக்க விழைகின்றான். உள்ளது சிறத்த லாகிய முறைமை நிகழ்ச்சிகள் இயற்கையில் நிகழ்கின்றன என்பதைச் சாங்கியத்தில் காண்கிறோம். சாங்கியத்தில் இருபத்தைந்து தத்துவங்கள் பேசப் பெறுகின்றன.

புருஷோத்தமன் அல்லது இறைவன் இருபத்தா றாவது தத்துவமாக அமைந்து, உள்ளது சிறத்தல் முறைமை யினை நிறைவுபடுத்துகிறான். இறைவன் படைப்பிலே புகுந்து நடுநாயகமாக உயர் ஆன்மாகவாக 'சரீரியாக' விளங்குகிறான். இறைவனது படைப்பார்வமே, பிரகிரு தியை ஆற்றலோடு இயங்கி 'மகத்', அகங்காரம், மனம் உட்பட பதினொரு அறிகருவிகள், ஐந்த தன் மாத்தி ரைகள், ஐந்து பூதங்கள், ஆகியவற்றைத் தோற்றுவிக்கச் செய்கின்றது.

இவ்வாறு தனித்தனியே பல பொருட்கள், பல உயிர்கள் தோற்றம் கொள்வது தொடர்ந்து நிகழ்கிறது. ஈஸ்வரன் ஜீவர்களுள் அக ஆன்மாவாக அமைந்து அந்தந்த ஜீவனுக்குரிய உடல்களை நடுவு நிலைமை பிறழாது, பழைய கருமத்திற்கு ஏற்ப வழங்குகிறான். இவ்வாறு, அணு உயிரினின்று இறைவன் வரை எண்ணி றந்த ஜீவர்களின் தோற்றம் ஏற்படுகிறது. உள்ளது சிறத்தல்முறை, தோற்றத்தைக் குறிப்பது போல மீண்டும் தோன்றிய முறையே ஒடுங்குகின்ற முறைமையினால் தொடரப்பெறுகிறது.

தோற்றமும் ஒடுக்கமும், முறையாக நிகழ்வன. படைப்பு என்பது முடிவாக நோக்குமிடத்துப் புதிய படைப்பாகின்றது. அல்லது ஈஸ்வரனது லீலையாக அமைகிறது. பரிணாமக் கருத்தும், அறச் சட்டமாகிய கருமமும் புதிய விளக்கங்கள் பெறுகின்றன. பிரகருதி, புருஷன், புருஷோத்தமன் ஆகியவற்றின் உண்மை ஏற்கப்பெறுகின்றது. இயற்கைக் கொள்கை, கருத்து

முதற்கொள்கை, ஆளுமைக் கொள்கை ஆகிய கொள்கைகளே, முடிந்த முடிவுகளாகக் கூறப்பெறுவதை விசிஷ்டாத்வைதம் தவிர்க்கிறது.

இயற்கையில் காணும் உள்ளது சிறத்தலாகிய முறைமை ஆன்மாவின் முன்னேற் றத்திற்கு துணை புரிவதாகும்; தெய்வத் தன்மை பெறுவதற்கும் பெரிதும் துணை நிற்பதாகும். பிரம ஞானத்தை ஆன்மா பெறுதல் வேண்டும் என்பதே வேதாந்தத்தின் முக்கிய விருப்ப மாகும். இயற்கை பற்றிய உண்மை விளக்கமே பிரபஞ் சத்தின் அமைவியலாகும். பிரபஞ்ச அமைவியலை அறிவது பிரமஞானத்தை அறிவதற்கு மறைமுகமாக உதவுவதாகும்.

## உள்ளத்தியல் ( Plychology)

ஆன்மாவின் உள்ளத்து இயல் எதிர்மறைச் சொற்களில் விவரிக்கப்பெறுகிறது. குறித்த சில பிழை யான வரையறைகளையும், கருத்துகளையும் சோதித்த பின்னர் விசிஷ்டாத்வைதம் தனது கருத்தினை வெளியிடு கிறது.

பொருள் முதற்கொள்கை உடையோராகிய சாருவாகர், ஆன்மா, அணுக்களின் தொகுதி எனவும், பௌதிக மாற்றங்களால் ஆனாது எனவும் குறிக்கிறார். சாருவாகரது கருத்து, பிழையுடையதாகும். பொருள், சிந்திக்கும் இயல்பு அற்றது. முக்தியை அடைதற்குரிய முயற்சியோ, திறனோ அற்றது. உயிர்ப்பொருள் ஒன்று உண்டு; அதுவே ஆன்மா என்னும் உயிராற்றல் கொள்கை யோரும், தவறாகவே வாதிடுகின்றனர். உயிராற்றல் அல்லது பிராணன் அகத்து நிகழ்கின்ற ஒரு தொழிலாகும். இவ்வாற்றல் தன்னையும் நிலைநிறுத்திக்கொண்டு, பெரு கியும் வருகிறது என்பது வாதத்தில் நிலைக்காத ஒன்றாகும்.

பௌத்தர்கள் புலனுகர்ச்சி அல்லது அனுபவ வழியில் ஒரு கொள்கையைக் கருதுகின்றனர். ஆன்மா, ஐவகைப் புலனுகர்ச்சிகளின் கொத்து அல்லது ஸ்கந்தங்க ளின் தொகுதி என்று கருதுகின்றனர். ஐவகை ஸ்கந்தங் களும் ஒருங்கே உடல் உள்ளம் ஒன்றிய ஒரு அமைப்பாகக் காணப்பெறுகின்றன.

ஆன்மா, நிலைத்தது, தொடர்ச்சியுள்ளது என்ற கருத்தினை விசிஷ்டாத் வைதிகள் ஏற்கின்றனர். இக்கருத்தைக் பௌத்தர்கள் மறுக்கின்றனர். மனம் ஓர் அக உறுப்பாகும். மனமே இப்பிரகிருதியின் ஒரு மாறு நிலையாகும். மனம் ஆன்மீகப் பொருள் அன்று. அறிவு முதற்கொள்கையினர் அல்லது கருத்து முதற்கொள்கை யினர் ஆன்ம உண்மையைக் குறித்துக் கூறுவது: "நான் உள்ளுகின்றேன் ஆகையால் உள்ளேன்" . இது உணர்வு, பல படி நிலைகளில் அமைவதைப் புறக்கணிக்கின்றது. பல நிலைகளில் உணர்வு பிழைபடுகிறது. இவ்வாறு பிழைபடுவதையும் அறிவு முதற்கொள்கையினரும், கருத்து முதற்கொள்கையினரும் புறக்கணிக்கின்றனர்.

நான் இருப்பதால் சிந்திக்கின்றேன் என்று கூறுவது பொருந்துவதாகும். சமுதாய இயல் அறிஞர்களும், ஆன் மாவைக் குறித்துக் கருதும்பொழுது பிழை செய்கின்றனர். சமுதாய உயிர்ப்பொருளின் ஒரு மூலக் கூறு என ஆன்மா அவர்களால் கருதப்பெறுகிறது. அடைமொழிகேற்ற கொள்கை ஆன்மாவினைப் பரம் பொருளின் கூறு என்று ஆன்மா கருதப்பெறுமானால் ஆன்மாவிற்கு எனத் தனித்தொரு பண்பு இல்லாமல் போகிறது. தனித்தொரு பண்பு உள்ளதைச் சமுதாய இயல் அறிஞர் காரண காரியத்தோடு. புறக்கணிப்பதால் ஆன்மாவைப் பரம் பொருளின் கூறு எனக் கொள்கின்றனர்.

அத்வைதத்தில் ஜீவன் பிரமத்தின் பொய்த்தோற்றம் என்று குறிக்கக் காண்கிறோம். அவித்தையில் பிரமம் பிரதி பிம்பிக்கின்றபொழுது ஜீவன் தோன்றுகிறது. ஜீவன் வெறும் கற்பனையே, கனவே என்றும், அது அறப்பண்போ சமயப் பண்போ அற்றது என்றும், ஒருமைக் கொள்கை கருதுகின்றது.

இராமானுஜர் மேற்குறித்த கருத்துகளை மறுக்கிறார். அக்மன் என்ற சொல் ஆன்ம இயல்புகளை நன்கு

வெளிப்படுத்துகிறது. என்றென்றும் ஆன்மா தன்னுணர் வோடும் கட்டு நீங்கியும் விளங்கு வதாகும். மேலைநாட்டில் ஆன்மாவைக் குறிக்கும் சொற்கள் (Soul, Spirit or Self) ஆகியவை ஆன்மா என்ற சொல் குறிக்கும் பொருளைத் தரமாட்டா. மேலும், மேலை நாட்டில் வழங்குகின்ற சொற்கள் ஆவி, உயிராற்றல் ஆகிய பொருள்களையும் வ்ழங்குவனவாக அமைகின்றன.

ஆன்மா ஒரு தத்துவம், பரம்பொருள்போல் என்றும் உள்ள பொருள். புலன் கடந்த பொருளியலில், அளவை இயலில் அக உணர்வின் மூலமாக அறிய வேண்டுவது ஆன்மாவாகும். அனுபவ வழி அறிவினாலே ஆன்மா வேண்டுவது ஆன்மாவாகும். அனுபவ வழி அறிவினாலே் ஆன்மா அறியவொணாதது. ஆன்மாவின் உண்மைப் பொருளும் பண்பும், அக உணர்வினாலேயே அறியப்பெற வேண்டும். ஆன்மா தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்வது, தன் உண்மையைத் தானே நிறுவவல்லது.

ஆளவந்தார், இராமானுஜர், வேதாந்ததேசிகர் ஆகியோர் கீதைக்குத் தருகின்ற விளக்கம் ஆன்மாவின் இயல்பினை நமக்கு நன்கு உணர்த்துகின்றது. ஆன்மா பிரகிருதியினின்றும், பரமாத்மாவினின்றும், வேறுபடுவ தாகும். பிரகிருதியின் இருபத்து நான்கு தத்துவங்கட்கு அயலானதாக ஆன்மா அமைகிறது. ஆன்மா, என்றென் றும் உள்ளதாகத் தன்னொளியோடு கூடியதாக அறவாழ் விலே கட்டின்றி விளங்குவதாக அமைகிறது. முன்னர் நேர்ந்த அறியாமையினால் விளையும் ம்யக்கத்தின் காரணமாக ஆன்மா, பிரகிருதியோடு ஒத்தது என எண்ணி உடற் சிறையில் கட்டுண்டு, பல பிறவிகள் எடுத்து உழலுகின்றது.

அகத்துறவினால் ஆன்மா தனது உண்மை இயல் பினை உணரக்கூடும். இவ்வாறு தன்னுணர்வு அமைகிறபொழுது ஆன்மா அகந்தையினின்று விடுதலை காண்கிறது. அகந்தை நீங்குகிற பொழுது ஆன்மா, தனது

இயல்பான உண்மை நிலையினை அறியும். ஜீவன், ஆன்மீக ஆற்றல் பொருந்தியது; அணுவிற்கு அணுவாய் உள்ளது. ஆனால் ஆன்மாவின் ஞானமோ எல்லை கடந்தது; ஒளிபோல எங்கும் நிறைவது. இந்நிலையில் கருமத்தால் ஆன்மாவின் ஆற்றல் எல்லைக்குட்படுகிறது.

ஆன்மாவின் ஞானம் சுருங்கவோ விரியவோ இயலும். சுருங்குதலும், விரிதலும் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்ப அமையும். உள்ளது சிறத்தது முறைமையில் ஒடுக்கத்தில் பல நிலைகளை நாம் காண்பதற்குக் காரணம், ஆன்மா கருமத்தால் கட்டுறுவதேயாகும். கருமத் தலையைப் பொறுத்து ஆன்மாவின் ஞானம். ஆன்மா, உறக்கத்தில் செயற்று, உணர்வற்று இருக்கிறது. கனவு நிலையில் ஒருவாறு உணர்வோடும், ஒருவாறு உணர்வற்றும், விளங்குகிறது. விழிப்பு நிலையில் நல்ல தெளிவோடு விளங்குகிறது.

திரிபுக் காட்சி, மயக்கம், தன்னறிவு அற்ற நடுக்கம், 'ஹிஸ்டீரியா' போன்ற முறை பிறழ்வான அல்லது இயல்புக்கு மாறான நிலைகளிலே ஆன்மா தனது இயல்பினை மறக்க நேர்கிறது.

மேற்குறித்த பிறழ்வான நிலகள், ஒன்றில் ஒன்று கலப்புண்டு, தொடர்ந்து அமைவன. ஆனால் இருளும், ஒளியும் போலத் தம்முன் முரண்பட்டவையாக அமையவில்லை. கனவு நிலைகளை ஆராய் கின்ற உள்ளத்து இயலார், கனவுகள் உணர்த்தும் சமய உண்மைகளையும் அற உண்மைகளையும் புறக்கணிக்கின்றனர். உள்ளத்தைப் பகுத்து ஆராய்கின்றவர்களும், அகநிலைக் கொள்கையினரும் கனவுகள் உணர்த்தும் சமய உண்மைகளையும் அற உண்மைகளையும் புறக்கணிக்கின்றனர்.

உள்ளத்தைப் பகுத்து ஆராய்கின்ற வர்களும், அகநிலைக் கொள்கையினரும் கனவுகள் உணர்த்தும்

அற, சமய உண்மைகளைப் புறக்கணித்தல் ஆகாது. நுண் உடலில் – ஞானம் தோன்றுதற்குரிய உடலில், உள்ளத்தின் நிலைகள் கருமச் விதியின் விளைவாக அமைவன. அவித்தையினால், ஞானம் மறைப்புக் கொள்ளுமானால் எல்லாவற்றையும் அறிதலாகிய முற்றறிவும், பிரபஞ்ச நிலையிலே ஒருவரை அறியாமை ஆகின்றது. யாவற் றையும், உட்படுத்தும் திரிபுக் காட்சி, ஐயக்கொள்கை யையே விளைவிக்கும்.

ஞானம் தன்னுணர்வாகும். ஆதலால் அது ஆன்மா வின் முழுமையான பண்பாகும். ஞானம் தன்னுணர்வுக்கு வழிகோலுவது; தன் இயல்பிலேயே இருப்பது; தன்னாலேயே நிலைபெறுவது. ஆனால், ஞானத்தைக் குணமாகக் கொள்ளின் அது (தருமபூதஞானம்) ஆன்மா வின் பொருட்டு அமைவதாகும். தருமபூதஞானம், ஆன் மாவை வெளிப்படுத்துவதாகும். இவ்விருவகை ஞானங் களும் பிரித்து உணரத்தக்கன; தனித்து விளங்குவன அல்ல.

பிரமத்திற்கு மூன்ற அடைகள் அல்லது பண்புகள் முன்னரே குறிக்கப்பெற்றன. பிரமம் யாவற்றிற்கும் ஆதாரமாக விள்ங்குவது, யாவற்றையும் நியதிக்குள்ளாக் குவது; யாவற்றிற்கும் இலட்சியமாவது; யாவற்றையும்விட மேலான நிலைத்த அழகு வாய்ந்தது. அளவை இயலில் ஆன்மா (ஞாதுரு) பிரமத்தின் (உபதேயம்) காரியமாகும். பிரமம், காரணம் (உபாதானமாகும்). இது, அதனுடைய அபிரதக் சித்த விசேஷணம் அல்லது பிரிக்க வொண் ணாத பண்பாகவும், பிறப்பிடமாகவும், அகநிலையில் அறிவோனாகவும் எல்லை இறந்தோனாகவும் விளங்கும் பிரமத்தின் அம்சம் அல்லது கூறு இதுவாகும். தூய நிலையில் உள்ள, புனிதமான பிரமத்தின் கருவி (ஸேஷா) யாக அறஇயல் ஆன்மா அமைகிறது. அல்லது பிரமத்தின் வேலையாளாக, மகனாக விளங்கிப் பிரமம் நிறைவு காண்பதற்கு வழியாக விளங்குகிறது.

ஆன்மா ஆன்மீக நிறைவாகிய தெய்வீக விடுதலையை நோக்கிப் பணிபுரிகிறது. அழகு இயலில் ஆன்மா, இறைவனோடு நெருங்கி இருந்து இறைவன் நெருங்கியிருத்தலையும், புனிதமாக இருத்தலையும் அறிந்து, அழகினை நுகர்கிறது. பேரின்பம் விளைப்பதாகப் பிரமம் அறியப் பெறுகிறது.

ஆன்மா, தெய்வ நிலைபெறுகின்ற வகையில் மாற்றுமுறுகிறது. உருமாறுகிறது. ஜீவனின் ஆன்மாகவாக ஆதாரமாக, காப்போனாக, நியதிக்குள்ளாக்குவோனாக, பிரமம் விளங்குகிறது. ஜீவன் அதன் அறிவுக்கு எழுவாயாக, அறிவு நிகழ்வதற்குக் காரணமாக விளங்குகிறது. ஜீவன் மற்றொரு வகையில் நோக்குகிறபொழுது இறைவனின் பண்பாக (பிரகாரம்) விளங்கி, அவனினின்றும் பிரிக்கொணாத நிலையில் விளங்குகிறது. பிரமம், பொருள் ஆக ஆன்மா, அதன் பண்பு ஆகின்றது.

பேதாபேத விளக்கத்துள் ஜீவன் பிரமத்தினின்றும், தோற்றம் கொள்கிறான். பேதாபேத விளக்கம் ஜீவனுக்குள்ள ஒழுக்க ஆன்மீகப் பண்புகளை நீக்கி விடுகிறது. ஒருமைக் கொள்கையுடையோன் தனித்தன்மை என்பது அவித்தையின் கற்பனை என்று கூறுகிறான். இராமானுஜர் பண்பையும் ஒருமையையும் அற இயலையும் அனுபூதியையும் ஒற்றுமைபடுத்தி ஜீவன் தனக்கென அமையும் முழுமையும், செயலுரிமையும் உடையது. என்றும் அற, ஆன்மீகப் பண்புடையது என்றும் குறிக்கின்றார். ஆன்மா, பரமாத்மாவின் ஒரு கூறு என, விசிஷ்டாத்வைதம் ஆன்மாவின் தனித்தன்மையின் சிறப்புகளைப் பிரித்து, பிரித்துணர்வு நிலையை நீக்கிவிடுகிறது. பிரமத்தினின்றும் தோன்றியுள்ள ஒரு கூறும் ஆதலால் பிரமத்தோடு ஒன்றுகின்ற வாய்ப்பை உடையது.

ஜீவன் பரம்பொருளின் உயிர்பொருளும், உறுப்புமாகும். கருமக் கொள்கையில் கருமத்திற்குக் கொள்ளும்

பொருளையே இராமனுஜர் அவித்தைக்குத் தருகின்றார். அவித்தையைக் கருமத்தோடு ஒத்தது என்றும் வாழ்க்கையில் காணும் குறைவுகளாகிய அவித்தையும் அவித்தை, கருமம், காமம் ஆகியவை ஜீவனால் நிகழ்வன என்றும் இராமனுஜர் விளக்குகிற பொழுது ஒரு புதிய விளக்கத்தைக் காண்கிறோம். ஒவ்வொரு ஜீவனும் இறைவனிடத்திலிருந்து தோன்றி நீங்கப்பெற்று நிறைவு அனைத்தும் கொண்டு இறை நிலைக்கு ஏற்றப் பெறுகிறது.

# விடுதலைக்கு வழி

சிந்தனை மிகுந்த மெய்ப்பொருளியல் அறிஞர்கள் பிரமத்தின் இயல்பு குறித்து ஆராய்ந்து, பிரமத்தைப் பரம்பொருள் அல்லது தத்துவம் என்று கருதுகின்றனர். மெய்ப்பொருள் அறிஞர் பரம்பொருளை இவ்வாறு ஆய்ந்து ஆய்ந்து காண்பவர்கள் விடுதலை வேட்கை மிகுந்து விடுதலையை நாடுகின்றவர்களாக ஆகின்றனர். ஆன்மீக நெறி நின்றும், அறநெறி நின்றும் விடுதலையை தேடுவோர் முக்தி அடைகின்றனர் விடுதலையை மூவகை முறைகளால் அடையலாம்.

ஒன்று கரும யோகம் இது தன்னைத்தானே தூய னாக்கிக் கொள்ளுதல் ஆகும். இரண்டு ஞானயோகம்; இது தன்னுணர்வுபெறுதல் ஆகும். மூன்று பக்தி யோகம்; இது இறைவன் அன்புவடிவாக உளன் என்பதை உணர்ந்து கீதையில் வரையரை செய்யப்பெற்றவாறு அன்பு நெறியில் பயிலுதல் ஆகும்.

கரும யோகம் நிஷ்கர்ம கருமம் ஆகும். பயன் கரு தாது, தனக்குரிய கடமையை உணர்ந்து வழுவாது கடமைக்காவே கடனாற்றுதல் நிஷ்காம கருமம் எனப் பெயர்பெறும். ஒருவரும் செயலற்று இருக்க முடியாது. இறைவன் கூடச் செயலற்று இருத்தல் இயலாது. அறிவு அல்லது உணர்வு எல்லா நிலைகளிலும் செயல் நிலை களாகவே அமையக் காண்கிறோம். செயல்கள் அனைத்தி

னின்றும் நீங்குகின்ற நெறியாகிய நிவர்த்தி நெறியும், ஒரு வகைச் செயல்நிலையே ஆகும். உள்ளத்து இயலில் செயலற்று இருப்பது என்பது இயலாது ஒன்று என்பது விளக்கப்பெற்றிருக்கிறது. புலன்கடந்த அறஇயல், இந்த உள்ளத்தின் தத்துவத்தை அடிப்படையாகக் கொள்கிறது. இது ஆன்மாவைக் குறித்த தத்துவ விளக்கமாக உருப்பெறுகிறது.

ஒவ்வொரு விலங்கும் ஒரு குறிக்கோளை நோக்கி இயங்கக் காண்கிறோம். விலங்கினத்திற்கும் குறிக்கோள் உண்டு. எனினும் மனிதன் ஒருவனுக்கே குறிக்கோள் உணர்வு உண்டு. மனிதன் தனது அறிவினாலும், உள்ளத்தின் உறுதியினாலும் தனது குறிக்கோளை உணர்கிறான். ஆனால் மனிதன் பிரகிருதியினால் ஆன தனது உடம்போடும், அதன் குணங்களோடும் தான் ஒத்தவன் எனத் தவறாகக் கருதுவதால் உடலின்பங்களை நுகர்கின்ற விருப்பம் கொள்கின்றவன் ஆகிறான். விருப்பங்கள் நிறைவேறாதபோது, வெகுளி ஆகிறான். அவனது மனத்தில் மயக்கம் நேர்கிறது. அவனது அறவாழ்விலே அவன் இறந்தவனை ஒத்தவனாகிறான். ஒவ்வொரு செயலும் அனுபவத்திலே அக விருப்பங்களால் உந்தப் பெறுவதைக் காணுகிறோம்.

அகத்தில் எழும் விருப்பங்கள் புறத்திலே அடைய இருக்கும் பயன்களைப் பொறுத்தன. அகநிலை விருப்பங்கள் முக்குணங்களாகிய சாத்துவிதம், இராசதம், தாமதம் அல்லது அமைதி, அமைதியின்மை, சோம்பல் அல்லது செயலற்ற நிலை ஆகிய முக்குணங்களால் வரையறையறுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் அறவாழ்விலே தனது குணங்களை அடக்குதற்குரிய உரிமையோடு விளங்குகிறான். குணங்களை வரையறை செய்யும் அல்லது இயங்குவிக்கும் கருமத்தைத் தன்வயப் படுத்தலாம். உள்ள உறுதி ஒழுங்கிற்கு உட்படும் மனிதன் தனது உடல் உணர்வினைக் கட்டுப்படுத்தலாம். "யான்,

எனது'' என்கிற உணர்ச்சிகளை அடியோடு நீக்கலாம். யான் எனது என்கிற உணர்ச்சிகள் அனுபவ வாழ்விலே தோன்றும் இருவகைப் பெருந்துன்பங்கள் ஆகும். ஒருவனது செயல் பற்று நீங்கி விருப்பமற்று. விளங்குகிற பொழுது நிஷ்காம கருமமாக அமைகிறது. அவன் கடமையைச் செய்கிறான். அவன் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே கடமையையும் ஆற்றுகிறான்.

அற உலகில் அறவாழ்வு வாழ்கின்ற ஒருவன் தன்னுடைய அகத்தைக் கட்டுப்படுத்தும் காரணத்தால், அகத்தின் மீது ஆட்சிப்புரிந்து அக உலகிற்குப் பேரரச னாக விளங்குகிறான். இவ்வாறு அக ஆளுமையுடைவன் குணங்களால் நிலைதடுமாறு அலமருவதில்லை. புறக் காரணங்களால் தான் வரையறை உறுவது இலன் அறஉலகில் தன்னாட்சியுடைய ஒருவன் ஆத்ம சக்தி யினால் அவ்வாட்சி பெற்றதை நினைந்து தன்னைத்தான் காத்துக் கொள்கிறான். ஆன்ம சக்தி வளரப்பெற்ற ஒருவன் நிலைத்த ஞானம் உடையவன் ஸ்த்திதப் பிரக்ஞா. இவன் செயல் நிலைகளினின்று விலகி விடுதலை அடைந் தவன் அல்லன். ஆனால் செயல்களுக்குள்ளேயே விடு தலைப் பெறுகிறான். அதாவது செயல்களை ஆற்றுகிற பொழுதே செயல்களில் தோய்வுறாமல் பெரு வாழ்வு வாழ்கிறான்.

கருமயோகம், அல்லது தன்னலமற்ற செயல்வாழ்வு, தன்னுணர்விற்கு வழிகோலுவதாகும். தன்னுணர்வு ஞானயோகத்தால் அடையப் பெறுவதாகும். அறவாழ்வு வாழ்கிறவன் தன்னை 'அசித்' தினின்றும் (ஆன்மா அல்லாதது) பிரித்து அறிய முயல்கிறபொழுது அவன் ஒழுக்க வாழ்வு ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கு மேலேறுகின் றான். நிஷ்காமகர்மயோகம் என்பது ஒருவன் யாது செய்தல் வேண்டும் என்பதைக் குறிக்கிறது. மேலான நிலையில் சில செயல் நிலைகள் நிஷ்காம கருமத்துள் வரையறை செய்யப் பெறுகின்றன. ஆன்மீக நிலையிலே அவன் எவ்வாறு விளங்கவேண்டும் என்பது குறிக்

கோளாக அமைகிறது. இது ஆண்மீகப் பண்பாடாகும்; ஞான நிஷ்டையாகும் இப்பண்பாடு, தன்னலமறுப்பை வற்புறுத்துகிறது. இடையறாத தியானத்தைப் பயிலச் செய்கிறது. இவ்வாறு ஒழிவு அறத் தியானிக்கின்றவன். யோக நெறிகளால் அவித்தையினால் விளையும் மயக்கங்களை - உடல் உணர்வுகளை - காம விருப்பங் களை நீக்கிக் கொள்கிறான். முற்றிலும் நீங்கிய, பற்றற்ற நிலையினைக் கைவல்யத்தைத் தேடுகிறான்.

கைவல்நிலை, ஞான யோகத்தால் அடையப் பெறுகிறது. இந்நிலை பற்றற்ற அக நிலையாகும். இந்நிலை ஓர் அகநிலை ஆதலால் 'அகநிலைக் கொள்கை' செய லற்று இருத்தல் ஆகிய கொள்கைகளில் உள்ள குறை களால் குறையுறுதல் இயலும். இக்குறைகளைப் பக்தி யோகத்தால் எளிதில் மாற்றிக் கொள்ளலாம். கரும யோகத்தாலும், ஞான யோகத்தாலும் ஒருவன் கொள்ளும். முயற்சிகட்கு எல்லாம் நிறை நிலையாகப் பக்தியோகம் அமைகிறது.

அறவாழ்வு, சமய வாழ்வு, அனுபூதி ஆகிய படிகளைக் கொண்டதொரு ஏணியை விசிஷ்டாத்வைதம் அமைத்தது. சமய வாழ்வுக் சமயவாழ்விலிருந்து அனுபூதி வாழ்வுக்கும் படிகள் அமைகின்றன. இராமானுஜர் தொன்மையான ஏழுவகைப் பயிற்சி நெறிகளைப் பக்தியின் துணையாகக் குறிக்கிறார். அவை விவேகம், விமோகம், அப்யாசம், கிரியை, கல்யாணம், அனசவாதம், அனுதர்ஷம் ஆகிய ஏழும் ஆகும். இத்தூய்மைக்கு அடுத்திருப்பதே தெய்வத் தன்மையாகும். விமோகம் என்பது, வெகுளி, அவா ஆகிய தொல்லை தருகின்ற நிலைகளினின்று நீங்கிப் பற்றற்ற அகத்துறவு ஆகும். அப்யாசம் என்பது, இறை உண்மை யினை இடையாறாது பயிலுதல் ஆகும். இறை வனை அனைத்துயிர்க்கும் ஆன்மாகவாகப் புலன் உணர்வில் உள்ளவனவாக நினைந்து பயிலுதல் ஆகும். இறை உண்மையினை நினைந்து வாழ்கின்ற ஒருவன் சமுதாயத் திற்கு ஆற்றுகின்ற கடமைகளே கிரியை ஆகும்.

அனைத்து யிர்க்கும், கீழ்நிலை உயிர்கள் முதலாக, மனிதர்கள், தேவர்கள், ஆகிய அனைத்திற்கும் செய்யும் தொண்டு இதுவாகும். கல்யாணம் என்பது, கடனாற்று கின்றபோது அகத்தே உயரிய பண்புகளைப் போற்று வதாகும். தான் (ஈகை) அஹிம்சை (நோவன செய்யாமை) ஆகிய இரண்டும் உயரிய பண்புகளாகும். இவை, முக்கியம் வாய்ந்தவை. இறுதியில் குறிக்கப்பெற்ற அனவசாதமும், அனுதர்ஷமும் ஒருங்கே இன்பத்துள் தூய்க்காது துன்பத் தால் கலங்காமல் வாழ்கின்ற நிலைகளாகும்.

மேற்குறித்த பயிற்சிகள் அனைத்தும் உடல், உள்ளம், ஒழுக்கம், ஆன்ம நலம், சமயம் ஆகிய துறைகளில் மனிதன் வளர்ச்சி பெறுவதற்குத் துணை நிற்பன; பக்திக்கு முற்றும் துணையாவன. கிரேக்கர்கள், ஒருவனிடத்துக் காணும் விலங்கு, மனித, ஆன்மீக, இயல்புகளை ஒருமைப்படுத்தக் கருதினர். விசிஷ்டாத்வைதம் மேலே விளக்கிய எழு வகைக் பயிற்சிகளையும் கிரேக்கர்கள் கொண்ட கருத்திலே அமைக்கவில்லை.

சங்கரர் கூறும் சாதனைகள் சாதனைகளே அல்ல. பிரமம் யாவற்றிலும் தேர்ந்து நிறைந் தது ஆதலின் அது புதிதாகப் பெறுவது ஒன்றுமில்லை. புலன்கடந்த பொரு ளியில் பரம்பொருள், பகவான் அல்லது சமயத்தின் கடவுள் ஆகும். இராமானுஜர் கருத்தின்படி வேதாந்தம் அல்லது பிரமஞானம் என்பதும், தியானம் அல்லது உபாசனை அல்லது பரம்பொருளை இடையறாது நினைத் தல் என்பதும், பக்தி என்பதும் ஒரே பொருளான; ஞானம், பக்தி என்பவை அவற்றின் உள்தொடர்பையும், அவற்றின் ஒற்றுமையையும் உணர்த்து வன. தியானம் என்பது இறக்கும்வரை ஒழிவின்றி, வாசுதேவன் அல்லது நாராயணன் நமது அக ஆன்மா எனவும், "உனது தூய, புனிதமான தெய்வீகமே நான்; நீ யானாகவே விளங்கு கிறாய்" எனவும், இடையறாது ஆழ்ந்த சிந்தனையுய் ஆழ்தல் ஆகும்.

இவ்வுடலை உடையது ஜீவன் என்பதுபோல ஜீவனுக்கு உயிராகப் பிரமம் சரீரியாக அமைகின்றது. உடலும், உயிரும் பிரிக்கவொண்ணாதன. ஆயினும், உயிரும், உடலும் ஒன்றல்ல. உடல்வேறு, உயிர்வேறு, பக்தி, அயரா அன்பாக அமைகிற பொழுது இறைவனிடத்துக் கொள்ளும் விருப்பம் தடுக்க முடியாத பேரார்வமாக அமைகிறது. ஆன்மா, இறைவனைக் காணவேண்டும், அடைய வேண்டும் என்று கொள்கின்ற ஆர்வமாகிய பசியைவிட, இறைவன் ஆன்மாவை மீட்க வேண்டும் என்று கொள்கின்ற ஆர்வம் ஆகிய பசி, பெரிதாகும்.

யாவற்றையும் கடந்து விளங்குகின்ற நிலையான பிரமம், பக்தனோடு ஒன்றுசேர விரும்பம் ஆவலால் மனித உருவத்திலே, அன்பே உருவாக அவதாரம் கொள்கின்றது. பக்தன், இறைவனால் தனது ஆன்மா (மகத்மன்) எனவே கொள்ளப்பெறுகிறான். அன்பு, அன்பின் பொருட்டே; அதாவது பயன் கருதாத அன்பு மேற்கொள்ளப் பெறுகிறது. முக்தியைவிடப் பக்தியே வேண்டப்படுகிறது.

பக்தியை அமைப்பது ஒரு பெரிய சாதனையாகும். பக்தி நிலத்தையும், துறக்க உலகையும் இணைக்கும் ஜாகெப் என்பான் அமைத்த ஒரு ஏணி போன்றதாகும். இது பரமபதசோபானம் போன்றது. ஏறுகின்ற வழியில் பல இடர்ப்பாடுகள் நேருவதால் பக்தியாகிய இவ்வேணிப் படிகள் ஏறி மேலே செல்லுதல் அருமைப்பாடு உடையதாக கிறது.

உபநிடத ஞானத்தைப் பிழிந்து கூறுவது, கீதை. பிழை செய்யும் மனித சமுதாயத்தின் மீது பேரிரக்கம் கொண்டு கீதை, 'பிரபக்தி' அல்லது தன்னை முழுமையும் ஒப்பு வித்தல் அர்ப்பணித்தல் என்கிற எளிய பெரிதும் இயல்பான, விடுதலைக்குரிய வழியினைத் தருகிறது. உலகனைத்தையும் மீட்கின்ற சமயமாகிய இது ஒவ்வொரு மனிதனையும், இறைவனது மகனாகவே கொள்கிறது.

மகன் பிரிவென்னும் பாவச் சுமைகளால் வாடுகிறவனை இறைவனது திருவடிகளில் தஞ்சம் புக அழைக்கின்றது. முக்தியை அளிக்க உறுதி தருகின்றது.

ஆழ்வார்கள், உபநிடத் இருஷிகளைப் போல் இறைவனைக்காணும் வேட்கை மிகுந்தவர்களாகவும் இறைவனைக் கண்டவர்களாகவும் விளங்குகின்றனர். ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ்ப் பாடல்கள் வேதாந் தத்தை ஒத்தன. காரணம் ஆழ்வார்களது அருளிப் பாடல் களுள் தெய்வீக ஞானம் அமைந்துள்ளமையாகும். 'பிரபக்தி'யின் மேலான நலத்தை ஆழ்வார்களது பாடல் கள் வற்புறுத்துகின்றன. இறைவனது காருண்யத்தை இறைஞ்சி நின்று ஜீவர்கள் உய்யும் அன்பு நெறியைக் காட்டுகின்றன.

'பிரபத்தி'யாவர்க்கும் பயன்படுவது; பிறப்பு, தகுதி, செய்யும் பணி. வாழும் நிலை ஆகியவற்றால் அமைகின்ற வேறுபாடுகள் எல்லாம் கடந்தது. எவ்வகையில் வேறு பட்டாலும் பிரபத்தி நெறியை மேற்கொண்டு ஜீவர்கள் உய்யலாம். சட்ட சமயத்துள் நீதி (Juristic) இரக்கத்தால் தணிய வேண்டு வதாகும். ஆனால், மீட்கும் சமயத்துள் (Redemptive Religion) நீதி அல்லது பழிவாங்குதல் மீட்சியின் ஆளுமைக்கு உட்படுகிறது. தண்டனை என்பதும் தயை அல்லது அருளில் ஊன்றுகிறது.

ஸ்ரீவைஷ்ணவம் என்பது விசிஷ்டாத்வைத்தத்தின் சமயம் ஆகும். இறைவன் நாராயணனாகவும், ஸ்ரீயாகவும், விளங்குகிறான். சட்டம், அன்பு, ஆகியவை பண்புகளாக என்றென்றும் இணைந்தனவாக அவ்விரு உருவங்களில் நிலைபெறுகின்றன. சட்டம், அன்பின்மீது ஆட்சி செய்யு மேல் கருமம், தப்ப ஒண்ணாதது. அன்பு, சட்டத்தின் மீது ஆட்சி செய்யுமேல், மனம்போன போக்கைத் தடுக்க முடியாது. ஆனால் இறைவனது இயல்பிலே, சட்டமும், அன்பும் ஒன்றியைந்து ஒன்றாதலைக் காண்கிறோம்.

முரணான இரு பிரிவுகளை ஸ்ரீவைஷ்ணவ வரலாற்றில் காணுகிறோம். ஒன்று, பிள்ளைலோகாச் சாரியரால் நிறுவப் பெற்ற தென்கலை வைஷ்ணவமாகும். மற்றொன்று. வேதாந்ததேசிகரால், நிறுவப் பெற்ற வடகலை வைஷ்ணமாகும். தென்கலை வைஷ்ணவத்துள், இறைவன அருள், நிபந்தனையற்றது என்றும் இயல்பாகவே எழுவது என்றும், (நிர்ஹேது கடாக்ஷம்) வற்புறுத்தப் பெறுகிறது. வடகலை வைஷ்ணவத்துள் இது பக்தன், தனது 'பிரபக்தி' யோகத்தால் அதாவது இறைவனது அருளும் பக்தனின் தகுதியும் சேர்ந்து சஹேது கடாக்ஷத்தால் ஏற்படுவது என்ற கூறப்பெறுகிறது.

தென்கலை வைஷ்ணவமும் இறைவனே் நம்முடைய முயற்சிகளாகவும் முடிபாகவும், (உபாயம், உபேயம்) ஒருங்கே விளங்குகின்றான் என்ற உண்மையினை ஒப்புக்கொள்கின்றன. கருமம், கிருபையால் நீங்குகிறது. 'ஏது' என்கின்ற அளவையால் அல்லது காரணத்தால் கருமம் தீர்வது இல்லை. இறைவனோடு ஒன்றி உணர்கின்ற அனுபூதி நிலையே கருமத்தை நீக்குகிறது.

கிறித்துவ, ஸ்ரீவைஷ்ணவ மீட்சிக் கருத்துகள், அறவாழ்வை வலியுறுத்தும் சமயங்கள் என்ற நிலையில், பாவம் என்பது இறைவனது ஆணையை மீறுவது என்னும் கொள்கையிலும், பாவம் மன்னிக்கப் பெறுவது, இறைவனது கருணை அதை மன்னித்துள்ளது, என்னும் கொள்கையிலும், இறைவனிடத்துக் கொள்ளுகின்ற நம்பிக்கையும் இறைவனுக்கு அர்ப்பணித்துப் பணிபுரிதலும் ஆகிய கொள்கைகளிலும் நெருங்கிய ஒற்றுமையுடையன. ஆனால், வைஷ்ணவக் கொள்கை யாவருக்கும் ஏற்புடைய ஒன்றாகும். கிறித்துவக்கொள்கையோ, இறைவனது ஒரே மகன், பழமையான பாவம், தீர்ப்பு நாள் என்னும் கொள்கையால் அதன் பொதுத் தன்மையை இழக்கின்றது. ஸ்ரீவைஷ்ணவத்துள் தண்டனையை அனுபவித்தல் என்பது மீட்சி அல்லது விடுவிப்பு என்பதனால் தொடரப்

பெற்று, மாற்றமடைவதைக் காணுகிறோம். கிறித்துவத்தில் முதலில் அமைவது மீட்சி அல்லது விடுவிப்பு நேர்கின்றது. இதன் பின்னர் அமைவது தீர்ப்பு நாள் ஆகும். தீர்ப்பு நாளில் பாவங்கட்கு ஏற்றதண்டனை விதிக்கப்பெறும்.

இங்குக் கோதுமையானது உமியினின்று நீக்கப் பெறுகின்ற ஒரு நிலையினைக் காணுகிறோம். பாவம் என்பது, ஸ்ரீ வைஷ்ணவன்த்துள் இறைவனிடமிருந்து பிரிதல் ஆகும். உண்மையான பாவநீக்கம் அன்பே வடிவமர்கிய இறைவனோடு ஒன்றுதல் ஆகும். இவ்வாறு இறைவனோடு ஒன்றுதலாவது ஜீவர்கட்குப் பணி புரிதலிலே நாட்டம் கொள்வதும், அதன் அமர்ந்த தெய்வீக அன்பினாலே உந்தப்பெற்று ஜீவர்கட்குத் தொண்டு புரிவது மாகும். பக்தி நெறியில் உயர்ந்த இடத்தை, லீலை அல்லது அன்பினால் விளையும் விளையாட்டுப் பெறுகிறது. இவ்விளையாட்டில் இறைவன் தனது பக்தனோடு மறைந்தும், வெளிப்பட்டும், ஓடியும், ஒளிந்தும் விளையாடு கிறார்; இறுதியில் பக்தனோடு ஒன்றுகிறார். இவ்வுறவு நிலைத்ததாகும்.

அன்பில் விளையும் விளையாட்டு இரு நிலைகளையுடையது. ஒன்று, இறைவனோடு கூடுவதால் எழும் உவகை; உவகை அடுத்தடுத்துப் பரிவாகிய துன்பத்தால் தொடரப்பெறும். இதனை ஆன்மாவின் இருள் மிகு இரவு என்று குறிப்பர். ஜீவன் நிலைத்த இன்பமாகிய முக்தியினை அடைகிறபோது லீலை முடிகிறது.

## முக்தி

நால்வகைக் குறிக்கோள்களுள் முக்தி வேதாந்தத்தால் உயரிய தலை சிறந்த வாழ்க்கையின் குறிக்கோள் ஆகப் புகழப்பெறுகிறது. மற்றைய குறிக்கோள்கள்; தருமம் அல்லது அறநெறி நிற்றல், அருத்தம் அல்லது பொருளுடைவு, காமம் அல்லது இம்மை இன்பங்களையும்,

மறுமை இன்பங்களையும் நுகர்தல், மோக்ஷம் - பிறப்பி னால் வருகின்ற துன்பங்களின்று விடுதலை பெறுவது; பக்தன் அறியாமையினின்று நீங்கிப் பிரம்ம இன்பத்தை முன்னரே சுவைக்கத் தலைப்படுகிறான். இம்மை வாழ் விலே இறை உண்மையினை அக உணர்வினாலே ஒரு சிறு பொழுதும் அறிய நேருகின்ற பொழுது இறவாப் பெறு நிலையின் மாட்சியினை அறிகிறான். இம்மை வாழ்விலே, பிரமத்தை அறிய, அனுபவிக்க நேர்ந்தாலும், இவ்வனு பவம் நிலைத்ததாகவோ, முழுமையுடையதாகவோ ஆகாது.

பிரம்ம உலகிற்குச் செல்வதானாலே முக்தியை அடைகின்ற ஒருவன் இறவாத இன்பத்தை அறிவது என்று குறிக்கின்றனர். முக்தி, இவ்வுலகில் இம்மையில் அடைதல் கூடும். இதனை ஜீவன் முக்தி என்பர். பின்னர் அடை கின்ற முக்தியை விதேகமுக்தி என்பர். மற்றைய வேதாந் திகள் ஜீவன் முக்திக் கொள்கையை மறுக்கின்றனர். அவர்கள் முக்தி என்பது ஒரே நிலையென்றும், இம்மை வாழ்விலிருந்து விடுதலை அடைவது முக்தி ஆகாது என்றும், காலத்தாலும் இடத்தாலும் வரையறை யுறுகின்ற விடுதலை பெறுவதே முக்தியாகும் என்றும் கருது கின்றனர்.

பிரமம் புதியதாக எவ்விதம் பயிற்சியாலும் (சாதனை களாலும்) அடையப்பெறுவது என்று அத்வை திகள் கூறுகிறபொழுது சிறந்த ஒழுகலாற்றிற்கு இடம் ஏது? சமய வாழ்வில் அடையதக்கது என்பதற்குப் பொரு ளில்லை; மதிப்பும் இல்லை. இவ்வாறு, நேருகின்ற குறைகளை விசிஷ்டாத்வைதம் தவிர்க்கிறது. இருவகை உலகுகளைப் பிரித்துப் பேசுகிறது. ஒன்று, கால, இடை, வரையறை களால் கட்டுண்டு இருக்கும் இவ்வுலகு, இன்ப, துன்ப நுகர்வுகளை நல்குவது; மற்றொன்று, இவ்வுலகைக் கடந்து விளங்கும் பரமபதம் ஆகும்.

நிலைத்தப் பண்புகளாகிய உண்மை, நன்மை, அழகு, அருள் முதலியவைகளுக்கு உறைவிடமாகப் பரமபதம்

அமைகிறது. உடல் நீங்குகிறபொழுது முக்தியை அடைதற் குரியவன் வைகுந்தமாகிய இன்ப பூமியை அடைதற்கு நேரிய நெறியாகிய ஒளிமிக்க தேவயானத்தை விளக்கு கிறது. வைகுந்தத்தில் மாற்றம் இல்லாது இயற்கைக்கு அப்பாற்பட்ட நெறியிலே பொருள் ஒளிபெற்று விளங்கு கிறது. காலம், மாறாத என்றுமுள்ள ஒரு நிலையில் அங்கு உள்ளதாகின்றது. முக்தியை அடைந்தவன் கருமத்தால் கட்டுறாதவனாக எல்லை கடந்த ஞானத்தைப் பெறுகி றான். பிரபஞ்ச ஆட்சி அற்ற கடவுள் நிலையை அடை கின்றான்.

பிரமத்தை உட்னாக அறிகின்ற அறிவு, முக்தி நிலை அடைந்தவனுக்கு வாய்க்கிறது. அவன் பிரமத்தோடு ஒன்றிப் பேரின்பத்தை நுகர்கிறான். பன்மை உலகு தொடர்ந்து இருப்பினும் முக்தி நிலை அடைந்தவனுக்குப் பன்மைக் காட்சி நீங்குகிறது. ஆன்மாவுக்கும், பிரமனுக் கும் உள்ள வேறுபாடு என்றுமிருப்பது. ஆனால், ஆன்மா முக்தி நிலையில்தான் பிரம்த்தினின்று பிரிவுற்று இருப்ப தென்னும் உணர்வு மறைகின்றது. ஆன்மா, தனது தனித் தன்மையை இழப்பதில்லை. இறைவனோடு ஒத்து உழைக்கின்ற நிலையில் முக்தி நிலைபெற்ற ஆன்மா, பணிபுரிவதாகக் கொள்ளுதல் தவறு. ஆனால், ஆன்மா "நான், நான் அல்ல, ஆனால் நீ என்னுள்ளே அமைகிறாய்." என்ற உணர்வுகளைப் பெற்று அகந்தையை நீக்கி விடுகின்றது.

## வளர்ந்தோங்கிய வைணவம்

விசிஷ்டாத்வைதம், சமயம் குறித்த மெய்ப்பொருளி யல் ஆகும். சமய வாழ்வில் இடம் பெறும் அனைத்து நிலை களையும், ஒருங்கே தொகையாக ஒன்றுபடுத்திப் பிரம ஞானத்தில் தெளிகின்றது. அதே சமயத்தில் ஆன்மா பிர மத்தோடு ஒன்றுதலாகிய ஒரு உணர்வினையும் நாடு கிறது. அனைத்துயிர்க்கும் பிரமம் ஆதாரமாகும். ஆன்மாக்கள்

நெறிகளும் உள்ளத்தை, உறுதியை எண்ணத்தை நெறிப் படுத்துவனவாகும், ஒழுங்குப்படுத்துவனவாகும். அறிவு நெறி, ஒழுக்கநெறி, உணர்ச்சி நெறி ஆகியவற்றில் குறை பாடுகளை நீக்குகிறது. 'பிரபக்தி' என்பது இறைவனிடத் தில் ஜீவன் தன்னை முற்றிலும் ஒப்படைப்பது. இங்கு, அனைத்து ஜீவர்களும் எவ்வித வேறுபாடும் இன்றி மேற் கொள்ளத்தக்க நெறி 'பிரபக்தி'யாகும். ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கும் செயலற்று இராமல் தொண்டுபுரிவதற்கும் வாய்ப்பினை நல்குவது 'பிரபத்தி' யாகும்.

ஒவ்வொரு ஜீவனும் இறைவனை நேராக் உள்ளுணர் வினாலே தெளியலாம். பிரமத்திடத்தில் அனைத்துயிர் களும் இடம் பெறுகின்றன. உயிர்தொறும் பிரம்மத்தை உணர்வதால் மற்றையோர்க்குத் தொண்டுபுரிகின்ற நிலை அமைகிறது. பிரமம் அனைத்துயிர்களிடத்தில் இடம் பெறுகின்றது என்று தியான உணர்வையும் செயல்நிலை யையும் விசிஷ்டாத்வைதம் ஒன்று படுத்துகிறது. ஒன்று படுத்தி விசிஷ்டாத்வைதம் தெய்வீக அன்பு, மனித சமுதா யத்திற்குப் பணிபுரிகின்ற ஒரு நிலையை வெளிப் படுத்துகிறது.

இராமனுஜர் காலத்திற்குப் பிறகு தென்னாட்டில் ஸ்ரீ வைஷ்ணவம் இரு கருத்து முறைகளாக வடகலை என்றும் தென்கலை என்றும் பெயர் பெற்றுச் சிறப்புற வளர்ந்தது. பிள்ளை லோகாச்சாரியார், வேதாந்த தேசிகர் காலத்தில் முற்றிய நிலையை அடைந்தன. வேண்டாத பூசல்களும், பிளவும் தோன்றலாயின. உயரிய ஆன்மீக வளர்ச்சி குறைந்து, பூசல்களாக அமைந்தன. முன்னேற்றம் இப் பொழுதும் நேரான நெறியிலே அமைவதில்லை.

இந்திய வரலாற்றில் இடைக்காலத்தில் குறிப்பாக வட இந்தியாவில் இஸ்லாம் பரவி மற்றவர்களையும் தமது மதத்தைத் தழுவச் செய்கின்ற காலத்தில் பெரிய வைஷ் ணவச் சீர்த்திருத்தக் காரர்கள் தோன்றி அதைத் தடைப் படுத்தி ஹிந்து மதத்தை மீண்டும் உயிர்ப்புப் பெற்றுத்

தழைக்கும்படி வகுத்தனர். இராமானுஜரைப் பின்பற்றிய இராமானந்தர் என்பார் வடக்கே சென்று வைஷ்ணவன இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். பஞ்சாப் நாட்டிலும், வங்கத்திலும் தோன்றிய வைஷ் ணவன இயக்கங்கள் இராமானந்தரால் ஊக்கு விக்கப் பெற்றனவாகும்.

அருளாட்சியை (இராம ராஜ்யம்) இந்நிலவுலகத்தில் நிலைபெறச் செய்தவர் இராமானந்தர் ஆவார். மன்னன் ஆட்சி, ஒரே மனைவியை மணத்தல் , ஒரு கடவுட் கொள்கை ஆகிய மூன்று உண்மைகளை அரசியல், சமூகம், சமயம் ஆகிய துறைகளில் முறையே வற்புறுத்தினார். மகாத்மா காந்தியின் முன் தோன்றல் இராமானந்தர் ஆவார்.

இராமானந்தரைப் பின்பற்றியோருள் பலராலும் அறியப் பெற்றோர். கபீர், தாது, துளசிதாஸ் ஆகியோர், ஆவர். இவர்களுள் கபீர் கி.பி. **1398**-இல் பிறந்தவர். ஹிந்து, முஸ்லீம் ஐக்கியத்திற்காகச் செயலாலும், நடத்தையாலும் பெருந்தொண்டு புரிந்தவர். வேதாந்த திற்கும், இஸ்லாமிய அனுபூதி நெறியாகிய சூபி முறைக்கும் உள்ள பொது உண்மைகளை வற்புறுத்தினார்: கம்ப இராமாயணத்தைத் தமிழிலே விருத்தப்பாக்களில் அமைத்துப் பெரும்புகழ் பெற்றதைப்போல், இராமாயணத்தை இந்தி மொழியில் மொழி பெயர்த்து, துளசிதாஸ் இறவாத புகழ் பெற்றார்

தாது **(1544 - 1603)** என்பவர் அக்பரைப் பன்முறை நேரில் கண்டு இஸ்லாமியத்தையும், ஹிந்து மதத்தையும் ஒன்றுபடுத்த முயன்றார். வல்லபரது சுத்தாத்வைதம், ஸ்ரீ வைஷ்ணவத்தின் அனுபூதி நெறியோடு பல ஒற்றுமைகள் கொண்டு உள்ளது. இராதா கிருஷ்ணரிடத்துப் பெருகும் பேரன்பு புஷ்டி பக்தியாகும்; நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோரின் நாயக நாயகி அன்பு நெறியினை ஒத்ததாகும். வங்கத்தில் வளர்ந்த வைஷ்ணயவம் ஸ்ரீசைதன்யரால் தோற்றுவிக்கப் பெற்று, அசிந்தியாபேதா பேதம் என வழங்கியது.

ஸ்ரீ சைதன்யா 1485-வது ஆண்டு நுத்தியா என்னும் ஊரில் பிறந்தார். வங்க வைஷ்ணவத்தில் மாத்வரது வைணவக் கூறுகள் பலவற்றைக் காணலாம். பிரம்ம சமாஜத் தலைவர்கள் பக்தியினால் பெரிதும் உள்ளம் நெகிழப் பெற்றனர். கிறித்துவச் சமயத்தின் தாக்குதலைத் தகர்க்கும் வகையில் ஏசுவைச் சிறந்த பக்தனாக ஏற்றுக் கிறித்துவச் சமயத்தை மறுத்து ஒதுக்கினர்.

வங்க வைஷ்ணவம் உணர்ச்சி நிலைகளை முக்கிய மாகக் கொண்டது. மஹாராஷ்ட்டிரா பக்தர்களான ஞான தேவர், நாமதேவர் ஆகியோர் ஞானத்தையும், பக்தியையும் ஒருங்கே வற்புறுத்தியவர்கள் ஆவார்கள். வைஷ்ணவக் கருத்து முறைகள் அனைத்தும் இறை வனையே அன்பின் வடிவமாகக் கொள்கின்றன. இக் கருத்து, சைவக் கொள்கைகளுள் சிவனை அன்பு வடிவத் தில் போற்று வதோடு ஒப்ப வைத்தது எண்ணத்தக்கது.

இஸ்லாமிய அனுபூதி நெறியாகிய சூபிஸத்திலும் கிறித்துவ அனுபூதி நோக்கத்தக்கது. இறைவனை அழகு வடிவமாகக் கருதுவது வைஷ்ணவத்திற்கே உரிய சிறப் பாகும். விசிஷ்டாத்வைதம் பல நூற்றாண்டுகளாக இந்தி யரது வாழ்வில் நன்கு பரவியுள்ளது. உள் பொருளைப் பிர பஞ்சத்தின் உயிராக விசிஷ்டாத்வைதம் ஒன்றுபடுத்திக் கண்டு இந்திய மெய்ப்பொருளியல் வளர்ச்சிக்குத் தனது பங்கினைத் தந்துள்ளது. சமய உலகிற்கு விசிஷ்டாத்வைதம் தந்துள்ள விளக்கமும் சிறப்புடையதே. உள்ளுணர்வினால் வாழ்வினை உணர்ந்து உண்மை, நன்மை அழகு ஆகிய நிலைத்த பண்பு களின் உறைவிடத்தை உணர்ந்து சமய வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளது. ஒவ்வொரு மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கும் தொண்டுக்கும் பேருக் கத்தை அளித்து - இறவாத இன்ப நிலையைப் பெறவும், பிரமத்தோடு ஒன்றவும், வழிவகுப்பது விசிஷ்டாத்வைதம் ஆகும்.

*

# மாத்வரின் பிரம்ம மெய்பொருளியல்

மாத்வர் விளக்கிய பிரம மெய்ப்பொருள் .இயல் (பிரம மீமாம்சை) பலராலும் துவைதம் என வழங்கப்பெறுகிறது. உடுப்பி என்னும் ஊருக்கு அருகே, கி.பி. 1138-இல் தோன்றினார். மாத்வரது மெய்ப்பொருள் இயலில் காணப்பெறும் பொதுவான தத்துவங்கள் அவரது சமுதாயச் சூழ்நிலையை உருவாக்கின. புலமை யாளர்கள் மாத்வ மெய்ப்பொருளியலைப் விருப்பத் தோடு பயின்றனர். மாத்வ மெய்பொருள் இயலைக் குறித்து நிலவிய சில கருத்துகள் சிலரிடத்து அதிருப்தியை விளைவித்தன.

மாத்வரது நூல்கள் ஒருமை நோக்கைப் புலப்படுத்து கின்றன. இவர் நூல்களை மூன்று தலைப்புகளிலே நாம் கருதலாம். ஒன்று, அறிவு ஆராய்ச்சி இயலில் காணப் பெறும் தத்துவங்களும், உள்பொருள் பற்றிய தத்துவங் களும் பிரம மெய்ப்பொருளியலுக்கு வழிவகுக்கும் இவற்றின் திறன் ஆய்வுமாகும். இரண்டாவது, பிரம மெய்ப் பொருள் பற்றிய விளக்கம், மூன்றாவது, பிரம மெய்ப் பொருளியலைப் பயன்படுத்துதல்.

## பிரம மெய்ப்பொருள் இயலும் திறன் ஆய்வும்

சரியான அறிவும், (பிரமா) இவ்வறிவுபெறும் வாயிலும் (பிரமாணம்) ஆகிய இரண்டும் பொருளை

அப்பொருள் உள்ளவாறே அறிவனவாகும் என்று மாத்வர் கூறுகிறார். அறிவும் அவ்வறிவின் ஆதாரமும் அவ்வவற் றிற்கு உரிய பொருளை உள்ளவாறு அறிகின்றன. இக் கருத்தை மறுத்தவர் எந்த அறிவும் பெறுதல் இயலாது. அறியப்படும் பொருள் இன்றி, அறிவும் இல்லை. எப் பொருளும் அறியப் பெறாதது அன்று. ஒவ்வொரு பொருளும் மற்றொரு பொருளை குறிக்கும் முறையில் ஒரு கூறாக அமைகின்றது.

அறிவு, ஒரு பொருளும் அற்றது என்று கொள்வது அதை அடிப்படையில் ஒன்றுமற்றதாகச் செய்வதாகும். அறியப்படும் பொருள், அறிவின் மீது புகுத்திக் காணப் பெறுகிறது. என்று கருதுவது அறியப்படும் பொருளினை உள்ளதாக ஏற்பதாகும். அறியப்படும் பொருள் இன்றி எவ்வாறு அதன் மீது மற்றொன்றினைப் புகுத்திக் காண முடியும். உண்மையான, வெள்ளியினை அறியாது எவ் வாறு வெள்ளியினை இப்பியின் மீது வைத்துக் திரிபுக் காட்சியில் இப்பி வெள்ளியாகக் காணப் பெறுகிறது. வெள்ளியை அறிந்தாலன்றி, இப்பியில் வெள்ளியைக் காண இயலாது. வெள்ளி காணப்பெறுவதற்கு வெள் ளியைப் பற்றிய அறிவு தேவை. அறிவை, அறியப்படும் பொருளினின்று பிரித்து அறிதல் பல பிழைபடுகின்ற கொள்கைகட்குக் காரணமாகும்.

ஒரு சார்பு கொண்ட கருத்து முதற்கொள்கை, கருத்தையே வற்புறுத்துவதும் என்ற புற நிலைக் கொள்கை (Objectivism)புற உலகின் உண்மையினையே வற்புறுத்து வதும் அப்பிழைகளைச் சேர்த்தன. ஆதலால் பொருளை அறிவினின்றும், அறிவைப் பொருளி னின்றும் பிரித்தல் ஆகாது.

பிழையான அறிவு, பொருளினை உள்ளவாறு அறியாது அதன் இருப்புக்கு மாறான முறையில் அறிவதாகும். இவ்வாறு அறிவது அறிவு ஆகாது. அறிவு

பிழைபடுவ்தற்குக் காரணம், அறிவு தோன்றுகின்ற வகையிலே, குறைகள் நேர்வதாகும். அறிவு, அல்லது உண்மையாக அறிதல் என்பது பிழைப்படும் அறிவி னின்று தனித்து, அயலாக நிகழ்வதாகும். பிழைபடும் அறிவு என்பது சரியான அறிவு ஒன்று உண்டு என முன்பே அறிந்திருப்பதைக் குறிப்பதாகும்.

இப்பியை வெள்ளியெனத் தவறாக அறிதல் பளபள என ஓளிர்கின்ற ஒன்றை முன்பே சரியாக அறிந்திருப் பதை உணர்த்தும். உண்மையான அறிவு, அறிவுநிலை யிலும், அவ்வறிவை ஆக்கும் நிலையிலும், ஒரு இயை பினைக் காண்பதாகும். எனினும், அளக்கும் கருவியின்றி, அறிவு தன்னிலையிலேயே விளக்கமுடையதாக உண்மை யாகவே வெளிப்படுகிறது. ஓர் அறிவின் உண்மை, தானே புலப்படுவதாகும். ஐயம் எழுகின்றபோது, இயைபு ஓர் அளவு கருவியாக இருந்து, அறிவின் தகுதியினைத் தேருதற்குத் துணை செய்கிறது. பிழைபடும் அறிவிலே, இயைபு இன்மையைக் காணுகிறோம். பிழை யான நிலை இயைபின்மையால் ஊகித்து அறியப் பெறுகிறது.

ஓர் அறிவின் உண்மை நிலையினை அவ்வறிவின் பிறப்பிடத்தின் தகுதியினைக் கொண்டு ஊசித்தறியலாம் என்று சொல்வது பொருந்தாது. உண்மை அல்லது பிரமாண்யம் என்னும் அறிவின் உயிர்நிலையை அதற்கு அயலான காரணங்களைச் சார்ந்து இருப்பதாக, இது செய்கின்றது. அறிவு, முக்கியமாகவே உண்மை அற்றது எனின் அறிவுக்குப் பொருள் இல்லை என்ற நிலை ஏற்படும். பொருள் இல்லாதபோது விளக்கம் காண்ப தற்கு ஏதும் இல்லை. அறிவு அயலான புறக் காரணங் களைச் சார்ந்தது என்பதும் ஏற்படும்.

அறிவு ஒரு பொருளை உள்ளவாறு உணர்கிறது. ஆன்மா, சாக்ஷியாக. அமைய அறியப்பெறும் பொருள் நன்கு விளங்குகிறது. ஒவ்வொருவனுக்கும் இச்சாக்ஷி

உண்டு. சிந்திக்கின்ற ஒவ்வொருவனுக்கும் நிகழ்வன வற்றை இந்தச் சாக்ஷி அறிகிறது.

ஆன்மா, அறிவான், அறிவு, சாக்ஷி அவற்றின் இயல்பான விளக்கநிலை ஆகிய அனைத்தும் ஒன்றுபட்ட ஓர் ஒருமை நிலையிலே நாம் காணுகின்ற வேறுபாடு களாகும். இவை முற்றிலும் வெவ்வேறு நிலைகளானால், இவற்றை எந்நாளும் ஒன்றபடுத்துதல் இயலாது. அறிவு நிலையில் கலப்பற்ற முற்றொருமையையோ, அல்லது இரண்டற்ற நிலையையோ வற்புறுத்துதல் என்பது, பொருந்தாதது ஆகும்.

கலப்பற்ற முற்றொருமை என்பது, முரணான உரையாகும். முற்றொருமை விளங்குகின்ற ஒவ்வொன் றிலும், ஒன்றுபடுகின்ற பொருள்களைப் பிரித்தறிய வேண்டியுள்ளது. முற்றொருமை விளங்குகின்ற ஒவ் வொன்றிலும், ஒன்றுபடுகின்ற பொருள்களைப் பிரித் தறிய வேண்டியுள்ளது. முற்றொருமை விளங்கும் ஒவ் வொரு நிகழ்ச்சியும் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். பொருள் களைப் பொருள்கள் என்றும், குணங்கள் என்றும் பகுப்பது வேண்டாத ஒன்றாகும்.

சாக்ஷி என்பது ஆன்மாவேயாகும். ஆன்மா, அல்லது சாக்ஷி எல்லா நிலைகளிலும் தொடர்ந்து உள்ளது. விழிப்பு நிலையில், ஆன்மா, காட்சி, கருதல், உரை ஆகிய அளவைகளால் அறியும் அறிவினைச் சாக்ஷியாக இருந்து அறிகிறது.

காட்சி என்பது அறிகருவிகளுள் சாக்ஷி, மனம், கண், செவி, மூக்கு, நாக்கு, ஊறு போல்வனற்றுள் ஏதேனும் ஒன்று தொழிற்படுவதால் நிகழ்வதாகும். ஆனால் அறிகருவி தானே தொழிற்படாது. இவ்வறி கருவிகள் ஆன்மாவினால் இயக்குறுகின்றன. ஆன்மா, தொழிற் படும் தத்துவமாகும். காட்சியினைப் பகுப்பு முறையில் காணும்பொழுது, ஆன்மா என்பது அயலாக உள்ள

பொருள்களால் வரையறை பெறாது என்பதை அறியாலாம்.

வழியளவை என்பது பெரு மொழியைப் (Major Term) பற்றிய அறிவாகும். பெரும்மொழி தொடைமொழி (ஹேது) (Middle Term) யினின்று அறியப் பெறுகின்றது. மாறாது உடன் நிகழ்வது பற்றிய அறிவினாலே பெரு மொழியினைத் தொடை மொழியினின்று அறிய முடியும். தொடை மொழியும், பெருமொழியும் மாறாத தொடர்பு கொண்டிருக்கின்றன. தொடைமொழி அதற்குரிய சிறு மொழியினிடத்து (Minor Term)க் காணப்பெறுகிறது. மாறாத உடன் நிகழ்வு என்பது அடுத்தடுத்துக் காண்டலால் அறியப்பெறும். இதனை, "தொடைமொழி உள தெனின் பெருமொழி அமையும்" என்பது உணர்த்தும்.

உரையளவை (ஆகமம்) என்பது பொருந்தும் அறிவைத் தோற்றுவிப்பதாகும். சொற்களினாலே, பொருந்தும் அறிவு வெளிப்படுத்தப் பெறுவதாகும். உரையளவையால் அறியப்பெறும் அறிவு, பின்னே மற்றைய அறிவுகளால் பிழையென உணர்த்தப் பெறாமை யால் உரையளவையால், தோன்றும் அறிவு பொருந்தும் அறிவாகும்.

விழிப்பு நிலையில் மனம் நினைவு கூர்கிறது. இவ்வாறு நினைவு கூர்தற்குக் கழிந்த காலத்தில் அமைந்த பதிவுகளே காரணம் ஆகும். கனவு நிலையிலும், கடந்த காலப் பதிவுகளின் அடிப்படையில் மனம் தொழிற் படுகிறது. கனவு நிலையில் காணப்பெறும் பொருள்கள், அந்நிலையில் உள்ளனவே. விழிப்பு நிலையில் காணப் பெறும் பொருள்களுக்கு அமையும் நிலை, கனவுநிலையில் காணப்பெறும் பொருள்கட்கு அமையமாட்டாது. மனமும், புறப்பலன்களும், ஆழ்ந்த உறக்கத்தில் தொழிற்படுவன அல்ல. இதனால், ஆன்மா, மனத்திற்கும் புறப்பலன்கட்கும் வேறாகித் தொடர்ந்து நிலைபெறுதல் நிறுவப்பெறுகிறது.

மனமும்; புலன்களும் தோற்றுவிக்கும் உணர்வு ஏதாவது ஒரு பொருளைப்பற்றியதாகும். இவ்வுணர்வு சாக்ஷியால் அறியப்பெறுகிறது. ஆன்மாவிற்கு அயலானதால் இது எனச் சுட்டி அறியப்பெறுகிறது. எல்லாப் புறநிலை உறவுகளிலும் மனம் ஒரு மாறுதலுக்கு உட்படுகிறது. இது என்று சுட்டி அறியப்பெற்ற பொருள், காண்பானது மனத்திலே ஒருவகை உருக்கொண்டுள்ளது.

கனவு அற்ற தூக்க நிலையில். சாக்ஷி மட்டுமே தொழிற்படுகிறது. ஆன்மா, துயில் கொள்வதாக இந்நிலை உறக்கத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியை அம்மகிழ்ச்சியின் கால அளவை சாக்ஷி அறிகின்றது. எழுந்த பிறகுதான் அதுவரை நன்கு உறங்கியதாக, முன் நினைவைக் கொண்டு கூறுவதிலிருந்து இது தெரிகின்றது. சாக்ஷியினால் ஏற்படும் அறிவிற்கும், மனத்தின் மாறுபாடுகளால் எழுகின்ற அறிவிற்கும் உள்ள வேறுபாடுகள்:

சாக்ஷயினால் ஏற்படும் அறிவு நிலையில் பொருள் உள்ளவாறு அறியப்படுகிறது. ஆனால் மனம் பல மாறுதல்களுக்கு உட்படுகிறபொழுது பொருளை உள்ளவாறு எப்பொழுதும் அறிகிறது என்று கூறுவதற்கு இல்லை. "நான்" என்னும் தன்னுணர்வும் "நான்" என்பது அனுபவித்த மகிழ்ச்சியுணர்வும் என்றும் பொய்யாவன அல்ல. சில சமயங்களில் "இது வெள்ளி என" அறியப்பெறுவது பிழையாகலாம். மேலும் , சாக்ஷி நிலையில் ஏற்படும் அறிவு, மனம் மாறுபடுகின்ற நிலைகளில் பெறும் அறிவிற்கு அயலானது. ஆனால் மனம் மாறுபடுகின்ற நிலைகளில் பெறுகின்ற அறிவு சாக்ஷி நிலை அறிவினைச் சார்ந்துள்ளதாகும்.

ஆன்மா, தன்னைப்பற்றி "நான்" எனப்பெறும் அறிவு மனத்தின் துணையின்றியே பெறுகின்றது. புறப்பொருள் பற்றிய அறிவு மனத்தின் துணையின்றியே பெறுகின்றது. புறப்பொருள் பற்றிய அறிவு கால அறிவை உட்படுத்து

கிறது. 'இதுவெள்ளியென' அறிவதில் கால அறிவு உட்படுகிறது. இது சாட்சியால் ஏற்படுகிறது. கால அறிவு மனம் தொழிற்படுதலால் அமைவதாகாது.

கனவு அற்ற தூக்க நிலையில், மனம், தொழிற்படாவிடினும் காலத்தைப் பற்றிய அறிவு உண்டு. சாக்ஷி தன்னைத்தான் வெளிப்படுத்திக்கொள்வதாகும்; பொருளைப் பற்றிய அறிவு தரப்பெறுகின்றபோது, சாக்ஷி தன்னையும் புலப்படுத்திக் கொள்கிறது. ஆனால், மனம் மாறுதல் அடைகின்றபொழுது அறியப்பெறும் பொருள் தனித்த ஒன்றாக அமைகிறது. அதைத்தனியே குறிப்பிடுவது மனத்தின் தொழில் அன்று. அறியப்பெறும் பொருள் தனித்து என்று குறிக்கப்பெறுகிறது. பிரபஞ்சத்தைப் பற்றிய பொதுவான ஒரு உணர்வு முன்னரே அமைதல் வேண்டும்.

இவ்வாறு பிரபஞ்சத்தைப் பற்றித் தெளிவாக அறிவது என்பது மனம் மாறுதடைதலால் பெறுகின்ற அறிவின் எல்லைக்குப் புறம்பாக அமைவ தாகும். மனம், மாறுதல் அடைகின்றபோது, குறித்த ஒரு பொருளோடு தொடர்புறுகின்றது. அறிகருவியின் மூலமாக ஒரு பொருளோடு உறவு கொள்ளுகிறது. ஆதலால், சாக்ஷியாக ஆன்மா அறிகின்ற அறிவே, பிரபஞ்சத்தைப் பற்றிய ஒரு பொதுஉணர்வினைத் தனித்த ஒரு பொருளின் அறிவினின்று பிரித்து உணர்த்துகிறது.

பிரித்து உணர்தல் என்பது புறத்தினின்று ஒரு பொருள்மீது புகுத்துவதன்று. பொருளைப் பொருள் நிலையிலே விளக்குவதாகும். இதனை மறுப்பது தன்னைத்தனே மறுப்பதாகும். மறுப்பு, மறுப்பின்மையினின்று பிரித்து உணரப் பெற வேண்டும்.

அறிவு, என்றும் வரையறை அற்றது அன்று. காட்சி முதல் நிலையில் வரையறை இன்றி இருப்பது என்று கருதுவது தவறாகும். காட்சியில் மனம் மாறுதல்

உறுகின்றது. இம்மாற்றம், சாக்ஷி நிலைக்கு அயலானதன்று. சாக்ஷி பொருளை உள்ளவாறு குணங்களோடு அறிகின்றது. ஆதலால், சாக்ஷி எவ்வகை வரையறையும் இல்லாமல் இருப்பது என்று கருதுவது தவறாகும். சிந்தனையினாலும், தியானத்தாலும், வரையறையில்லாத அறிவு பெறுதல் கூடும் என்பது பொருந்தாது. மனமும், சாக்ஷியும், சிந்தனைக்கும், தியானத்திற்கும் தத்தம் பங்கினைச் செலுத்தி அறியச் செய்கின்றன என்பதை மறுக்க இயலாது. வரையறையில்லாத அறிவு என்பது அறிவின் இயல்போடு முரண்படுவதாகும். வரையறையில்லாத அறிவேயில்லை.

வரையறையில்லாத அறிவு ஒரு பொருளின் தன்மையோடும் முரண்படுவதாகும். ஒவ்வொரு பொருளும், வெவ்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஒருமுறை அமைப்பாகும். இப்பொருள் பல பொருள்கள் இயைந்த ஓர் அமைப்பில் இடம் பெறுகின்றது. இது வேறுபாடுகள் ஒன்றுபடும் ஓர் ஒருமை யுமாகும். இவ்வாறு அமையும் அமைப்பில் தனித்ததொரு பொருள் ஓர் உறுப்பு எனினும் ஒருமைப்பாட்டுள் அது ஒரு வேறுபாடாகும். தனித்ததொரு பொருள் அல்லது அப்பொருளின் கூறு, அது இடம்பெறும் முறைமைப்பினின்று பிரிப்புறுதல் வேண்டாத ஒன்றாகும். இவ்வாறு பிரிந்து அறிதல் இன்றி வரையறையில்லாத அறிவு தோன்றாது.

## 2

**ஆ**கம நூல்கள் மாத்வரால் சிறப்பாகக் கருதப் பெறுகின்றன. அவை ஆட்சி செலுத்துவனவாகவோ, ஆணைகளைப் பிறப்பிப்பனவாகவோ கருதப்பெறவில்லை. ஆட்சி செலுத்துதலும், ஆணை பிறப்பித்தலும் அறிவின் வளர்ச்சியைத் தடை செய்வன. ஆகம நூல்கள் சில செயல் முறைகளை வரையறுக்கின்றன. ஆன்மிகக் கருத்துகள் பொருந்திய நூல், அறிவு பெறுதற்கு ஓர் இன்றியமையாத வாயிலாகும்.

உரையளவை என்பதை மாத்வர் கருதுகிறபொழுது முக்கியமாக வேதங்களையும், உபநிடதங்களையும் கருதுகிறார். அறிதல் என்னும் முறைமையில் காட்சி, கருதல், உரை ஆகிய இம்மூன்றும் மூவேறு நிலைகளாயினும், ஒருமைப்பாடுடையனவாய் அமைகின்றன என்பது மாத்வர் சுட்டுகிறார். உள்பொருளைப் பற்றிய அறிவு, அனைத்தையும் உட்படுத்துவது; தன் விளக்கத்தோடு கூடியது. இவ்வுண்மையினை வேத நூல்களினின்று அறியலாம் என்று அவர் கருதுகிறார்.

வேதம் உள்பொருளைப் பற்றிய அறிவைத் தருவது என்று உணர்வது வேதத்தின் இன்றியமையாமையை உணர்வதாகும். உண்மை அறிவிற்கு வேதம் தவிர்க்கவொணதாத துணையாகும். காட்சி, கருதல், உரை ஆகிய அளவைகள் உள்பொருளைப் பற்றிய அறிவைத் தரினும் அது பகுதியான அறிவேயாகும். முழு அறிவு ஆகாது. இவ்வளவைகள் வேகத்தோடு தொழிற்படுகின்றபோது உள்பொருள் முழுமையும் அறிகிறது. வேதம் அறிவின் மொழியாக அமைகிறது. வேதம், உள்பொருள் முழுமையும் கருத்திலே வைத்துள்ளது.

வேதப் பகுதிகள் மாறுபடுகின்ற உண்மைகளை உரைப்பனபோல் தோன்றுவதற்குக் காரணம் மனத்தின் சிதறுகின்ற நிலையாகும். மனத்தின் சிதைவு உள்பொருளின் சில கூறுகளால் ஈர்க்கப்பெறுதல் ஆகும். வேதத்தில் உள்ள ஒருமை நோக்கினைப் பாராட்டுதல் என்பது, அறிவு அமையும் வாயில்கள் அனைத்தும், ஒருமை நோக்குடையன என்பதை உணர்தல் ஆகும். வாழ்வின் பல கூறுகளும் ஒரே நோக்குடையனவே. அனைத்து அறிவு வாயில்களும் ஒரே நோக்குடையன என்பதை உணர்கிறபொழுது வேதத்தின் குறித்த சில பகுதிகளைப் பெரிதும் வற்புறுத்துதலோ மற்றவற்றினின்றும் பிரித்து உணர்தலோ நேராது.

முண்டக உபநிடதத்தைப் பின்பற்றி மாத்வர் வேததநை இரு வகைகளில் விளக்கலாம் என்று கருது கிறார். ஒன்று, உயரிய விளக்கம், மற்றொன்று, தாழ்ந்தது ஆகும். வேதத்திற்குள்ள பொதுவான, பொது அறிவிற்கு உட்படும் பொருளைத தருவது தாழ்ந்த விளக்கம் ஆகும். மேலும் அழிவற்ற உண்மைப் பொருளைத் தருவது உயரிய விளக்கமாகும். உயரிய விளக்கம், தாழ்ந்த விளக்கத்தை மறுக்க வேண்டும் என்பது இல்லை. தாழ்ந்த தன் சிறப் பனைத்தையும், தன்னுள்ளே அடக்கியதே உயரிய விளக்க மாகும். தாழ்ந்த விளக்கம் என்பது அழிவற்ற உண்மையை அழியும் பொருள்களிலே காண்பது ஆகும். இக்காரணம் பற்றியே முண்டகத்தின் முடிபு "ஒவ்வொரு வேதப் பகுதி யும் அழிவற்றதைப் பற்றிய அறிவைப் பிறப்பிக்கிறது." என்பதாகும்.

அழிவற்ற பேருண்மையே, வேதம் உணர்த்தும் உண்மை என்று கொள்வது ஆழ்ந்த படிப்பும், நுழைபுலமும் ஒருங்கே உணர்த்துவன என்பதாகும். நுழைபுலம் அல்லது ஆழ்ந்த படிப்பு, மற்ற நுழை புலன்களுள் படிப்புகளுள் ஒன்று அன்று. இக்கருத்தில் நுழைபுலம் அல்லது ஆழ்ந்த படிப்பு. மற்றைய நுழை புலன்களையும் படிப்புகளையும் தோற்றுவிப்பது; அவற்றிற்கு மூலமாவது என்று கொள்ள வேண்டும். "பிரமத்தைப் பற்றிய மெய்ப்பொருளியல் அனைத்து அறிவின் தோற்றமும், இலக்கும் ஆகும்" என்ற முடிபினை முண்டகம் கொள்கின்றது. இவ்வாறு கொள்வது வேதம் அழிவற்ற பேருண்மையினை உணர்த் தும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இவ்வுண் மையினை உணர்வது ஆழ்ந்த படிப்பாலும், நுழைப்புலத் தாலும் இயல்வதாகும்.

அழிவற்றதன் உண்மையினை உணர்த்துவதே வேதத்தின் உட்பொருள் என அறிவது முறையான சிந்த னையின் விளைவாகும். வேதப் பகுதிகளின் உண்மைப் பொருளைக் கேட்க வேண்டும். கேட்டவற்றை நன்கு

சிந்தித்தல் வேண்டும், சிந்தித்தவற்றை நன்கு தெளித வேண்டும், இவ்வாறு கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய நிலைகள் வேதத்தின் உள் இயைபினைப் புலப்படுத்தி வேத முழுமையும் ஒரே பேருண்மையை உணர்த்தும் நோக்குடையது என்பதை விளக்கும்.

வேதம், மாத்வர் கருத்துப்படி அதிகாரம் செலுத்துவதுன்று. கட்டளை இடுகின்றது அன்று. அருள் வெளிப்பாடும் அன்று. அவரவர்கள் அறிவு விளக்கத்திற்கு ஏற்ப வெவ்வேறு நிலைகளில் உண்மையினை உணர்த்துவதாக வேதத்தைக் கருதுதல் கூடாது. வெவ்வெறு கவிஞர்களும், மெய்ப்பொருளியலாரும், தத்தம் கொள்கைகட்கு ஏற்பச் சொற்களால் உணர்த்திய உண்மைகளின் திரட்டு எனவும், வேதத்தைக் கொள்ளுதல் கூடாது. செயல்நிலை பக்தி ஞானம் ஆகிய வெவ்வேறு ஒழுக்க வேறுபாடுகளை உணர்த்துவதாகவும் வேதத்தைக் கருதுதல் கூடாது. உலகினை ஆளும். தெய்வங்கள் என, பல்வேறு தெய்வங்களை வேதம் உணர்த்தி அத்தெய்வங்கள் வழிகாட்டுவதை வற்புறுத்துவனவாகவும் கருதுவதற்கு இல்லை. உலகு பற்றியோ, அல்லது மூலக்கூறு பற்றியோ வெவ்வேறு கொள்கைகளைப் கொண்டது எனவும் வேதத்தைக் கருதுதற்கு இல்லை.

வேதத்தின் உட்பொருளை உணராது விடுப்பது சாந்தியை இழப்பதாகும் என்று மாத்வர் கூறுவதுகூட உபநிடத்தைப் பின்பற்றியேயாகும். ஆன்மீக வாழ்விலே முழுமை அடைதலே விடுதலையாக முடிகிறது. விடுதலை அடைவு இயல்வது உண்டெனின் வேதம் இன்றியமையாததே. வேதத்தை ஏற்றல் என்பது பொது அறிவு கொள்ளும் கருத்துகளைக் கொண்டது வேதம் என்பதை மறுத்தல் ஆகும். இப்பொதுக் கருத்துகள் வேதத்திற்குப் பொருந்துவன அல்ல. உயரிய அறிவின் இன்றியமையாமையையும் உணர்தல் வேண்டும். வேதமுழுமையும் பரவி நிற்கும் உள் இயைபினை உணர்தல் வேத

ஏற்பாடாகும். உள் இறைபினை அறிதல் வேதம் அழியாத பேருண்மை யினை .உணர்த்துவது என்று அறிவதாகும்.

இவைகளை நிறைவேற்றி வைப்பது பாதராயணரது பிரம சூத்திரம் என்று மாத்வர் உணர்கிறார். பிரம சூத்திரம் என்பது பிரம மீமாம்சை, பிரம மெய்ப்பொருளியலை விளக்குவது என்று குறிக்கிறார். உயரிய அறிவு இவ்வுண் மையினை உணர்வதற்கு இன்றியமையாததாகும். பிரம சூத்திரம் பகுத்தறிவின் மொழியாகும். வேதம் ஒருமைப் பாடுடையது என்ற உண்மையினை விளக்குவதாகும். இது தீர்மானத்தைத் தரும் தத்துவம் ஆகும். இதைக் கொண்டு வேதத்தின் மூலப் பகுதிகளின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ளலாம். இது இன்றி வேதத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

பிரம சூத்திரமும், வேதமும் ஒருங்கே ஒரு கருத்தினை விளக்குவதாகும். அவற்றுள் ஒன்றை மற்றொன்றின் துணையின்றிப் புரிந்துகொள்ள இயலாது. வேதத்தின் உள்ளீடான உண்மையினை விளக்குவதே பிரம சூத்திரம். ஆதலால். பிரம சூத்திரம். ஆதலால், பிரம சூத்திரம் வேகத்தோடு ஒன்றுகிறது. வேதத்தின் உட்பொருளை பிரம சூத்திரமாக விளங்குகிறது.

வேதத்தின் உண்மைப்பொருளை விளக்குவதையே முக்கியக் குறிக்கோளாக மாத்வரது அனைத்து நூல்களும் கொண்டுள்ளன. ஒவ்வொரு சூத்திரத்தை விளக்கும் பொழுதும் எந்த உண்மை விளக்கப்பெறுகிறது. என்பதை நன்கு குறிக்கிறார். வேதத்தின் சில பகுதிகள் பிறழ உணர்த்துமானால், முரண்படுமானால், அப்பகுதிகள் எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பதைக் கொண்டு உண்மையான கருத்தினைத் தெளிந்துகொள்ளலாம். வேதம் முழுமையும் ஒரே பேருண்மையை உணர்த்துவது என்பதனை நாம் பயன் படுத்தி முரண்படும் பகுதிகளையும் பிழைபட உணர்த்தும் பகுதிகளையும் சரியாக உணரலாம்.

புருஷ சூத்திரத்தில் காணுகின்ற ஒரு பகுதியின் சொற்பொருளைக் கருதுவோம். "தன்து ஆன்மாவினை (புருஷன்) இம்முறையில் உணர்கின்றவன் இறவாமை உறுகிறான்." இப்பகுதியினை நாம் எவ்வாறு பொருள் கொள்வது? ஞானம், இறவாப் புகழ் எய்துவதற்குக் காரணம் என்று பொருள் கொள்ளத் தோன்றும். இவ்வாறு பொருள் கொள்ளின் பிரமத்தை மறுப்பதாகும்; பிரமம் யாவற்றிற்கும் அடிப்படையாகும்; உண்மையினை மறுப்பதாகும். தைத்ரீய உபநிடதம் கூறுவது: "எதனினின் றும் இவ்வுயிர்கள் படைக்கப் பெற்றனவோ, அது பிரமம் ஆகும்." பிரமம் இறவாமையை விளக்கும் அல்லது ஞானம் இறவாமைக்குக் காரணமாக அமையும். ஆதலால் ஞானம் இறவாமைக்குக் காரணம் என்பது பிரமம் யாவற்றிற்கும் காரணம் என்பதை மறுப்பதாகும்.

பொதுவான மொழி வழக்கை ஒட்டி புருஷ சூத்திரத்திற்கு மேலே நாம் பொருள் கொண்டோம். முழுமையான நோக்கு கொண்டு பிரம சூத்திரத்தின் முதற் சூத்திரத்திற்குப் பொருள் கொள்ளுகிறபொழுது மொழி யின் பொது வழக்கினை மறுப்பதற்கு உண்மையான ஞானம் மெய்ப்பொருளியில் ஆய்வினின்றும் பிறக்கிறது என்று கூறப்பெறுகிறது. மெய்ப்பொருள் உணர்வால் தோன்றும் ஞானம் இறைவனது உள்ள உறுதியாகும். ஆதலால் இறவாமை பிரமத்தின் உறுதிப் பாட்டின் விளை வாகும். பிரம சூத்திரம் வழங்குகின்ற ஒரு பொது உண்மை யினை நினைவிலே வைத்து நாம் புருஷ சூத்திரத்தில் காணும் பகுதியினை அறிதல் வேண்டும். ஞானத்தினால் இறவாமை அடைந்தாலும் ஞானம் பிரமத்தின் பேரரு ளால் விளைவது என்பத நன்கு தெரியவருகிறது.

புருஷ சூத்திரப் பகுதியின் உண்மைப் பொருளை வரையறை செய்ய மாத்வர் மிகுந்த விழிப்போடு கொள் ளத்தக்க கருத்துக்கள் அனைத்தையும் நன்கு ஆராய்கிறார். தான் கொள்ளுகின்ற பொருளுக்கு மாறான கருத்துகள்

யாவற்றையும் தெளிவுற ஆராய்கிறார். இவ்வாறு, ஆராய்ந்து மாத்வர் தனது கருத்துக்கு மாறுபடும் கருத்துகள் தம்முள் முரண்படுவன என்று காட்டுகிறார். எடுத்துக்காட்டு:

"கருமநெறியே விடுதலைக்குரிய வழி, அல்லது பக்தி நெறியே விடுதலைக்குரிய வழி" என்று சொல்வதில் உள்ள குறைகளைப் புலப்படுத்துகிறார். செயல்நிலை, ஞானம் இன்றி நிகழாது. ஞானத்தின் இயங்கு நிலையாகச் செயல் நிலையைக் கொள்ள வேண்டுவதாகின்றது.

பக்தியின் கூறாக நம்பிக்கை அமைகிறது. ஞான நெறியிலே ஒருவன் கொள்ளுகின்ற பக்தியின் ஒரு கூறாக நம்பிக்கை அமைகிறது. ஆதலால் ஞானத்தின் செறிவை விளக்குவது எனப் பக்தியைக் கொள்ளலாம். செயல் நிலையை ஞானத்தினின்று பிரிப்பது தவறு. ஏனெனில் செயற்குரிய நிலையினை முன்னதாகவே ஒருவனிடத்து நாம் இருப்பதாகக் கொள்வதாகும். இது பிரமம் யாவற்றையும் நிகழ்த்துவோன் என்னும் உண்மையினை மறுப்பதில் முடியும். தனி நிகழ்த்துவோன் என்னும் உண்மையினை மறுப்பதில் முடியும். தனி ஒருவன் செயல்களை மேற்கொள்ளத்தக்கவன் என்று கருதுவது பிரமம் யாவற் றையும் இயக்குவோன் என்பதை மறுப்பதாகும். ஞானத்தி னின்று நம்பிக்கையினை அல்லது பக்தியினை நீக்குவ தானது ஆன்மீகம் அல்லாத ஒரு நிலையினை மேற் கொள்வதாகும்.

ஈசாவாஸ்ய உபநிடத்தில் அரைகுறை ஞானம் அவித்தையாகும். முழுமையான ஞானம் முற்றுணர் வாகும், வித்தையாகும் என்று கூறப்பெறுகிறது. மயக்க நிலைகளை, மயக்க நிலைகள் என உணராது போனால் ஞானத்தை உள்ளவாறு உணர்ந்து பாராட்ட இயலாது. அரைகுறை அறிவினை நாம் போற்றினால் ஞானத்தின் முழுமையான நிலையினை மறந்தவர்கள் ஆவோம்.

ஞானத்தின் முழு நிலைகளை அறிகின்றபோது மயக்க நிலைகளை அறியாது போதல் இயல்பு.

ஆதலால் அவித்தை, மயக்கம் முற்றுணர்வு ஆகிய இரண்டையும் ஒருங்கே உணர்தல் வேண்டும். பிரமம் அல்லது ஈசன் மயக்கத்தையும் முற்றுணர்வையும் ஒருங்கே விளை விப்பவன் ஆவான். ஞானத்தின் உண்மையினை நிறுவுவதற்கு மயக்கம் தோற்றுவிக்கப் பெறுகிறது. மயக்கத்தினைப் படைத்தல் என்பது மயக்கத்தை விளைக்கும் அனைத்துச் சூழ்நிலையையும் உருவாக்கி ஞானத்தை மறுக்கச் செய்து ஞானத்தின் உண்மை நிலையினை முடிவிலே நன்கு விளங்கச் செய்வதற்காகும்.

மேற்குறித்த கருத்துகளை நினைவில் வைத்து ஞானத்தினை வரையறை செய்கிறார். ஞானம் என்பது புறத்திருந்து பதியும் வெறும் பதிவுகளை உணர்தல் ஆகாது. ஆனால், செயல் நிலையிலே, அறிதலும், சிந்தித்தலும், தனதாக்கிக் கொள்ளுதலும் ஆகும். இவ்வாறு நன்கு புரிந்து கொண்டு, புரிந்தவற்றைச் சிந்தித்து, சிந்தித்தனவற்றைத் தெளித்து ஏற்கனவே உள்ள ஞானத்தோடு பொருந்தவைத்து, தனதாக்கிக் கொள்ளுதல் என்கின்ற நிகழ்ச்சி உட்படுத்தும் கருத்துக்களாவன:

ஒன்று, மயக்கத்தை நீங்குதல் ஆகும். இரண்டு, ஞானத்தின் உண்மை நிலையினைத் தெரிந்து பாராட்டுதல் ஆகும். மூன்று, எந்தக் கூறு மேற்குறித்த புரிந்து கொள்ளுதல், சிந்தித்தல், தெளிதல் ஆகியவற்றை உட்படுத்தும் நிகழ்ச்சியி னைத் தொடர்ந்து நிகழச் செய்யுமோ, அதை இருத்திக் கொளல். இந்தக் கூறு, அறிவு, நிகழ்ச்சி தொடர்ந்து நிகழ்தற்கு இன்றியமையாததாகும். மயக்கத்திற்கு ஆதார மாக விளங்குவது அளவை நெறியிலே பிழையுடையது என அறியப்பெருகிறது.

ஞானம் குறையற்ற ஒரு தத்துவத்தின் அடிப்படையில் எழுப்பப்பெறுவதால் ஏற்புடையதாகும். அறிவு உண்மை

யென அறியொணாக் கொள்கையினர் ஏற்கும் வகையில் மாத்வர், நிறுவுகிறார். நிறுவுவதற்கு இருவகை யான அளவைகளைப் பயன்படுத்துகிறார். அறிவு பெறுதற்கு இயலாது என்று கூறுகின்ற ஒருவன் அறிவைப் பற்றி ஏதும் அறியாதவன். அறிவை அறியாத நிலையிலே தனது கருத்தின்படி கண்டனம் செய்கிறான். அறிவிற்கு என, ஒரு அளவை உண்டு. இவ்வளவையை நன்கு பயன் படுத்தியே அறிவினை நிறுவுகிறான். அறிவின் சிறப்பு, ஒருமுறை அதன் உண்மையாக உணரப்பெற்றால் அதற்குப் பின்பு மறுப்பு நிகழாததாகும். இவ்வுண்மை யினை நன்கு நினைவில் வைத்து அறிவு பெறுதற்கு இயலாது என்று கூறுகிறவர்களை நோக்கி அதிலுள்ள முரண்பாட்டைப் புலப்படுத்தி அதுதானே அழித்துக் கொள்கிறது என்பதைக் காட்டுகிறான்.

தன்னைத்தான் நிறுவிக் கொள்கின்ற ஓர் இயல் பினை அறிவிடத்துக் காணலாம். மேலும், மேலும் நிறைவு காண்பதே அறிவின் இயல்பாகும். இவ்வுண்மை யினை நன்கு அறிந்து கொள்ளுதலே உயரிய ஒழுக்கம் என்று மாத்வர் கருதுகிறார் (தவம், உபாசனை, அல்லது தியானம்). மாத்வர் கூறுவது; "ஒரு கணமும், ஒருவன் அறிவின்றி இருத்தல் கூடாது.

இங்கு அறிவு என்று குறிக்கப்பெறுவது பிரமத்தைக் குறித்த மெய்ப்பொரு ளியல் அறிவு ஆகும். தூக்கத்திலே பிரமத்தைப் பற்றிய அறிவு தடைபடுமானால் விழிப்பு நேர்ந்தவுடன் அவன் தொடர்ந்து பிரம அறிவினைப் பெறுகின்ற முயற்சியில் தலைப்படல் வேண்டும். மெய்ப் பொருளியில் நிகழ்ச்சி முறை, பக்தியும், கருமமும் தமது உண்மை இயல்பிலே ஞானமேயாகும் என நிறுவுகின்றது. ஒரு செய்தியினைப் புரிந்துகொண்டு, சிந்தித்து உணரும் பொருளைத் தன்னுடைய அறிவோடு பொருந்தி உணர்வதே இங்கு நாம் காணும் ஒரு நிகழ்ச்சியாகும். இங்கு, பக்தி, கருமம், ஞானம் ஆகிய மூன்றும் இடம்

பெறுகின்றன. உண்மையான ஞானம் பெறுகின்ற வகையில் பக்தியும் கருமமும் பெரிதும் துணை புரிகின்றன. இவ்வுண்மையினை ஒருவன் நன்கு உணர் வானேயானால் தேக முழுமையும் ஊடுருவிச் செல்லும் ஒருமை நோக்கு நன்கு புலப்படும்.

## 3

மாத்வர் பீரம மெய்பொருளியலுக்கு எதிராக வேதத்தினை வற்புறுத்துவது எப்பயனையும் விளைக்காது என்று கூறுகிறார். சங்கரர், இராமானுஜர் ஆகியோர் பிரமம் குறித்துக் கொண்ட கொள்கைகள் இவ்வுண் மையினை விளக்குகின்றன. சங்கரர், பிரமத்தை நிர்வி வேஷம் அல்லது நிர்க்குண பிரமம் என்று குறித்தார். இராமானுஜர் பிரமம் இவ்வுலகின் உயிர் என அல்லது சரீரி எனக் குறிக்கிறார். இராமானுஜர், சங்கரர் ஆகியோர் கொண்ட கொள்கைகள் வேதத்தில் காணப்பெறும் தனித்த கருத்துரைகளின் சொற்பொருளை அடிப்படை யாகக் கொண்டவை. ஆதலால் இவை இருமைக் கொள்கைகளை விளக்குவனவாக அமைகின்றன.

உட்பொருள் வேறு, சொற்பொருள் வேறு. இவை விளக்கம் தருவதைவிடப் பல சிக்கல்களை எழுப்புவ தாகும். குணங்கள் அற்றது என்று நிறுவுவது தன்னைத் தான் மறுப்பதாகும். அவித்தை, இருமையை விளக்காது. பிரமம் குணங்கள் அற்றது எனின் அறியாமைக்கு ஆதார மாகாது. அப்பொழுது அறியாமை ஆதாரமற்றதாகி விடும். அறியாமையும், குணங்கள் அற்ற பிரமமும் ஒரு மித்து இருத்தல் இயலாது. அறியாமையை வற்புறுத்துவது அதற்கு ஒரு சிறப்புத் தருவதாகும். அறியாமையைத் தனித்த தொரு பொருளாக்கிப் பிரமத்திற்கு எதிராக அமைப் பதாகும்.

இருமைக் கொள்கையில் பிரமம் அடங்குகிறது. உலகாகவும், உயிர்த்தொகுதியாகவும் விளங்குவது

பிரமத்தின் சரீரமாகும். பிரமம் உலகு, உயில் ஆகிய இருமையிலே அடங்குவதாகும். இந்த இருமை, பொருள் குணம் ஆகிய இருமையாகும். பொருளையும் குணத்தையும் இணைக்கும் ஒவ்வொரு கருத்தும் இருமையை வற்புறுத்து வதாகும்.

வேதக் கருத்துகளை விளக்கிக் கூறுவதற்குப் பிரம மெய்ப்பொருளைப் பயன்படுத்ததுவது முற்றிலும் புதிய வேறான பிரமத்தைப் பற்றிய கருத்தை விளைவிக்கக் காண்கிறோம். இதனை மாத்வர் அறிகிறார். இந்நிலை யினை விளக்குகிறபோது வேதாந்தக் கருத்தின் முடிந்த நிலைக்குக் கொணர்கிறார். பிரமத்தைப் பற்றிய கருத்து எப்பொழுது அமையும். மெய்ப்பொருளியலை வேதப் பகுதிகளைப் புரிந்து கொள்வதற்குப் பயன்படுத்துகிற போது பிரமத்தைப் பற்றிய கருத்து தோன்றுகிறது. ஆதலால், பிரமத்தைப் பற்றிய கருத்து வேதத்தைச் சார்ந்தது ஆகும். குணங்கள் அற்று இருத்தலும், வேதமாக இருத்தலும் முரண்படுவனவாகும். பிரமம் உடலைக் கொண்டுள்ளது என்று கருதுவது அனுபவ நிலையில் காணும் வேறுபாடுகள் அனைத்தையும் பிரமம் கடந்த விளங்குகிறார் என்று வேதம் நன்கு விளக்குகிறது.

வேதத்தை ஓர் அறிவு வாயிலாகக் கொள்வது ஏனைய அறிவு வாயில்களை எல்லாம் வேதம் கடந்து விளங்குகிறது என்று கொள்வதாகும். வேதம், மற்றைய அறிவு பெறுகின்ற வாயில்களை மறுப்பதன்று. மற்றை வாயில்கட்கு வேதம் சிறப்பினைத் தருகிறது. எடுத்துக் காட்டாக காட்சி, புறப்பொருளைப் புலப்படுத்துவது என்று பொதுவாக அறியப்பெறுகிறது. புறப்பொருள் பிரமத்தின் வெளிப்பாடு என்று வேதம் உண்மைத் தத்துவ நிலையில் விளக்குகின்ற ஆற்றலால் பிரமம் புறப்பொருள் கட்கு ஆதாரம் என்பதை வேதம் காட்டும். காட்சியோ, பிறவோ, வேதத்திற்கு அயலாக இல்லை. இந்நிலையில் பிர்மத்தைப் பொதுப் பொருள்கள் இடத்திலே வைத்து

வேதம் உணர்த்துகிறது. இவ்வாறு உணர்தலிலே புறப் பொருள் பற்றிய அறிவு பிரம ஞானத்தில் ஒன்றுகிறது. பிரமம் அனைத்துப் பொருள்கட்கும் ஆதாரமாகும். பொருள் பிரமத்தில் அல்லது தனது அடிப்படையில் ஒன்றுகிறது.

வேதம், மற்றைய அறிவு வாயில்களைக் கடந்து விளங்குகிறது என்று சொன்னால் மற்றையவைகளை உட்படுத்தியே விளங்குகிறது என்று பொருள். இதே போலப் பிரமம் அனைத்துப் பொருள்களையும் கடந்து விளங்குகிறபோது, எப்பொருளையும் விலக்குவது இல்லை. ஆதலால், அறிவு பெறுதற்கு உரிய வாயிலாகத் திகழ்கின்ற எந்த வாயிலும் வேதத்தால் தெளிவு பெறாத நிலையில் இல்லை. இதேபோலப் பிரமத்திற்கு அயலாக எப்பொருளும் இல்லை. பிற வாயில்களின் மூலம் நாம் பெறுகின்ற அறிவிற்கு வேதம் பிறப்பிடமாகும். சாந்தோக் கியம் ஒரு மெய்ப்பொருள் இயல் நிலையில் நின்று முடிவிவுக்கு வந்துள்ளது. சாந்தோக்கிய மெய்ப்பொருள் இயலின் முடிவு வருமாறு: "பிரமத்திற்கு இரண்டாவது நிலையில் யாரும் இல்லை". தனக்குவவையில்லாதான் பிரமன், ஒன்றே எனக் கூறுகின்றவர் உலகின் உண்மையல் லாத நிலையினை உணர்கிறார். பிரமமும், உலகும் ஒன்றேயெனக் கொள்கின்றவர் உலகினை இறைவனது உடலாகக் காண்கின்றனர். வேதத்தின் சொற்பொருளைக் கொண்டு வேதம் பல பொது உண்மைகளையுடையது என்று கூறுவது பொருந்தாது.

இவ்வுலகு உண்மையற்ற எனக் கருதுவது இவ்வுலகு உண்மையுடையதா அல்லது அற்றதா என்று கருதுவதன் அருமையை உணர்த்துவதாகும். இவ்வுலகினை பிரமத்தின் உடல் எனக் கூறுவது. பிரமத்தைப் புறப்பொருள் ஒன்றினால் கட்டுறச் செய்வதாகும். இம்முடிவுகள் பிரமமெய்ப்பொருள் இயலை எதிர்க்கத் தக்கன அல்ல. உலகு உண்மைப்பொருள் அன்று என்று கூறுவதோ, உலகு

பொய்ப்பொருளும் அன்று என்று கூறுவதோ இவ் விருவகை முடிவுகளைக் கூறுவது வேதத்தின் உண்மை நிலை அன்று.

வேதத்தின் நிலையாவது பிரமம் இணையற்றது என்று கூறுவது, பிர்மத்தின் மெய்ப்பொருளியலால் ஏற்படும் உண்மையாகும். இதனின்று நாம் பெறுவது உலகம் உண்மையே, இவ்வுண்மையினை ஏற்கின்ற பொழுது இவ்வுலகின் உண்மை ஆதாரத்தைக் காணு கின்ற சிக்கல் ஏற்படுகிறது. வேதம், உலகு உண்மையினை நிறுவிய நிலை, பிரமத்தின் மெய்ப்பொருளியலை இன்றிய மையாத தாக்குகின்றது.

## 4

**பி**ரம மெய்ப்பொருளியல் ஆய்வின் மூலமாகப் பிரமத்தின் உண்மை அறியப்பெறுதல் வேண்டும். இவ்வாறு பிரம மெய்ப்பொருளியலின் பயிற்சியின் மூலம் பிரம உண்மையினைத் தெளிதல் வேதத்தில் முக்கிய கொள்கையாகக் காணப்பெறுகிறது. வேதத் தொடர்கள் மேற்குறித்த கருத்தினை விளக்கும். 'பிரமத்தைப் பற்றி ஆராய்க,' "பக்தியோடு பிரமத்தைப் பற்றி ஆராய்க" இவ்விரு தொடர்களும் இவை போன்ற பிறவும் மெய்ப்பொருள் ஆராய்ச்சி இயலின் மூலம் பிரமத்தின் உண்மை அறியப்பெறல் வேண்டும். என்பதை வலியுறுத்தும்.

"பிருகதாரண்யக' உபநிடதத்தில் பிரமத்தைப் பற்றிய மெய்ப்பொருளியல் வரையறை செய்யப்பெறுகிறது. "ஆன்மா, உணரப்பெறு வேண்டுமானால், ஆன்மா அறியப்பெறல் வேண்டும், பயிலப்பெறல் வேண்டும். பயின்று, தெளியப் பெறல் வேண்டும்," பிரம சூத்திரம் "பிருகதாரண்யக' உபநிடதத்தில் அடங்கி இருக்கும் கருத்து ரைகளால் குறிக்கப்பெறும் பொருளை வெளிப் படுத்துகிறது.

அறிவு அல்லது ஞானம் என்பது பிரம மெய்ப் பொருளியலாகும். பிரம மெய்ப்பொருளாவது பிரமத்தை அறிதல், சிந்தித்தல், தெளிதல் ஆகியவை முறையே நிகழ்வனவாகும். அறிதலாவ்து, வேதத்துள் பிரமத்தைப் பற்றிக் கூறப்பெற்றுள்ள உண்மைகளை உள்ளவாறு அறிதல் ஆகும். உலகியலிலே அனுபவ வழியே, அறியப் பெற்ற விளக்கங்கள் பிரமத்தை அறியப்போதாது.

வேதத்தில் அறியப்பெற்ற விளக்கங்கள் நன்கு சிந்தித்தல் அடுத்த நிலையாகும். வேதத்தில் காணப்பெறும் பகுதிகள் அனைத்தையும் ஒருங்கே நினைவில் வைத்து நாமறிந்த உண்மைகளைத் திறன் ஆய்வு முறையில் தெளிதல் இன்றியமையாதது.

வேதம் முழுமையாக உணர்த்துகின்ற உண்மையினை அறிதல் வேண்டும். அறிந்த உண்மைகளைச்சிந்தித்து திறன் ஆய்ந்த உண்மைகளாயும் பயன்படுத்தி வேதத்தின் உட் பொருளை அறிதல் வேண்டும் தெளிதல் ஆகும். இம்முறை யினைத் தியானம் அல்லது வழிபாடு என்று கூறுவர். தியானம் அல்லது வழிபாடு பொதுவாகத் தெரிந்த ஒரு பொருளிடத்துக் கருத்தினைப் பதிய வைத்தல் என்பது அதன் வழக்கமான பொருளாகும். இவ்வாறு, தெரிந்த ஒரு பொருளில் பதியவைத்தல் ஆன்மீக முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதாகும்.

பிரம மெய்ப்பொருளியல் பாசங்களினின்று விடு தலை பெற விரும்புகின்ற விருப்பத்தின் வெளியீடாகும். ஆன்மீக முன்னேற்றத்தால் இது விளங்கும். மெய்ப் பொருளியல் மனத்திலே, ஒரு சம நோக்கினை உண்டு பண்ணுகிறது. சம நோக்குப் பெறுகின்ற ஒரு மாணாக்கன், பிரமத்தை, வேதத்தில் விளக்கியுள்ளவாறு அறிகிறாள். இக்காரணத்தால் மாத்வர், மெய்ப் பொருளியலை உயரிய ஒழுங்க நெறியாகக் கருதுகிறார்.

மெய்ப்பொருளியல் வேதத்தில் அறிகின்ற ஓர் முயற்சியாகும். வேதம், பிரமத்தையே உட்பொருளாகக் கொண்டு விளங்குவதால், வேதம் பிரம மொழியையே பயிலுகிறது என்று கூறவேண்டும். ஏதாவது ஒரு கருத்துரையை வேதம் எனக் கொண்டு அக் கருத்துரையின் உண்மையினை நிறுவுவதற்கு மெய்ப்பொருளியல் முயல்வதில்லை. பிரமமொழியைத் தெரிதலே, பிரமமொழியே வேதம் என அறிதலே மெய்ப்பொருளியலையும் தனது இருவகைத் தோற்றங்களாகக் கொண்டு விளங்குகிறது. பரம்பொருளை அறிகின்ற முறைமையில் மெய்ப் பொருளியல் முதலிலே அமைகிறது; வேத வடிவம் கொள்கிறது.

வேத வடிவம் கொள்வதால், பின்னர் எழும் மெய்ப்பொருளியல் வேதத்தின் அடியாக எழுவது இன்றியமையாததாகிறது. இவ்வுண்மையினை மாத்வர் நன்கு உணர்ந்து தன்னை வேதத்தின் உண்மைகளால் இயக்கப் பெறாதவர் என்று குறிக்கிறார். மாத்வர் தன்னைக் கடவுள் சித்தாந்தி அல்ல என்று கூறிக்கொள்கிறார். மாத்வரது இக்கருத்தை ஒட்டியே 'ஜயதீர்த்தர்' பிரம சூத்திரம் வேதத்தைப் பின்பற்றிப் பிரமசூத்திரம் தோன்றவில்லை எனினும், வேதத்தின் உட்பொருளைக் காணவும், வரையறை செய்யவும் முற்பட்டுள்ளது என்றும் கூறுகிறார்.

மேலே குறித்த கருத்துகளின் விளக்கம் மாத்வரது பிரம மீமாம்சையை நன்கு விளங்கிக் கொள்ளத் துணை செய்யும். ஆனால் விளங்கிக் கொள்வதில் உள்ள அருமைப்பாடு புலனாகின்றது. இவ்வருமை தவிர்க்க வொணாதது என்று மாத்வர் கூறுகிறார். பிரமத்தை நன்கு அறிதல் என்பது பிரமமாக இருக்கின்ற ஒன்றே அவ்வாறு அறிதல் கூடும் என்பதாகும். வேத மொழிகளைப் பயின்று, பிரம மெய்ப்பொருளியல் நாராயணன் தன்னை

வாசுதேவனாக அனைத்தையும் உள்ளடக்கியோனாக அறிந்து கொள்ளுதலை விளக்குகிறது.

பிரமம் அனைத்தையும் உள்ளடக்குகின்ற பரம் பொருளாகும். இதனை உணர்ந்து பாதராயணர் நாராயணனை அல்லது வாசுதேவனை விஷ்ணு என, வேதம் போற்றுவதாக விளக்குகிறார். பிரமம் தன்னை விஷ்ணு என, உணர்ந்து கொள்ளுகின்ற முறையே, பிரம மெய்ப்பொருள் இயலாகும். இவ்வாறு உணர்தலாகிய முறையே படைப்புத்திறனாக நிகழக் காண்கிறோம்.

மெய்ப்பொருளியலுக்கு அயலாக ஏதும் இல்லை என்று தெரிய வருகிறது. இதனை உணர்த்தவே மாத்வர் மெய்ப்பொருளியலை விஷ்ணுவைக் குறித்த விஞ்ஞானம் என்று கூறுகிறார். விஷ்ணுவைப் பற்றிய விஞ்ஞானம் மிகுந்த விரிவுடையது. அனைத்து விஞ்ஞானங்களின் பிறப்பிடமாக விஷ்ணு விஞ்ஞானம் விளங்குவதோடு அவற்றின் இல்ட்சியமாகவும் விளங்குகிறது. விஷ்ணு விஞ்ஞானத்தைப் பயிலுதல் உயரிய பயிற்சியாகும். இப்பயிற்சி மற்றைய பயிற்சிகள் அனைத்திலும் உள்ள நன்மைகளை உட்கொண்டதாகும். மேற்குறித்த கருத்துகள் அனைத்தையும் நிறுவ மாத்வர் பிரம மெய்ப் பொருளியலை விளக்குகிறார்.

## பிரம மெய்ப்பொருளியலின் விளக்கம்

வேதம் உணர்த்தும் உண்மைகளின் அகத்தூய் மையை அறிதலே பிரம் மெய்ப்பொருள் இயலாகும். வேதவளத்தை அறிதலால் பிரமத்தின் எல்லையற்ற முழுமையான நிறைவினை அறிதல் கூடும். அறிவும், அறிவுற்ற பிற நிலைகளும் ஒன்றோடு ஒன்று மாறுபட்டு நிற்கக் காண்கிறோம். இம்மாறுபாடுகளை எல்லாம் கடந்த நிலையில் உண்மையான அறிவு நிலை நிறுத்தப் பெறுகிறது. இவ்வாறு அறிவு நிலை நிறுத்தப் பெறுதலே வேதத்தின் வளத்தைக் குறிப்பதாகும்.

வேத வளத்தை வெளிப்படுத்துவதற்கு யுக்தி அல்லது அறிவு பயன்படுத்தப்படுகிறது. இவ்வறிவு வேத அறிவாகும். உலகியலிலே பயன்படும் அறிவைக் கடந்த அறிவு, வேத அறிவு. வேத அறிவினால் உணரும் உண்மைகள் பின்னர்ப் பொய்யாவது இல்லை. வேத அறிவினிடத்து முழுமையான ஆன்மீக நோக்குச் சிறப்பாக அமையக் காண்கிறோம். வேத அறிவு தன் உண்மையைத் தானே நிறுவுகிறது. ஆனால், இவ்வறிவு உலகியலில், அனுபவ நிலையில் பயன்படுகிற பொழுது முரண்படு வதைக் காண்கிறோம். பிழைபடுவதாக அமைகிறது. ஏனெனில் அனுபவ நிலையில் எவ்வுண்மையும் பேருண் மையாகாது; எதுவும் நிறைவுடையாதாகாது.

மேற்குறித்த கருத்துக்களின் பொதுவான அடிப் படையில் மாத்வ் மெய்ப்பொருள் இயலின் சிறந்த கூறுகளைச் சுருக்கமாகச் பார்ப்போம்.

## 1

குறை உணர்வு, நிறைவாகிய கருத்திற்கு வழி வகுக்கிறது. சிலரிடத்தில் குறை உணர்வு நிறையின் உண்மையை அதாவது பிரமத்தை ஐயுறத் தூண்டுகிறது. ஐயம், மெய்ப்பொருள் இயலைத் தோற்றுவிப்பதாகும். பிரமம் உண்டா என ஐயுறுதல் ஆகிய பிரம்மத்தை அறியும் வாயில் உண்டா என ஐயுறுதல் ஆகிய இரு நிலைகளும் மெய்பொருளியலை இன்றியமையாத தாக்குகின்றன. பிரமம் தானே விளங்குவது என்று கொள்ளலாம். இவ்வாறு கொண்டால் பிரமம் அறிவால் அறியப்படும் பொருள் என்று கொள்வதாகாது. பிரம்ம அறிவால் அறியப்படுவது அன்று எனக் கொள்வது மெய்ப் பொருளியலை மறுப்பதாகும். மெய்ப் பொருளி யலை மறுப்பது என்பது மெய்ப்பொருள் இயல் என ஒன்று உண்டு என்பதை முன்பாகவே ஏற்பதாகும். ஆதலால் இது தனக்குத்தானே முரணாக முடிகிறது.

பிரம நோக்கு, கருத்திலே உள்ளவரை மெய்ப் பொருளியல் அமைதல் இயலும். பிரம நோக்கில் மாறுதல் நிகழ்கிறபொழுது மெய்ப்பொருளியல் பிழைபடுகின்றது. விடுதலை வேட்கை மெய்ப்பொருளியலுக்கு வழி காட் டாது. அவா, துன்பமேயாகும். அவாவின் காரணம், மயக்கம் அல்லது திரிபுக் காட்சி, அல்லது பிறழ உணர்தல் என்பது மெய்ப்பொருளியலோடு முரண்பாடுடைய வதாகும். திரிபுக் காட்சி என்பது முன்னரே ஒருவகைக கருத்துக் கொள்வதால் ஏற்படுகின்றது. ஆனால், மெய்ப் பொருளியல் எவ்வகைக் கருத்தையும் முற்படக் கொள் வது இல்லை. மெய்ப்பொருள் இயல் பேருவகையின் விளைவு. மெய்ப்பொருள் இயலே பேருவகையாகும்.

இப்பேருவகை யாவற்றையும் கடந்தது; அனுபவ நிலைகளால் கட்டுப்படாதது. பேருவகை என்பது பற்றி லாத நிலையை வெளிப்படுத்துவதாகும். பற்றின்மை என்பது, பிரமம் ஒன்றே பற்றுதற்கு உரியது என்பதை உறுதி யாகக் கொள்வதாகும். அனைத்தும் ஒன்றையொன்று தழுவியதாக உள்ளது; ஆனால் உயர்ந்த ஒன்றினை நோக்க இவையனைத்தும் குறையுடையனவே.

மெய்ப்பொருள் இயல் மனிதனால் படைக்கப் பெற்றது அன்று. மனிதனிடத்துள்ள தெய்வீகக் கூறினை விளக்குவதே மெய்ப்பொருள் இயலாகும். பிரமத்தின் அருளின் விளைவாக மெய்ப்பொருளியல் அமைகிறது.

அறிவின் உயரிய வாயிலை அறிதலும் அவ்வாயி லின் உயரிய பொருளாக உள்பொருளை அறிதலும் மெய்ப் பொருளியல் முறைகளாகும். பிரமம் என்ற சொல் உயர்வை உயர்ந்த அறிவு பிறப்பதற்கு உரிய வாயிலாகப் பிரமம் விளங்குகிறது. இவ்வகையில், பிரமம் இன்றியமை யாதது, என்றும் நிலைப்பது, (nitya), குற்றமற்றது, (nirdosra), தன், உண்மையைத் தானே நிறுவுவது (Svatahpramana) உருவம் அற்றது (a-pauruseya), ஆகும். இக்கருத்துக்களால் பிரமம் வேதம் என, வழங்கப் பெறுகிறது. பிரமம் உள்பொருளாகக் கருதப்பெறின் அனைத்து நிறைவும் ஒருங்கேயுடையது என்பது புலனாகும். அனைத்து நிறைவும் உடைய ஒன்று, அனைத்து ஆற்றலையும் உடையது ஆகும். உள்ள அனைத்திற்கும் உளதாகும் தன்மையினை நல்குவது பிரமம் ஆகும். உள்பொருள் என்பது (1) தன் உண்மை நிலை (சொரூபம்) (2) அதன் புற நிலை (பிரமிதி) (3) உள்பொருளின் செயற்பாடுகள் (பிரவிர்த்தி) ஆகிய அனைத்தையும் கொடுக்கின்ற நிலையில், செய்கின்ற நிலையில் பிரமம் விஷ்ணுவென வழங்கப்பெறும்.

பிரம மெய்ப்பொருளியல் விஷ்ணுவின் மெய்ப் பொருளியலாக மாறுகிறது. இதனை உணராமை

பந்தத்திற்குக் காரணமாகும். இதை உணர்தல் விடுதலை யாகும். கட்டுறுவதும், விடுத்லை அடைவதும் ஒங்கே விஷ்ணுவின் வேலைகள் ஆகும். விஷ்ணு விடுதலை அடைதற்கு வழியாகவும் பெற வேண்டிய லட்சியமாகவும் ஒருங்கே விளங்குகிறார். வேதம், கலப்பற்ற மெய்ப் பொருளியலாக இருந்து இந்த அறிவைத் தோற்றுவிக் கின்றது. இவ்வறிவினால் ஒவ்வொரு கருத்தும், சொல் லும், இறைவனைப் பற்றிய உண்மையின் விளக்கமாக அமையப்பார்க்கிறோம். வாழ்வு முழுமையும் இறைவ னுக்குப் படைக்கப் பெறுவதாக அமைகின்றது.

## 2

பிரமம் (விஷ்ணு) நிறைவுடையதாகக் கருதும் பொழுது அறிகின்ற நிலைக்கு அப்பாற்பட்டதாக விளங்கு கிறது. பிரமம் என்றும் உள்ளது; இன்றியமையாதது; யாவற்றையும் தோற்றுவிப்பது பிரமம் எனக் காண்கின்ற போது அது அறியக்கூடியதாகின்றது. உணர்வுள்ள ஆன்மாக்கள் அல்லது அறிகின்ற ஆற்றல் உடையவர்கள், உணர்வற்ற பொருள்கள் ஆகிய இருவகைக் கூறுகளை உலகு உடையது. தனித்த நிலையில் உள்ள ஆன்மாக்கள் பலவாகும். இவ்வான்மாக்கள் எண்வகை நிலைகளைக் கடந்து செல்கின்றன.

எட்டு வகை நிலைகளாவன: (1) பிறப்பு (2) இறப்பு (3) அழிவு (4) சார்புள்ள நிலை (5) அறிவு (6) அறியாமை (7) பந்த நிலை (8) விடுதலை. வெவ்வேறு ஆன்மாக்கள், வெவ்வேறு நிலைகளில் இருப்பனவாகும். அனைத்து ஆன்மாக்களும், தம்முள் தொடர்புடையன. எந்த ஆன்மாவும், விடுதலை உணர் வோடு இல்லை. ஆன்மாக்கள் தம்முள் பெரிதும் தொடர்புடையன.

ஒவ்வொரு ஆன்மாவும் தனித்த இருப்பு உடையது ஆனாலும், மற்றைய ஆன்மாக்களால் தொடர்புறுதனவே.

உணர்வு, உடையதானாலும், உணர்வற்றதானாலும், ஒவ்வொரு பொருளும், இயல்பிலே மற்றொன்றனைச் சார்ந்ததாகவே காணப்பெறுகிறது (பரதந்திரம்). சார்புடையது தன்னளவில் விளக்கம் உடையது அன்று; ஆதலால், மற்றவற்றையும் விளக்காது. சார்புடையது, சார்பற்ற ஒன்று உளது என்பதைக் குறித்து நிற்கிறது.

உலகப் பொருள்கள் சார்புடையன அல்ல என்று மறுப்பது அல்லது சார்புடையனவாகத் தோன்றுதல் மித்தையாகும். மித்தையையோ அல்லது மறுப்பையோ, சார்பு நிலையில் வைத்துப் பேசுவதாகும். மறுப்போ அல்லது மித்தையோ ஒன்றைச் சார்ந்தே விளங்குவனவாகும். சார்புடையன அனைத்திற்கும், மித்தையாகத் தோன்றுவன அனைத்திற்கும் மூலமான சார்பற்ற ஒன்று இருத்தல் வேண்டும். சார்புடையது, ஏதேனும் ஒரு பொருளில் உண்மை எனவே கொள்ள வேண்டும். சார்பு அற்றது தோன்றுகின்ற இவ்வுலகத்தில் உண்மையான காரணமாகும். சார்பற்றது எல்லா நிலைகளிலும் தன் உண்மை நிறுவப்பெற்றதாகும். சார்பற்றது, காரியங்களின் மூலமாகவே தனித்துச் சார்பற்று உள்ளதனை தாம் அறிகிறோம். சார்பற்றது என்றென்றும் செயவல்லது. செயல்வல்லார்க்கு எல்லாம் தலைமையாகச் செயல் வலலானாக விளங்குவது. எல்லாம் வல்ல நிலையிலே அனைத்துமாகச் சார்பற்றது விளங்குகிறது. அனைத்துக் கூறுகளையும் கொண்டு விளங்குகிறது. ஒவ்வொரு கூறும் தனித்து விளங்குவது. சார்பற்றது தன்னுள்ளே வேறுபாடுகள் அற்றது. சார்புடையதினின்று பிரித்து அறியக் கூடியது.

சார்புமையதைப் பிரித்துக் கூறுவது சார்பற்ற தற்கு எதிராக அமைப்பது ஆகும். சார்பு உள்ளதைச் சார்பற்றதற்கு மறுப்பாகக் கொள்வது சார்புடையதை நிறுவுவதாகும். இவ்வுண்மைகள் அனைத்தையும் வேதம் உணர்ந்தே சார்பற்றதின் ஒருமையையும், சார்புள்ள

தினின்று பிரிந்து உள்ளதையும் விளக்குகிறது. ஒருமையும் வேறுபாடும் ஒன்றை ஒன்று மறுப்பதாகக் கொள்வது பொருந்தாது. ஒருமையும் வேறுபாடும் ஒன்றுக்கொன்று எதிரான என்று கொள்வது சார்புள்ளதையும், சார்பற்ற தையும் பிரித்துக் காண்பதற்குத் துணை செய்யாது.

பன்மை, வேறுபாடு, படிநிலைகள், தர நிலைகள், வகைகள், செயல் நிலைகள் இன்ன, பிறவும் சார்பற்ற வற்றை மூலமாகக் கொள்வன. சார்பு அற்றது எல்லா நிலைகளிலும் நிறையுடையதாகும். எல்லாவற்றையும் செய்கின்ற ஆற்றல், எல்லாவற்றையும் கொண்டுள்ள நிலையினை மெய்ப்பிப்பதாகும்.

## 3

உள்ளன அனைத்தும் தாமே தொழிற்படுவன என்ற கருத்து தவறுடையதாகும். இக்கருத்தின் அடியாக எழுகின்ற அனுபவங்கள் பிரமமே அனைத்தையும் நிகழ்த்துவது என்னும் உண்மையை மறுப்பதாகிறது. பிரமமே அனைத்தையும் நிகழ்த்துகிறது என்ற உணர்வ தற்கு மெய்ப்பொருளியலே மூலமாகும்.

சார்புள்ள ஒரு பொருள் உணர்வுள்ளதாயினும், உணர்வற்றதாயினும் எல்லா நிலைகளிலும் சார்புடைய தேயாகும். ஆதலால், எப்பொருளும் தாமே ஆக்கவும், அழிக்கவும், மாற்றவும் இயலுமோ அப்பொருளே, தாமே எச்செயலையும் செய்யவல்லது எனக்கொள்ளுதல் பொருத்துவதாகும். எச்செயலையும் நிகழ்த்தும் ஆற்றல் கீழ்க்காணும் திறமைகளை உடையதாதல் வேண்டும்.

(1) தீமையைத் தவிர்க்கவும், நன்மையைச் செய்யவும் திறன் உடைமை; (2) களைப்பு ; ஆர்வம், நினைவாற்றல் இன்மை, துன்பம், ஆகியவற்றினின்றும் நீங்கியிருத்தல்; (3) சார்பின்றி இருத்தல்; (4) கருதியதை நிறைவேற்றும் திறன் (5) புலப்படும் தன்மை (6) ஆற்றலைச் சிதறச் செய்யாமை

(7) தன்னிறைவு. உலகிலுள்ள எப்பொருளும் மேற்குறித்தத் திறன்களைப் பெற்றுள்ளன எனக் கூறுதல் இயலாது. ஆதலால், உண்மையான செயல் நிலையை, உடையதாகக் கூறுதல் இயலாது.'

பிரமம் ஒன்றே மேற்குறித்த ஆற்றல்களை அனைத் தையும் ஒருங்கே உடையதாகும். எல்லாவற்றையும் நிகழ்த்து கின்ற திறனையும் உடையதாகும். பிரமம் சார்பற்றது. பிரமமே, செய்வோனாக, செயப்படும் பொருளாக விளங்குகிறது. யாவும் பிரமத்தின் செயலேயாகும். இவ்வுலக நிகழ்ச்சிகள் பிரமத்தின் படைப்பாற்றல் கொள் ளும் விரிவே. செயல் உலகு, பிரமத்தின் ஆற்றலை மறுப்ப தாகாது. பிரமம் யாவற்றையும் நிகழ்த்துவோன் என்று கருதும்பொழுது விஷ்ணுவாகக் கொள்ளப்பெறுகிறான்.

யா்வற்றையும் நிகழ்த்துகின்ற திறன், பொருள்களைப் படைத்தலிலும், 'பணியாற்றுவ்திலும் அடங்குகிறது. இவ்வுலகு, பிரமத்தினுடைய ஆற்றலின் விளைவாகும். அதாவது செயற்படுத்துவதிலும் அமைகிறது. செயற் படுவது, செய்வானாகாது. அதே போல், செயற்படு வோனும் தாமே செயற்படுவதாகக் கருதுவதற்கு இல்லை. செயற்படுத்தப்பெறுவதாகக் கருதுதல் வேண்டும். செய்பனும், செயற்படு நிலையும் முடிவாக நோக்குகிற போது ஒன்றேயாகும். ஒரு பொருள் செயற்படுகின்ற நிலையிலே தரப்பெற்றாலும், அல்லாத செயற்படுத்து கின்ற நிலையிலே தரப்பெற்றாலும், இவ்விரு நிலைகளும் விஷ்ணுவின் படைப்பாற்றலின் வெளிப்பாடு எனவே கொள்ளுதல் வேண்டும். அனைத்தையும் நிகழ்த்த வல்லவன் விஷ்ணு என்பது வெளிப்படுகிறது. இவ்வுண் மையை வெளிப்படுத்துவதே வேதம்.

## 4

**பி**ரம மெய்ப்பொருள்' வேதத்தின் உண்மைப் பொருளை வரையறை செய்கிறது. சாந்தோக்கிய

உபநிடதம் கூறும் 'சத்வித்தை' அல்லது 'சாற்பற்றதன் விளக்கத்தை அல்லது உண்மையினை, மாத்வர், விளக்கு வதிலிருந்து பிரம மெய்ப்பொருளே வேதத்தின் உட் பொருள் என, நன்கு விளங்குகிறது.

சாந்தோக்கிய உபநிடத விளக்கம், சார்பற்றது, உள்ளது, அனைத்திற்கும் மூலம் என்ற குறிப்புகளோடு தொடங்குகிறது. இவ்வாறு விளக்குகின்ற பகுதியின் முடிவிலே காண்பது; அனைத்துப் பொருள்களுக்கும் உண்மையினை, இருப்பினை நல்குவதைப் பற்றிய கருத்தே, அனைத்தும் நிறைவுள்ளது என்னும் கருத்தினைத் தருவதாகும். சார்பு அற்றது. எங்கும் நிறையும் இயல்பு டையது என்பது இங்கு வற்புறுத்தப்பெறுகிறது. இவ்வுண் மையினை நாம் சிறு நிகழ்ச்சிகளை அறிதலிலும் பயன்படுத்தலாம்.

மிகச் சிறியஆலவிதை, சார்பற்றதினுடைய ஆற்றலின் விளக்கமாகும். மஹா வாக்கியமாகிய 'தத் த்வம் அசி' சார்பற்றதின் விளக்கமாக யாவும் அமைவதைக் குறிப்பதாகும். இந்த மஹா வாக்கியத்தின் உட்பொருளை ஒருவன் உணர்வதற்குமுன் அவன் தனித்த இருப்புடை யோன் என்று கருதப்படுகிறான். மஹா வாக்கியத்தின் உட்பொருளை உணர்ந்த பிறகு ஒருவன் தன் உண்மை, சார்பற்றதினின்றும் பெறப் பெற்றதாகக் கருதுகிறான்.

இவ்வுண்மையின் உணர்வே, விடுதலையாகும். 'உத்த லகர்' என்னும் ஆசிரியர், மேற்குறித்த மெய்ப்பொருள், உணர்வு அனைத்தையும் உள்அடக்குவது, ஆதலால், இன்றியமையாதது என்று பாராட்டுகிறார். இவ்வுண்மை யினை உணர்தலே உண்மையான ஞானமாகும். சார்பற்றது அனைத்தையும் தோற்றுவிக்கும் ஒன்றாக, இப்பகுதியில் அடங்குகின்ற குறிப்புகள் அனைத்தையும் தோற்றுவிக்கும் ஒன்றாக, இப்பகுதியில் அடங்குகின்ற குறிப்புகள் அனைத் தையும் விளக்கு வதாகும். சார்பற்றது, எவ்வித தாக்கிற்கும்

உட்படாதது. ஒன்பது வகையான எடுத்துக்காட்டுகளின் மூலம், சார்பற்றது எவ்வித மாற்றங்களாலும் தொடர்பு உறாதது என்பது விளக்கப்பெறுகிறது.

உப்பினை எடுத்துக்கொள்வோம். உப்பு, காணப் பெறினும், காணப்பெறாது போயினும், உப்பேயாகும். இதுபோல, படைப்பு நிகழினும் நிகழாது போயினும், சார்பு அற்றது, சார்பு அற்றதேயாகும். சார்பு அற்றது இவ்வகையிலே மற்றவற்றினின்றும் நன்கு பிரித்து அறியப் பெறுகிறது. சாந்தோகியத்தில் காணப்பெறும், சத்வித்தை, அல்லது சார்பற்ற ஒன்றனின் விளக்கம் எவ்வாறு அமை கிறது என்பதைக் காணுவோம். ஒரு பகதியின் உட் பொருள் அதன் பொருளைக் காணும் முறையால் வெளிப்படும் பொருளின் தொடக்கம் முடிவு, வற்புறுத் தப்பெறுகின்ற பகுதிகள், அதன் விளைவு, மூலக் கருத்து, கொள்ளும் பொருளின் காரணம் ஆகியவற்றை ஆராய் வதால் அவ்வுட்பொருள் வெளிப்படுவதாகும்.

சாந்தோக்கியத்தில் காணும் மேற்குறித்த பகுதி யையே, மேலும் மாத்வர் விளக்கிச் சார்பற்றதன் உயர் வான் உண்மைகளைப் புலப்படுத்துகிறார். சார்பற்றது தன்னை, தன்னிடத்திருந்தே பிறப்பித்துக் கொள்கிறது. சார்பற்றது, கருதியவைகள் "யான் எல்லை கடந்த உருவத்தில் அமைவேனாக", படைத்தலாகிய செயலை மேற்கொள்வேனாக என்பனவாகும். இப்பகுதியின் கருத்திற்கு இயையவே படைப்பைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் இருவகைப் படைப்புகளை நினை வில் வைத்துப் பேசுகிறார். அவற்றில் ஒன்று எல்லை கடந்த விஷ்ணுவின் வடிவங்கள், விஷ்ணுவினின்றே தோன்று வது. மற்றொன்று எல்லை கடந்த வடிவங்கட்கு ஏற்ப அமையும்.

இவ்வுலகில் அமையும் வடிவங்கள், விஷ்ணு வினின்றே தோன்றுவது. பின்னர் அமையும் படைப்புகள்,

முன்னர் அமைந்ததைக் கொண்டு விளங்குகின்றன. படைப்பைப் பற்றிய கருத்து, படைப்பைக் குறித்து அமையும் எப்பகுதிக்கும் பொருந்துவதாகும்.

வேதத்தில் காணப்பெறும். மற்றொரு பகுதி, "ஆத்மனினின்று இடம் என்பது வெளிதோன்றியது" இப்பகுதிக்குள்ள பொருள் (1) ஆத்மனே, விஷ்ணுவாகும். வெளியும் விஷ்ணுவாகும். இப்பொருளின்படி (2) ஆத்மன் விஷ்ணுவாகும். வெளி எனக் குறிக்கப்பெறுவது, உலகியலிலே குறிக்கப்பெறுகின்ற வெளியாகும். விஷ்ணுவினின்று வெளி தோன்றியது என்றும், வெளி, சார்பற்ற விஷ்ணுவினின்று தோன்றுகிறதென்றும் பொருள் கொள்ள வேண்டும்.

சார்பற்றதினின்று, சார்புடைய வெளி போன்றவை தோன்றுகின்றன என்ற கருத்தைச் சார்பற்றதன் உண்மையினை அறியப் பயன்படுத்துவோம். அனைத்துச் சொற்களும் உலகியல் பொருள்களைக் குறிக்கப் பயன்படுத்தும் பொழுது, விஷ்ணுவின் வெவ்வேறு வடிவங்களைக் குறிப்பனவாகவே கொள்ள வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு பண்பு உள்ளது. இப்பண்பினுக்குப் பொருந்தும் வடிவம் குறிக்கப் பெறுவதாகக் கொள்ள வேண்டும். விஷ்ணுவின் வடிவங்கட்கு ஏற்ப அமையும் உலகியல் பொருள்களில் உள்ளார்ந்த ஆற்றல்கள் விளங்குகின்றன. வடிவங்கள் உளவாதலால், அவற்றிற்கு ஏற்ற பொருள்கள் உளவாகின்றன.

மஹா வாக்கியமாகிய (தத்வம். அசி) அதுநீயாக இருக்கின்றாய் என்ற பகுதியை இப்பொழுது காணுவோம். 'தத்' அது என்பது, விஷ்ணு என்று பொருள்படும்; துவம் நீ என்பது (மனிதனுக்கு) ஸ்வேத கேதுவின் மூலமான விஷ்ணுவையே குறிக்கும்; ஸ்வேத கேது என்பதை உணர்த்தும். ஸ்வேத கேதுவாகிய தனி ஆன்மாவுக்கு மூலம், விஷ்ணுவேயாகும். 'அசி' இருக்கிறாய்

என்பது. அது என்று குறிக்கப்பெறுவதும். நீ என்று குறிக்கப்பெறுவதும் ஒரே பொருளைக் குறிப்பதாகும் என்பதை வற்புறுத்துகிறது. அது நீ ஆகிய இரண்டனின் முற்றொருமையை விளக்குவதே, 'இருக்கிறாய்' என்பது. படைப்பு அனைத்திலும் விஷ்ணு ஒன்றுபடுவதைக் காண்பது இதுவாகும். விஷ்ணுவே ஒன்றுபடுவதேயாகும். விஷ்ணு, எல்லாம் வல்லவர் என்பதை அறிதல் விஷ்ணு எல்லா நிறையும் உடையவர் என்பதை அறிதலாகும்.

விஷ்ணுவாகிய இறைவன் சார்பற்றவன். ஒவ்வொரு சொல்லின் முதற்பொருளும் விஷ்ணுவாகும். ஒரு சொல்லை மற்றப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்துவது. விஷ்ணுவை மறுப்பதாகும். இவ்வுண்மையினை விளக்குவதற்கு மாத்வர் பொருளைக் குறிப்பதற்குச் சொல் ஏன் பயன்படுத்தப் பெறுகிறது என்பதை முதலில் ஆராய்கிறார். இது மொழியியல் மரபை அடிப்படையாகக் கொண்டது. மாத்வர், சரியான முறையினை வழங்குகிறார்.

ஒரு சொல், கேட்ட அளவிலேயே ஒரு பொருளை நினைவிற்குக் கொண்டுவருகிறது. ஆதலால், ஒவ்வொரு பொருளும் தம் இயல்பில் சொல்லைத்தனக்குப் பொருத்த வரையறை செய்கின்ற குறிப்புடையதாகும். இவ்வாறு ஒவ்வொரு பொருளிலே உள்ளமைந்த இயல்பும் தத்துவமே, பொருளைப் பொருளாகச் செய்கிறது. ஆதலால், சொல்லைக் கொண்டு பொருளைக் குறிக்கும் போது பொருள் பெயர் பெறுவதற்குக் காரணமாக விளங்குகின்ற தத்துவத்தையே குறிக்கின்றோம். பொருள் பெயர் பெறுவதற்கு காரணமாகும் தத்துவம், இறை வனுக்கு அயலாக இல்லை; இறைவனேயாகும். ஒவ்வொரு சொல்லும், இறைவனையே குறிக்கும்.

திருந்தாத ஒலிகட்கும், இதே விளக்கம் பொருந்தும். ஆற்றிலே ஓடுகின்ற நீர், ஒரு ஒலியினை எழுப்புகிறது.

விரைந்த நீரோட்டம் வியப்பினை விளைவிக்கிறது. அந்த நீரோட்டத்தின் அடிப்படைத் தத்துவமும் இறைவன் ஆகும். ஆதலால், ஒலி இறையைக் குறிப்பதாகும். இங்கு மாத்வர் மொழியியலின் வளர்ச்சி முறைகளை எல்லாம் ஆராய்கிறார். ஆராய்ந்து வேதம் மொழியின் உயரிய வடிவம் என்ற முடிவு கொள்கிறார். இவ்வாறு கொள்வ தற்குக் காரணம் விஷ்ணுவை உட்பொருளாக வேதம் கொள்வதாகும். ஆதலால், வேதம் நன்றாகச் செய்யப் பெற்ற முழுமையான நிறைவுடைய மொழி என்று கூறுகிறார்.

## 5

**பி**ரமம் கருத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறுவதே அதைக் கருதுவதாகும். பிரமம், அறிவால் அறியப்படும் பொருளாக அமைகிறது. பிரமத்தை வரையறை செய்வது ஏதும் இல்லை. பிரமம் பேரின்பமாகும். பிரமத்தின் படைப்பு பேரின்பமாகும். பேரின்பத்தை அடைதல் விடுதலையாகும்.

'பிரமம், அதாவது விஷ்ணு முழுமையுடையது, குறையற்றது, பொருளாவது, இலட்சியம் ஆகாது" என மாத்வர் முடிவு கொள்கின்றார்.

## பிரம மெய்ப்பொருளியலின் பயிற்சி

**மா**த்வர் இறைவன் கொள்ளும் இருவகை வெளிப்பாடுகள் இரண்டினைக் குறிக்கிறார். அவற்றுள் ஒன்று, சார்பு அற்றது. மற்றொன்று. சார்புடையது. சார்பற்றது, தத்துவமாகும். சார்புடையது, தத்துவம் செயல்படுவதால், விளைவதாகும். சார்புடையவன், சார்பு அற்றதின் வளத்தை விளக்குவனவாகும்.

சார்புடையன, உணர்வுடையன, உணர்வற்றன என்ற இருவகையையும் உள்ளடக்கியதாகும். உணர்வற்றன, மூவகையாகும்: அவற்றுள் ஒன்று, இடையறாது தோற்றுவிக்கப் பெறுவன. எடுத்துக்காட்டு: வேதம், இரண்டாவது, இடையறாது தோன்றுவனவும், ஓர் ஒருகால் தோன்றுவனவுமாகும். எடுத்துக்காட்டு: பொருள், காலம் இடம் ஆகியவை. மூன்றாவது ஓரோது கால் தோன்றுவன; எடுத்துக்காட்டு: ஜோடி முதலியனவாகும்.

மனம் செயற்படும் ஒவ்வொரு செயலிலும் உணர்வுடைய ஒருவன் இடைவிடாது தோற்றுவிக்கப் பெறுகிறான். அறிவோர் அனைவரும், மெய்ப்பொருளைப் பயிலுதலையே, வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். மனிதர் வெவ்வேறு வகையினர் ஆவர். ஒரு சாரார், மெய்ப்பொருளியலை விரும்பிப் பயிலுவோர் ஆவர். மற்றொருசாரார், அதைப் பொருட்படுத்தாது இருப்பார் ஆவர். பிறிதொரு சாரார், மெய்ப் பொருளியலை எதிர்ப்போர் ஆவர். பிழைபடும் அறிவு, அறிவு

ஆகாததுபோல், பொருட்படுத்தாது இருப்போரும், எதிர்ப்போரும் உண்மையில் அறிவோர் ஆகார்.

பிரம மெய்ப்பொருளியல் அறிவதற்குக் கடினமானதாகும். பிரமம் மெய்ப்பொருளியலைப் பயிலுவோர், விஷ்ணுவின் அருளைக் கொண்டு பயிலலாம். இவ்வாறு பயிலுதல் மெய்ப்பொருளியல் அறிவினைப் பலவகைகட்கு உட்படுத்தும், மெய்ப்பொருள் இயலில் அறிவின் தரத்திற்கு ஏற்ப ஐவகையினர் என குறிக்கப்பெறுகின்றனர். (1) உலகினைக் கட்டுப்படுத்தி இயக்குவோர் (தேவர்); (2) ஆசிரியர்கள்; (3) தந்தை; (4) காப்போர்; (5) மனிதர்கள். இவ்வாறு பிரிவுபடுத்தல், உலகினை இயக்குவோரையும் மற்றையோரையும் மெய்ப்பொருள் அறிஞர்களாகக் கருதும்படி செய்கிறது. இவர்கள் அல்லாத மற்றையோரை உலகினை இயக்குவோர் எனக் கருதுதல் பிழையாகும்.

மெய்ப்பொருள் அறிவிலே பலவகைகள் உண்டு எனக் கொள்வது அறிவின்மையிலே பலவகைகள் உண்டு என்பதைக் குறிப்பதாகும். திரிபுக் காட்சி, அறிவின்மையிலே, இடம் பெறுவதாகும். மனிதன் மீது செயல் நிலையைச் சுமத்திக் காணுதல், திரிபுக் காட்சிக்குக் காரணமாகும். திரிபுக் காட்சி தீமைகளுக்குக் காரணமாகிறது. பற்று, வெறுப்பு, முதலியன திரிபுக் காட்சியால் நிகழும் தீமைகளாகும். பிறப்பு, இறப்பு போன்றவை, விருப்பு, வெறுப்பு ஆகியவற்றால் விளைவனவாகும். இவையனைத்தும் விஷ்ணுவை முதலாக உடையன.

விஷ்ணு அனைத்தையும் நிகழ்த்துவோர் ஆவர். ஒவ்வொரு ஆன்மாவிலுள்ளும் இயக்குகின்ற தத்துவமாக விஷ்ணு அமைகிற . எந்த ஆன்மாவும் செயலற்றோ, பெர்றுப்பு அற்றோ ஓருத்தல் இயலாது. ஏனெனில் செயல் நிலைகள் அனைத்திற்கும், மூலமாக விளங்குகின்ற விஷ்ணு ஒவ்வொரு ஆன்மாவினுள்ளும், செயற்படுத்துகின்ற தத்துவமாக விளங்குகிறார். தானே செய்வோன் என்ற கொண்டாலன்றி எந்த ஆன்மாவும் செயலற்று,

பொறுப்பற்று இருத்தல் இயலாது என்பதை இது உணர்த்தும். பலவற்றையும் நிகழ்விப்போன் விஷ்ணு எனக் கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொருவனும் தனது உடலைத் தனக்குரியதாகக் கொள்ளாது, விஷ்ணு செயற்படுவதற்கு உரிய வாயிலாகக் கொள்ளவேண்டும். இவ்வாறு, கொள்ளுதல் விஷ்ணுவின் பேரராற்றலை ஏற்பதாகும். விஷ்ணுவின் ஆற்றல் வெளிப்பட ஒவ்வொருவனும், தனது உடலினைக் கருவியாக அமைத்துக் கொள்வதாவது, தனது உளநிலை, பிறப்பு, சூழ்நிலை ஆகியவற்றை விஷ்ணுவின் படைப்புகளாகக் கொண்டு அவற்றிற்கு ஏற்ப செயல்படுதலாகும். வாழ்வினது உயிர்நிலை, செயலாகும். செயல்நிலை, அறிவின் விளக்கமாகும். ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனைச் சார்ந்திருத்தலை உணர்வது ஞானமாகும். சார்பின்றி இருத்தலை உணர்வது சார்பின் படைப்பாற்றலைப் பாராட்டுவதாகும். இப்பாராட்டே விஷ்ணுவை வழிபடுதல் ஆகும்.

பிரம மெய்ப்பொருளியலை நன்கு பயிலுதலும், பயிற்றுதலும், ஆன்மாவினைக் கட்டினின்று விடுவிக்கும்; பிரம் மெய்ப்பொருளியலைப் பயிலுதல் மாறான பற்றுகள் இன்மையை உட்படுத்தும். உண்மையினை அறிதற்கு ஆவல், மெய்ப்பொருளியலைப் பயிலுதல், உண்மை அறிவினிடத்து ஈடுபாடு, திரிபுக் காட்சி இன்மை, உண்மையைப் பாராட்டுதல், மாறான நிலைகளை வெல்லுதல், அறிவு பெறுதலிலே கொள்ளும் உள நிறைவு, உலகப் பொருள்கள் நிலைத்தன அல்ல, பொருண்மை உடையன அல்ல என்பன போன்ற உண்மைகளை உணர்தல், கட்டின்றி வரையறையின்றி விளங்குகின்ற பிரமத்தை உணர்தல் முதலியன முறையே பற்றின்மையை உணர்த்தும்.

உளச் சார்புகள் ஏதும் இல்லாத ஒருவன் உண்மையினுடைய மூலம், யாது என அறிய விரும்புதல் இயல்பே. உண்மை அறிவினைப் பிறப்பிப்பது குறித்து ஐயம் நிகழ்தல் முறையேயாகும்.

ஐயமின்மை என்பது உளச் சார்பைக் குறிக்கும். உண்மையில் ஐயுறுகின்ற ஒருவன் அறிவினைச் சிறந்த முறையில் தருவதும், உயர்ந்த உண்மை யைத் தருவதும் எது என ஆராய்தல் இயல்பு. இவ்வாறு உயரிய பொருளை உணர்த்துகின்ற அறிவின் வாயிலை நாடுவதே, ஆர்ாய்வதே, மெய்ப்பொருளியலாகும். மெய்ப் பொருள் இயல் அறிவு அமைகிறபொழுது மேலே குறித்த நலன்கள் யாவும் வெளிப்படுகின்றன. நலன்கள் நன்கு வெளிப்பட்டுத் தோன்றுகிறபோது மெய்ப் பொருளியல் சிறக்க வழி அமைகின்றது.

மாத்வர் கருத்துப்படி, அற அல்லது ஆன்மீக ஒழுக்கம் பிரம மெய்ப்பொருளியல் அறிவு பெறுதற்கு இன்றிய மையாததாகிறது. ஆன்மீக, அற, ஒழுக்கம் பிரம மெய்ப் பொருள் இயல் அறிவை நன்கு பெறவும் புரிந்து கொள்ளவும், பெரிதும் தேவையாகிறது. இது நன்கு தெளியப் பெறுகிறபொழுது வேதமும், வேதத்தின் பொருளும் செவ்வையாக வெளியிடப்பெறுகிறது. வேதத்தின் உட் பொருள் பிரமம் என்பது நன்றாக விளக்கிக் கூறப் பெறுகிறது. பிரமமே வேதத்தின் உட்கிடை என்பது பிரம மெய்ப்பொருளியலைப் பயிற்றலால் விளைவதாகும். வேத உண்மைகளை நன்கு பயிற்றல் விஷ்ணுவை திருப்தி செய்தல் ஆகும்.

வேத உண்மைகளைப் பயிலுதலும், பயிற்றுதலும் சமூகத்திற்குப் பயன்தருவனவாகும். சமூகப் புனர் அமைப்பிலே, ஒவ்வொருவரும் மெய்ப்பொருள் இயல் அறிவு பெற வேண்டும். சமூகப்புனர் அமைப்பு குறித்த மாத்வரது தலையாய கருத்துகள் வருமாறு: மெய்ப் பொருளியல் அறிவு பெறுவதற்கு உரிய உள் நிலையை அல்லது வேட்கையைப் பிறப்பினால் அறிதலைவிடத் தகுதியினால் அறிதலே பொருத்தம் எனக் கொள்கிறார்.

சமூகத்திலே கடைக்கோடிக்குத் தள்ளப்பட்ட சூத்திரர்களும், பிரம மெய்ப்பொருளியலைப் பயிலுதல் வேண்டும் என்று மாத்வர் வலியுறுத்துகிறார். தீண்டாத் தகாதவர்களும் பயிலுதல் வேண்டும் என்று மாத்வர்

கருதுகிறார். விஷ்ணுவிடத்தில் ஈடுபாடு உடையோரே என்பதை ஒப்புக் கொள்கிறார். மனித சமூகத்தின் பொது நோக்கு விஷ்ணுவைப் பற்றி அறிதலும் ஆராய்ச்சியுமே யாகும் எனக் கருதுகிறார்.

சமூகதின் வளர்ச்சி, வீழ்ச்சி அரசியல் அமைப்பின் விளைவேயாகும். மாத்வர் அரசின் கடமையாக நல்ல சூழ்நிலையை உருவாக்குவதை விரும்புகிறார். தக்கதோர் சூழல் உருவாகுமேயானால் பிரம மெய்ப்பொருளியல் எளிதில் அமையும். எந்த எந்தக் கருத்துகள் பிரம மெய்ப் பொருளியல் அறிவதற்குத் துணை நிற்குமோ அந்தக் கருத்துகளை ஊக்கவிக்க வேண்டும் என்கிறார். குறிக் கோளுக்கு மாறான கருத்துகளை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்கிறார். ஆகவே அரசியல் அமைப்பு நல்ல அறிவு நிலை பெறுவ்தற்கு மிகவும் தேவையானதே.

அறிவு முதலிலே ஒன்றன் வாயிலாகப் பெறுவதாக அமைகிறது. பிறகு பயிற்சி. மிக மிக, தெளிவு பெற்று நேராக அறிகின்ற நிலை ஏற்படுகிறது. இந்நிலை அமைகிற பொழுது அவன் பெற்ற அறிவிற்கு ஏற்பப் பிரமமெய்ப் பொருளியல் உண்மைகளை அறிந்து இன்புறுகிறான்.

இவ்வாறு, கற்று, தெளிந்து, இன்புறுதலே இவ் வாழ்க்கை யில் பெறுகின்ற விடுதலையாகும். இவ்விடு தலையை ஜீவன் முக்தி என்பர். விஷ்ணுவின் அருளால் ஒருவன் விஷ்ணுவை அடைகிறான். இதுவே விடுதலை. விடுதலை யாவது விஷ்ணுவினால் பெறுகின்ற பேரின்ப நுகர்வே யாகும். அதாவது, விஷ்ணுவைப் பேரன்பிற்கு உரியதாகப் பெற்று இன்புறுதலாகும்.

**புதிய அத்தியாயம்...**

மாத்வரது பிரம மெய்ப்பொருளியலை ஒருமைக் கொள்கையின் உயரிய வடிவமாக அறியலாம். சார்பு டையவற்றைச் சார்பு அற்றவையினின்று பிரித்து அறிகின்ற நிலை, ஒருமைக் கொள்கையினை வற்புறுத்தும் உண்மையைக் குறைவறக் கூறுவதாகும். சார்பு அற்றதை மெய்ப்பொருளியலினாலேதான், அறிதல் இயலும் என்று

மாத்வர் கூறுவது. மாத்வரது ஒருமைக் கொள்கையை ஏனைய ஒருமைக் கொள்கைகளினின்று பிரித்து உணர்த்துவது ஆகும்.

மாத்வரது மெய்ப்பொருளியல், ஒவ்வொரு கூறிலும், தனிச் சிறப்போடு விளங்குவது ஆகும். அளவை நெறியின் ஆற்றல், சிந்தனைத் தெளிவு, உண்மை உணர்வு, கருத்துப் பொதுமை, விரிந்த பொதுநோக்கு ஆகியவை மாத்வரது மெய்ப்பொருளியலின் சிறப்பியல்புகளாகும்.

மாத்வர், உள்ளத்தியலுக்கும், அளவையியலுக்கும் சிறப்பாகத் தந்த பெரு விளக்கங்களாக அமைவன: அறிவு அல்லது ஞானம், சாக்ஷியாக ஆன்மா விளங்கும் பொழுது விளைவது என்பதும், சாக்ஷி உயரிய அறிவு என்பதும், இவை வேதத்துள் விளக்கப்பெற்றன என்பது ஆகும். சமூகப்புணவமைப்பு, அரசியலமைப்பு ஆகியவற்றை அவர் பிரம மெய்ப்பொருளியலை நினைவில் வைத்தே கருதுகிறார். ஆதலால், சமூக, அரசியல் மெய்ப்பொருளி யல்கள் ஒரு புதிய சிறப்பினை மாத்வரது கருத்திலே பெறுகின்றன.

சார்பற்றது. உள்பொருளைப் படைக்கின்றது. தனி ஆன்மாக்களைத் தோற்றுவிக்கின்றது. உலக நன்மைக்கும், தனது நண்மைக்கும் மனிதன் சிறந்த பங்கினை உதவுதல் விஷ்ணுயாவற்றையும் இயக்குவோன் என்ற உண்மையை உணரும்போதேயாகும். அற ஆன்மீகப் பண்புகள் பிரம மெய்ப்பொருளியலறிவைப் பெறுதற்கு இன்றியமை யாதன. மெய்ப்பொருள் அறிஞர்க்கு வேதமும், பிரமமும் என்றென்றும் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன; விடுதலையென்பது மெய்ப்பொருள் அறிஞர், விஷ்ணுவைப் பேரார்வத்தோடு இன்புறுதலாகும். இவையனைத்தும், மெய்ப்பொருளியலுக்கு மாத்வர் தந்தவை யாகும். இவையனைத்தையும், நன்கு பாராட்டுதல், மெய்ப்பொருளியல் வரலாற்றிலே புதிய அதிகாரத்தைத் தொடங்குவதாகும்.

## வைணவக் கொள்கையில் வேதாந்தம்...

இராமனுஜருக்குப் பிறகு கி.பி. பதினோராவது நூற்றாண்டில் நிம்பார்க்கர் என, ஒரு தைலாங்கு (Thailang) பிராமணர் திகழ்ந்ததாக, பொதுவாகக் கருதப் பெறுகிறது.

மற்றைய வைணவ வேதாந்திகளைப்போல் நிம்பார்க்கரும் முப்பொருள் உண்மையினை ஏற்கிறார். மூன்று பொருள்களும் என்றென்றும் இருப்பன. உண்மை யாவன. அவை பிரமம், 'சித்' அல்லத உணர்வுடையது, 'அசித்' அல்லது உணர்வு அற்றது ஆகும். பரம்பொருள் அல்லது பிரமத்தை நிம்பார்க்கர் கிருஷ்ணன் அல்லது 'ஹரி' என அழைக்கிறார்.

பிரமம் என்ற சொல்லிற்குப் பொருள் பெருமையை உடையது என்பதாகும். அதாவது, எது பெருமையுடை யதோ அதுவே பிரமம் ஆகும். ஈடும், எடுப்பும் இல்லாத ஒன்றே பிரமம் ஆகும். பிரமத்தின் இயல்புகளும், ஆற்றல் களும் ஒப்பற்ற நிலையிலும் உயர்வு அற்ற நிலையிலும் சிறந்து விளங்குவனவாகும். பிரமமே பரந்த இவ்வு லகுக்கும் ஆன்மாக்களுக்கும் காரணமாகும். இப்பிர பஞ்சம் பிரமத்தினின்று தோன்றுகிறது; பிரமத்தில் நிலை பெறுகிறது; பிரமத்தில் ஒடுங்குகிறது. பிரமமே, இப்பிர

பஞ்சத்தின் முதற்காரணமாகவும் நிமித்த காரண மாகவும் விளங்குகிறது. முதற்காரணம், நிமித்த காரணத் தினின்று வேறுபடுவது இயல்பு, களிமண், குயவனின் வேறானது. ஆனால், பிரமமோ ஒருங்கே முதற்காரண மாகவும் நிமித்த காரணமாகவும் விளங்குகிறது.

இப்பிரபஞ்சமாகப் பரிணாமம் அடைவதால் பிரமமே முதற்காரணமாகும். களிமண் ஜாடியாதல் போலப் பிரமமே பிரபஞ்சமாகிறது. பிரமம்தானே இப்பிரபஞ்ச வடிவாக மாற்றிக் கொள்வதால் நிமித்த காரணமும் ஆகிறது. பிரபஞ்சம், பிரமத்தின் உண்மை யான மாற்றம் ஆகும். மற்றைய வைணவ வேதாந்திகளைப் போல், நிம்பார்க்கரும், பரிணாமம் அல்லது காரணம், காரியமாக உண்மையிலேயே மாறுகின்றது என்ற கொள் கையினை வரையறை செய்கிறார்.

### பிரமம்

பிரமம், பிரபஞ்சத்தின் முதற் காரணம். ஆதலால், பிரபஞ்சத்துள் அடங்கி உள்ளார்ந்த நிலையில் உள்ளது. மண்ணினால் ஆன ஜாடியிடத்தில் மண் அன்றி வேறு எதுவும் இல்லாததுபோல், பிரமத்தின் காரியமாகிய பிரபஞ்சத்தில் அனைத்தும், பிரமமேயாகக் காணப் பெறுகிறது. இவ்வுலகில் காணப்பெறும், வெவ்வேறு அறிவுடைப் பொருள்களும், அறிவியல் பொருள்களும், யாவும் பிரமத்தினின்று வேறானவைபோலத் தோன்றி னும் பிரமத்தின் மாற்றமேயாகும். பிரமத்தின் மாற்றம் என்கிறபொழுது உண்மையில் பிரமமேயாகும். இக்கார ணத்தால் உப்நிடதங்கள் "அனைத்தும் பிரமமே" என்று கூறுகின்றன. பிரமம் பிரபஞ்சத்தைக் கடந்து விளங்கினும், பிரபஞ்சத்தின் அகத்தும் அமர்ந்துள்ளது. பிரமம் பிர பஞ்சத்திற்கும் புறம்பாக விளங்குவதெனக் கொள்வ தற்கு இல்லை. குயவன் மட்பாண்டத்திற்கு அயலானவன். ஆனால் பிரமம், பிரபஞ்சத்திற்கு அயலானது அன்று.

பிரமம், பிரபஞ்சத்தினோடு முற்றிலும் ஒன்றிய நிலையில் இல்லாவிடினும், அது பிரபஞ்சத்திற்கும் மேலாகவும், பெரியதாகவும் விளங்கினும் பிரபஞ்சம் முழுமையாகவும் நிறைவாகவும் பிரமத்தை வெளிப் படுத்த இயலாதது. எனினும், அது பிரபஞ்சத்தில் நிலை பெற்றுப் பிரபஞ்சத்தை இயக்குவதாகவும், அக ஆன்மா வாகவும் விளங்கிப் பிரபஞ்சத்தை உயிர்க்கச் செய்கிறது.

பிரமம், பிரபஞ்சத்தின் காரணம் என்னும் கொள்கை குறித்துப் பல்வேறு, தடைகள் எழுப்பப் பெறலாம். முதற்கேள்வி; பிரமம், பிரபஞ்சத்தைப் படைப்பது ஏன்? பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள மெய்ப் பொருளியல் கருத்து முறைகள் அனைத்தும் பிரபஞ்சப் படைப்பு குறித்து முக்கிய கேள்விக்கு முதலிலே விடை காணுதல் வேண்டும்.

அறிவுள்ள ஒருவனது செயல்கள் வரையறையான குறிப்பை அல்லது முடிவினை உடையன வாகும். படைப்பு, ஒரு செயலாகும். இப்படைப்பும், பிரமத்திடத்து முக்கிய குறிப்பு ஒன்றைக் கொண்டு விளங்குதல் வேண்டும். பிரமம் அறிவு நிலையில் உயர்வற உயர்ந்து விளங்குகின்றது. ஆதலால், இவ்வுலகினைப் படைத்ததில் ஒரு நோக்கு இருத்தல் வேண்டும்.

இறைவனுக்கு இப்பிரபஞ்சத்தைப் படைத்தலிலே நோக்கு யாதாக இருத்தல் கூடும்? நம்முடைய செயல்கள், விருப்பங்களின் விளைவுகள் ஆகும். நிறைவேறாத உளநிலைகள், செயல்கட்குக் காரணமாதலை நமது வாழ்விலே காண்கிறோம்.

பிரமமோ என்றென்றும் நிறை வுடையது. முழுமையு டையது, இன்பமாவது. எனவே, எவ்வகைக்குறைவோ, நிறைவின்மையோ இருத்தற் கில்லை. ஆதலால், பிரபஞ் சத்தின் படைப்பு இறைவனுக் காக அமைதற்கில்லை. இறைவனுக்குத் தேவையானது எதுவும் கிடையாது. ஆன்

மாக்கள் இப்பிரபஞ்சத்தை விரும்பிப் படைத்துக் கொண்டன என்றும் கொள்வதற்கு இல்லை. ஏனெனில் பிரபஞ்சம் பல இன்னல்களாலும் துன்பங்களாலும் நிறைந்துள்ளது. ஆன்மாக்களின் விடுதலை, இப்பிர பஞ்சத்தின் துன்பச் சூழலிலிருந்தும் இப்பிறப்பினின்றும் நீங்குதலேயாகும். இவ்வாறு, பிர பஞ்சத் துன்பங்களி னின்று நீங்குதற்கு விரும்புகின்ற ஆன் மாக்கள் பொருட்டு இப்பிரபஞ்சத்தைப் பிரமம் தோற்று வித்தற்கு முடியாது.

பெருங்கருணையோடு விளங்குகின்ற இறைவன் இப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து ஆன்மாக்களை எல்லையற்ற பெரும் துன்பங்களில் ஆழ்த்துவானேன்?

இக்கேள்வி, முன்னர்க் குறித்த கேள்வியைவிட ஆழம் குறைந்தது அன்று. இதுவும் எளிதில் விடைகாண இயலாததே ஆகும். ஆன்மாக்கள் படுகின்ற துன்பங் களையும் தீமைகளையும் தடுக்க இயலாத நிலையில் இறைவன் இருப்பானேல், இறைவன் எல்லாம் வல்லவன் ஆதல் எவ்வாறு? துன்பங்களையும், தீமைகளையும் தடுத் தற்கு இயலும் என்றால் ஏன் தடுக்கவில்லை? தடுக்க இயலுகின்றபொழுது தடுக்காது இருப்பது இரக்க மற்றவன் என்று அன்றோ பொருள்படும்.

மேலும், இப்பிரபஞ்சத்தில் மக்கள் பலவிதமான நிலைகளை அடைகின்றனர். நல்லவர்களும், நேர்மையான வர்களும், வெகுவாகத் துன்புறுதலைக் காண்கிறோம். தீயவர்கள், தழைத்தோங்கு தலையும் பார்க்கிறோம். ஆதலால், இறைவன் இப் பிரபஞ்சத்தைப் படைத்தவனால் கொடுமை, நீதியின்மை, ஒருதலையான முடிவுகள் கொள்ளுதல் ஆகிய குற்றங்களையுடைவன் ஆதல் வேண்டும்.

முதற்கேள்வியாகிய பிரபஞ்சக் காரணம் குறித்து நிம்பார்க்கர் ஏனைய வேதாந்திகள் போல் புகழ் வாய்ந்த

லீலைக் கொள்கையை அல்லது படைப்பு ஓர் விளையாட்டு என்ற கொள்கையை விளக்குகிறார். இக் கொள்கைப்படி இப்பிரபஞ்சத் தோற்றம் இறைவனிடத்து எவ்விதமான குறையும் இருப்பதாகக் குறிப்பதாகாது. பிரபஞ்சப் படைப்பு இறைவனுக்கு ஓர் விளையாட்டாகும். மன்னன் ஒருவன் விளையாட்டுகளில் ஈடுபடுகி றான். விளையாட்டுகளில் மன்னன் ஈடுபடுவது ஏதோ ஓர் குறைவினை நிறைவு செய்வதற்காக அன்று, இதற்கு மாறாக மன்னன், எல்லா விருப்பங்களும் நிறைவு பெற்றவனே, நிறைவேறாத விருப்பங்கள் ஏதும் இல்லாததால் மன்னன் தனது விருப்பம்போல், இறைவன் நிறைவுடையவன்; என்றென்றும் இன்பவடிவானவன்; பிரபஞ்சத்தைத் தனது நிறைவினின்றும் பேரின்பத்தின் விளைவாகப் படைக்கிறான். இக்காரணத்தால் வேதம், ஆனந்தத் தினின்று தோன்றுவதாகவும், ஆனந்தத்தில் நிலைபெறு வதாகவும், ஆனந்தத்தில் ஒடுங்குவதாகவும் விவரிக்கிறது.

லீலா வாதம் எனப்படுவது மிகு திறமையோடு படைப்பின் நோக்கத்தின் விளக்க எழுந்த முயற்சியாகும். உள்பொருளை இயங்கு நிலையிலே, இயக்கமாகக் கருதுவது படைப்பினை எளிதில் விளக்குவதாகும்.

ஹெகல்கருத்துப்படி உள்பொருளின் இயல்பு தன்னைத்தான் புலப்படுத்திக் கொள்ளுதலும் மாற்றம் கொளச் செய்தலுமாகும். இந்நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிகழ்வனவாகும். பரம்பொருளும், பிரபஞ்சமும் ஒன்றையொன்று தொன்றுதொட்டு உட்படுத்துவதாகும். பரம்பொருளின் இயற்கை, பிரபஞ்சமாக உள்ளது. சிறத்தல் முறைமையினில் உருக்கொள்ளுதல் ஆகும். பரம்பொருளை, நிலையான மாறுதலற்ற நிறைவுடைய உள்பொருள் அன்று. இயல்பிலே, இயங்கு நிலையிலே, எப்பொழுது மாற்றம் கொள்ளும் பொருளாகும். இடையறாது உள்ளது சிறத்தல் முறைமையிலே, இயங்குவதாகும்.

இவ்வாறு, உருக் கொளல் மாறுதல், பிரபஞ்சமாதல் பரம்பொருளின் இயல்பு ஆகும். பரம்பொருள் மாற்றம் கொள்வதால் உள்பொருளன்று. இருப்பு இல்லாத இல்பொருளன்று; உள்ளதும் இல்லதும் ஒன்றி உளதாதல் ஆக விளங்குவது தோன்றுதல், ஆதல் என்பது பரம்பொருளின் இயல்பு.

ஒரு பொருள் மற்றொரு பொருளாக ஆதலோ, மாறுதலோ, உள்ளதும் ஆகாது, இல்லதும் ஆகாது. ஆனால் உள்ளதும், அல்லதும் ஒன்றிய ஒன்றாகும். எடுத்துக்காட்டு: விதை, முளைக்கிறது. முளை, விதையாக இருந்தது; விதை முளையாக இல்லை. விதையின் உண்மை இயல்பு முளைத்தல் ஆகும். விதை, முளை ஆதலே, அல்லது முளைத்தலே, விதையின் இயல்பாகும். இதே போல், பரம்பொருள் இயல்பிலே பிரபஞ்சமாதல் வேண்டும். பிரபஞ்சமாதற்கு எவ்வித நோக்கும், வேண்டுவது இல்லை.

வேதாந்திகள் உள்பொருளை என்றும் நிறையுள்ள உள்பொருளாகக் கருதுகின்றனர். இவ்வாறு கொள்ளும் வேதாந்திகள் மேலே குறித்த விளக்கத்தை ஏற்பவரல்லர். அவர்கட்குப் படைப்பு குறித்த நோக்கினை அறிதல் வெல்லுதற்கரிய அருமைப்பாடுடையதாகும். இறைவன், மாறாத நிலையில் தன்னிறைவோடு, என்றென்றும் விளங்குவதனால், இப்பிரபஞ்சத்தை ஏன் படைக்க வேண்டும்?

வேதாந்தத்தில் காணப்பெறும் லீலா வாதம் உண்மையிலேயே பிரபஞ்சப் படைப்பின் நோக்கத்திற்கு ஒரு விளக்கம் தருகிறது. செயல்கள் அனைத்திற்கும் காரணங்கள் உண்டு. நிறைவேறாத விருப்பங்களோ அல்லது குறைவுகளோ செயல்களைத் தூண்டுவன என்ற பொதுக் கருத்தினை லீலா வாதம் மறுக்கிறது. சில செயல்களை விளையாட்டுக்கள் போன்றவை. எத்தகைய குறிப்பும் உடையன அல்ல. மகிழ்ச்சியின் போக்கீடாக

விளையாட்டுக்கள் அமைகின்றன. உள்ளம் நிறைவுடையது.

ஆனால் மகிழ்ச்சி நிறைந்து விளங்குமானால், ஒருவன் பொழுதுபோக்குகளிலே, ஈடுபட்டுக் களைப் பாறலாம். மகிழ்ச்சியின் இயல்பு, நிறைந்தபோது வழித லேயாகும். நிறைவு, புறச்செயல் நிலைகளிலே வெளிப் படும். இதுபோல, இறைவன் படைப்புச் செயலை விளையாட்டாகக் கொள்கிறார். இறைவனின் நிறைவும், பேரின்பமும், புறத்தே படைப்பாக விளங்குகின்றன. இறை வனிடத்துக் குறைவின்மையையோ, நிறைவின்மை யையோ படைப்பு குறிக்காது. உள்பொருள், என்றென்றும், நிறைவுடையது என்ற கொள்கையை ஏற்க வேண்டு மானால், லீலா வாதம் ஒன்றே, இறைவனது நிறை வினையும் காத்து பிரபஞ்சத் தோற்றத்தையும் விளக்கு வதாகும். லீலாவாதத்தை விளக்கிய வேதாந்திகள், நன்கு இதனைச் சிந்தித்த பெருமைக்குரியவர்கள் ஆவார்கள்.

இங்கு மற்றொரு கேள்விக்கு விடை காண வேண்டி யிருக்கிறது. பிரமத்திற்கு படைப்பு இயல்பிலே அமையும் ஓர் விளையாட்டு ஆகலாம். தேவையான ஒன்றாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஆன்மாக்களுக்குப் படைப்பு தேவையானதே. இறைவன் ஆன்மாக்களைத் தனது விளையாட்டுக்காக எல்லையில்லாத துன்பத்தில் ஆழ்த்துவது இறைவனை எவ்வாறு இரக்கமுடைய வனாகக் கூறுதற்கு இயலும்? முக்கியமான தேவைக்காக இல்லாமல் விளையாட்டுக்காக ஆன்மாக்களை இறைவன் துன்பத்தில் அழுத்துகிறார். இவ்வாறு, துன்பத் தில் ஆழ்த்துபவரை எவ்வாறு இரக்கமுடையவர் என்று கூறுவது?

இறைவன் பிரபஞ்ச விளையாட்டில் ஈடுபடுவது தனக்கென அமையாவிடினும் நோக்கற்றது அன்று, குறிப்புடையதேயாகும். அடிப்படையான காரணமாகிய

நீதி வழங்குதற் பொருட்டே படைப்பாகிய விளையாட்டிலே இறைவன் ஈடுபடுகிறார்.

நீதி அல்லது ஒழுக்கம் என்பது ஒவ்வொருவரும் அவ்வவர்க்குரிய நன்மை தீமை ஆகிய செயல்கட்கு ஏற்ற பயன்களை அனுபவித்தே தீர் வேண்டும் என்பதாகும். இதைத்தான் இந்திய மெய்ப் பொருளியலில் புகழ்வாய்ந்து கரும நியாயமாக வழங்குகின்றனர். ஒருவன் ஒரு பிறவியிலேயே தனது கருமங்களுக்குரிய பலன்கள் துய்க்க இயலாததால் அடுத்தடுத்துப் பிறந்து எஞ்சுகின்ற கருமங்களுக்குரிய பயன்களை துய்த்தல் வேண்டும். அவன் ஒவ்வொரு பிறவியிலும் புதிய புதிய கருமங்களைச் செய்யத் தலைப்படுகிறான். அதனால் மீண்டும் மீண்டும் பிறக்க நேருகிறது. இது தொடர்ந்து நிகழ்கிறது. அத் தொடர்ச்சி கருமங்கள் அனைத்தும் ஆன்மீக ஒழுக்க நிறைவு ஏற்படுகின்றவரை அமையும். பின்னரே, அவன் விடுதலை அடைகிறான். அப்பிரபஞ்சம் இறுதியில் வெறுத்த ஒதுக்கத் தக்கது எனினும் ஓர் ஒழுக்க நோக்கு உடையது ஆகும்.

இப்பிரபஞ்சம் ஆன்மாக்களுக்கு பலவாய்ப்புக்களை நல்கிக் கடந்தகால கருமங்களின் விளைவுகளை நுகரச் செய்கிறது. நுகர்வின் வாயிலாக விடுதலை அடையவும் துணை செய்கிறது. ஆனால் மேலும் மேலும் அடைகின்ற பிறவிகளிலே புதிய செயல்களைச் செய்து மேலும், கருமத்தை ஈட்டினால் அவை பிறவிகட்கு காரணமாக அமையுமே தவிர விடுதலை காணுகின்ற நெறியாக அமையாது. சுயநலம் இன்றிச் செயல்களாகப் புரிவானேயானால் பயன்களாக அமையாது, தன்னலச் செயல்களே மேலுமேலும் பிறவிக்கட்கு வித்தாகும். தன்னலம் துறந்த - பயன் கருதாத செயல்கள், பிறவிப் பிணியை நீக்குவன. ஆதலால் இறைவன் பிரபஞ்சத்தினை ஆன்மாக்களது பழைய வினைகட்கு ஏற்பப் படைக்கிறார். பிரபஞ்சத்தில் ஆன்மாக்கள் அடைகின்ற துன்பங்கட்கும்

இன்னல்களுக்கும் இறைவனைப் பொறுப்பாகக் கொள் வதற்கு இல்லை. ஆன்மாக்களே, அவரவர் கருமங்கட்கு ஏற்ப இன்ப துன்ப நுகர்வுகளை அடைதற்கு உரியவர் ஆவார்.

அத்துவிதக் கொள்கைக்கு மாறாக நிம்பார்க்கர் பிரமத்தைச் சகுணப் பிரமமாகக் கொள்கிறார். சகுணப் பிரமம் எண்ணிறந்த குண நலன்களோடு கூடியதாகும். இக்குண நலன்கள் இருவகையின. ஒருவகை: மாட்சி, முற்றறிவு, பேராற்றல், எங்கும் இருத்தல் போல்வன ஆகும். மற்றொரு வகை: இனிமை, அழகு, இன்பம், பேரருள் ஆகியவற்றைப் போல்வன. பிரமம், பிரபஞ்சத்தைக் கடந்தும், பிரபஞ்சத்தின் அகத்தும் உள்ளதாகும்; பேராற்றல் உடையது எனினும் பெருங்கருணை உடையதாகும். எங்கும் நிறைகின்ற இயல்பு உடையது எனினும், ஒவ்வொருவன் உள்ளத்திலும் நிலைபெற்று விளங்குவதாகும்; ஆட்சி புரிவது எனினும், துணை செய்வதாகும்.

இறைவன் மாட்சியும், வல்லமையும் உயர்வற விளங்குகின்றன. இவ்வியல்புகளால், இறைவனது உண்மை இயல்பினை நாம் அறிதல் இயலாது. எல்லைகடந்த அன்பும் இனிமையும் அவனது சிறந்த இயல்புகளாகும்.

பிரமத்தின் இயல்பும் குண நலன்களும் வரையறை செய்யப்பெற்ற பின்னர் எழுகின்ற கேள்வி: பிரமத்தின் உண்மையினை எவ்வாறு நிறுவுவது? என்பதாகும். இதற்கு அமையும் விடை, வேதமே பிரமத்தை மெய்ப்பிப்பது என்பதாகும். பிரமம் வேதாந்தத்துள் வேதத்தினால் அறியப்பெறுகிறது என்று கூறப்பெற்றுள்ளது.

வேதம், பலவகையான பொருள்களைப் பற்றி விவாதித்தாலும், பிரமத்தையே உண்மையில் விளக்குகிறது. தனிக்காட்சி யாலோ, கருதுதலாலோ, பிரமத்தை அறிதல் இயலாது. எப்புலனும் பிரமத்தைக் காண இயலாது. கருதல் முறையில் எதைப் பின்பற்றினாலும்,

பிரமத்தை நாம் நிறுவுதல் இயலாது. பொருள்கள் இடையே அமையும் ஒற்றுமையையே அடிப்படையாகக் கருதல் அளவை கொள்கிறது. எடுத்துக்காட்டு:

***எல்லா மனிதர்களும் இறப்பார்கள்.***
***இராமன், மனிதன் ஆவான்.***
***ஆதலால், இராமனும் இறப்பான்.***

இவ்வழக்குரையில் இராமன் மற்றைய மனிதர்களை ஒத்தவன் எனக் கொள்ளப்பெறுகிறான். ஆதலால், நாம் மற்றவர்களைப் போல இராமனும் இறப்பான் எனக் கொள்கிறோம். பிரமம், தனித்த நிலையுடையது. ஒப்பு இல்லது. ஆதலால் ஒப்பற்ற பிரமத்திற்கு ஒப்புக்கான முடியாததால் கருதல் அளவை, இங்குப் பயன்படாது.

மனிதனின் அறிவாற்றல் எல்லைக்குட்பட்டது.

மனிதனின் அறிவாற்றல் எல்லைக்குட்பட்டது என்பதனை நிம்பார்க்கர் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார். உலகப் பொருள்களை, அநுபவ நிலையில் அமைவனவற்றை யாரும் அளவை முறையிலே கருதுதல் இயலும். உலகு கடந்ததை, அனுபவம் கடந்ததை அறிவிற்கு அப்பாற்பட்டதாகக் கொள்ளவேண்டும். இந்த அறிவார் உண்மைகளை அறிவதற்கு , உலகு கடந்த உண்மைகளை உணர்வதற்கு, வேதமே நமக்கு வழிகாட்டியாகும்.

வேதம், எனப்படுவது யாது? வேதம் மறை நூல் எனவும் கூறப்படும். முதிர்ந்த சிந்தனையும், தொடர்ந்த எண்ணமும் துறவோரும் அறிவோரும் பெற்ற ஊக்கமும் உணர்வும் இவையாவும் மறை நூல்களாகத் தோன்றத் துணை நிற்பன. இம்மறை நூல்களை அருளிய இயற்கை ஆற்றல் மிகுந்த அறிவோர்க்கு எந்நாலும் மறைப்புற்ற நூல் ஆகாது. மற்ற நூல் அருளியோர் சிந்தனை. நம்முடைய சிந்தனையை விடத் தூய்மை மிக்கது. அறிவு நலம் சார்ந்தது.

மறை நூல் அருளியவர்கள் நேராக உள் உணர்வி னாலே-வளர்க்கப்பெற்ற சிந்தனையின் மேம்படுகின்ற ஆற்றலாலே, கடந்த உண்மைகளைத் தெளிகின்றனர். நிம்பார்க்கர் இறைவனை நேராக அறிதல் கூடும் என்பதை மறுக்கவில்லை. நிம்பார்க்கர். இயற்கை ஆற்றல் மிக்கோரைச் சாதாரண மக்களினின்றும் பிரிக்கிறார்.

சாதாரண மக்களிடம் அமையும் சிந்திக்கும் திறன், முதிர்ச்சி, குறைந்ததாகவும், நிறைவு அற்றதாகவும் இருப்ப தால் இறைவனை அறியத் தவறுகின்றனர். இவர்கட்கு, மறை நூல்களைக் கொண்டே வேண்டும். தவறுகின்றது. இவர்கள், மறை நூல்கள், உயர்த்தப்பெற்ற சிந்தனைகளின் பதிவாகவும், அறிவு மிக்கோர், முதிர்ந்த மனமுடையோர் ஆகியோரது நேரிய உணர்வுகளின் பதிவாகவும் விளங்கு கின்றன.

முதிர்ச்சியுடையோர்களுக்குச் சிந்தனை ஆற்றல் ஆழ வளர்ச்சிபெற்று முடிவு பெற்றுள்ளது. இவ்வளர்ச்சி யினாலும், முதிர்வினாலும் இறைவனை நேராக உள் உணர்வினாலே உணர்கின்ற திறமை ஏற்படுகிறது. ஆதலால், இறைவனை அறிவினால் அல்லது வளர்ச்சி யுற்ற மேம்படுகின்ற அறிவினால் உணர்வினால் அறியப் பெறலாம். இவ்வாறு நிம்பார்க்கர் கூறுவதை நாம் விடாப்பிடியாக அவர் கூறுவதாகக் கொள்வதற்கு இல்லை.

இந்திய மெய்ப்பொருளியலார் நிம்பார்க்கர் பிடிவாதமான ஒரு கொள்கையினை வற்புறுத்துகின்ற குற்றத்தைச் செய்வதாகக் கூறுவது தவறாகும். நிம்பார்க்கர் கொள்ளும் பிடிவாதமான கருத்து யாது? மறை வல்லார் வெளிப்படுத்தியுள்ள நூல்களில் அடைந்துள்ள கருத்துகளைத் தலைமையுடையவனவாகக் கொள்ளுதலும், திறன் ஆய்வு இன்றி நம்புதலும், பிடிவாதமாகும்.

இந்திய மெய்ப்பொருளியலார், என்றுமே மனித அறிவிலே, படி நிலைகள் பல உண்டு என்று வெளிப் படையாக ஒப்புக்கொண்டுள்ளனர். படிநிலைகள் பல உண்டு என்று கொள்ளுகிறபொழுது அறிவிலே, வளர்ச்சியுறாத நிலைகளும் மிகு வளர்ச்சியுடைய நிலைகளும் உண்டு என்பதை ஏற்பதாகும். சாதாரண வாழ்விலும்கூட, அறிவுள்ளபடி நிலைகளை நாம் ஒத்துக்கொளல் வேண்டும்.

தந்தைக்கு நன்கு புரிகின்ற ஒன்று தனயனுக்குப் புரிவதில்லை. தனயன் தந்தையை நம்பியே அறிந்து கொள்ளல் வேண்டும். விஞ்ஞானிக்கு எளியவன வாகவும் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கனவாகவும் உள்ள உண்மைகள், விஞ்ஞானம் பயிலாத ஒருவனுக்கு அரியனவாக அமையக் காண்கிறோம்.

விஞ்ஞானம் பயின்று, விஞ்ஞானியின் துணைக் கொண்டு விஞ்ஞான உண்மைகளைத் தெரியலாம். இதேபோல அறிந்தோன் துணைக்கொண்டு, அவர்கள் தெளிந்த, உணர்ந்த உண்மைகளை உணர்வது, சாதாரண மனிதருக்குப் பெரும் துணையாகும். தெளிந்தோரும், உணர்ந்தோரும் துணை செய்தால் அன்றி இறைவனைக் குறித்து ஏதும் அறிதல் இயலாது.

சாதாரண மக்கள் நிலையிலும் சிந்தனையும், அறிவும் அமைய் வேண்டும் என்று இந்திய மெய்ப் பொருளியலார் வற்புறுத்துகின்றனர். மறை நூல்களி லிருந்து கேட்டறிந்த மெய்ப்பொருளியல் உண்மைகளை நன்கு சிந்திக்க வேண்டும் என்பதே இந்திய மெய்ப் பொருளியலாரின் குறிப்பாகும்.

கேட்டனவற்றை, சிந்திக்க வேண்டும் என்று கண்டோம். சிந்தித்த பேருண்மைகளை இடையறாது தியானித்தால் அன்றி உண்மையினை நேரக உணர்தல்

இயலாது. இங்கு மறை நூல்கள் கூறும் உண்மைகளில் நம்பிக்கை வைத்துக் கேட்கிறோம். பின்னர் அவ்வுண்மைகளை அளவை முறையிலே சிந்திக்கிறோம். உண்மைகளின் திறத்தைச் சோதிக்கிறோம்.

### ஆன்மாவும், சடப்பொருளும்

உள்பொருள்களுள் இரண்டாவதாக அமைவது 'சித்' ஆகும். 'சித்' அறிவுடையது; 'சித்' ஆன்மா ஆகும். நிம்பார்க்கர் கருத்துப்படி ஆன்மா உண்மையிலே உணர்வு ஆகும். உணர்வோடு அறிபவன், ஆன்மா ஆகும். ஆன்மா செயல்வல்லவன் ஆவான். செயல்களால் விளையும் பயன்களை நுகர்வோன் ஆவான். அத்துவிதக் கொள்கை. ஆன்மாவின் ஒற்றுமையையும், யாவற்றிற்கும் பொதுவாக உள்ள தன்மையையும் வற்புறுத்துவதாகும்.

நிம்பார்க்கர், அத்துவிதக் கொள்கைக்கு எதிரராக ஆன்மாக்கள் பல என்றும், அவை அணுத்தன்மை யுடையன என்றும் கூறுகிறார். நிம்பார்க்கர் கருத்துப்படி எண்ணிறந்த, எண்ணுதற் கரிய, சிறுவடிவம் உடைய ஆன்மாக்கள் ஒன்றையொன்று ஒத்தனவாகவும் இல்லை; பிரமத்தோடு ஒத்தனவாகவும் இல்லை. விடுதலை பெற்ற ஆன்மாக்களும், இறைவனோடு ஒன்றிவிடாது. தமது தனி நிலையினைக் காக்கின்றன.

நிம்பார்க்கர் கருத்துப்படி வீடுபேறு என்பது ஆன்மாவினது தனித்தன்மையின் அழிவு அன்று. ஆனால், அழிவிற்கு மாறாக ஆன்மாவின் உண்மையான இயல்பும் பண்புகளும் முழுவளர்ச்சி உறுகின்றன. இவ்வாறு, மேலான தன் வளர்ச்சி பெற்ற பிறகு ஆன்மா. இறைவனது இயல்பையும், பண்புகளையும் பெறுகின்றது. இறைவன் ஒத்த நிலையில் ஆன்மாக்கள் வளர்ச்சியுற்ற நிலையில் அமைகின்றன. வீடுபேறு. மரணத்திற்குப் பின்னே அடை யத்தக்கது. இம்மையில், இப்பொழுதே வீடுபேறு அடை

யக்கூடும் என்று அத்துவிதிகள் கொள்வது நிம்பார்க் கருக்கு உடன்பாடு அன்று.

வீடுபேற்றினைப் பெறுகின்ற நெறி குறித்து நிம்பார்க்கார் நேரிய, அறநெறியையே வற்புறுத்துகிறார். அற நெறியே குறித்த இலட்சியத்தை அடைவதற்குத் துணை புரியும். நிம்பார்க்கர், ஐவகையான சாதனைகளை, ஆன்மீகப் பயிற்சிகளைக் குறிக்கிறார். (1) கருமநெறி (2) ஞான நெறி (3) பக்தியும் உபாசனையும் ஒன்றிய நெறி (4) பிரபக்தி அல்லது இறைவனிடத்தில் முற்றிலும் தன்னை ஒப்படைத்த பிரபக்தி நெறி; (5) குரு அல்லது ஆன்மீகத் துறையில் ஆசிரியராக விளங்குகின்றவரிடத்தில் தன்னையே ஒப்புவிக்கின்ற நெறி.

கரும நெறி ஒன்றே வீடுபேற்றுக்கு வழி செய்யாது. ஆனால் கருமங்கள் தன்னலம் அற்ற நிலையில் ஆற்றப் பெறும்போது அக்கருமங்கள் மனத்தைத் தூய்மைப் படுத்துகின்ற மனம், தூய்மை பெறுகிறபோது, ஞானமும், பக்தியும் தோன்றுகின்றன. மேற்குறித்த ஐவகைப் பயிற்சி களும், கருமம், ஞானம், பக்தி உபாசனை ஆகிய மூன்றும் தன்னம்பிக்கையோடு, அருமுயற்சிகளையும் ஆழ்ந்த தியானத்தையும் இடையறாத செயல் நிலைகளையும் மேற்கொள்வோர் பயிலுதற்கு உரியன என்று வரையறை செய்யப்பெற்றுள்ளன.

இறைவனிடத்து அர்ப்பணித்து ஒழுகுதலும், குருவி டத்து அர்ப்பணித்து ஒழுகுதலும் ஆகிய இருவகை ஒழுக லாறுகள் தன்னம்பிக்கையுடையோர், மேற்கொள்ளுதற் குரியனவாக குறிக்கப்பெறுகின்றன. இவர்கள், இடைய றாது மற்றவர்களால், வழிகாட்டப் பெற வேண்டும்; துணை புரியப்பெறல் வேண்டும். யாரிடத்து முழு நம்பிக்கையை வைக்கின்றார்களோ, அவர்களே வழி காட்டவும், துணை செய்யவும் வேண்டும். குருவோ அல்லது கடவுளோ இங்கு வழிகாட்டுதற்கு உரியர்.

மூன்றாவது உள்பொருளாவது, 'அசித்' ஆகும். இது அறிவற்றது. நிம்பார்க்கர் கருத்துப்படி 'அசித்' மூவகைப் படும். முதலாவது, இவ்வுலகின் முதற்பொருளாகிய பிரகிருதியினின்று தோன்றுவன. இவை. பிராகிருதம் எனப்படும். இரண்டாவது, பிரகிருதியினின்று, தோன்றா தவை, அபிராகிருதம் எனப்படும். இவை, பொருளளல் லாத ஒன்றினின்று தோன்றுவன. ஆனால் அறிவற்றதாக உள்ள ஒன்றினின்றே தோன்றுவனவாகும். பிரம உலகினின்று இவை தோற்றம் கொள்கின்றன. மூன்றா வது. காலம் ஆகும்.

## மதிப்பீடு

நிம்பார்க்கர் தந்த வேதாந்தக் கருத்து முறையின் அடிப்படைத் தத்துவங்களின் சுருங்கிய உரை மேலே தரப்பெற்றது. வேதாந்தத்துள் ஐவகை மூலக்கருத்து முறைகள் உள்ளன.

ஒன்று, சங்கரரது 'கேவலாத்வைதவாதம்' இதனைக் கடுமையான அத்துவைதம் என்று கூறுவர். இராமானு ஜரது கொள்கை விசிஷ்டாத்வைதம் எனப் பெயர் பெறும். இதனை அடைமொழியேற்ற அத்துவிதம் என்பர். நிம்பார்க்கரது கொள்கை துவைதாத்வைத வாதம் என்பர், இது சுவைதரும், அத்துவிதமும் கலந்தது மாத்வரது கொள்கை துவைத வாதம்.என்படும். உள்பொருள் இரண்டு, என்ற கொள்கையை மாத்வர் வற்புறுத்துகிறார்.

வல்லபர் வற்புறுத்துவது, சுத்தாத்வைதவாதமாகும். இது கலப்பில்லாத தூய அத்துவிதமாகும். இங்கு எழுகின்ற முக்கியக் கேள்வி, உள்பொருள் ஒன்றாக இருக்கும் பிரமத்திற்கும் பன்மைக் காட்சி வழங்கும் உலகினுக்கும், என்ன உறவு? பிரபஞ்சத்திற்கும் பிரமத்திற் கும் இடையே அமையும் உறவு முற்றிலும் அபேதமாக உள்ளதா? அல்லது பேதமாக உள்ளதா? அல்லது பேதாபேதம் ஆக உள்ளதா?

சங்கரர் கருத்தினைச் சுருங்கக் கூறின் பிரமம் ஒன்றே உள்பொருள். இப்பிரபஞ்சம் மாயை எனப் படுவதால், பிரபஞ்சத்திற்குத் தனித்த நிலையில் உண்மையில்லை ஆதலால், பிரபஞ்சம் பிரமத்தின் வேறு அன்று.

சங்கரர் வற்புறுத்துவது அபேதமாகும். இராமா னுஜர் கருத்துப்படி பிரமம் போல், இப்பிரபஞ்சமும் உண்மையே ஆகும். பிரபஞ்சமும், பிரமமும் அத்துவித உறவிலும், துவைத உறவிலும் இருப்பதாகக் கொள்கிறார். ஆனால், இராமானுஜர் பெரிதும் அபேதஉறவினையே வற்புறுத்துகிறார். ஆதலால் இராமானுஜரது கொள்கை, அடைமொழியேற்ற அத்துவிதம் எனக் கூறப்பெறுகிறது.

நிம்பார்க்கர் கருத்துப்படி இவ்வுலகு உண்மையே. பிரமத்தின், வேறாகவும், பிரமத்தோடு ஒன்றியும் பிரபஞ்சம் விளங்குகிறது. இங்குப் பேதத்தையும் அபேதத் தையும் ஒருங்கே, நிம்பார்க்கர் வற்புறுத்துகிறார். மாத் வரது கருத்துப்படி பிரபஞ்சம் பிரமத்தின் வேறானது. வேறுபாடு, முற்றிலும் உண்மை என வற்புறுத்தப் பெறு கிறது. வல்லவரது கருத்துப்படி பிரபஞ்சம் உண்மையாகும். ஆனால் பிரமத்தின் வேறு அன்று.

நிம்பார்க்கரது கருத்துமுறை, இராமனுஜரது கருத்து முறையைப் பெரிதும் ஒத்தது. இருப்பினும், நிம்பார்க்கரது கருத்து முறைக்குத் தனி இடம் தந்து ஐவகை மூல வேதாந்தக் கருத்துக்களுள் இது ஒன்றெனக் குறிக்கப் பெறுகின்றது. இவ்வாறு, ஐவகைக் கருத்துகளுள், ஒன்றெனக் குறிக்கப் பெற்றுள்ளதற்குக் காரணம் நிம்பார்க்கர புதுமையான விளக்கமேயாகும்.

மெய்ப்பொருளியலுள் அடிப்படையான சிக்கலாக அமைவது உள்பொருள் ஒன்றாய் இருக்க உலகு எவ்வாறு பன்மைக் காட்சியை வழங்குகிறது என்பதாகும். இறை வனுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள உறவு யாது? என்பதும்,

அடிப்படைச் சிக்கலே. நிம்பார்க்கர், வேறுபாடு அல்லது பேதம், ஒருமை அல்லது அபேதம், ஆகிய இரு நிலைகளும் ஒத்த நிலையில் உண்மையாக விளங்குவதோடு ஒருங் கேயும் உண்மையாக விளங்குகின்றன என வற்பு றுத்துகிறார்.

உறவு எவ்வாறு ஒத்ததாகவும், வேறுபடுவதாகவும், ஒருங்கே விளங்க இயலும், இவ்வாறு கூறுவது முரண் படுகின்றதாகாதோ? நிம்பார்க்கரது விடை சுருக்கமாக அமையினும், அளவை நெறியிலே அமைந்து ஐயத்தை அகற்றுவதாகும். நிம்பார்க்கர் காரண காரிய உறவின் அடிப்படையில் தமது விளக்கங்களை அமைக்கிறார். காரண காரிய உறவு முற்றிலும் ஒருமைப்படுவது அன்று; வேறுபடுவன அல்ல; ஆனால் வேற்றுமையிடையே ஒற்றுமை உடையதாகும். இதனைப் பேதா பேதம் என்பர்.

காரியம், காரணத்தின் வேறாகும். காரியம், சிறப்பியல்புகளைக் கொண்டது; தனித்த சில செயற் பாடுகளை உடையது. மண் ஜாடி காரியமாகும். மண் ஜாடிக்குத் தனித்த இயல்பும், வடிவமும், உண்டு. நீரைக் கொணர்தற்குத் தொழில்படுவதாகும். களிமண், காரண மாகும். காரணம், மேற்குறித்த தொழிலை உடையது அன்று. மேலும், காரியம், காரியத்தின் வேறென்று எனவும் கூறலாம். ஏனெனில் காரியத்தின் மாறுபாடு ஆகவே காரியம் விளங்குகிறது. மாறுபாடு எனினும் காரணமே யாகும். மண் ஜாடி மண்ணின் வேறன்று. மண்ணேயாகும். மண் இன்றி ஜாடி அமையாது. ஜாடி தனது தோற்றத் திற்கும், இருப்பிற்கும் மண்ணையே சார்ந்து உள்ளது.

ஒருபுறம், காரணம், காரியத்தின் வேறு என்ற குறித்தற்கு இடம் உண்டு. ஏனெனின் காரியம், கார ணத்தை முழுவதும் விளக்காது, காரியத்தின் மேலாக, காரணம் விளங்குகிறது. களிமண், மண் ஜாடியினின்று வேறு என்று மட்டும் கூறினால், அமையாது. மண்ணினால் தோன்றும் , எத்தனையோ பொருள்கட்கு வேறாக மண்

அமைகிறது. எனினும் மண் ஜாடியாகவும் மண் தட்டுகள் முதலிய எண்ணிறந்த பிற பொருள்களாகவும் விளங்குவதால், ஜாடி என மட்டும் கூறுவது காரணமான மண்ணை விளக்குவது ஆகாது. எனினும், காரணம் காரியத்தோடு, ஒன்றியே உளது. காரணம், காரியமாகிய காரியத்துள் நிறைந்துளது. களிமண், மண் ஜாடியினின்று வேறாகாது. இரண்டுமே, களிமண்ணாகும். ஆதலால், காரண, காரிய அல்லது முழுமைப் பகுதி உறவு, வேற்றுமையுள் ஒற்றுமையையே வற்புறுத்தும் உறவாகும்.

இதேபோல, பிரபஞ்சத்துள் காணப்பெறும் ஆன்மாக்களும் பொருள்களும் பிரமத்தின் வேறாகும். பிரமத்தின் குணங்களாக ஆன்மாக்களும், பொருள்களும் அமைகின்றன. தூய்மை இன்மை பருமை, எல்லைக்குட்பட்ட தன்மை போன்ற பிற குணங்கள் ஆன்மாக்கள் இடத்தும், பொருள்கள் இடத்தும் அமைகின்றன. ஆதலால் பிரமத்தின் வேறாக ஆன்மாக்களும் பொருள்களும் அமைகின்றன. செயல் நிலைகள் தன்னலம் கருதியனவாக அமையப்பார்க்கிறோம். இச்செயல் நிலைகள், பிரமத்திடத்துக் காணுகின்ற படைப்புப் போன்ற செயல் நிலைகட்கு, மாறானவையாகும். தூய்மை, எங்கும் நிறைதல் ஆகிய குணங்கள், தூய்மை இன்மை, எல்லைக்குட்படுதல் ஆகியவற்றின் வேறாகும்.

பிரபஞ்சம், பிரமத்தின் வேறு என்பதைப பிரபஞ்சமும், ஆன்மாக்களும் பிரமத்தின் மாறுநிலைகள் என்று அறிவதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். பிரபஞ்சமும், ஆன்மாக்களும் பிரமத்தின் மாறு நிலைகள் என்றாலும், உண்மையில் பிரமமேயாகும். பிரமத்தின் எண்ணிறந்த ஆற்றல்களின் மூலக்கூறுகளுள், பிரபஞ்சம் ஒன்றாக விளங்குகின்றது. ஆதலால், பிரபஞ்சம், பிரமத்தின் வேராகும். பிரமம் முழுமையும் ஒரு பிரபஞ்சத்தின் வாயிலாக வெளிப்படாது. பிரமம் பிரபஞ்சத்திடத்தில் நிறைந்து விளங்குதலால், பிரபஞ்சத்தோடு ஒன்றாகிப் பிரபஞ்சத்தின் காரணமாகிறது.

நிம்பார்க்கர் கருத்துப்படி பேதம் அல்லது வேறுபாடு என்பவை (1) குணங்களில் செயல் நிலைகளில் காரணத்தை நோக்க, காரிய நிலையில் வேறுபடுவதும் (2) காரண நிலையில் காரியத்தைக் கடந்து விளங்குவதால், வேறுபடுவதுமாகும். அபேதம் அல்லது வேறுபாடின்மை என்பது: (1) உண்மை நிலையில், காரியமாகக் கருதுகிற பொழுது, காரணத்தின் வேறன்று. காரணமே, உண்மையில் விளங்குவதும் (2) காரியத்தில், காரணம் உள்ளார்ந்த நிலையில் உள்ளதுமாகும். வேறுபாட்டையும், வேறுபாடின்மையையும் கடந்த நிலையையும், உள்ளார்ந்த நிலையையும் மேற்குறித்தவாறு, விளங்கிக் கொண்டால் வேறுபாட்டையும், வேறுபாடின்மையும் ஒத்த நிலையில் கொள்வதில் எவ்வித முரணும் தோன்றாது. இயற்கையில் அமைவனவாகவும், பொருந்துவனவாகவும் இருக்கக் காண்போம்.

வேறுபாடின்மை என்பது முற்றொருமையைக் குறிக்காது. ஒரு சிறு நீர்த்துளி, கடலில் ஒன்றி விடுவது போன்ற ஒன்றுதல் என்னும் பொருளை இங்கு வேறுபாடின்மை தரவில்லை. தன்மையில் ஒத்த நிலையில் இங்குக் காண்கிறோம். பிரமம், பிரபஞ்சத்தில் உள்ளார்ந்த நிலையில் விளங்குகிறது. வேறுபாடு என்பது முற்றிலும், வேறுபடுகிற நிலையைக் குறிக்காது.

மனிதன் மேஜையாக மாட்டான். மனிதன் வேறு, மேஜை வேறு. வடிவங்களில் உள்ள வேறுபாடும், குணங்களில் உள்ள வேறுபாடும், செயல் நிலைகளிலுள்ள வேறுபாடும், இங்குக் குறிக்கப் பெறுகின்றன.

பிரமம், பிரபஞ்சத்தைக் கடந்து விளங்கு கிறான். இவ்வாறு, இயல்பில் எழும் வேறுபாட்டை அல்லது ஒருமைப்பாட்டை நிம்பார்க்கர் 'சுவாபாவிக போம்', 'பேதவாதம்' அல்லது இயற்கை வேறுபாடு, வேறுபாடின்மைக் கொள்கை என்று குறிக்கிறார். இது பிரபஞ்சமும்,

இறைவனும் வேறுபடுவன அல்ல என்று குறிக்கப்பெறும் புகழ் வாய்ந்த நிம்பார்க்கர் கொள்கை ஆகும்.

உள்பொருளாகிய ஒன்றிற்கும், உலகு வழங்குகின்ற பன்மைக்கும், இடையேயுள்ள உறவைப் பற்றிய தீராத சிக்கல் உண்டு. இச்சிக்கலுக்கு மெய்ப்பொருளியல் வரலாற்றில் முக்கிய விளக்கமொன்றை நிம்பார்க்கர் தந்துள்ளார் என மேற்குறித்த கொள்கையினைக் கொள்ளலாம். இதுவன்றியும் நிம்பார்க்கரது வேறு சில முடிவுகளும், நிம்பார்க்கரது திறமையை விளக்கு வனவாகும். மெய்ப்பொருளியலுள் அடிப்படையான சிக்கல்கள் சிலவற்றிற்கு நிம்பார்க்கர் தந்துள்ள விளக்கங்கள் பாராட்டிற்கு உரியன. குறிப்பாக சக்திவாதம், என்பது அவற்றுள் ஒன்றாகும். மெய்ப்பொருளியலில் விடை காணுவதற்கு அரியது எனவும், சிக்கல் மிக்கது எனவும் கொள்ளப்பெறுகின்ற சிக்கல்களைக் குறித்து நிம்பார்க்கர் சக்திவாதம் என்ற விளக்கத்தின் மூலம், தீர்வு காணுகின்றார். இத்தீர்வு , தீர்வு காண முடியாத மிகச் சிக்கலான பல கருத்துகளை விளக்குகிறது.

சமய உலகிலும், நிம்பார்க்கரது பங்கு குறிக்க தக்கதே, இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே அமைய வேண்டிய உறவு, இனிமையுடையதாகவும் நெருக்கமுடையதாகவும் அன்பு மிக்கதாகவும், தோழமையுடையதாகவும் இருக்க வேண்டும் என்பது அடுத்தடுத்து நிம்பார்க்கரால் வற்புறுத்தப்பெறுகின்றது. இறைவனது மாட்சியும், பெருமையும் அச்சத்தையும், பணிவன்மையும் விளைத்தலால் சமயத்தின் தோற்றம் இவ்விளைவிலே அடங்குகிறது,

சமயம், இறைவனோடு கொள்ளுகின்ற இனிய, நெருங்கிய, நேரான, உறவிலே முழுமையுறு வதாகும். தானே, வலிய புறத் தூண்டுதலோ அல்லது வற்புறுத்தலோ இன்றி அன்பின் மிகுதியால் அச்சமின்றி இறைவனி

டத்தும் தன்னையே ஒப்புவித்து உறவு கொள்ளுதலே சமயமாகும்.

அறிவின்றி இறைவனது ஆணை வழி நிற்றல் சமயம் அன்று. இறைவனது பெருமையும், மாட்சியும் ஒருவனைப் பெரிதும் வியப்பிலே தொடக்கத்தில் ஆழ்த்தினாலும், நெடிது காலம் தொலைவிலேயே இறைவனின்று நீங்கியிருத்தல் இயலாது. தவிர்க்கவொணாத நிலையில் இறைவன் மனிதனால் ஈர்க்கப்பெறுதலும், மனிதன் இறைவனால் ஈர்க்கப்பெறுதலும் உண்டு. தோழமை உறவிலே இறைவனும், மனிதனும் ஒன்றுகின்றனர்.

நிம்பார்க்கர் வைணவ மெய்ப்பொருளியலாருள் முதன்மையாக மாதுர்ய பிரதான பக்தியை வற்புறுத்தி யுள்ளார். இறைவனது எல்லையில்லாத இனிமையை நினைத்து பக்தி மேலிடுதலே மாதுர்ய பிரதான பக்தி யாகும். இறைவனது அளவிடமுடியாதப் பெரு மையை நினைந்து, பணிந்து பக்தி மிகுதலாவது ஐஸ்வரிய பிரதான பக்தியாகும். இந்தப் பக்தியை விட்டு மாதூர்ய பிரதான பக்தியை நிம்பார்க்கர் வற்புறுத்தினார். இராமானுஜரும் மாத்வரும், ஐஸ்வரிய பிரதான பக்தியினை வற்புறுத்தி யோர் ஆவர்.

அறநோக்கைக் கொண்டு, நிம்பார்க்கரது கருத்து களைக் கருதினால், வெற்றுச் சடங்கினைப் புற நிலையில் மட்டும் போற்றுவதை நிம்பார்க்கர் விரும்ப வில்லை. அக நிலையில் சீரிய பண்புகளைப் பயிலுதலையே வற்புறுத்தி னார். அறப் பண்புகளாகிய தன்னடக்கம், எளிமை, தூய்மை போன்ற பிற பண்பு களைப் பயிலுதல் வேண்டும். இல்லற வாழ்வினை ஒருவன் துறக்க வேண்டுவதில்லை. வீடு பேற்றிற்கு இல்லறத் துறவு வேண்டுவதில்லை என்பது நிம்பார்க்கர் கருத்தாகும். 'எந்நோக்கு கொண்டு, எவ்வளவு பாங்கோடு கடமைகள் ஆற்றப்பெற்றுகின்றன என்பதே இங்கு முக்கியமாகும். மனிதன் தனது நிலையி.

னால் அமையும் கடமைகளைப் பற்றன்றி ஆற்றுவானே யானால் வீடுபேறு அடைவது திண்ணம். அவன், இல்லறத்தில் இருந்தாலும் துறவை மேற்கொண்டாலும் அவனது பற்றற்ற உள்ளமே இங்குக் கருதப்பெறுவதாகும்.

நிம்பார்க்கரது வேதாந்தக் கொள்கை, கருத்து வரலாற்றிலே, மெய்ப்பொருள் இயல் சமயம், அறம் பற்றிய துறைகளில் மிகச் சிறந்த பங்கு கொண்டு விளங்குவதைக் காண்கிறோம். நிம்பார்க்கரது கருத்து முறைகளிலே குறிக்கத்தக்க கூறாக அமைவது இயைபும், இசைவும் காணும் நோக்கேயாகும். நிம்பார்க்கர் சம நோக்கில் நன்றாக நிலைத்து ஆழ்ந்த அமைதியான அகக் காட்சியால் யாவற்றையும் உட்படுத்துகின்ற வகையில் உள்பொருளில் பல நிலைகளையும் ஒருங்கே உணர்ந்தார்.

பல்வேறு உள நிலைகள், தூண்டுதல்கள், பற்றுதல்கள், திறமைகள் உடையனவாக மக்கள் இனம் காணப் பெறுகின்றது. உளப்பாங்குகள் எத்தனை உண்டோ அத்துணையையும் நிம்பார்க்கர் நன்கு நினைவில் வைத்து, மாறுபடுகின்ற கருத்துகளைத் தவிர்த்து, அவற்றிடையே ஒற்றுமை காணுகின்ற நிலையினை மேற்கொள்கிறார்.

எப்பொழுதும் இருவேறு கருத்துகளைத் தீவிரமாகக் கொள்வதை நிம்பார்க்கர் விரும்புவதில்லை. வேறுபாடுகளைத் தவிர்த்து அவற்றினை ஒன்றுபடுத்துகின்ற ஆர்வம் எப்பொழுதும் உடையவர், நிம்பார்க்கர். மெய்ப் பொருள் இயல் உலகில் வேறுபாடின்மையை வேறுபாட் டோடும் பன்மையை ஒருமையோடும் இணைத்துக் காண முயல்கிறார். நிம்பார்க்கர் கருத்துப்படி வேறுபாடும் உண்மையே. வேறுபாடின்மையும் உண்மையே. பன்மையும் உண்மையே. ஒருமையும் உண்மையே. வேறுபடுகின்ற நிலைகளை உண்மையெனக் கொண்டு. அவை தம்முள் இயைவன என்று கருதுகிறார். சமய உலகிலே, அத்துவிதம் தனித்த அறிவு நிலை ஒன்றையே உறுதியாகக் கொண் டுள்ளது. பிற்கால வைணத்தில் உணர்ச்சி நிலைகள்

பெரிதும் வற்புறுத்தப் பெற்றுள்ளன. இவற்றிடையே உள்ள வேறுபாட்டினை நிம்பார்க்கர் நீக்குகிறார்.

அத்துவிதத்தில் இறைவனுக்கும், மனிதனுக்கும் நேரடியான நெருங்கிய தொடர்பு இல்லை. இத்தகைய உறவினை அத்துவிதம் மறுக்கிறது. பிற்கால வைணவம் இறைவனுக்கும் மனிதனுக்கும் மிக நெருங்கிய உறவு உண்டு என்று கொள்வதில் உணர்ச்சி நிலையையே அதிகமாக வற்புறுத்துயுள்ளது. நிம்பார்க்கர், அறிவிற்கு உரிய இடம் யாது என்பதையும் நன்கு அறிகிறார். உரிய இடங்களைத் தமது மெய்ப்பொருளியல் கருத்து முறை யிலே தருகிறார். அறிவையோ அல்லது உணர்ச்சியையோ அதிகமான நிலையில் ஒன்றையொன்று. மாறுபடுகின்ற நிலையிலே வற்புறுத்தவில்லை.

சமய உலகிலும், மெய்ப்பொருள் இயல் உலகிலும் நடுவு நிலைமை மிக்க தீர்ப்பினைக் கொண்டது போல அறஉலகிலும் கொள்கிறார். போற்றத்தக்க இசைவு காணும் நோக்கும் பல்வேறு உள நிலைகட்கும், பற்று கட்கும், திறமைகட்கும் இடம் தரும் விரிந்த மனமும், நிம்பார்க்கரது கருத்துகளிலே காண்கிறோம்.

புலமை யாளர்களும் அல்லது தொழிலாளர்களும், துறவிகளும், இல்வாழ்வோரும், தன்னம்பிக்கை உடையோரும், கோழைகளும், மற்ற நிலைகளில் மாறுபடு வோரும், யாவரும் ஒருமித்த நிலையில் ஒன்றுபடுதல் வேண்டும் என்பது நிம்பார்க்கர் கருத்து.

நடுவு நிலைமைக் கொள்கையையே அவர் பெரிதும் போற்றினார். சகிப்பும், விட்டுக் கொடுக்கும் மனப்பான் மையும், மற்ற கருத்துகளை ஏற்கின்ற உளநிலையும், விரிந்த உள்ளமும், பரந்த நோக்கும், நிம்பார்க்கரது கொள்கை யைப் பலரும் விரும்பும் மெய்ப்பொருளியல் சார்புடைய இந்தியச் சமயக் கருத்து முறைகளுள் ஒன்றாகச் செய்தன.

# வல்லபரின் வைணவ வேதாந்தம்

வேதாந்தக் கருத்து முறைகளுள் சுத்தாத்வைதத்தைப் பரப்பியவர் வல்லவர் ஆவார். தென்னிந்தியாவில் சென்னைக்கு 50-மைல்கள் வடமேற்கே உள்ள கன்கராவத் என்னும் கிராமத்தில் வசித்த கல்வி கேள்விகளில் வல்ல தைலாங்கு பிராமணர் குடும்பத்தில் பிறந்தார். வல்லபரது பெற்றோர், காசியை நோக்கித் தமது கிராமத்தை விட்டுப் பிரிந்தனர்.

மத்திய பிரதேசத்தில் ரெய்பூருக்கு அருகே சம்பாரன்யம் என்னும் இடத்தில் வல்லபரது பிறப்பு நேர்ந்தது. வல்லரது குடும்பம் பரத்வாஜரது கோத்திரத்தைச் சேர்ந்தது தைத்ரீயத் கருத்து முறையைச் சேர்ந்த கிருஷ்ண யஜுர் வேதத்தை வல்லபர் குடும்பம் பின்பற்றியது. சோம வேள்விகள் பலவற்றை முறை பிறழாத வகையில் வல்லபரது குடும்பத்தினர் புரிந்ததால் தீக்ஷிதப் பட்டம் வல்லபரது குடும்பத்தினருக்குச் சிறப்பாக அமைந்தது.

வல்லபரது கருத்துமுறை, வைணவத்துள் ஒருவகையாகும். கோபாலரது உருவம் இவ்வைணவப் பிரிவினுள் வழிபடப் பெறுகிறது. கோபாலரது வழிபாடு, சோம

வேள்விகளை முறையாகச் செய்யும் கரும காண்ட நெறி ஆகியவை வல்லபருக்கு ஆன்மீக முதலாக அமைந்தது. வல்லபர் தமது கல்வியினைக் காசியிலே பெற்றார். மும்முறை இந்நாடு முழுமையும் பிரயாணம் செய்தார்; விஜய நகரஅரசவையிலே பல விருதுகளைப் பெற்றார். வல்லபர் தமது சமய உரைகளால் எண்ணிறத்தோரை ஈர்த்துத் தமது கருத்துகளைப் பின்பற்றுமாறு செய்தார். அலகர்பாத்திலிருந்து 2-மைல் தொலைவிலேயுள்ள, 'ஆதல்' என்னும் ஊரிலே, வல்லபர் தமது வாழ்நாளைக் கழித்தார். காசியிலே, அவர் காலமானார்.

அவருக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். விஷ்ணு ஸ்வாமி என்பாரோடு, வல்லபர் உறவு கொண்டார் என்பது ஐயமே. சமஸ்கிருதத்தில் பல நூல் களை வல்லபர் எழுதியுள்ளார். அவற்றுள் சில நூல்கள் முழுமையான வடிவத்திலே கிடைக்கவில்லை. வல்லபர் எழுதிய முக்கியமான நூல்கள், பிரமசூத்திரம், ஜெயிமினிசூத்திரம் ஆகியவற்றிற்கு அமைந்த பேருரைகள் ஆகும். பாகவதம், தத்வாரத்த தீப நிபந்தம், பதினாறு கட்டுரைகள் ஆகிய வையும் வல்லபரால் உரை காணப்பெற்றவற்றையும் எழுதியவையுமாகும்.

வல்லபரது கருத்து அவரைத் தொடர்ந்து அறிந்த வர்களாலும் அவர் குடும்பத்திலே தோன்றியுள்ளவர் களாலும், இன்றும் வளர்க்கப் பெறு கின்றது. இன்றும், வல்லபரது குடும்பத்தில் வழி வழி வந்தோரைக் காணலாம். இன்று அவரது குடும்பத்தில் எண்பது ஆண் உறுப்பினர்கள் உள்ளனர். வல்லபரைப் பின்பற்று வோருள் பெரும்பாலோர் 'ஐக்கிய மாகாணங் கள், ராஜபுதனம், சௌராஷ்டிரம், குஜராத், பம்பாய் ஆகிய பகுதிகளில் காணப்பெறுகின்றனர். பின்பற்று வோர், சமூகத்தில் பல நிலைகளில் உள்ளவர்கள். அவர்களுள் அரச குடும்பத்தினர் உண்டு. மிகவும் பிற்பட்ட வகுப்பாளர்களும் உண்டு.

உறுதியான அறிவிற்கு மூல நூல்களாக அமைவன: வல்லபர் நான்கு அடிப்படையான நூல்களை மெய்ப் பொருளியல் சிக்கல்கட்கு விடை காணும் தலையாய நூல்கள் எனக் கருதுகின்றார். (1) உபநிடதங்கள் உள்ளிட்ட வேதங்கள், (2) கீதை, (3) பிரமசூத்திரம், (4) பாகவதம், இங்குக் குறிக்கப்பெற்ற மூல நூல்கள் ஒன்றையொன்று தழுவுவன, சார்ந்தன. ஐயங்கள் நிகழுமேல், முற்பட்ட நூல்களைப் பிற்பட்ட நூல்களின் துணையைக் கொண்டு, மேற்குறித்த நூல்களின் வரிசை முறையிலே அறியலாம். இவ்வாறு மூல நூல்கள் ஒன்றையொன்று சார்ந்து விளங்குவதால், பாகவதம் தனித்ததொரு நிலையினை வல்லபரது கருத்து முறையிலே பெறுகிறது. மற்றொரு நோக்கிலே, வேதமும் பிரம சூத்திரம் ஒரு தொகுதியாகக் காணப்படுகிறது.

கீதையும், பாகவதமும், மற்றொரு பகுதியாகும். கீதைக்கு அமைந்த எல்லாக் குறிப்புகளையும் விளக்கும் பேருரையாகப் பாகவதம் அமைவது முற்றிலும் பொருந்த வதே வல்லபருக்கு முன்னால் பல வேதாந்தக் கருத்து முறைகள் இருந்தன. இக்கருத்து முறைகளை நிறுவிய வர்கள் வேதமூலப் பாடங்களைத் தமது விருப்பப்படி விளக்கினர். சங்கரது விளக்கம், மிகுந்த திறன் ஆய்வுக்குக் காரணமாயிற்று.

வல்லபர் இறைவனால், உலகிலே தோன்றியவர் என்ற செய்தி கூறப்படுகிறது. சங்கரர் மேற்கொண்ட விளக்கத்தின் விளைவாக எழுந்த குழப்பத்தைத் தீர்ப் பதன் பொருட்டு, வல்லபரது வருகை அமைந்ததாகக் கூறுகின்றனர். வல்லபர், தம்மை இறைவனது பணியாள் எனக் கூறிக் கொள்கிறார். தாம் தீயின் வடிவத்தை மேற்கொண்டதாகவும் கூறுகிறார். சங்கரரது கொள்கை களைத் திறன் ஆய்வு முறையிலே விளக்குகிறார்; மூல நூல்கட்கு உரிய விளக்கங்களைக் காணுகிறார்; இறைவ னது மாளிகையின் வாயில்களை அனைவருக்கும் திறந்த

விடுகிறார்; சிலருக்கே உரியன என்ற வரையறை இல்லாது அனைவரும் பயன்படுத்துகிற நிலையில் வல்லபரது கருத்து விளக்கங்கள் அமைகின்றன.

சுருதி அல்லது வேதம் தருகின்ற முக்கியமான விளக்கத்தின் துணையைக் கொண்டு இறைவனது உண்மையைக் குறித்த சிக்கலின் கூறுகள் அனைத்தையும் விவாதிக்க வேண்டும். தனித்த சிந்தனைக்கு வாய்ப்பு இல்லை. இவ்வுண்மை, மூல நூல்களில் நன்கு விளக்கப் பெறுகிறது.

வல்லபர், இவ்வுண்மையினை அப்படியே ஏற்றர். மூல நூல்கள் அனைத்தையும் எழுத்திற்கு எழுத்து விளக்குகிறார். அனைத்துப் பகுதிகட்கும் முக்கியத்துவம் தருகிறார். சிந்தனை தருகின்ற விளக்கத்தைப் புறக் கணித்து வேதப்பகுதிகள் உணர்த்துவனவற்றையே, விளக்கிச் செல்கிறார்.

சங்கரருக்கும், வல்லபருக்கும் அடிப்படையிலே உள்ள வேறுபாட்டினை நாம் அறிதல் வேண்டும். வேதநூல் கட்குச் சங்கரரும், வல்லபரும் தந்த விளக்கங்களே அவர்களுக்கிடையே எழுந்த வேறுபாடுகளுக்கு எல்லாம் காரணமாகும். வல்லபர், சங்கரர் அளவையையே முழுமையும் நம்பியதாகவும் ஆதாரமாகக் கொண்ட தாகவும் கூறி, பல பகுதிகளைக் கண்டிக்கிறார்.

புலன்கடந்த பொருளியல் சிக்கல்களைச் சுருதியில் அல்லது வேதத்தில் காணப்படும் பகுதிகட்கு ஏற்பவும் நமது கருத்துகட்கு ஏற்பவும் விளக்கம் கொண்டதாக வல்லபர் சங்கரர் மீது குற்றம் சாட்டுகிறார். வேத மூல பாடங்கட்குச் சங்கரர் தந்த விளக்கங்கள் பொருந்துவன அல்ல என்பது வல்லபரது குற்றச்சாட்டாகும். ஆதலால் வல்லபர், சங்கரரை வன்மை யாகத் தாக்குகிறவர் ஆகிறார். சங்கரரை, மாத்யமிக புத்தன் எனவும் கூறுகிறார். சங்கரரை இவ்வாறு பாஸ்கரரும், இராமானுஜரும் மற்றையோரும் கூறியுள்ளனர்.

**பிரமம்:** வல்லபருக்கு உயர்வற உயர்ந்த உள்பொருள் கிருஷ்ணனேயாகும். உபநிடதங்களில் பிரமம் எனக் கூறப்பெறுவதே கிருஷ்ணன் என வல்லபரால் கொள்ளப் பெறுகிறது. பாகவதத்துள் பரமான்மாவாகப் பேசப் பெறுவது பிரமமேயாகும். கிருஷ்ணபகவான் அல்லது புருஷோத்தமன் அல்லது மக்களுள் தலைசிறந்தோன் உயர்வற உயர்ந்த இறைவனேயாகும். கிருஷ்ணன் பிரமத்தின் தெய்வீக வடிவமாகும். (ஆதி தெய்வீகம்). பிரமம் ஒன்றே. இரண்டுஅற்ற ஒன்றாகும். தனக்கு உவமையில்லாத நிலையில் பிரமம் ஒன்றெனவும் குறிக்கப்பெறுகிறது. எல்லாத் தெய்வீக நலன்களையும் பிரமம் உடையது. இத்தெய்வீக நலன்களுள் மாறுபடுகின்ற குணங்களும் உண்டு. பெருந்தன்மையான குணங்கள் ஏதும், பிரமத்திடத்து இல்லை.

பிரமம், உண்மை, அறிவு, ஆனந்தம் ஆகும். இனிமை யாவும் ஒருங்கே பிரமத்திடத்து நிறைந்துள்ளது. எல்லை யில்லாத பேரின்பமே, பிரமத்தின் உண்மை வடிவமாகும். (ஆகாரம்).

இன்பமே, பிரமத்தின் வடிவம் என்று கொள்ளுகிற போது வல்லபர், பிரமத்தைச் சகுணநிலையில் கருதுகிறார். பிரமம், உருவம் உடையது. ஆதலால், சாகாரப் பிரமம் எனக் குறிக்கப்பெறுகிறது. பிரமம், என்றுமுள்ள பொருள், மாறாதது, எங்கும் நிறைவது, யாவற்றையும் அறிவது, எல்லாம் வல்லது. எந்நிலையிலும், எத்தருணத் திலும் யாதாகவும் ஆகின்ற ஆற்றல் உடையது பிரமம். இவ்வாற்றல் பொதுவாக மாயாசக்தி எனக் கூறப்பெறும்.

அறிவு, செயல், தோற்றம், ஒடுக்கம் ஆகிய பல ஆற்றல்களைப் பிரமம் உடையதாகிறது. எவ்வித வேறுபாடுகளும், பிரமத்திடத்து இல்லை. யாவற்றையும், படைப்பதாகப் பிரமம் விளங்குகிறது. இப்பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகவும், நிமித்த காரணமாகவும் ஒருங்கே பிரமம் விளங்குகிறது. ஆன்மாக்களின் வேறாகப் பிரமம்

இல்லை. ஆன்மாக்கள் பிரமத்திடம் இருந்தே தோன்று கின்றன.

பிரமம், நுகர்வோன் ஆவான். இறைவனுக்குப் பொருந்தும் குணங்கள் யாவும் இயற்கையானவையே. இவை இயல்பாகவே இறைவனிடத்துக் குணங்களாக அமைகின்றன. குணங்கள், பிரமத்தின் வேறு அல்ல. குணங்கள் பிரமத்திடத்து அத்துவித உறவிலே அமையக் காண்கிறோம். சுருங்கக் கூறின். பிரமம் எல்லாக் குணங்களையும் உடையதாகி இயற்கைக்கும் அறிவிற்கும் பிறப்பிடமாகி வேறுபாடுகள் அனைத்தும், தன்னிடத்து மறைகின்ற நிலையிலே விளங்குகிறது.

இக்கருத்துக்கள், ஜெர்மானிய மெய்ப்பொருளியல் அறிஞர் 'ஷெல்லிங்' (Schelling) கருத்துக்களோடு ஒப்பு நோக்கத்தக்கன. பிரபஞ்சமும், ஆன்மாக்களும் இம்மை யில் பிரமத்தோடு ஒன்றிய நிலையிலே உள்ளன. ஆதலால் வல்லபரது கருத்து முறை சங்கரது மாயா வாதத்திற்கு எதிராகச் சுத்தாத்வைதம் எனப் பேசப் பெறுகிறது.

வல்லபரது கருத்துமுறை, தூயகலப்பற்ற அத்து விதத்தை வற்புறுத்துகிறது என்பது இங்குக் குறிக்கத் தக்கது. பிரமம், முற்றிலும் தூயனாக விளங்குகிறான். மாயை போன்றவற்றால், எவ்விதத்திலும் தொடக்குறாத நிலையில் விளங்குகிறான். காரணமும், காரியமும், பிரமும், பிரபஞ்சமும், தூயனவாக ஒன்றாக விளங்கு தலால் வல்லபரது கருத்துமுறை தூயன ஆதலால், பிரமமே முதற்காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்கு வதால் தூய அத்துவிதமாகப் பேசப்பெறுகிறது.

வேத நூல்கள் யாவும் பிரமம் என்பதையே பல்வேறு நிலைகளில் விவரிக்கிறது. வேதத்தில் முதற் பகுதி பிரமத்தின் குணங்கள் வடிவங்களாகிய வேள்விகளை விவரித்துக் கூறுகிறது. வேதத்தின் பிற்பகுதி, ஞானத் தைச் கூறுகிறது: பூர்வகாண்டம் கருமங்களை வேள்வி களை எனக்கொண்டு, விவரிக்கிறது.

வேதத்தின் பிற் பகுதியாகிய உத்தரகாண்டம், பிரமத்தின் பிரமத்தின் குணயமாகிய ஞானத்தை விரிக்கிறது. இவ்வாறு, வேதத்தின் பகுதிகள் ஒவ்வொரு குணத்தினைச் சிறக்கப் பேசக் காண்கிறோம். கீதையும், பாகவதமும் ஒருங்கே பிரமத்தின் அனைத்தியல்புகளையும் நமக்கு முழுமையாகச் சித்தரிக்கின்றன.

அக்ஷரப்பிரமம்: வல்லபர் பிரமத்தின் மூவகை வடிவங்களை ஏற்கிறார். (1) பரப்பிரமம் அல்லது புருஷோத்தமன்; (2) அந்தர்யாமி; (3) அக்ஷரப்பிரமம். கிருஷ்ணன் அல்லது புருஷோத்தமன், பரம்பொருளாகும்.

இனிமை, ஆனந்தம் ஆகியவற்றின் நிறைவு நிலையே பிரம்ம் ஆகும். புருஷோத்தமனாக யாவருடைய அன்பிற்கும் வழிபாட்டிற்கும், பிரமம் உரியதாகிறது. புருஷோத்தமனின் ஆனந்தம் எல்லையற்றது. உண்மையிலே, ஆனந்தத்தின் பகுப்பற்ற முழுமையான ஒரு திரட்சியாகப் பிரமம் விள்ங்குகிறது. அனைத்துயிருள்ளும் அந்தர்யாமியாகப் பிரமம் உறைகிறது. அனைத்துயிருள்ளும் உள்ளிருந்து பிரமம் இயக்குகிறது. அந்தர்யாமியாகப் பிரமம் விளங்குகிறபொழுது எல்லைக்குட்படும். இன்பத்தையே உடையதாகிறது. அக்ஷரப்பிரமமாகும். (அத்யாத்மிகம்.) பிரப்பிரமம் ஞானிகளால் உபாசனைக் குரியதாகக் கருதப்பெறுகிறது.

ஞானிகள், உபாசனையின் முடிவு நிலையில் பரப்பிரம்மத்தோடு ஒன்றிவிடுகின்றனர். பரப்பிரமத்தைப் பக்தர்கள் கிருஷ்ணனின் உறைவிடமாகவும், திருவடியாகவும் கொள்கின்றனர். (இந்நிலையில், கிருஷ்ண பகவான் சரணன் என்றும், பரந்தாமன் என்றும், வியோமன் என்றும் விவரிக்கப்பெறுகின் றனான்). நெருப்பினின்று தோன்றுகின்ற பொறிகள் போல அக்ஷரப்பிரமத்தினின்று ஆன்மாக்கள் தோன்றுகின்றன.

இறைவன் ஞானத்தின் மூலமாக விடுதலை அருள விரும்புகின்றபோது, அக்ஷரப்பிரமத்தை நால்வகை

வடிவங்களைக் கொள்ளச் செய்கிறான். (1) அக்ஷரம், (2)காலம், (3) செயல் அல்லது கருமம், (4) இயல்பு (சுபாவம்). பின்னர் அக்ஷர வடிவம் பிரகிருதியாகவும், புருஷனாகவும் தோன்றி அனைத்தும் தோன்றுவதற்குக் காரணமாகிறது. மேலே குறித்த நால்வகை வடிவங்களும் என்றென்றும் உள்ள தத்துவங்கள் எனக் குறிக்கப் பெறுதலோடு, அத்தத்துவங்கள் இறைவனோடு, ஒன்றி யிருப்பதாகக் கருதப் பெறுகிறது.

அக்ஷரப்பிரமத்தின் ஆனந்தம், இறைவனின் உள்ள உறுதியினால் படைப்புக் காலத்தில் மறைவுறுகிறது. இந்நிலையில் அக்ஷரப்பிரமன் முக்கிய ஜீவன் எனப்படும். 'ஆதுலோமி' என்போர் படைப்புக் காலத்தில் அறிவுடைய ஆன்மா, அறிவுடைய பிரமத்தில் ஒன்றிவிடுவதாகக் கூறுகிறார். அக்ஷரப்பிரமன் குறித்துக் கூறப்பெறுகிற வல்லபரது கருத்தும் 'ஆதுலோமி' கருத்தும் ஏற்கும் வகையில் ஒப்பிடப்படலாம். அக்ஷரப்பிரமம் முக்கிய ஜீவன் என்கிற நிலையிலே, ஆன்மாக்களுக்கு எல்லாம் உயர்ந்ததாகும். உண்மையிலே, அக்ஷரப்பிரமம் எல்லைக் குட்பட்ட இன்பத்தை உடையது. இறைவனது புருஷ வடிவங்கள் ஏற்கிறது. இறவனது. உள்ள உறுதி உருக்கொள்ளுகிறபொழுது பிரகிருதி எனப்படும். பிரகிருதியையும், புருஷனையும் கடந்து விளங்குவது அக்ஷரப்பிரமமாகும்.

அக்ஷரப்பிரமத்துள் எண்ணிறந்த உலகங்கள் அடங்கியுள்ளன. உபநிடதங்களிலும் கீதையிலும் பிரமம் 'அவ்வியக்தம்' எனக் குறிக்கப்படுகிறது. பிரமத்தை எதிர்மறை நிலையில் விவரித்தால் அக்ஷரப்பிரமத்தையே பெரிதும் குறிக்கும். அக்ஷபபிரமம் பிரமத்தின் எதிர்மறை விளக்கத்தால் குறிக்கப்பெறுவதாகும். அக்ஷரப்பிரமம் புருஷோத்தமனுக்குத் தாழ்ந்த நிலையே உடையது. இது சங்கரரது பரப்பிரமத்தைப் போன்றது. இந்திய மெய்ப்பொருளியலுள் மறக்கப்பெற்ற அல்லது பேசப் பெறாத கருத்துணர்வு அக்ஷரப்பிரமமாகப் பேசப்

பெறுகிறது. ஆதலால், இவ்வாறு அக்ஷரப்பிரமத்தைக் கருதுவதன் பெருமை வல்லபர்க்கே உரியதாகும்.

**உலகு:** கடவுள் துணையின்றி தனியனாய் இருத்தலால் பலராக விளங்க விரும்பினார். உலகத்தை மகிழ்ச்சிக்காகவே படைக்க இறைவன் விரும்பினார். தனது ஆன்மாவினின்று தன் விருப்பத்தினாலேயே பிரபஞ்சத்தைப் படைக்கிறார். சிலந்தி, தன்னிடத்து ஊறுகின்ற பொருளைக் கொண்டே கூட்டினை அமைப்பதுபோலக் கடவுள் பிரபஞ்சத்தை அமைக்கிறார். பிரமத்தின் சுயரூபத்தினின்று பிரபஞ்சம் தோன்றுகிறது. பிரமத்தின் ஆற்றலினின்றோ உடலினின்றோ, மாயையி னின்றோ தோன்றவில்லை.

சங்கரர், இராமானுஜர், நிம்பார்க்கர் ஆகியோர் வகுத்துள்ள கருத்து முறைகளுள் பிரபஞ்சம் பிரமத்தின் மாயையிலிருந்தும், உடலிலிருந்தும், ஆற்றலிலிருந்தும் தோன்றியதாகக் கொள்கின்றனர். பிரமத்தின் சுய ரூபம் மாற்றமுறுகிறது அல்லது பரிணாமுறுகிறது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றவர்களுள் வல்லபர் வேத நூல்களின் கருத்துகளைச் சிறிதும் பிறழ்வின்றிப் பின்பற்றுகின்றார்.

ஆதலால், இறைவன் பிரபஞ்சத்தின் முதற்காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்குகிறார். பிரபஞ்சமாகப் பிரமம் மாறுகின்ற நிலையில் மாற்றத்திற்கு உட்படினும் எவ்விதத் திரிபிற்கும் தான் உட்படுவது இல்லை. இத்தகைய மாற்றத்தை அவிக்ருத பரிணாமம் என்று கூறுவார்கள். இக்கருத்து அளவை இயலுக்குப் பொருந்தாது.

ஆயினும், சுருதியின் உண்மைகட்கு ஒத்துவருவதால் ஏற்புடையதாகும். மேலும், வல்லபர்க்குச் சுருதியே முடிவான தலைமையுடையததாகும். சுருதி, பிரமம், பிரபஞ்சமாக மாறினும் எவ்வித மாற்றத்திற்கும் பிரமம் உட்படுவது இல்லை என்ற கருத்தினை வற்புறுத்துவதால்,

வல்லபர் சுருதியின் கருத்தையே தலைமையுடையதாகக் கூறுகிறார்.

பிரபஞ்சத்தின் படைப்பு, கடவுளைப் பொறுத்த வரையில் ஒரு விளையாட்டேயாகும். இறைவன் முற்றிலும் தன்னிறவு உடையவன் ஆதலால் பிரபஞ்சப் படைப்பு எவ்விதக் குறையையும் நிறைவு செய்வதற்கும் அன்று; பிரபஞ்சம் பிரமத்தினுடைய உண்மைக் கூறாகும். பிரமத்தின் உண்மையான வெளிப்பாடாகும். பிரபஞ்சம், பிரமத்தின் பௌதிக வடிவமாகும். பிரபஞ்சம் திரிபுக் காட்சியில் தோன்றுவதன்று. பிரபஞ்சம் பிரமத்தின் வேறு அன்று பிரபஞ்சத்திற்கும் பிரமத்திற்கும் இடையே உள்ள உறவு காரணகாரிய உறவாகும். இவ்வுறவு தூய அத்துவித உறவாகும். சங்கரரது கருத்தில் காணும் மாயை போன்றவை, உறவின் தூய்மையைக் கெடுப்பன அல்ல. பிரபஞ்சம் இறைவனது மாட்சியைப் பற்றிய கருத்தை வழங்குகிறது. இறைவனது மாட்சியை உணர்வோர், இறைவனை வழிபடாமல் இருக்க இயலாது.

இப்பிரபஞ்சத்தில் யாவும் பிரமமே. பிரமத்தின் வெவ்வேறு குணங்கள் வெவ்வேறு பொருள்களாகப் பிரமத்தின் ஆணைக்கு ஏற்ப வெளிப்படுகின்றன. இவ்வாறு வெளிப்பட்டுத் தோன்றும் பொருள்கள் வெவ்வேறு பெயர்களில் விளங்குகின்றன. மாயையின் காரணமாக ஆன்மாக்களது காட்சி அல்லது அறிவு மறைப்புறுகின்றது. இம்மறைப்பால், புறப்பொருள் களுக்கு ஏற்ப மனதிலே மற்றொரு பொய்ப்பொருள் தோன்று கிறது. புற உலகில் உண்மையாக உள்ள பொருள்களின் மீது வைத்துக் காணப்பெறுகின்ற அப்பொய்த்தோற்றமே மனத்திலே அமைவன. இவ்வாறு புறப்பொருள்களின் காட்சி காரணமாக மனத்திலே எழுகின்ற பொய்த் தோற்றங்கள் பொருள்களை உள்ளவாறு காண வொட்டாது தடுக்கின்றன.

உண்மைப் பொருள்களைக் கற்பனைக் கூறு உடையனவாகக் காணுகின்றோம். கற்பனைக் கூறுகள்

உண்மைப் பொருள்களுக்கு உரியன அல்ல. அவற்றின்மீது புகுத்திக் காணப்பெறுவதால் மயக்குகின்ற அறியாமை காரணமாகப் பொருள்களுக்கு இல்லாத பண்புகள் ஏற்றப்பெறுகின்றன. கற்பனையில் எழும் பொருள்கள் விஷயாதம் எனப்படும். உண்மைப்பொருள் பிரமத்தின் வெளிப்பாடு ஆதலால் விஷயம் எனப்படும்.

**விஷயாதம் இருவகையின:** *(1)* பொருள்களின் உண்மை இயல்பை மறைப்பது. (2) பிழைப்படுகின்ற தவறான கருத்துகளுக்குக் காரணமாவது. பிரமத்தை அறிந்தோர் பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களைப் பிரம் மாகவே காண்பர். இவ்வாறு, பிரமமாகவே காண்பதில் பிழைகள் நேருவதற்கு இல்லை. பிழைப்படும் அறிவு ஏற்படாது. மற்றையோர், கற்பனைப் பொருள்களையே காண்பர். இவ்வாறு, இல்பொருளைக் கற்பித்துக் காணு பவர்கள் கொள்ளும் காட்சி, அறிவிற்கு அயலானதாகும் (அந்நியாகியாதி).

வேத நூல்களும் காணப்பெறும் பல பகுதிகள், பிரபஞ்சத்தை மாயை என விவரிக்கின்றன. இப்பகுதிகள் தனி ஒருவனது பிழைப் படுகின்ற அனுபவ உலகையே குறிப்பன எனக்கொளல் வேண்டும். உண்மைப் பிரபஞ் சத்தினைக் குறிப்பன ஆகா. உண்மைப் பிரபஞ்சம் பிரமத்தின் வெளிப்பாடு ஆகும்.

உண்மைப் பிரபஞ்சத்தைச் சம்சாரமாகிய பொய்த் தோற்றம் உடைய உலகினின்று பிரித்து வல்லபர் உணர்த்து கிறார். இப்பாகுபாடு நுண்ணியதாகும். சம்சாரம் சுயநலமாகும். யான் எனும் உணர்வும், எனது எனும் உணர்வும் சம்சாரத்தில் அடங்கும். இவ்விரு உணர்வும் பிரமத்தைப் பற்றிய ஞானத்தை ஆன்மா அடைகின்ற போது அழியும். வித்தை, அவித்தை ஆகிய இரு ஆற்றல் களும் இறைவனது மாயையாகிய சக்தியால் தோன்றுவன. இவ்விரு ஆற்றல்களும் ஆன்மாவைக் குறித்தன. ஆன்மாவுக்கு அயலாக இவ்வாற்றல்களுக்குப் பயன் இல்லை.

வித்தை, ஐவகை வடிவங்களை உடையது. (1) துறவு; (வைராக்கியம்), (2) அறிவு; (சாங்கியம்), (3) மனநெறி; (யோகம்) (4) தவம்; (5) கேசவனிடத்தில் ஈடுபாடு;

அவித்தைக்கும் ஐவகை வடிவங்கள் உண்டு (1) தன்னைப் பற்றிய அறிவின்மை; (அறியாமை) (2) அகக்கருவிகள்; (3) பிராணன் (உயிர்ப்பு), (4) புலன்கள்; (5) உடல்; ஆன்மாவின் அவித்தையை வித்தை அறவே நீக்குகின்ற போது அவித்தையின் படைப்பாகிய சம்சாரமும் தானே அழிகின்றது. அழிந்த பிறகு ஆன்மா, விடுதலை யடைகின்றது.

இப்பிரபஞ்சம் (ஜகத்) வித்தையால் அழிவுறுவதில்லை. பிரமத்திடத்து ஒன்றிவிடுகின்றது. பிரமம் படைப்பு அனைத்தையும் ஒடுக்கக் கருதுகின்றபோது பிரபஞ்சம் நீங்குகிறது. பிரமம், தன்னுள்ளேயே ஆனந்தம் அடைய விரும்புகிறபொழுது படைப்பு முழுமையையும் தன்னுள்ளே ஒடுக்கிக்கொள்ள விரும்புகிறது. ஜகத் என்று குறிக்கப்பெறுகின்ற உலகிற்கு சம்சாரம் என்று குறிக்கப் பெறுகின்ற உலகிற்கும் இடையே உள்ள வேறுபாடானது வல்லபரால், சிறப்பாகத் தோற்றுவிக்கப் பெற்றதாகும். இவ்வேறுபாட்டினால், வல்லபர் சுத்தாத்வைதக் கொள் கையினை நிறுவுவதற்கு இயல்கின்றது. வல்லபர் சுத்தாத் வைத்க கொள்கையை நிறுவுவதற்கு வெற்றி கண்டவர் ஆவர். பிரபஞ்சப் படைப்பு முறைகள் பலவாகும். இறைவனின் உளப்பாங்கிற்கும் ஏற்பப் படைப்புகள் பலதரப்படும்.

**ஆன்மா:** பிரபஞ்சப் படைப்பின்போது ஆன்மாக் கள், இறைவனிடமிருந்து அல்லது அக்ஷரப் பிரமத்திட மிருந்து நெருப்பினின்று பொறிகள் தோன்றுவதுபோல வெளிப்படுகின்றன. ஆன்மாக்கள், பலவாகும். என்றென் றும் உள்ளவை, அணுத்தன்மையுடையவை. பிரமத்தின் பகுதிகள் ஆகும். ஆன்மாக்கள், நுகர்க்கின்ற திறன் உடையவை. இறைவனது விருப்பத்திற்கு ஏற்ப இன்பத்தின்

தன்மை, ஆன்மாவிடத்து மறைந்து நிற்கும். பிரமத்தின் ஏனைய இரு பண்புகளாகிய உளதாகும் தன்மையும் அறிவுடைமையும் ஆன்மாவிடத்துத் தோன்றுகின்றன. ஆன்மா பிரமத்தின் பகதியாதலால், பிரமத்தின் வேறு அன்று.

வல்லபர் விரும்புகின்ற சுத்தாத்வைதம் இங்கு எளிதில் நிறுவப்பெறுகிறது. பிரபஞ்சம் பிரமத்தினின்று தோன்றுகின்றது. ஆன்மாக்கள், பிரமத்திடத்து தோன்றுவன. ஆன்மாக்களுக்கோ, பிரபஞ்சத்திற்கோ தனித்த இருப்பு இல்லை. ஆதலால், வல்லபரது சுத்தாத்வைதம் எவ்விதத்திலும் பாழ்படாது காக்கப்பெறுகிறது.

ஒருமலரின் மணமானது மலர் உள்ள இடத்திற்கு புறத்தே நன்கு பரவுகின்றதைப் பார்க்கிறோம். இதுபோல ஆன்மா பரிமாணத்தில் மிகச் சிறியதாக அணுவடிவிலே, அமைந்தாலும் உடல் முழுமையும் நன்கு பரவித் தனது ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. அறியும் பண்பு, ஆன்மாவை உடல் எங்கணும் பரவி யாவற்றையும் அறிகின்ற இயல்பைத் தரப்பார்க்கிறோம். ஆன்மா, பிரமத்தின் பகுதியாக இருந்து அறிகின்ற ஓர் உள்பொருளாக அமைகிறது.

சங்கரது அத்துவிதத்தில் ஆன்மா, தோற்றம் மட்டும் உள்ளதாகும். ஆன்மாவிற்குத் தோன்றுகின்ற உண்மையே உண்டு. இப்பிரபஞ்சத்தைப் படைக்கின்ற விளையாட்டிலே பிரமம் ஈடுபட நினைக்கிறபொழுது ஆன்மாவிடத்து இன்பக்கூறு பொதிந்துள்ளது. பின்னர், அது வெளிப் படுகின்றது. அறுவகைத் தெய்வீகப் பண்புகள் ஆன்மா விடத்து மறைந்து நிற்கின்றன. ஐஸ்வரியம் போன்ற அறுவகைக் குணங்கள் ஆன்மாவிடத்துத் தோன்றாது ஒடுங்கி உள்ளன.

நுண்ணிய ஆன்மாக்கள் பலவகையினவாகத் தோன்றுகின்றன. அறுவகைத் தெய்வீக குணங்கள் வருமாறு: (1) ஐஸ்வரியம் (2) வீரியம் (3) யாசஸ் (4) ஸ்ரீ (5) ஞானம் (6) வைராக்யம்.

இவ்வறுவகைத் தெய்வீக குணங்கள் மறைவதற்குக் காரணங்கள் முறையே வருமாறு; (1) சார்பு, (2) பலவகைத் துன்பங்களால் தொடக்குறுதல், (3) தாழ்வு மனப்பான்மை, (4). பிறப் பினால் எழுகின்ற பெருந்துன்பங்கள், (5) அகந்தை (6) பொய்யறிவு, உலகப் பொருள்களிடத்துப் பற்று. மேலே குறித்த முதல் நான்கு தெய்வீகக் குணங்கள் மறைகின்ற போது ஆன்மா பந்தத்திற்கு உட்படுகின்றது. மற்றைய தெய்வீக குணங்களால் பிழைப்படும் அறிவு ஏற்படுகிறது.

ஆன்மா, அணுத்தன்மையுடையது. ஒடுங்கியுள்ள இன்பம் வெளிப்படுகின்றபோது, ஆன்மா பிரமம் போல் முற்றறிவு பெறுகின்றதைக் குறிக்கின்றன. இன்பம் முற்றிலும் வெளிப்படுகின்றபொழுது ஆன்மா முற்றறிவு உடையதாகிறது. வேத நூல்களிலே காணுகின்ற பகுதிகள் ஆன்மாக்கள் முற்றறிவை உடைய இறைவனைப் போன்று விளங்குகின்றன என்று கூறுகின்றன. ஆன்மாவினது இன்பம் முழுமையுற வெளிப்படுகின்றபோது எண்ணிறந்த உலகுகள் அவ்வான்மாவிடத்துத் தோன்றுகின்றன. இவ்வுலகுகட்கு எல்லையில்லை. ஆன்மா, பிரமத்தோடு உண்மையில் ஒன்றிய நிலையிலேயே உள்ளது.

இப்பிரபஞ்சம் பல வேறுபாடுகளால் நிறைந்தது. ஆன்மாக்கள், வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இப்பிரபஞ்சத்தில் சிலர் மகிழ்ச்சியாகவும், சிலர் மகிழ்ச்சி குறைந்தவர்களாகவும் காணப்பெறுகின்றனர். இவ்வாறு வேற்றுமைகள் நிறைந்ததாக இப்பிரபஞ்சத்தை இறைவன் படைத்திருந்தபோதிலும் இறைவன் மீது எவ்விதக் குற்றத்தையும் கூறுவதற்கு இல்லை. ஒரவஞ்சகம், கொடுமை ஆகிய குற்றங்களை உடையவர் என, இறைவனைக் கூறுவதற்கு இல்லை. இவ்வேறுபாடுகள் இப்பிரபஞ்சத்தின் நிலை, ஆன்மாக்களது நிலை, பிரபஞ்சத்தின் முன்னையகாலச் சுழற்சிகள், ஆன்மாக்களது நிலை, பிரபஞ்சத்தின் முன்னையகாலச் சுழற்சிகள்,

ஆன்மாக்களது செயல் நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்தன, இறவனது சுய படைப்பாகும். (ஆத்ம சிருஷ்டி), இறைவன் தன்னுடைய ஆன்மாவினின்றே இப்பிரபஞ்சத்தைப் படைக்கிறார், ஆதலால் எவ்விதக் கண்டனத்திற்கும் இடம் இல்லை.

**விடுதலைக்கு உரிய வழிகள்:** இவ்வுலகிலே காணப் பெறுகின்ற உணர்ச்சி நிலை வேறுபாடுகள், இறைவனை அணுகின்ற வகையிலே எழுகின்ற வேறு பாடுகள் ஆகும். வேத நூல்கள் மூவகை நெறிகளைக் குறிக்கின்றன. (1) கருமமார்க்கம் (2) ஞான மார்க்கம் (3) பக்தி மார்க்கம். இவை மூன்றும் விடுதலைக்குரிய வழிகளாகும். இவ்வழிகளுள், எவற்றையேனும் ஒன்றை வலியுறத்தியத னால் வேதாந்தக் கருத்துமுறைகளுள் வேறுபாடுகள் எழுந்தன.

ஆன்மாக்களை மூவகை யினராக இறங்கு வரிசையில், (1) புஷ்டி (2)மாரியாதம் (3) பிரவாகம் என வகுக்கின்றனர். குறிப்பின்றித் திரிகின்ற ஆன்மாக்கள் பிரபஞ்சத்திலே ஆழ்ந்து இறைவனை நினையாது வாழ்கின்றவர்கள், பிரவாக வகுப்பைச் சேர்ந்தவர்கள்,

இங்கு பிரவாகம் என்று குறிக்கப்பெறுவது உலகப் போக்கிலே வாழ்கிறவர்கள் என்பதாகும். வேத நூல்களில் பயிற்சி உடையார் இறைவனது உண்மை இயல்பினை அறிந்து இறைவனை வழிபடுவோர் ஆவார். இவர்கள் வேத நூல்களிலே காணப்பெறுகின்ற சட்டங்கள் விதித்துள்ள வழிகளிலே ஒழுகுகிறவர்கள் ஆவார்கள். இவர்கள் மாரியாதார் என்ற இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள். இறைவனால் தேர்ந்து எடுக்கப்பட்ட சிலர் இறைவனிடத்தில் தாம் கொள்ளும் எல்லையில்லாத அன்பின் பெருக்கினாலே மிகுந்த ஈடுபாட்டோடு வழிபடுகின்றனர். இவ்வகையினரை புஷ்டி ஆன்மாக்கள் எனக் கருதுகின்றார். இங்குப் புஷ்டி எனக் கூறப்படுவது இறைவன் அருளைப் பெற்றவர்கள் என்பதாகும். இறை

வன் அருளை என்றென்றும் துய்த்தற்குரிய நிலையில் அருள் நலம் வாய்க்கப் பெற்றவர் என்பது பொருள். இவ்விருள் நலத்தால் உயரிய இலட்சியத்தை அடைதற்கு, அவர்கள் உரியராகின்றனர்.

வாழ்விலே விரும்பத்தகாத முறையில் வாழ்வோர் இப்பிரபஞ்சத்தின் சுழற்சிகட்கு உட்பட்டுத் துன்புறுவோர் ஆவர். தாம் விரும்புவனவற்றை அடைதற்பொருட்டு வேள்விகளை மேற்கொள்கின்றவர்கள், அவ்வேள்வி கட்கு உரிய பரிசுகளைப் பெற்று மறுமையிலே இன்பு றுவர். இவர்கள் துறக்கவுலகிற்குச் செல்லுகின்ற நெறி, முன்னையோர் சென்ற நெறியாகும் புஷ்டி ஆன்மாக்கள் (பிதிரியான) அவரவர்கள் மேற்கொண்ட வேள்விகட்கு உரிய பயன்களைத் துறக்கவுலகில்.நுகர்ந்த பின்னர் மீண்டும் இவ்வுலகில் பிறப்பர்.

இவ்வுலகிலே பிறப்பு நிகழ்வது எப்போது எனில் வேள்விக்கு உரிய பரிசுகளைத் துய்த்தபின்னரேயாகும். ஒருவன் பற்றின்றி வேத வேள்விகளைப் புரிவானேயா னால், ஆன்ம சுகத்தை அவன் நுகர்வான். இவ்வாழ்வு முடிந்த பின்னர் புதிய உடல் பெறுவான். இவன் பெறுகின்ற புதிய உடலின் அமைப்பு ஐவகைத் தீ ஓம்புதல் பற்றிய கொள்கையைப் பொறுத்ததாகும். அப்புதிய பிறப்பிலே இறைவனைப் பற்றிய ஞானத்தைப் பெறுகிறான். இவன் பெறுகின்ற ஞானம் இறைவனோடு முடிவிலே ஒன்றுகின்ற தகுதியை இவனுக்குத் தருகிறது. இத்தகுதியைப் பெற்ற பின்னர், இவன் கடவுள் வழியில் வெவ்வேறு நிலைகளைக் கடந்து செல்லுகின்றான்.

வேத வேள்விகளில் இறைவன், வேள்விச் சடங்கு களின் வடிவத்தில் விளங்குகிறான். (அக்னி ஹோத்திரம் ; - தர்ம, பூர்ண - மாச; பசு-சாதூர்மாஸ்ய - சோம). வேள்வி களைப் புரிதலாலே இறைவனது சடங்காற்றலை கிரியா சக்தி வழிபடுகின்றவர்களும் அதனுடன் இறைவனைப்

பற்றிய ஞானத்தையும் உடையோர்களும் விடுதலை யடைகின்ற போது தெய்வீக இன்பத்தை விடுதலையாகப் பெற்று நுகர்வார்கள். மாறியாத மார்க்கத்தில் ஆன்மீக வாழ்வு, கடவுள் வழியில் செல்ல நேர்வதால், விடுதலை யானது படிப்படியே நிகழ்வதாகும். இவர்கள் உடனடியாக விடுதலை அடைவது என்பது இறைவனின் இன்னரு ளாலேயே நிகழ்வதாகும்.

இறைவனைப் பற்றிய ஞானத்தை உடையவர்கள். இறைவனது இருப்பை அல்லது இறை உண்மையை உள் உணர்வினாலே உணர்வோர் ஆவர். இவ்வாறு, இறை உண்மையை உள் உணர்வினாலே தெளிந்தவர்கள் தம் வாழ்நாள் முழுமையும் இறைவனையே தியானிப்பதில் கழிக்கின்றனர். இவர்கள் கடவுள் நெறியிலே சென்று அக்ஷரப்பிரமத்துள் ஒன்றுகின்றனர். இவர்கள் ஒன்று கின்ற அக்ஷரப்பிரமம் இவர்களது ஞானத்தின் பொருளாகும். இவர்கள் உள்பொருள்களுள் அக்ஷரப் பிரமத்தை உயரியதாகக் கொள்கின்றனர். புருஷோத் தமன் அல்லது தலைசிறந்த நிலையிலுள்ளவர் போன்றவர் களை இவர்கள் அறியமாட்டார்கள். இவ்வாறு பிரம அறிவைப் பெற்றவர்கள் கிருஷ்ணனை வழிபடுவோ ரானால், இவர்களை வெல்லுபவர்கள் யாரும் இலர். இறைவனை வழிபடுவோருள் கற்றறிந்தோராகிய இவர்கள், வாழ்வின் முடிவிலே இறைவனோடு ஒன்றி விடுகின்றனர்.

இறை வழிபாடு வெவ்வேறு வடிவங்களைக் உடையது. இவ்வகைகள் ஒன்பது. (1) இறைவனது புகழைக் கேட்டல் (2) புகழ்ப்பாடல்களை ஓதுதல் (3) நினைத்தல் (4) தொழுதல் (5) வழிபாடு (6) வணக்கம் (7) தொண்டு (8) நட்பு (9) தன்னையே அர்ப்பணித்தல் என்பனவாகும். இங்குக் குறிக்கப்பெற்ற நிலைகள் மேலேறுகின்ற வரிசையில் அமைந்துள்ளன. வழிபடு வோன், படிப்படியே முன்னேறிச் சென்று இறைவன் பக்தியைப் பெறுகிறான்.

வேதங்களைப் பயில்வோர் இறைவனது பெருமையை உணர்கின்றனர். இவ்வுணர்வு இறைவனைத் தனது ஆன்மா எனவே கொள்ளத் தூண்டுகின்றது. தூண்டப்பெற்று இறைவனிடத்துப் பெறுகின்ற எல்லையில்லாத அன்பினாலே பணிந்து நிற்கின்றனர். வேத நூல்களிலே இவ்வகைப் பக்தி விதிக்கப்பெற்றுள்ளது. இவ்வண்ணம் பயிலுகின்ற பக்தியானது மாரியாதபக்தி எனப்படும்.

ஏனைய வைணவக் கருத்து முறைகளுள் காணப்பெறும் வேதி பக்தியை (Vaidhi - Baktti) ஒத்ததாக மாரியாத பக்தி அமைகிறது. மாரியாத பக்தர்கள் புருஷோத்தமனோடு ஒன்றிய உணர்வினைப் பெற்று மகிழ்கின்றனர். சில வேளைகளில் மாரியாத பக்தர்கள் இறைவனது நிலையினையும் அடைந்து இன்புறுகின்றனர். அல்லது, இறைவனுக்கு அண்மையில் வாழ்கின்றனர். அல்லது இறைவன் உலகிலேயே வாழ்கின்றனர்.

மேற்குறித்த விடுதலை வழிகளை வேத நூல்கள் கூறுகின்றன. அதே சமயத்தில் பரம்பொருளை அடைதல், அருளின்றிப் பெறுதற்கு அரியது என்ற குறிப்பையும் அவை தருகின்றன. வேத நூல்களில் காணும் மேற்குறித்த முரணான பகுதிகளை நீக்குவதற்கு, வல்லபர் தனது மரியாத வாதத்தையும், புஷ்டி வாதத்தையும், பயன்படுத்துகிறார்.

மனித முயற்சிகளால் பெறத்தக்க ஞானமும், பக்தியும் விடுதலைக்கு வழி கோல்வன. ஞானத்தாலும், பக்தியாலும் அடையும் விடுதலை மாரியாதம் எனப்படும், இறைவனால் அருளப்பெறுகின்ற புஷ்டியாகும். ஞானமோ, பக்தியோ அல்லது இவைபோன்ற வழிகளை மேற்கொள்ள இயலாதவர்கட்கு இறைவன் தனது, அருளினாலே வழங்குகின்ற விடுதலை புஷ்டியாகும். ஞானமோ, பக்தியோ அல்லது இவைபோன்ற வழிகளை மேற்கொள்ள இயலாதவர்கட்கு இறைவன் தனது,

அருளினாலே வழங்குகின்ற விடுதலை புஷ்டியாகும். மாரியாதா என்னும் மார்க்கத்திலே ஆன்மாக்களது தகுதி நோக்கி விடுதலை வழங்க இறைவன் விரும்புகின்றான். புஷ்டி நெறியிலே, ஆன்மாக்கள் வேதங்களின் வழிகளை ஒரு சிறிதும் பெறாதபோதும் இறைவன் அவற்றை விடுவிக்க விரும்புகின்றார்.

இறை அருள் புரியத் தேர்ந்தெடுப்பது பற்றிய கொள்கை மேல்நாட்டிலே தோன்றிய அகஸ்த்தீன் என்பவர் கருதியது போல, வல்லபக் கருத்து முறையிலே குறிக்கத் தக்க ஒரு கூறாக விளங்குகிறது. இது புஷ்டியாக்கம் எனப் பெயர் பெறுகிறது. புஷ்டி மார்க் கத்தைப் பின்பற்றுகின்ற பக்தர்கள் கிருஷ்ணனிடத்து இயல்பிலேயே பெருகி அன்பு பூண்டவர்கள். இறைவ னிடத்துக் கொள்ளும் எல்லையில்லாத அன்பின் விளை வாக அனைத்துச் செயல்களிலும் அமைவதும், வங்கத்தின் வைஷ்ணவக் கொள்கைகளுள் காணப் பெறுவதுமாகிய ராகானுகபக்தி என்பது, புஷ்டி பக்தியை ஒத்ததாகும்.

புஷ்டி பக்தர்கள் மிகுந்த பணிவன்போடு இறை வனையே சார்ந்து தெய்வீக இன்பத்தினை நுகர்வார்கள். இந்நுகர்வு இறைவனால் தேர்ந்து எடுக்கப்படுகின்ற நிலையிலேயே அமைவதாகும். மாரியாதா நெறியில் இறைவனிடத்துக் கொள்ளும் அன்பானது ஒன்பது வகைப் பக்தி முறைகளின் விளைவாகும். இங்கு, புஷ்டி மார்க்கத்தில் அன்பே முதல் நிலையாகும். இவ்வன் பின் விளைவாக ஒன்பது வகை பக்திகள் தோன்று வதோடு பிற ஆன்மீகச் செயல்நிலைகளும் தோன்றுகின்றன. ஆகவே, மாரியாதத்தின் எதிர்நிலைக் கொள்கையாக புஷ்டிக் கொள்கை அமைகிறது.

புஷ்டி வகை பக்தர்களை நான்கு பகுப்புக்களாக அவரர்களது தனித்த பண்புகட்கு ஏற்ப வல்லபர்

பகுத்துள்ளனர். அந்நான்காவன: (1) பிரவாகம் (2) மாரியாதம் (3) புஷ்டி (4) சுத்தம். பிரவாக பக்தர்கள் இறைத் தொடர்புடைய செயல்களிலேயே ஈடுபடுவார்கள்.

மாரியாத நெறியினைச் சார்ந்தவர்கள், இறைவனது குணநலன்களை நன்கு அறிந்து வழிபாட்டை மேற் கொள்பவர்கள்; புஷ்டி மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் முற்றறிவு உடையோர் ஆவர்; சுத்தமார்க்கத்தைச் சேர்ந்த வர்கள். எல்லையில்லாத அன்பினை இறைவனிடத்துச் செலுத்துவோர் ஆவர். சுத்தவகையினர், பெரும்பான்மை யாகக் கா்ணப்பெறுவது இல்லை. இவ்வகை அருமையு டையதேயாகும். கோபிகள் இவ்வகையைச் சார்ந்தவர்கள். இவ்வகையைச் சிறந்த நிலையில் விளக்குபவர்கள்.

புஷ்டி பக்தர்கள் நிலைகளையோ மேற்கொள்ளாது முதலிலேயே உறவு பூண்டு இறைவன் பெருங்கருணைக்கு உள்ளாகி இறைவனால் புதிய தெய்வீக உருவைப் பெறுகின்றனர். இறைவனின் எல்லையில்லாத லீலை யிலே பங்கு கொள்ளுகின்றனர். பக்தர்களில் உயர்ந்த நெறியினர், கோபிகள்போல் இறைவனது விளையாட்ட களிலே ஈடுபடுவார்கள். இறை இன்பத்தை இடையறாது எப்பொழுதும் துய்த்த வண்ணமே இருப்பார்கள். இந்த எல்லையில்லாத விளையாட்டில் இறைவனது உறவி னாலே பக்தன் பல்வகை இன்பங்களை நுகர்கின்றான். இறைவன் தன்னை முற்றிலும் பக்தனிடத்து ஒப்புவித்து விடுகின்றான். வல்லபரது கருத்துப் படி இது மிக உயர்ந்த விடுதலையாக அமைவது; இறைவனோடு பக்தன் கொள் கின்ற உறவும், அவ்வுற வினால் அமையும் நுகர்வும் ஆகும்.

கருமம், ஞானம், பக்தி ஆகியவை முற்காலத்தில் சிறந்து விளங்கின என்றும் வல்லபர் தனது காலத்தில் சூழ்நிலைகளின் காரணமாக மேற்குறித்த நெறிகள் சிறப்பிற்குன்றின என்றும் கூறுகிறார். ஆதலால் விடு தலைக்காக இறைவனது அருளை முற்றிலும் சார்ந்து வாழ வேண்டிய நிலை நேர்ந்துள்ளது. எவன் ஒருவன் தனது

ஆன்மீக வறுமையையும், சார்ந்து வாழ வேண்டிய நிலை யையும் உணர்கிறானோ அவனே, இறைவனிடத்தில் சரண் புகுகிறான். மிகுந்த நிலையில் கடன்பட்டிருக்கின்ற அறம் கூறும் அவயத்தைச் சார்ந்து தான் கடன்பட்டிருக் கின்றோரினின்றும் தன்னைக் காக்க வேண்டும் என்று முறையிடுகின்றான். கடன்பட்டவன் நிலையில் புஷ்டி பக்தன் உள்ளான். இறைவனது திருவடியிலே தன்னை முற்றிலும் ஒப்படைத்துக் கொண்டு, தன்னைமட்டுமின்றித் தனது உறவினர்கள் அனைவரையும் இறைவனுக்கே உரிமையாக்கி விடுகின்றான். இறை பணி நிற்றலிலேயே தனது வாழ்வு முழுமையும் ஒப்புவித்து வாழ்கின்றான். இறைவனது புகழைப் பரவும் பாகவத்தைப் பயிலு கின்றான். உலகத் தொடர்புகள் உளவேல், அவற்றைச் சுருக்கிக் கொள்கின்றான்.

ஒருவன் தன்னை முற்றிலும் இறைவனிடத்து ஒப்படைத்துக் கொள்வான் எனில், அவனிடத்தில் சுயநலத்திற்கு ஏதும் வாய்ப்பு இல்லை. உலகப்பொருள்கள் இடத்தும் பற்று ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. பக்தனது சம்சார வாழ்க்கைதானே நீங்குகிறது. இவ்வாறு தன்னை இறைவனிடத்து முற்றிலும் ஒப்புவித்துப் பற்றுக்கள் ஏதும் இன்றி வாழ்வான் ஒருவனது இல்லம், இறைவன் உறையும் இடமாக அமைகின்றது. பக்தனது குடும்பம் முழுமையும் தெய்வீக இன்பத்தை இம்மையி லேயே துய்க்கிறது. புஷ்டி பக்தன் இறைவனைப் பேரன் போடு வழிபடுகின்ற காரணத்தால் தன் இம்மை இன்பங் கள் அனைத்தையும் துறக்கின்றான். தான் பிறந்துள்ள வகுப்பிற்கும், மேற்கொண்டுள்ள நிலைக்கும் உரிய கடமைகளையும் மறந்து வழிபடுகின்றான்.

இறைவனாகிய கிருஷ்ணன் ரஸமாவான், ஆனந்த வடிவினன், நிகரற்ற அழகாவான். வல்லபர் அழகியல் துறையிலே தனித்ததொரு மெய்ப்பொருளியலை வளர்க் கின்றார். பொதுவாக அனைத்து ர்ஸங்களுக்கும் கிருஷ்ணன் விளக்கமாக அமைகிறார். குறிப்பாகச்

சிருங்கார சரத்திற்குப் பெருவிளக்கமாவார். சிருங்காரத்தில் இரு கூறுகள் உண்டு. ஒன்று உறவு, மற்றொன்று பிரிவு. கிருஷ்ணன் தனது பக்தர்களோடு கொள்கின்ற உறவுகளிலே இந்த இருவகை நிலைகளையும் உணர்த்துகின்றார்.

பாகவதத்தில் கிருஷ்ணனது பிள்ளைப்பருவம் குறித்து அமைகின்ற விளக்கம் அனைத்தும் பெருவிருந்தாக அமைகிறது. பாகவத்தில் இந்தப் பகுதிகளைப் படிக்கின்றவர்கள் தெய்வ நலத்தில் தோய்ந்து விடுகின்றார்கள்.

கோகுலத்தில் கிருஷ்ணனது செயல்கள் அனைத்தும் மெய்ப்பொருள் உண்மைகளால் நிறைந் துள்ளன. இறைவனது அருளாற்றலின் வியத்தகு பயனை எல்லாம் நன்கு விளக்கமாகத் தருகிறது. இதனால் பாலகிருஷ்ண வழிபாடு வற்புறுத்தப்பெறுகிறது. கிருஷ்ணனது பேரழகிலே கோபிகள் ஈடுபட்டுத் தம் வயம் இழந்து கிருஷ்ணனையே அடையும் வேட்கை மீதுரப் பெறுவர். கிருஷ்ணனிடத்துக் கொண்டுள்ள பேரன்பிற்கு தமது உடைமையெல்லாம் அர்ப்பணித்து வாழ்வார்கள். கிருஷ்ணன் அருளிய ஒழுக்கக் கட்டளைகளையும் மறுக்கும் அளவுக்கு தமது நேர்மையினை மெய்பித்தனர். இதனால் கிருஷ்ணனது தோழமையை இழந்தனர்.

தோழமையின் இழப்பு, கோபிகள் கொண்ட அகந்தை யினால் நேர்ந்ததாகும். பின்னர் அகந்தையினால் நேர்ந்த பிரிவிற்கு நினைத்து பெருவருத்தத்தை உருக்கமான முறையில் புலப்படுத்தினர். இதனால் இறைவனது அருள் நலம் வாய்க்கப்பெற்ற கிருஷ்ணனது உறவினால் அமையும் இன்பத்தை நுகர்வோர் ஆயினர்.

கடவுளது, அருளினாலே, கோபிகள் கடவுளிடத்து அன்பு கொண்டு கடவுளை அடைவார் ஆயினர். எவன் ஒருவன், அன்பினால் வெகுளியால், அச்சத்தால், பற்றால்,

கருத்து ஒருமையால், நட்பால், இறைவனோடு நிலைத்த உறவினை அமைப்பதில் வெற்றி காண்கின்றானோ அவன் தெய்வீக இன்பத்தைத் துய்ப்பதில் ஐயமில்லை.

இறைவனிடத்தில் ஆன்மா கொள்ளும் உறவு வகைகள் சில உள. இவற்றுள், மேற்குறித்த கோபிகளது அன்பு நெறி ஒன்றாகும். காதலன் ஒருவன், தனது காதலிடத்துக் கொள்ளும் முருகிய அன்பினாலே, நெருங்கிய உறவை அமைத்துக் கொள்கிறான்.

ஆன்மாவும், இறைவனிடத்து இத்தகைய பேரன்பின் உருவேயாகும். மகளிரே இறைவனது இன்பினை நுகர்வ தற்குத் 'தகுதியுடையோர் என்று வல்லபர் கூறுகின்றார். வழிபாட்டில் பெண்மைக் கூறு இன்றியமையாதது பெண்மைக்கூறு இன்றி வழிபாடு இனிது அமையாது. சில பக்தர்கள் கிருஷ்ணனைத் தம் குழந்தையாக வழிபடுகின் றனர். அனைத்து ஆன்மாக்களும் உண்மையில் பெண்டி ரேயாகும். இவர்களது இயல்பான கேள்வன்' கிருஷ்ணன் ஆவான்.

ஒவ்வொரு ஆன்மாவும் கிருஷ்ணனைக் காதலிக்க வேண்டும். மனைவி கணவனிடத்துக் கொள்ளும் அன்புபோல ஒவ்வொரு ஆன்மாவும் கிருஷ்ணனிடத்து அன்பு செலுத்த வேண்டும்.' நாயக நாயகி நிலையிலே அமையும் வழிபாடு இஸ்லாமிய அனுபூதி நெறியாகிய சூஃபி நெறிக்கு மாறானது. புஷ்டி மார்க்கத்தின் கதவுகள், அடையாத நெடுவாயில்கள் ஆகும். யாவரும் புஷ்டி மார்க்கத்தை மேற்கொள்ளலாம்.

கோபிகளது வழிபாட்டிலே விளக்கம் பெறுகின்ற புஷ்டி பக்தி, உயர்ந்த இலட்சியம் கொண்டது எனினும் இன்றைய சூழ்நிலையில் பின்பற்றுதற்கு அருமையுடைய தாகிறது. ஆதலால், வல்லபர் எளிய வழி ஒன்றினை வகுக்கிறார். இவ்வழி பெரிதும் இனிமை பயப்பதாகும். இறைனிடத்து அனைத்தையும், ஒப்புவிக்கின்ற பிரபத்தி நெறியே இந்த எளிய நெறியாகும்.

யாவரும் தேசம், ஜாதி போன்ற வேறுபாடுகள் கடந்த நிலையில் இறைவனை, பிரபக்தி நெறியால் அடையலாம். இறைவன்து ஆணைவழி நிற்றல் இங்கு பிரபக்தியால் வற்புறுத்தப்பெறுகிறது. இறைவனது, விருப்பப்படி ஒழுகுதலை இலட்சியமாகக் கொண்டு தன்னையே இறைவனிடத்து ஒப்புவித்து வாழ்வு முழுமையும் வழிபாடாக அமைத்துக் கொள்கின்றனர். இவர்கள் கேட்பதும் இசைப்பதும் பாகவதமே.

கோகுலத்தில் கிருஷ்ணனது ராஸ லீலை என்றென்றும் உள்ளதாகும். இருக்கு வேதத்தில் இந்த லீலையின் தோற்றத்தைக் கண்டுள்ளனர். 'சுகர்' என்பவர் காலம் தொடங்கி இந்நாள்வரை ராஸ லீலையாகிய கருத்தமைவைப் பல்வேறு வகைகளில் விளக்கியுள்ளனர். வல்லபர் ராஸ லீலைக்குச் சொற்பொருளும், உட்பொருளும் தந்துள்ளார். சொற்பொருளாகக் கொள்ளுகின்றபோது, ராஸ லீலையில் எவ்விதத் புலத் தொடர்பும் இல்லை என்பதனை வற்புறுத்த விரும்புகிறார்.

இறைவனும், அவனது செயல்களும் பற்று இன்றி நிகழ்வன. ராஸ லீலையைப் பற்றி நினைத்தல் ஒருவனைத் தூய்மையுறச் செய்யும். இறைவனிடத்து அன்பு பெறுகத் துணை நிற்பது ராஸ லீலையைப் பற்றிய சிந்தனையே. ராஸ லீலையின் உட்பொருளை அறியுமிடத்துப் பிறழ உணர்வதற்கு இடமேயில்லை.

வல்லபரத கருத்துப்படி கோபிகள், வேதங்கள் ஆகும் அல்லது சுருதிகள் ஆகும். சுருதிகள் என்றும் இறைவனோடு தொடர்பு உடையன. இறைவனே சுருதிகளில் பேசப்பெறும் பொருளாகும். சுருதிகள் இடையறாது இறைவனோடு தொடர்புப் படுத்தப் பெறுவதை ராஸ லீலையாகக் குறிக்கலாம்.

## வல்லபரது பேருலகு

வல்லபர் சுத்தாத்வைத மெய்ப்பொருளியலைப் போதித்து உள்ளார். புஷ்டி மார்க்கத்தை வற்புறுத்துகின்ற சமயம் வேத நூல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். தீராத எந்தச் சிக்கலுக்கும் தீர்ப்புக் கூறுவது, சுருதியே என வல்லபர் கொண்டார். பிரமம், பல குணங்களை உடையது என்றும், பிரமம் பிரபஞ்சமாக மாறுகின்றதென்றும், பிரபஞ்சம் உண்மையானதென்றும், கரும மார்க்கமும் ஞான மார்க்கமும் ஒன்றுதல் வேண்டும் என்றும், வல்லபர் கூறுவது எல்லாம் சங்கரருக்கு முன்னாலேயே தெரிந்தவையேயாகும். பக்தி, பரபக்தி, அருள் போன்ற கருத்துகளும் வல்லபர்க்கு முன்னா லேயே வழக்கில் இருந்தன. ஆதலால் இந்திய மெய்ப் பொருள் இயலுக்கு வல்லபர் தந்த பங்கு யாது?

## இருண்மயற்ற கொள்கை:

இன்பம் ரஸம் ஆகியவற்றால் நிறைந்துள்ள இறைவன் என்னும் கருத்த மைவு: மாறுபடும் குணங்களும் பிரமத்திடத்து ஒருங்கே அமைதல்; அக்ஷரப் பிரமத்தைப் பற்றிய கருத்து; பிரமத்தின் படைப்புக் கொள்கை; எவ்வித மாற்றமும் உறாது பிரமம் பிரபஞ்சமாக மாறுதல்; இறைவனிடத்துக் தன்னை முற்றிலும் ஒப்படைத்துக் கொள்ளுதல்; அருளை வற்புறுத் தல்; உணர்ச்சியும் அழகும் கொண்ட வழிபாட்டு வடிவம் ஆகிய இவையாவும் வல்லபரது போதனையுள் காணப் பெறும் சிறந்த கூறுகளாகும்.

சங்கரரை அவரது மாயக்கொள்ளைக்காக வல்லபர் கண்டனம் செய்கிறார். பாஸ்கரரை அவரது உபாதிக் கொள்கைக்காகக் கண்டிக்கிறார். இராமானுஜரது முடிவில் கொண்ட மும்மைக் கொள்கைக்காகக் கண்டிக்கிறார். நிம்பார்க்கரது துவைத வற்புறுத்தலையும், மாத்வர் கலப்பற்ற துவைதத்தை ஆதரிப்பதையும் சாக்தர்களின் சக்தி, பிரபஞ்ச நிமித்த காரணம் எனும் கொள்கையையும் கண்டிக்கின்றார்.

வல்லபர், வேத நூல்கள் உண்மையான இருமையற்ற கொள்கையையே போதிக்கின்றன என்ற கருத்தை உடையவர். இவ்விருமையற்ற நிலை வழிபாட்டோடு இயைவதே என்றும் கூறுகின்றார். இக்கருத்து அண்மையில் ஸ்ரீ அரவிந்தராலும், வற்புறுத்தப் பெற்றுள்ளது. சங்கரர் வற்புறுத்த விரும்பிய கருத்துக் கொள்கை ஒருமையினை மூலக்கருத்தாகக் கொள்வதாகும். இது வல்லபர்க்கு உடன்பாடன்று.

இராதாகிருஷ்ணன் , குறிப்படுவது போலச் சங்கரர், "புலனிறந்து பொருளியல் ஆய்வுத் துறையில் ஆழ்ந்த அறிவும், அளவைத் திறனும் உடையவர்; ஆதலால் மெய்ப்பொருளியல் அறிஞராகவும், முரண் நிலைக் கொள்கை ஆய்வாளராகவும் விளங்குகின்றார். இத்துறைகளுள் சங்கரர் நிகரற்றவர். வல்லபர், வேத நூல்களின் முடிவினை, முடிந்த முடிவாகக் கொண்டு அவற்றின் தலைமையை ஏற்பதில் நிகரற்றவர் ஆகிறார்." ஆதலால் வல்லபரது கருத்தமைவு சமயச் சார்புடையதாக அமைந்து கிறித்துவ சமயச் சார்புடைய மெய்ப்பொருளியலை நினைவுபடுத்துகிறது. ஆதலால், சங்கரரும் வல்லபரும் என்றும் இயையுமாறு இல்லை.

வல்லபர் கிருஷ்ண பரமாத்மாவின் ஆணைகளை நேராக ஏற்று மக்களை இறை நெறியிலே ஈடுபடுத்துகின்ற புனிதமான பணியிலே தொடங்கினார் என்று கூறப்பெறுகிறது. ஜாதி, தேசம் ஆகிய வேறுபாடுகள் எல்லாம் கடந்த காட்சியைக் கொண்டார். இறைபணி நிற்றலிலே மக்களை ஈடுபடுத்தினார். வல்லபர் மேல்நாட்டு 'புளோட்டினஸ்' (Plotonus) என்பார் கூறுவதைப் போல, 'பெற்றோரினின்று உடனே பிரிக்கப்பட்டு, பெற்றோரினின்று மிக்க தூரத்தில் வளர்க்கப்பெற்ற குழந்தைகள், பெற்றோன்ரை மறந்து தன்னையே மறக்க நேர்வதுபோல, ஆன்மாக்களும் இறைவனிடத்து இருந்து பிரிவுற்றுத் துன்புறுகின்றனர்' என்றும், எவ்வளவு விரைவில்

ஆன்மர்க்கள், நன்மைபெறுவன என்றும் கூறுகின்றார். வல்லபரது ஆன்மாக்கள், நன்மைபெறுவன என்றும் கூறுகின்றார். வல்லபரது போதனையால் பல்வேறு நிலைகளிலுள்ள வாழ்க்கை நிலைகள் உள்ள சமுதாயத்தில் எல்லாப் பகுதிகளும் உயர்வுற்றன. வல்லபரது போதனை முற்றிலும் குடியரசு நெறியையே பின்பற்றியதாகும்.

ஓவியம், இசை, இலக்கியம் ஆகிய துறைகள் சமஸ்கிருதத்தில் ஹிந்தியில், குஜராத்தியில், வல்லபரது கருத்து முறைகளால் ஆர்வம் பெற்றுத் தழைத்து விளங்குகின்றன; இறைவனோடு, கொள்ளுகின்ற நேரான உறவினாலும், அவ்வுறவினால் உறுகின்ற மகிழ்ச்சிப் பெருக்கில் தம் தனி வாழ்வை இழந்து அனுபூதி நெறி நிற்போர் பலர், வல்லபர் கொள்கை முறையில் தொடர்ந்து தோன்றியுள்ளனர்.

*

# சைதன்யரின் பேதா பேதம்

இங்குக் குறிக்கப்பெறுகின்ற சைதன்யரது மெய்ப்பொருளியல் தச மூல சுலோகம் எனனும் நூலை அடிப்படையாகக் கொண்டது. இச்சுலோகங்களைச் சைதனயரே எழுதியவர் என (வங்காள) கௌடிய வைணவர்கள் கருதுகின்றனர்.

சைதன்யரது ஆன்மீக வாழ்விலே குருவாக அமைந்தவர்கள் (தீக்ஷா குருவும், சந்நியாச குருவும) மாத்வர்களே. சைதன்யரே தாம் மாத்வப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் மாத்வரது துவைத நிலையினைத் தனது போதனைகளிலே மேற்கொள்வதாகவும் கருதுகின்றார். என்பதை நாம் முதலிலேயே குறிப்பிட வேண்டும். இவ்வாறு இருப்பினும் தச மூல சுலோக விளக்கங்களுள், காணப்பெறுவதைப் பார்த்தால் ஒரு வகை பேதாபேதம் அல்லது "வேறுபாட்டில் வேறுபாடின்மை" என்னும் கருத்து வகை தான் காணப்பெறுகிறது. இது நிம்பார்க்கரது பேதாபேத நிலையின் மிக நெருங்கியதாகும்.

சைதன்யரது மெய்ப்பொருளியல், நாம் இன்று காணுகின்ற நிலையில் கலப்பற்ற துவைத வாதமாக அல்லது இருமைக் கொள்கையாக இல்லை. மாத்வர் பிரம

சூத்திரத்திற்கு உரை கண்டவாறு இறைவனுக்கும் எல்லைக்குட்பட்டுள்ள ஆன்மாவிற்கும் உலகுக்கும் என்றுமுள்ள வேறுபாட்டை மட்டும் வற்புறுத்துவதோடு சைதன்யர் நிற்கவில்லை. அபேதரம் அல்லது என்றுமுள்ள நிலைபெற்ற வேறறுமையிடையே வேற்றுமையின்மை யையும் சைதன்யர் வற்புறுத்துகிறார்.

இந்த அபேதம் அல்லது வேறுபாட்டில வேறு பாடின்மை என்பது அளவை நெறியிலே அறிவிற்கு எளிதில் புரிவதாக அமைய வில்லை. ஆதலால் மாதவர் கூறிய துவைதாவதத்தின் இருமைக் கருத்து முறைக் கொள்கையாக இதைக் கொள்வதற்கு இயலாது. இதை அசிந்தியபேதாபேதம் அல்லது ஒருவகைக் கருத்தியல் ஒருமைக் கொள்கை (Idealistic Monisi)யாகக் கொள்ள வேண்டும். இவ்வாறே இது கருதப் பெறுகிறது. இந்த அசிந்திய பேதாபேதம், இருமைகள் அனைத்தையும் அளவை கடந்த ஒருமையில் அல்லது அளவையால் அறிய இயலாத முழுமையில் ஒன்றுபடுத்துகின்றது.

வைணவக் கருத்து முறைகள் அனைத்திற்கும் பொதுவான உண்மை பிரபஞ்ச உண்மை, பிரபஞ்ச உள்பொருள் எனக் கொள்வதாகும். மர்யா வாதம், அனைத்து வைணவக் கருத்து முறைகளாலும் மறுக்கப் பெறுகிறது. சங்கரர் கருதிய ஜகத்மித்யத்வம் அல்லது பிரபஞ்சத்தின் பொய்மையை மறுத்தல் அனைத்து வைணவக் கொள்கைக்கட்கும் உடன்பாடாகும். இவ்வாறு பிரபஞ்ச உண்மையை ஏற்பதும் மாயா வாதத்தை மறுப்பதும், வைணவப் பிரிவுகளுக்கேயன்றிச் சைவ, சாகத கருத்து முறைகட்கும் உடன்பாடேயாகும்.

ஆகமங்களின் தலைமையினை ஏற்கின்ற அனைத்துப் பிரிவினரும், வேத நூல்களுக்குத் தருகின்ற சிறப்பையே ஆகமங்கட்குத் தருகின்றனர். சைதன்யர், வைணவர் என்னும் முறையில் இவற்றிற்கு மாறுபட்டவர்

அலலா. சஙகரா தாராத ஒரு சிறபபினை ஈஸ்வரனுக்கு அலலது இறைவனுககுச சைதானயா தருவதைப பார்க்கிறோம். ஈஸவரனைப பிரஞ்வத்தினைப் படைப போனாக, காப்போனாக, அழிபபோனாக, கருதும் ஒரு தாழநத நிலைய்யயே சஙகரா தருகின்றார். நிாகுணப் பிரமததையே பரமபொருளாக முழுமுதற பொருளாகக் கருதி அதறகு அடுத்த நிலையையே சகுணப் பிரமத்திறகுச் சங்கரர் தருகின்றார்.

சைதன்யர்கள, பிரபஞ்ச உண்மையினை நமபுகின்ற வர்கள். இதை மாற்றி நிர்குணப பிரமத்தை ஈஸ்வரனுககு அடுத்த நிலையில் வைத்துக் கருதுகின்றனர். பிரமத்தைப் படைபபுத் தலைவனாக, படைத்த உயிாகளோடு அன்பு உறவுகளை உணர்வது முழு உண்மையை உணர்வதாகும். இவ்வுண்மையை உணர்வின் படிநிலைகளில் நிலை பெறாத கூறாக அல்லது ஒரு படி நிலையாக நிாகுணப் பிரமத்தைச் சைதன்யர் கருதுகின்றனர்.

கிருஷ்ணனை இறைவனாகவும, ராதையை அவனது ஆறறலாகவும், சக்தியாகவும் சைதன்யர் கருதுவது அவரு டைய இரண்டாவது கருத்தாகும். சைதன்யா, நிம்பார்கத் வல்லபர் ஆகியோர் இறைவனைக் கிருஷ்ணனாகவும் அவன ஆறறலை அல்லது சக்தியை ராதையாகவும் கருதபவா. இவ்வாறு கருதுவதில் இராமானுஜர், மாத்வர் ஆகியோரினின்று வேறுபடுகின்ற வர்கள். இராமானு ஜரும், மாத்வரும இறைவனை விஷ்ணுவாகவும், நாராயணனாகவும கருதுகின்றனர். இலட்சுமியை நாராயணனது வாழக்கைத் துணையாகவும் அல்லது ஆற்றலாகவும் கொள்கினறனர். இவர்கள் வைகுந்தத்தில் வாழ்பவர்கள் என்றும் இவர்கள கருதுகின்றனர். கிறித்தவர்களுக்குச் சுவர்ககம்(Paradise) எப்படியோ அப்படி இவர்களுககு வைகுந்தம் அமைகிறது. இவ்விரு கருத்துக்களுக்கு உள்ளே வேறுபாடு அடிப்படை யானதும், ஆழமானதும் ஆகும்.

இறைவனையும், அவனது ஆற்றலையும் சேர்த்து இலட்சுமி நாராயணனாகக் கருதுவதும், வைகுந்தத்தில் ஆட்சி புரிவதும் வற்புறுத்தப் பெறுவது இறைவனது ஐஸ்வர்ய குணம ஆகும். ஆதலின் அவனது திருவடியிலே வீழ்ந்து ஒருவன் வணங்கலாம. அல்லது மற்ற வழிகளில் வழிபடலாம. அவன மாட்சிக்கும் பெருமைக்கும வணக்கம் செலுததலாம். இவ்வழிபாடு அல்லது வணக்கம் தொலைவிலிருந்தே நிகழ்வதாகும. நெருங்கி நின்று வாழ்வில் உறவு கொள்ளும் துணிவு எவருக்கும் ஏற்படுவது இல்லை.

இராதா கிருஷ்ணனாகக கருதுவதில் இது முற்றிலும் மாறுபடுவது. இங்கு இறைவனது தோழமையைப் பிருந்தாவன லீலையிலே, நெருங்கிய மனித சமூக உறவிலே, தோழனாக, குழந்தையாக, நாயகனாக வெவ் வேறு உறவு நிலைகளிலே நுகரலாம. இறைவனை, மாதுர்ய ரூபத்தை அல்லது இறைவனது தோழமையின் இனிமையை உணர்வது இந்நெறியாகும்.

சைதன்யர், வல்லபர் ஆகியோர் லட்சுமி நாராயணன் பெருமையை வணங்குவதைவிட இறைவனது இனி மையை நுகர்வதை உயர்ந்ததாக, இனிமையுடையதாகக் கருதுகின்றனர். இறைவனை லட்சுமி நாராயணனாகக் கருதுவதில் இறைவனின பெருமையும், புகழுமே ஒருங்கே வலியுறுத்தப் பெறுகின்றன.

சித்தாந்த இரத்தினம் என்னும் நூலிலே மாதுர்ய ரூபம் என்பது நன்கு விரிக்கப் பெறுகிறது. இறைவனின் மனித வடிவிலே மனிதர்கள் இடையே, மனித குறைக ளோடு (குறைகளைக் கடக்காமல்) தோன்றுகிறார். இவ்வாறு மனிதரிடையே மனித வடிவில் தோன்றுவது ஐஸ்வரிய ரூபத்தினின்றும் வேறுபடுவது. ஐஸ்வர்ய ரூபத்தில், இறைவனின் மனித நிலையைக் கடந்த உயர்ந்த நிலையில், பெரும் புகழும் ஆற்றலும் உடையவராய்

விளங்குகிறார். துவாரகையில் பெருமான் நானகு கையோடு தோன்றுவது இங்கு கருதத் தக்கது.

மனித வடிவமும், ஐஸ்வரிய ரூபத்தில் பக்தி அச்சமாக, பணிவன்பாக, கீழ்படிதலாக உருக் கொளகிறது. மனித வடிவில் உள்ள இறைனை வழி படுகினறபோது பக்தி நெருங்கிய தோழமையாக, அன்பாக, பற்றாக விளங்குகிறது.

**ஏற்புடைய அறிவைத் தரும் வாயில்கள்**

தக மூல சுலோகத்தில் உள்ள பத்து சுலோகங்களுள் முதல் சுலோகம் பிரமாணம் அல்லது பொருந்தும் அறிவின் வாயில் குறித்த கேள்வியினை எழுப்புகிறது. ஏனைய ஒன்பது சுலோகங்களும் அறிவினால் அல்லது பல்வேறு வாயில்களால் அறியப்பெறும் பொருள்களின் தன்மையை ஆய்கின்றன. முதல் சுலோகத்தின்படி வேதங்கள் அறிவு பெறுதற்கு உண்மையான வாயில்களாகும்.

காட்சி, வழியளவை, பிற பிரமாணங்கள் அல்லது அறிவைத தருகின்ற பிற வாயில்கள் ஆகியவை வேதங் களின் அடிப்படையான கருத்துக்களோடு பொருந்துவன. உள்பொருளின் இயல்பையும், வேதக் கருத்துக்கட்கு மாறு காணாத வகையில் பொருந்தவே விளக்குவனவாக வாயில்கள் அமையுமானால் அவை ஏற்க்கத்தககன. தனி அளவை மட்டும் முழுமுதற்பொருளின் இயல்பினை வரையறை செய்வதற்குத் தகுதியற்றது. வழக்குலைகள் வேத போதனைகளை அடிப்படையாகக் கொண்டு வேத உண்மைகளை விளக்குவதற்கு முற்பட்டால் ஆன்மீகத் துறையில உள்பொருளை விளக்குகின்ற வாய்ப்புடை யாகக் கொண்டு வேத உண்மைகளை விளக்குவதற்கு வாய்ப்புடையதாகும்.

உள் பொருள் ஆன்மீகமாக அமையமானால் அறிவு நிலையிலே சாதாரணமாக உளள எல்லைகளைக

கடக்கினற தன்மையுடையதாகும். சாதாரணமாக நிகழும் சிந்தனைக் காட்சியின் அடியாக எழுவதாகும். எவ்வெப் பொருள்கள் காலத்தாலும், இடத்தாலும் கட்டுறுகின் றனவோ, அவ்வப்பொருள்களை அறிதற்குத் துணையாக இருப்பன பொறி, புலனகளாகும.

புலன்கள் தருகின்ற காட்சியை அடிப்படையாகக் கொண்டு சிந்தனை அமைகிறது. காட்சியும், அளவை நெறியில் இயங்கும் சிந்தனையும் புலப்பொருள்கள் உலகிலும், பொருளியல் உலகிலும் இயல்பில் நிகழ்வன. ஆன்மீக நெறியிலே உள்பொருளைப் பற்றி ஆராய வேண்டுமானால் காலமும், இடமும் கடந்ததொரு காட்சியைப் பெறவேண்டியதாகிறது. சாதாரண புலப் பொருள்கள் காலத்தாலும், இடத்தாலும் கட்டுறுவன; எளிய காட்சிக்கும், சாதரண சிந்தனைக்கும் கடந்ததோர் உயரிய அனுபவ நெறி ஒன்றே ஆன்மீக நெறியில் துணையாகும். இத்தகைய உயரிய காட்சி அறிவோர்க்கும், துறவோர்க்கும் அமைவதாகக் கருதப்பெறுகிறது. ஆதலால் முழுமுதற் பொருளின் உண்மை நிலையை வரையறை செய்ய வேதங்களே நமக்கு உண்மையான வழிக்காட்டியாகும். அறிவோரும். துறவோரும், அனுபூதி யாகிய உயர் நெறியிலே உணர்ந்த உணர்வுகளின் பதிவுகளே வேதங்கள் ஆகும்.

## முழுமுதற் பொருள்

பிரமேயங்கள் அல்லது முடிவாக அறியத்தக்க பொருள்கள் குறித்து வேதஙகள் தருகின்ற செய்திகள் யாவை? சைதன்யர் அவரைப் பின்பற்றுவோர் கருத்துப்படி முழுமுதற்பொருள் குறித்து வேதங்கள் போதிப்பது வருமாறு! ஹரி என்பவர் முழுமுதற் பொருள், ஆவார். ஹரி என்பவர் பகவான் அல்லது தலைவர் ஆவார். ஹரியின் பொருட்சார்பற்ற உருவத்தைச் சூழ்ந்துள்ள ஒளி வட்டம் (அங்ககாநதி), சங்கரது எல்லை அற்ற நிர்க்குணப் பிரமம் ஆகும்.

ஹரியின் ஒரு கூறே பரமாதமன் அல்லது உயாவற உயர்ந்த ஆன்மாவாகும். படைக்கப்பெற்ற பிரபஞ்சத்துள் அகனமர்ந்த ஆன்மாவாக ஹரி அமைகிறது. ஹரி முழுமையாகும்; பரமாத்மன் ஹரியின் கூறு ஆகும். அல்லது அம்சம் ஆகும். ஹரி நடுநாயகமாக விளங்கும் உளபொருளா ஆகும. அவரைச் சூழந்து அமையும் ஒளி வடடமோ நிர் விசேஷ அல்லது நிர்க்குண பிரமமாகும. நிறைநத அழகு, நிறைந்த மாடசி, நிறைநத ஆற்றல், நிறைந்த புகழ், நிறைந்த அறிவு, அல்லது நிறைந்த ஞானம், முழுத் துறவு ஆகியவற்றின் ஒருமைப்பாடே ஹரியாகும.

மேற்குறித்த அறுவகைப் பணபுகளின் நிறைவான லையே உருக்கொண்டதுபோல ஹரி அமைகிறார். மேற்குறிதத பணபுகள் யாவும ஒத்த தகுதியுடையன அல்ல. இவை தமமுள் உறவு உடையன; ஆனால் சில முதன்மை யானவாகவும், வேறு சில துணை நிலையினவாகவும் அமைகின்றன. ஶ்ரீ அல்லது நிறைந்த அழகு, பண்புகள் அனைததிற்கும் அடிநிலையில் உளதாகும்.

நிறைந்த அழகு, முதன்மையானது; முககியமானது தலைமையுடையது. மாட்சி, ஆற்றல், புகழ் ஆகிய பண்புகளை நிறையழகிற்குத் துணை நிற்பனவாகும். ஞானம், துறவு இறைவனிடத்து விளங்குகினறபோது அவை இறைவனது புகழின் விளக்கமாக அமைகின்றன. ஞானமும், துறவும் சங்கரரால் வற்புறுத்துப்பெறுகின்ற இரு பணபுகள் ஆகும். இவ்விரு பண்புகளும் துணை நிலையில் உள்ள பண்புகளின் அடியாகத் தோன்றுவன வாகும. ஆதலால், இறைவனது உருவத்தைச சூழ்ந்து ஒளிவட்டமாக அமைகின்றன.

ஞானமும்-துறவும் சங்கரரது நிர்க்குணப பிரமத்தின் சிறந்த இயல்புகளாவன. பிரமம இவ்வாறு கருதப் பெறுமேல் தனித்த நிலையில் உள்பொருளாகக் கருதவதற்கு இலலை. ஹரியின் பணபுகளில் ஒரு கூறாக

உள்ள தனமை, இன்பம், அறிவு ஆகியவற்றின் நிறை வாகப பிரமம் அமைகிறது.

கொழுந்துவிட்டு எரியும் நெருபபின் ஒளி, நெருப்பை உடபடுத்துகிறது. நெருபபை மூலமாகக் கொளகிறது; அடிப்படையாகக் கொள்கிறது. இதுபோல, நிாக்குணப பிரமம் ஒளி வட்டமாக விளங்கி இறைவனை உட்படுத்துகிறது. இறைவனின் ஆன்மீகத் துறையிலே நிர்க்குணப் பிரமத்திற்கு மூலமாகவும் அடியாகவும் விளங்குகிறது. ஹரி இறைவனாக விளங்குகின்ற நிலை யில், அனைத்து நிறைவும் உடையவனாக ஒருமையும் இருமையாக விளங்குகின்றான். இங்கு இருமை நிலையில் குறிககப பெறுபவர் கிருஷ்ணனும், ராதையுமாகும். (இறைவனும், அவனது ஆற்றலுமாகும்). இவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் கட்டுண்டு விளங்குகின்றனர். இவ்விருவரையும் 'கட்டுப்படுத்துகின்ற தளைகள் பக்தி, அன்பு, பற்று' ஆகியவையாகும்.

பரமாத்மன் அல்லது பிரபஞ்சத்துள் விளங்கும் அகனமாநத ஆற்றல் ஹரி என்னும் இறைவனது ஒரு கூறாகும்; ஹரி இறைவனாகத் தனது முழுமையும் நிறைவும் தோன்ற விளங்குகின்ற நிலையில், ஒரு பங்காகும். ஹரி, மாயை அல்லது அறியாமையாகிய இப்பிரபஞ்சத்தைத் தனது மாட்சி, ஆற்றல் ஆகிய இரு பண்புகளில் துணை கொண்டு படைத்துள்ளார். தான் படைத்த இவ்வுலகினுள் புகுந்துள்ளார். அல்லது தனது முக்கிய நிலையினின்று ஒரு கூறினைப் புகுத்தி ஆற்றல் பெறச் செய்துள்ளார். இவ்வாறு ஆற்றல் பெற்ற வடிவமே விஷ்ணுவாகும்.

விஷ்ணு, ஹரியின் ஒரு கூறேயாகும். ஆயினும பிரபஞ்சத்தின் ஆன்மாவாகும். ஹரியின் முழுமைக்கோ, நிறைவுக்கோ எவ்விதத்திலும் விஷ்ணு குறைந்தவர் அல்லர். ஏனெனில் விஷ்ணு நிறைவும், முழுமையும்

குறைவற விளங்க விளங்குவதறகுக காரணமாக இருப்பவர் ஹரியாகும். ஆன்மீக உலகிலே, உள்பொரு ளாக விளங்குவது எல்லையிறந்ததாகும். உள்பொருள நிறைவோடும் எல்லையறற தனமையோடும், யாவறறையும் உட்படுத்துகின்ற முழுமையாக விளஙகுகிறவர் ஹரி. இவவாறு விளங்கும் முழுமையின கூறும, முழுமையின் இயல்புகளைப் பெறறு விளங்குதலில் வியப்பு இலலை. பூரணத்தினின்று பூரணதததைக் கழிததால் பூரணமே மிஞ்சும்; குறைவின்றி நிறைவோடு பூரணமாக விளங்கும்.

இறைவனாகிய ஹரி, உளதாம் தன்மை, வரம்பில் இன்பம், முற்றுணர்வு ஆகிய இயல்புகளைச் சிறபபாகப் பெற்றிருக்கின்ற நிலையில் எவ்வாறு எல்லைக்குட் படுகின்ற நிலையாகிய கிருஷ்ண வடிவத்தை ஏற்க இயலும்? ஒரு வடிவம் ஏற்கும்போது, எங்கும் பரவியிருத் தல் அல்லது முடிவற்ற தன்மை என்கின்ற இயல்புகளை இது இழப்பதாகும். இதனோடு உறுதியிலும், திறமையிலும் எல்லைக்குட்படுதலும் நேர்கின்றது. இவ்வாறு எழுப்பப் பெறுகின்ற தடைகட்கு அளிக்கப்பெறும் விடையாவது: ஆன்மீக இயல்புகள் இல்லாத பொருள்கட்கு ஆன்மீக இயல்புகளை உரித்தாக்குதலால் விளைகின்ற தவறுகளே தடைகட்குக் காரணம் ஆகும்.

பருப்பொருள்கள் சாத்வீக, இராசத, தாமர கூறுகளின் தொகுதிகள் ஆகும். இக்கூறுகள் ஒத்த அளவில் அமைவது இல்லை. மிகுந்தும், குறைந்தும் விளங்குகின்றன. இவ்வாறு, குண இயல்புகளில் வேறுபட அமைவதால் காலத்தாலும், இடத்தாலும் எல்லைக்குட் படுகின்ற இயல்புகள் உருவாகின்றன. பருப்பொருள் ஓர் இடத்து உளதானால் மற்றோர் இடதது இலதாகும். இறைவனது திருமேனிய தூய கலப்பற்ற சாத்வீகத்தால் ஆனது. பருப்பொருள்களோ கலப்புற்ற சாத்வீகத்தால ஆகியவைய்யாகும் (மிசிர சத்துவம்). இங்கு சாத்துவிகக்

கூறுகள தாமத இராசதக் கூறுகளோடு சேர்ந்து பருப் பொருள்கள் அமைவதற்குக காரணம் ஆகின்றன. பருப்பொருள் ஓர் இடதது உளளபோது, பிற இடங்களில் அதே சமயததில் இருததல இயலாது. ஆனால் ஆன்மீக வடிவமோ, சுதத சத்துவத்தால் அமைநதுள்ள காரணத் தால் யாண்டம நிறைதல இயலும்.

இறைவனது திருமேனி சுத்த சத்துவத்தால் அமைந்துள்ள ஆயத ஆதலால், பருப்பொருள்கள் ஓர் இடத்து இருக்குமபோது வேறு எங்கும் இருத்தல் இயலாது. இந்த எல்லைக்கு உடபடுகின்ற தன்மை இறைவனுக் கில்லை. இறைவன எலலைக்குட்பட்ட வடிவத்தைத் தெளிவுற நன்கு ஏற்பினும எல்லைக்குட்படாதவனே. இறைவன் எல்லைக்குட்பட்ட நிலையில் உள்ள வடிவததை ஏற்கலாம்; அவ்வடிவத்தில் எளிதில் நாம் இறைவனைத் தெரியலாம்; எல்லைக்குட்பட்ட வடிவம் ஏற்பினும் எங்கும் நிறைகினற நிலையினும் அவனைக் காண்கிறோம். இவ்வாறு. எல்லைக்குட்பட்டிருந்த போதிலும், எங்கும் நிறைத்தல ஆகிய பண்பினை உடையதாதல், சிந்திக்க வொண்ணாத இறை இயல்களுள் ஒன்றாக அமைகிறது.

இறைவனது திருமேனியினைப் பிரிந்து உணர்த்தும் இயலபுகள் சிந்திக்கவொண்ணாதன. திருமேனி குறித்த இயல்புகள் சிந்தித்தறகு இயலாத நிலையில் அமைவது போல இறைவனது சொரூபமும் அவனது பல்வேறு ஆற்றல்களும் சிந்திக்கவொண்ணாதவையாக அமைகின் றன. இறைவனது சொரூபத்திற்கும் அவனது பல்வகை ஆற்றல்களுக்கும் உள்ள உறவு சிந்திக்கவொண்ணாதது ஆகும். உறவு பேதாபேதம் ஆகும். சிந்திக்க வொண்ணாத பேதாபேதம் என்று இதைக் குறித்தல் வேண்டும். இறைவன் ஒரு நிலையில் தான் செலுத்தும் பல்வேறு ஆற்றல்களின்று வேறுபாடின்றி விளங்குகிறான். ஆனால் கடந்த நிலையிலும் இறைவன் விளங்குகிறான். கடந்த நிலையில் உள்ள இறைவனின் சுயரூபம் வெவ்வேறு வகைகளிலே

வெளிப்படுகின்றது. இவ்வாறு, வெளிபபடுவனவற்றுள் இறைவனது கடந்த நிலை முற்றிலும் வெளிபபடுவது இல்லை.

அளவை இயலில் விளங்கம மொழிகளின் துணையைக கொண்டு இறைவன தனது பலவேறு வெளிபபாடுகளில செலுத்தும் ஆற்றல்களைப் புரிநது கொள்ள இயலாது. பரம்பொருள என்ற நிலையில இறைவன்தான் செலுத்தும் ஆற்றலகள் யாவும் சுயரூப சகதி கொள்ளும் வெவ்வேறு வடிவஙகள் ஆகும்.

பரம்பொருளின் மிகவும் இன்றியமையாத சுயரூப சகதியானது மூன்று வகையான சித்சக்தியாக வெளிப் படுகின்றது. ஒளிபெறச் செய்தலும், அறிவு தரும் ஆற்றலாக வெளிப்படுகின்றது. அது ஜீவ சகதியாக அல்லது எல்லைக்குட்பட்ட ஆன்மாக்களாக, தான் தன்னையே பகுததுக்கொள்ளும அல்லது தன்னைததான் பெருக்கிக் கொள்ளும ஆறறலாக வெளிப்படுகின்றது; அது மாயா சகதியாக அல்லது இறைவன் பருப்பொருள்களாக உருக்கொண்டு வெளிப்படுகின்றது. உயிரியல் உலகில் பல பொருள்களாகவும், அறிவற்ற நிலையாகவும அமைவதற்குக் காரணமான ஆற்றலாக வெளிப்படு கின்றது.

இறைவனது சுயரூபம் உள் அமைவிலேயே ஆன்மீக இயல்புடையது. இவ்வியல்புடைய இறைவன் எவ்வாறு பருமை உலகிலே அறிவற்ற நிலையில் தோன்றுதல் இயலும்? எல்லையில்லாத ஆன்மீக நிலையில் உள்ள உள்பொருள் எண்ணிறந்த எலலைக்குட்படும் சிற்றுயிர்களாக எவ்வாறு பகுப்புக், கொள்ளுகின்றது? இவ்வாறு பகுப்புக கொள்வது இறைவனது முழுத்தன் மைக்கு மாறாகாதா?

பரம்பொருள் பகுப்புக் கொள் ளுதல் பல்வேறு உயிர்க்ளாகப் பொருள்களாகத் தோனறுதல், புரியாத

புதிராகும். அளவை நெறியிலே இத்தகைய புதிர்கட்கு விளக்கம் காணுதல் அரிதாகும். அளவை நெறியில் இயங்கும் சிந்தனையுள் இப்புதிர்கள் அடங்குவன அல்ல.

இறைவனது சுயரூப சக்தி யாது? மூவகைகளிலே சித் சக்தியாகவும், ஜீவ சக்தியாகவும், மாயா சக்தியாகவும தொழிற்படுகின்ற சுயரூப சக்தியின் தன்மை யாது? இறைவனது உண்மை நிலை, உளதாதல், முற்றுணர்வு, வரம்பில் இன்பம் ஆகியவற்றால் ஆனது, இவற்றை சத், சித், ஆனந்தம் என்று குறிக்கின்றோம்.

இறைவனது சுயரூப சக்தியானது ஓர் அனந்தத்தை உடையதாதல் வேண்டும். இறைவனது ஆற்றல் உளதாதலோடு உணர்வோடும் அமையக் காண்கிறோம். உளதாதலிலே ஓர் ஆனந்தம் இருத்தல் வேண்டும். சுயரூப மூவகைக் கூறுகட்கு ஏற்ப இறைவனது மூவகை இயல்புகள் அமைகின்றன. ஹிலாதினி (Hiladini) என்பது இறைவனது ஆனந்த வடிவத்தைக் குறிக்கும். சந்தீநீ (Sandhini), என்பது உளதாதலைக் குறிக்கும். சம்வித் என்பது முற்றுணர்வு அல்லது நுகர்வைக் குறிக்கும்.

சங்கரரைப் பின்பற்றுவோர் பரம்பொருளின் சுயரூப இலட்சணத்தைத் தடஸ்த்த லட்சணத்தில் இருந்து பிரித்து உணர்த்துகின்றனா. சுயரூப லட்சணமாவது உள் அமைவிலேயே இருப்பதாகும். தடஸ்த்த லட்சணம் புற இயல்பாகும். சச்சிதானந்தம் (உண்மை, உணர்வு, ஆனந்தம்) பரம்பொருளின் உண்மை இயல்பாகும்.

படைக்கப்பெற்ற உலகிற்கும், உயிர்கட்கும், பரம் பொருட்கும் உள்ள உறவு எவ்வகையில் அமைகிறது? 'பரம்பொருள் அவித்தையின் மூலம் படைப்போனாக, காப்போனாக, அழிப்போனாகத் தோன்றுகிறது, பொய்த் தோற்றமே, இது புற நிலையில் கட்டுறுவதுபோல தோன்றுவதாகும். இந்நிலையைத் தடஸ்த்த நிலை

என்பார்கள். சங்கரரைப் பின்பற்றுவோர்க்குப் பிரமத்தின் உணமைநிலை சத், சித், ஆனந்தம் என்கின்ற மூவகை இயல்புகளால விளக்கமுறுகின்றது.

தொடர்புடைய பண்புகள் பொய்த்தோற்ற முடையன். பிரமத்திற்குரியன அல்ல. சைதன்யரைப் பின்பற்றுவோர்க்கும், ஏனைய வைணவக் கருத்து முறைகளுக்கும் முற்றும் அனுபவ உலகம் பொய்த் தோற்றம் உடையதாகாது என்பர்.

பரம்பொருளை இருகூறுகட்கு உட்படுத்திச் சுயரூபம், தடஸ்த்தம் என்ற இரு நிலைகளைக் கொள்வது சைதன்யர் முதலிய வைணவர் கட்கு ஏற்புடையதாகாது. உலகினை உண்மையென ஏற்கிறபோது பிரமத்தைப் பாகுபடுத்தி அறிய வேண்டிய நிலையில் உள்ளது.

தடஸ்த்தம் அல்லது தொடர்பு உடைய பண்புகள் சொரூபம் கொள்ளும் வெளிப்பாட்டின் வெவ்வேறு கூறுகளேயாகும். சைதன்யருக்கும், அவரது கருத்து முறைக்கும், சித், சக்தி, ஜீவ சக்தி, மாயா சக்தி ஆகியவை பொய்த்தோற்றங்கள் அல்ல; பிரமத்தோடு பற்றின்றி அமைவன அல்ல. பொய்த்தோற்றங்கள் எனக்கொள் பவர்கள் சங்கரைப் பின்பற்றுவோர் ஆவர்.

இறைவனது சுயரூப சக்தினி ஹிலாதினி என்ற நிலையில் தன்னுள் இன்புறுவதாகவும், சந்தீநீ என்ற நிலையில் தன்னை உணர்வதாகவும், தன் உண்மை உடையதாகவும், சம்வித் என்ற நிலையில் தன்னை அறிவதாகவும் விளங்குவதே வெவ்வேறு வெளிப் பாடுகள் ஆகும்.

சித் சக்தி என்பது யாது? அதன் இயல்பு யாது? இறைவனது முக்கிய நிலையின் ஆற்றலாகச் சக்தி விளங்குகிறபோது அதன் இயல்பு யாது? இறைவனது சுயரூபம் சக்தி ஆனந்தம் என்ற மூவகை நிலையில்

விளங்குகிறபோது அதன் இயல்பு யாது? சித் அல்லது அறிவு என்பது இறைவனது ஆற்றல் ஆகும். இவ்வாற்றலின் துணைக்கொண்டு இறைவன் தனது சுயரூபத்தை உணர்கிறான். இறைவனது சுயரூபமாவது இருமையுள் ஒருமையாக விளங்கும் ஆன்மீக நிலையேயாகும்.

இறைவனது ஆற்றல் அதாவது கிருஷ்ணனுககும ராதைக்கும் உள்ள உறவு ஆகும். கிருஷ்ணனாகவும், ராதையாகவும் இருவேறு நிலைகளிலே விளங்கினாலும் ஒருமை உணர்வு உண்டு. கிருஷ்ணன் ராதையாகவும், ராதை கிருஷ்ணனாகவும் வேறுபாடின்றி விளங்கினும் கிருஷ்ணனையும், ராதையையும் பிரித்து உணர்தல் இயலும்.

ஹிலாதினி என்ற நிலையில் உணர்வானது ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இடையே அமையும் அன்பினை உணர்தல் ஆகும். (கிருஷ்ணன் ராதையிடத்துக் கொள்ளும் அன்பையும், ராதை கிருஷ்ணனிடத்துக் கொள்ளும் அன்பையும் ஒருங்கே உணர்த்துவது. சந்திநீ என்கின்ற நிலையில் இறைவனது ஆற்றல் இப்பரு உலகாக விளங்குகிறது. இதனை விருந்தாவனம் என்பர்.

சம்வித் என்கின்ற நிலையில் இருமை இடையே அமையும் ஒருமையை நுகர்தலால் உறுகின்ற இன்பமாகும். சித் சக்தியை, அந்தரங்க சக்தி என்று வழங்குவதும் உண்டு. மையத்தை நாடி ஒருமையுறச் செய்யும் ஆற்றலாக சித் சக்தி விளங்குகிறது.

பிரபஞ்ச முழுமையும், முழுமையான ஒன்றாக யாவும் ஒன்றிய ஒன்றாக உள்நோக்குவதாக அறியப் பெறுகிறது. முழுமையின் ஒவ்வொரு கூறும் முழுமையதாகவே, அறியப் பெறுகிறது. பரம்பொருளின் உண்மை நிலையில் வைத்து ஒவ்வொரு பொருளும் அறியப் பெறுகிறது.

அந்தரங்க ஆற்றல் என்பது பலவற்றை ஒன்றாகவும், ஒன்றைப் பலவாகவும் உள்உணர்வினாலே தெளிதல் எனக் குறிக்கலாம். ஆன்மாவை ஆன்மீக ஒருமையாக, நிலை பெற்றுள்ள வேறுபாடுகளை யெல்லாம் நீக்கி, புற நிலையில் பிரிவுறுவனயாவும், அக ஆன்மீக உறவு களாகவும்.

சித் சக்தி, மாயா சக்திக்கு நேர் மாறானதாகும். எனினும் மாயா சக்தி இறைவனின் சொரூபசக்தி கொள்கின்ற வடிவமேயாகும். சித் சக்தி இறைவனின் பரம்பொருள் தன்மையை விளக்குகிறது. இந்நிலையில் யாவற்றையும் உட்படுத்தும் ஆன்மீக ஒருமையாக விளங்குகிறது.

உள்ளனயாவும் ஒருமையுற்று விளங்குகின்ற ஓர் காட்சியினைத் தருவது சித் சக்தியாகும். சொரூப சக்தி சித் சக்தியாக ஒருமைக் காட்சியை வழங்குகிறது. சொரூப சக்தி மாயா சக்தியாக விளங்குகிறபொழுது இறை வனைப் பருமை உலகின் அறிவற்ற நிலையாக வெளிப் படுத்துகிறது. பருமை உலகின் அறிவற்ற நிலையாக வெளிப்படுந்துகிறது. பருமை உலகு அணுத் தன்மையுடை யதாக விளங்குவதும், புலப்பண்புகள் உடையதாலும் இறைவனாலேயே ஆகும். மாயா சக்தியை இறைவனது பகிரங்க சக்தி என விவரிக்கப் பெறுகிறது. இது விரைந்து செல்லும் ஆற்றலாகவும் குறிக்கப்பெறுகிறது. இறைவ னிடத்துத்தானே பிரிவுறுகின்ற சக்தியாகவும், அயலா கின்ற சக்தியாகவும் மாயா சக்தி அமைகிறது.

ஆன்மீக ஆற்றல் பருமை உலகிலே அறிவற்றதாக விளங்குதற்கும், மாயா சக்தியே காரணம், முழுமையுற்ற கூறு, அணுத்தன்மை அடைவதாலே பன்மையும், தனிமையும் உறுகின்றது. இவ்வாறு பல்குதற்குக் காரணம் மாயா சக்தியேயாகும். சித் சக்தியினுள் இறைவனது சொரூபமானது ஆன்மீக ஒருமையாக யாவற்றையும்

இணைத்தும், வேறுபாடுகளைக் கடந்தும் விளங்குகின்றது. இது, இறைவனது உள்ளார்ந்த இயல்பாகும்.

மாயா சக்தியினுள் சித் சக்தியின் எதிர் நிலையைக் காணலாம். தொகையான, முழுமையான நிலை முற்றிலும் மாறி, பகுப்பும், தனிமையும் உறுகிறது. சித் சக்தி உண்மையினை முழு வடிவிலே சிறிதும் மாறுபாடின்றி வழங்குகிறது. மயாயா சக்தி இதனை மாற்றிப் பிரிவையும், பகுப்பையும் தருகிறது. இது உண்மை வடிவத்தின் தலைகீழான சாயலேயாகும். மாயா சக்தியினால் தனிமை உறுவன, உள்ளவாறு தோன்றுதல் இல்லை; முழுமையுள் அடங்குவதாகத் தோன்றுவது இல்லை; பகுப்பற்றுள்ள ஒவ்வொரு பகுப்பும் முழுமையான பண்புகளை உடைய முழுமை போன்றதாகச் சிறப்புடையதாக விளங்கு கின்றது.

சித் சக்தி, பொருள் சார்பற்ற ஆன்மீக நிலையுள்ள உள்பொருள் என, பரம்பொருளை அறிகிறது. மாயா சக்தி உயிரற்ற பருமை உலகிலே அறிவற்ற ஒன்றாகப் பரம்பொருளை வெளிப்படுத்துகிறது. பருமை உலகிலே உணர்வானது என்றென்றும் மாயாசக்தியால். உறங்கியுள்ள நிலையில் வெளிப்படுகிறது.

## தனி ஆன்மா – ஜீவன்

ஒருபுறம் இறைவனது சித் சக்தி உண்மையினை முழுவடிவிலே வழங்குகிறது. மறுபுறம் இறைவனது மாயாசக்தி, உண்மையினைச் சிதைத்து வழங்குகிறது. சித் சக்திக்கும், மாயா சக்திக்கு இடையே ஜீவ சக்தி விளங்குகிறது. ஜீவ சக்தி என்பது பரம்பொருள் பல உயிர்களாக எல்லைக்குட்பட்ட நிலையில் விளங்குவ தாகும். ஜீவ சக்தியானது மாறுபடுகின்ற இரு காட்சிகட்கு; உண்மைக்காட்சி, அவ்வுண்மையின் சிதைவுக் காட்சி களுக்கு இடையே இடம் பெறுகிறது.

ஜீவ சக்தி, இரு வேறு இயல்பு உடையதாகும். ஒன்று ஆன்மீக இயல்பு; மற்றொன்று, ஆன்மீகச் சார்பு அற்றது. ஜீவ சக்தியைத் தடஸ்த்த சக்தி என்றும் கூறுவர். தடஸ்த்த சக்தி, இருவேறு நிலைகளைக் குறிப்பதாகும். ஒன்று, இம்மையைச் சார்ந்ததும் மற்றொன்று மறுமையைச் சார்ந்ததும், இம்மையையும், மறுமையையும் ஒருங்கே குறிப்பதாக ஜீவ சக்தி அமைவது. இவ்வுலகில் வாழ்பவன் எல்லைக்குட்பட்டவன்; ஆனால் எல்லைகடந்த நிலையை நாடுபவன். ஒரு ஆற்றின் கரையில் அமையும் நிலப்பகுதி ஆற்றையும் சேர்ந்து. அடுத்துள்ள நிலப்பகுதியையும் சேர்ந்தது. இதுபோல, ஜீவன் இறைவனுக்கும், இப்பிரபஞ்சத்திற்கும் இடையே அமைந்து இரண்டையும் இணைப்பதாகும். இறைவன் தன் உண்மை நிலையிலே, யாவற்றையும் உட்படுத்தும் ஆன்மீக உண்மையாக விளங்குகிறார். புற நிலையில் சிதைவுற்றுத் தொடர்பற்ற பல தனிப் பொருளாலாய பருமை உலகிலே அறிவற்ற நிலையில் உள்ளவர்போல் தோன்றுகிறார். இவ்வாறு, இரு வேறு நிலைகளில் விளங்குகின்ற இறைவனை இணைப்பதே ஜீவன்.

இறைவன், ஜீவசக்தியாக தோன்றுகிறபோது தான் எண்ணிறந்த ஆன்மீக 'மொனாடுகள்டு'களாக விளங்குகிறார். இவ்வாறு, பலவாகப் பெருகியுள்ள மொனாடுகள், இறைவனது சொரூபத்தோடு ஆன்ம நிலையோடு இணைந்துள்ளன. இவ்வாறு, பலவாகத் தோன்றுதலாலே பருமை உலகிலேயும், உள்ளார்ந்த நிலையில் இறைவன் தோன்று வேண்டுவதாகின்றது.

இறைவன் உண்மை நிலையிலே எல்லைகடந்ததாக, எங்கும் நிறைந்ததாக விளங்குகிறார். ஜீவனாக விளங்குகிறபொழுது எல்லைக்குட்படுகிறார். கட்டுறுகிறார், மௌனமாகிறார். மாயா சக்தியின் மயக்குகளால் சிதைவுறுகின்ற நிலையில், உள்ளார்ந்த இறைவனது ஆன்மீக உண்மையோடு ஜீவன் கொள்ளுகின்ற

உறவினாலே, மாயையின் மயக்குகளினின்று விடுதலை யுற்று விளங்கவும் இயலும்.

ஜீவ சக்தி என்பது இறைவனின் சொரூப சக்தியின் ஒருவகை வெளிப்பாடு; ஆதலால் இறைவனை ஒருவகை யில் வெளிப்படுத்தியே தீர வேண்டும். ஜீவசக்தியாக இருந்து வெளிப்படுத்துவது, ஓர் எல்லைக்குட்பட்ட நிலையை வழங்குவதாயினும் இறைவனது உண்மை, ஆனந்தம், உணர்வு ஆகிய நிலைகளால் ஆன இறைவனது சொரூபத்தை வெளிப்படுத்துவதேயாகும்.

## பந்தமும் விடுதலையும்

இறைவனுக்கும், ஜீவர்கட்கும் இடையே அமையும் உறவு யாது? இதனை எரியும் நெருப்பிற்கும், அதனின்று எழும் தீப்பொறிகட்கும் இடையே அமையும் உறவிற்கும் ஒப்பிட்டு உள்ளனர். எரிகின்ற நெருப்பானது தன்னிடத்து இருந்து பொருட்களைத் தோற்றுவிக்கிறது. இவ்வாறு தோன்றும் பொறிகள் சிறிய அளவிலே நெருப்பின் தன்மையினைப் பெற்றே விளங்குகின்றன. இதுபோல, இறைவன் முழுமையான ஆன்மீக உண்மையாகும். இறைவனிடமிருந்து தோன்றுகின்ற பொறிகள் ஜீவர் களாகும். ஜீவர்களாகிய பொறிகள் இறைவனின் முழுமையினை உடையவாதல் மேற்குறித்த உவமத்தால் விளங்குகின்றது.

ஜீவன், இறைவனினின்று வேறுபட்டும், இறைவ னோடு வேறுபடாதும், விளங்குகிறது. இறைவனது ஆன்மீக உண்மையை ஜீவர்கள் பெற்று விளங்கிற பொழுது வேறுபடுவது இல்லை. இறைவன் ஆன்மீக உண்மை, ஆனந்தம், உணர்வு ஆகியவற்றால் ஆனது.

ஜீவர்கள் வேறுபடுவது எதனால் எனின், இறைவனது உண்மைத் தன்மையைச் சிறிய அளவிலே, தன்மௌன நிலைக்கு ஏற்பப் பெற்று விளங்குவதாலேயே

ஆகும். இறைவன், யாவற்றையும் உட்படுத்தும் ஆன்மீக நிலையில் உள்ள, உள்பொருளாகும்; இறைவன் இந்நிலையில் மாயாதீனன் ஆகும; அதாவது மாயையை இயக்கியும், அதனை அடக்கியும் விளங்குபவர் என்பதாகும்.

இறைவன் தனது முழுமையான ஆன்மீக, நிலையிலே பகுப்பும், அறிவின்மையும் தோன்றச் செய்கின்றார். ஜீவன் இறைவனது உண்மைகளை மௌன நிலையிலே மிகச் சிறிய அளவிலே பெற்று விளங்குகிறது. இந்நிலையில் விளங்கும் பொழுது ஜீவன், மாயையினால் அடக்கியாளப் படுகிறது. இறைவனது மாயா சக்தி உண்மையிலேயே இருவேற்று வடிவங்களில் சொல்படுகிறது.

பிரதானம்: மாயை பிரதானமாக விளங்குகிற பொழுது அறிவற்ற, பருமை உலகின் தோற்றத்திற்குக் காரணம் ஆகிறது. அவித்தை: அறியாமையாகிய இவ் வாற்றல் ஜீவனைத் தனது உண்மை நிலையை மறக்கச் செய்கிறது; இறைவனது மீளா அடிமையாக ஆக்குகிறது; ஜீவனின் தனித்த நிலையில் தன் உண்மையோடு விளங்கச் செய்கிறது; இவ்வாறு விளங்கச் செய்வது பரம் பொருளுக்கு எதிராகத் தனித்த தன் வயம் உள்ள ஒரு நிலையிலே ஜீவன் இருப்பதாகக் கருதச் செய்வதாகும். இது அறியாமையாகும். உண்மை நிலையை மறக்கச் செய்வது மறைப்பு ஆகும்.

எல்லைக்குட்பட்ட ஆன்மா, தெய்வீகச் சார்பற்ற நிலையில் தன் நிலைகளை வற்புறுத்துவதற்குக் காரணம், அறியாமையே ஆகும். அறியாமையானது எல்லைக்குட் பட்ட ஆன்மாவிற்குப் பல பண்புகளை மிகைபட, ஏற்றிக் காணுகிறது. இவ்வாறு காணுவதால், துன்பமும், ஏமாற்றமும் விளையக் காண்கிறோம்.

பருமை உலகானது மாயா சக்தியின் விளைவு எனினும் (மாயா சக்தியின் சிதைக்கும் ஆற்றல்)

பொய்த்தோற்றம் ஆகாது. இறைவனது சொரூப சக்தியின் விளைவாக மாயை அமைவதால், சொரூப சக்தியின் உண்மையினை இவ்வுலகு பெறுகிறது. இவ்வுலகு சொரூப சக்தியின் உண்மையினைப் பங்கு கொள்ளினும், ஜீவனுக்கு உண்மையிலேயே மயக்கத்தை விளைக்கிறது.

ஜீவன்எல்லைக்குட்பட்ட மௌனத்தில் ஆழ்ந்து விளங்குகிறான். ஆதலால், உலகின் உண்மை நிலையினை அறிய இயலாதவன் ஆகின்றான். இவ்வுலகு பருமை நிலையிலே, உண்மையிலேயே ஜீவனிடத்துக் குழப்பத்தை விளைக்கிறது. இவ்வுலகு நிலைபேறுடையது அன்று. தன்னிலையிலும் இவ்வுலகு நிலையுதல் அற்றது. ஜீவர்களை மயக்கத்திற்கு உட்படுத்துவதிலும் நிலையாமை உடையதேயாகும்.

இப்பருமை உலகு ஜீவர்களைத் திருத்துகின்ற நிலையில் சிறப்புடையதேயாகும். ஜீவர்கள், மயக்கத்தினால் அடைகின்ற அகந்தை உணர்வினை மாற்றிக் கொள்ளத் தகுந்த இடமாக இவ்வுலகம் அமைகிறது.

இறைவனை மறந்து, அகந்தையினால் மயங்கி, பலப்பல ஏமாற்றங்களும், தோல்விகளும் உற்று, இம்மை வாழ்வின் துன்மைகளையெல்லாம் உணர்ந்து, தன் உண்மையை உணர்ந்து, தெய்வீக வழிநின்று, உய்வதற்கு வாய்ப்பான இடமாக, பயிற்சிக் களமாக இவ்வுலகு விளங்குகிறது.

தெய்வீக நெறி, தெய்வீகம் அல்லாத நெறி ஆகிய இருநெறிகள் பேசப்பெறுகின்றன. தெய்வீக நெறியாவது யாது? சைதன்யரைப் பின்பற்றுவோர், தெய்வீக நெறியினை ஜீவர்களது உண்மை நெறியென விளக்குகின்றனர். ஜீவர்கள் தமது உண்மை நிலையினை அறிந்து, பக்தி நெறி நின்று, தன்னை முற்றிலும் ஒப்படைத்த, அன்பின் நெகிழ்ச்சியாலே, தமது உண்மை நிலையினை உணரப் பெறுதலே தெய்வீக நெறியாகும்.

ஜீவன், தான் இறைவனிடத்து இருந்து தோன்றிய பொறியென உணர்தல் வேண்டும். என்றென்றும், இறைவனது அணை வழி நிற்க வேண்டும் என்பதை உணர்தல் வேண்டும்.

இம்மை நெறி, அல்லது தெய்வீகம் அல்லாத நெறி என்பது, ஜீவன் தனது போக்கிலே, தன்னையே வற்புறுத்திச் செல்லும் நெறியாகும். ஜீவன்தான் இறைவனுக்கு என்றென்றும், அடிமைப் பட்டுள்ளதை மறப்பதாகும். மறந்து தன்னைத் தனித்த நிலையில் பரம்பொருள் எனக் கருதிக் கொள்வதாகும். இவ்வாறு கருதுவது தனக்கெனச் சில வழிகள் உள எனக் கொள்வதாகும். இவ்வாறு தனது பொய்யான நிலையினை உணர்ந்து, அதனினின்றும் நீக்கிக்கொண்டு, உண்மை நிலையினை உணரத் தலைப்படுதல், ஆன்மீக ஒளியின் தோற்றமாகும்.

ஆன்மீக ஒளி என்பது துன்பம், தோல்வி, ஏமாற்றம் ஆகியவற்றைத் தருகின்ற இவ்வுலகமாகிய பள்ளியின் வாயிலாகப் பிழையினை உணர்கிறது. தனது உண்மை நிலையினை உணர்கின்ற விழிப்பினைப்பெறுகிறது. ஜீவன், தனக்கெனத் தனித்த நிலை என்பதையும், தான் தன்வயத்தனாகப் பரம்பொருள் நிலையில் இருப்பதாக எண்ணியது பிழையெனவும் உணர்கிறது.

இதற்குமாறாக ஜீவன், தான் இறைவனுக்கு என்றென்றும் தொழு பவனாகத் தொண்டாற்றக் கடமை உடையவன் என்பதை உணர்கிறது. பின்னர், ஏமாற்றத் திற்கும், தோல்விக்கும் காரணம்யாது எனச் சிந்தித்தல் நேர்கிறது. இச் சிந்தனையால் தோல்வியும், ஏமாற்றமும் ஜீவனைத் தனது எல்லைக்குட்பட்ட நிலையை அறியச் செய்கிறது. ஜீவன் பரம்பொருளாகிய முழுமையுள் அடிமை பூண்டுள்ள ஒன்றெனத் தன்னை உணர்கிறது. இவ்வுணர்வு ஜீவனது முழு வாழ்விலேயும் பரவுகிறது.

எண்ணம், உணர்ச்சி, செயல் யாவையும் அடிமை உறவு ஊடுருவப் பரம்பொருள் இடத்து ஜீவன் தன்னை ஒப்படைக்கின்றது. தொடக்கத்தில் கருத்து நிலையில் வளமற்ற, அறிவன் இசைவாக அமைந்தது, முடிவிலே தன்னையே அர்ப்பணிக்கின்ற நிலைக்கு உயர்கிறது. அறிவு, உணர்ச்சி, செயல் யாவும் பரம்பொருள் இடத்து அர்ப்பணிக்கப்பெறுகின்றன. ஜீவனது முன்னிலை களாகிய அறிவு, உணர்ச்சி, செயல்யாவும் வரையறை யின்றி முற்றிலும் ஒப்படைக்கப்பெறுகின்றன.

சைதன்யரைப் பின்பற்றுவோர் இவ்வாறு ஒப்படைக் கப்பெற்ற நிலையினைப் பக்தியின் உன்னத நிலையாகக் கருதுகின்றனர். ஜீவனது உள்ள உறுதியானது இறைவனது உள்ள உறுதிக்கு இடம் தருகின்றது. எல்லைக்குட்பட்ட பண்புகளாகிய சமூக, ஒழுக்கப் பண்புகள் யாவும் பரம்பபொருள் வாழ்வாகிய முழுமையிலே ஒன்று கின்றன; இம்முழுமை வாழ்வின் ஆட்சிக்கு உட்படு கின்றன.

இந்த உயரிய பக்தி நிலையை அடைந்த ஜீவனிடத்து ஒரு பெருமுயற்சி தோன்றுகிறது. ஜீவனது முழு வாழ்வும், முழுமையை நோக்கிய வாழ்வாக அமைகிறது. ஜீவன், அறிவு நிலையிலே சரண் புகுதலை மட்டும் கொண்ட தன்று. இந்நிலை, எதிர்மறை நிலையிலே தன்னை ஒன்றும் இல்லாத நிலையில் ஆக்கிக் கொள்ளுதல் ஆகும். ஆனால், ஆன்மீகப் பசி அல்லது கனன்று எழும் முழு அவல் பெற் றால் அன்றி இத்தாகம் தணிவுறாது. இதனை இராகாத்மிக பக்தி என்பர்.

இந்த பக்தியானது அறிவு நிலையிலே ஓர் புத்தொளி காணுகின்ற முயற்சியாக மட்டும் கொள்வ தற்கு இல்லை. வாழ்வின் பல்வேறு நிலைகளும் ஒவ்வொரு மூச்சும், முழுமை வாழ்வு பெற்று முழுமையினுள் என்றென்றும் அடிமை பூணும் பகுதியாக அமைய விரும்புவதாகும்.

இராகாத்மிக பக்தியின் முடிவு நிலை மகாபாவம் (Mahabhavam) ஆகும். இது ஜீவனிடத்து முன்பு கூறிய இராதை, கிருஷ்ணன் ஆகிய இருவரிடையே தோன்றும் தெய்வீக அன்பின் பெருக்கைக் குறிப்ப தாகும். ராதையின அன்பு கிருஷ்ணன் இடத்து நிறைவுறு கிறது. கிருஷ்ணன் அன்பு ராதையினிடத்து நிறைவுறு கிறது. ஒருவரது அன்பு மற்றொருவர் இன்றி நிறைவுறாது.

பக்தி என்பது ஜீவனின் ஆன்மீக வாழ்வாகும். ஜீவன் அடையத் தக்க உயரிய வாழ்வினை விளக்குவதாகும். ஜீவன் தனது உண்மை நிலையினை மறந்து அதற்கு ஏற்ப வாழ்ந்து பரம்பொருளை உணர்தல் பக்தியாகும். ஜீவன் தன்னை 'மொனாடாக' கருதுகிறது. இறைவனுக்கு என்றென்றும் அடிமை பூண்டு ஒழுகும் வாழ்வினை மேற் கொள்கிறது. இறைவனே உண்மையில் உள்ளவன் ஆவான். நிறையுடைவன் ஆவான். பக்தி என்பது ஜீவனுக்கு இயல்பிலே பொருந்துவதாகும். செயற்கை யிலே புதியதாக அமைவதன்று.

ஆன்மீகப் புனர்வாழ்வு குறித்துப் பக்தி என்பது சேர்க்கப்பெறுவது அன்று. அனைத்து ஜீவர்களும் இயல் பிலே பக்தர்கள் ஆவர். இறைவனிடத்து அன்பு பூண்டு ஒழுகும் ஏவலாளர் ஆவர். இறைவனின் சொரூபத்தின் கூறுகளாக ஜீவர்கள் அமைகின்றனர். ஜீவர்களிடத்து உள்ளார்ந்த நிலையில் இயல்பாகத் தோன்றும் பக்தி அல்லது ஈடுபாடு நித்திய முக்தர்கள் இடையே கட்டுறாத நிலையில் விளங்கும். ஆன்மாக்கள் இடையே எப்பொழு தும் விளங்குகின்றது.

வைகுந்தத்திலும் பிருந்தாவனத்திலும் இறைவனுக்கு இடைவிடாது குற்றேவல் செய்து அங்கேயே தங்கி வாழ்பவர் நித்திய முக்தர்கள் ஆவர். நித்திய முக்தர்கள் மாயாசக்தியைக் கடந்து தெய்வ உலகுகளிலே வாழ்வோர்

ஆவர். இவர்கள் மாயா சக்தியின் மயக்குகளிலே கட்டுறாது வாழ்பவர்கள். பந்தத்துட்பட்ட ஜீவர்கள் இவ்வுலகை நோக்கியவர்கள் ஆவர். இவர்கள் மாயையின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். ஆதலால் மாயையினால் மயக்குண்டு சிதறுவர்.

கட்டுண்ட ஜீவர்களிடத்து பக்தி ஒடுங்கியுள்ளது. வாழ்க்கையில் பல நுகர்வுகளின் வாயிலாகத் தம் தவறுகளை உணர்ந்து கடைசியாக ஆன்மீக நோக்கத்தை நிறைவேற்றும் தெய்வ நெறியினைக் காண்கின்றனர். இதை எய்தும்போது இயல்பிலே உள் அமைந்த பக்தி, தூக்கத்தினின்று எழுந்து ஜீவனது உண்மை நிலையை வெளிப்படுத்தி அவனை இறைவனது தொண்டனாக ஆக்குகிறது. அவன் தொண்டினால், பக்தியினால், அன்பினால், என்றும் இறைவனுடன் கட்டுண்டவனாகின்றான், உலகில் கட்டுண்ட ஆன்மாவிடத்து பக்தி எழுகின்றபோது அது தனது உண்மை நிலையை நினைவு கூர்கின்றது. மீண்டும் கண்டுகொள்கின்றதே அன்றி அது புதிதாகத் தேடிக்கொண்ட ஒரு பண்பு அன்று.

ஜீவர்கள் இருபெரும் பிரிவினராக, பந்தமுற்று நிலைஉலகில் கட்டுண்டோர்களாகவும்; என்றென்றும் விடுதலை அடைந்த நித்திய முக்தர்கள் ஆகவும் அமைவதோடு இவ்விரு சாரார்க்கும் இடையே, பந்தமுற்ற ஜீவர்களுள் உட்பிரிவுகள் உண்டு. இவ்வுட்பிரிவுகள் ஜீவர்களது ஆன்மீக முன்னேற்றத்தைப் பொறுத்தன. தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய மூன்று வகைகளை உலக உயிர்ப்பொருளிடை காணுகிறோம். மனிதரிடையேயும் இத்தகைய வேறுபாடுகள் உண்டு. அவ்வேறுபாடுகட்குக் காரணமாக அமைவன ஆன்மீக நிலையில் உள்ள வேறுபாடுகளேயாகும்.

சில ஆன்மாக்கள் நன்கு முன்னேறியுள்ளன; சில முன்னேறாது அடுத்தடுத்து படி நிலைகளில் உள்ளன. சில

மனிதாகள் உலகியல வாழவை தமது உண்மை நிலை யினை அறவே மறந்து வாழகின்றனர். இத்தகையோர் இறைவனுடைய தொண்டர்கள் எனபதை முறறிலும் மறந்தவாகள. மறறையோர் அன்பு நெறியை - பக்தி நெறியை ஆன்மீக நெறியாகக் கொணடு தாம பரம் பொருளின 'மொனாட'க கூறுகள தததுவம் அடையும இறுதி நிலைக்குப பொருநத வாழ்கினறனா.

சிற்றுயிர்கள் தாம எல்லைக்குடபட்டு விளங்குவதை என்றும மறவாது பரம்பொருளைச் சாாந்து வாழதலாகிய நிலையினை உணர்தலே பக்தியின் தொடககமாகும். பக்தி உணாவானது கருத்திலே முதிர்ந்து எழுமபோது உள் உணர்வு தோன்றுகிறது; தனி எண்ணம், ஆர்வம் நிறைந்த ஈடுபாடாகவும், அன்பின் பெருக்காகவும் பக்தியின் நெருங்கிய உறவாகவும் உருககொள்கிறது. உள்ளத்தியல கருததுப்படி பக்தியானது அறிவு நிலையில் தொடங்கி, முதிர்ந்து அக உணர்வாதலாகும். அது முதலிலே அறிதல் நிலையில் உள்ளது; பினனர் உணர்வாகிறது. இந்நிலையில் எண்ணம் மிகச் செறிந்து கெட்டியாகி வெளிப்பட்டுத் தோன்றும் அனுபவமாக மாறுகினறது.

ஜீவன், தான் இறைவனை என்றென்றும் அனுபவ மாக மாறுகின்றது. ஜீவன், தான் இறைவனை என்றென் றும் சார்ந்திருத்தலை உணர்தல் பகதியின் உட்பொருள் ஆகும். உள்ளத்தியல் நிலையில், பக்தி, அறிவின் உள்ளு ணர்வாக அமைவதாகும். இவ்வுணர்வு பக்தனின் முழு வாழ்வையுமே மாற்றி அமைக்கிறது; அவனது அறிவு நிலை, உணர்ச்சி நிலை, செயல் நிலை, யாவும் மாற்றத்திற்கு உட்படுகின்றன.

இறைவனுக்கு, ஜீவர்கட்கும், பொருள் உலகிற்கும, இடையே உள்ள உறவு சிந்திக்க வொண்ணாததாகும். சிந்தனைக்கெட்டா வேற்றுமை அற்ற இடத்து வேற்றுமை ஆக உள்ளது. அளவை மொழியிலே அறுதியிட்டுக

கூறவொண்ணாதது ஆகும. ஜீவ சக்தியும் மாயா சக்தியும் இறைவனின் சொரூப சகதியின் கூறுகளாகும். இறைவன் இவ்விரு சக்திகட்கு அயலாகப் பிறிதொரு ஆற்றல் உடையவன் ஆகிறான. இவவாற்றல் ஏனைய இரு ஆற்றல களையும் கடநததாகும; நிறைவுடையதாகும். மாற்றம் இல்லாததாகும.

இறைவன் பலவேறு ஆற்றல்களைச் செலுத்தி னாலும மாறறம் உறாதவன. இறைவன் பல்வேறு ஆறறல் களையும் செயல்படுத்தினாலும் தான் அவ்வாற்றல் களினூடே கலந்தும், கடந்தும், தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றான். வேறுபடாது வேற்றுமை அறற இடத்து வேற்றுமையாக - சிந்தனை கடந்த ஒன்றாக வெளிப் படுத்திக் கொள்கிறான். இறைவனது ஆற்றல்கள் சித் சக்தி, ஜீவ சக்தி, மாயா சக்தி எனும் மூன்றும தனித்தனியே செயல்படும்போதும் ஒன்றோடொன்று உறவு கொள்ளு கின்ற நிலையில் செயல்படும்போதும், சிந்தனை கடந்தே விளங்குகிறது.

இதனால் சைதன்யரைப் பின்பற்றுவோர், தமது கருத்து நிலையினை அசிந்திய பேதாபேதம், சிந்தனை கடந்து பேதாபேத உறவு எனறு விளக்குகின்றனர். சைதன்யர்களது அசிந்திய பேதாபேதத்தை பிரம விவர்த்த வாதத்தினின்றும், பிரம பரிணாம வாதத்தினின்றும் பிரித்து அறிய வேண்டும். விவர்த்த வாதம், பிரபஞ்சத்தை பொய்த்தோற்றம் என, அத்தியாசம் எனக்கொள்கிறது. இத்தோற்றம் என்றும் உள்ள பிரமமாகிய முழு முதற் பொருளிடத்துத் தோன்றுகிறது.


பிரபஞ்சம் பிரமததின பொய்த்தோற்றம் ஆகும். பிரமம், பிரபஞ்சமாகத் தோன்றினும் நிர்விகாரியாவான். சைதன்யரைப் பின் பற்றுவோர் பிரபஞ்சத்தை உண்மை எனக் கொள்கின் றனர். ஜீவன் அல்லது சிற்றுயிரைப் பிரபஞ்சம் தனக்கும பரம்பொருளுக்கும் உள்ள

சிந்தனைக்கெட்டாத பேதா பேத உறவால் திருத்தி நெறிப்படுத்துகிறது எனக் கொள் கின்றனர்.

பிரம பரிணாம வாதம் பிரபஞ்சத்தை உண்மையெனக் கொள்கிறது. பிரபஞ்சம் பிரமத்தின் பரிணாமம் எனக் கருதுகிறது. பிரமப் பொருளில் மாற்றம் ஏற்படுவதையே பரிணாமம் எனக் கருதுகிறது. பிரமப் பொருளில் மாற்றம் ஏற்படுவதையே பரிணாமம் எனக் குறிக்கப் பெறுகிறது.

பிரமப் பரிணாம வாதத்திற்கு எதிராகச் சைதன்யரைப் பின்பற்றுவோர் சக்தி பரிணாம வாதத்தைத் தருகின்றனர்; சிற்றுயிர்கள், எல்லைக்குட்பட்ட உயிர்கள், பிரமத்தின் பரிணாமங்கள் அல்ல; பிரமத்தின் அசிந்திய சக்தியின் மாற்றமாகும். எனக் கொள்கின்றனர். பிரமத்தின் சொரூப சக்தி சித் சக்தி எனவும், ஜீவ சக்தி எனவும், மாயா சக்தி எனவும் தொழிற்படுகின்றன. இவ்வாற்றல்களின் தொழிற்பாடு இன்னது என வரையறை செய்யவொண்ணாததாக விளங்குகிறது. இக்கருத்து, பிரமத்தின் முழுமைத் தன்மையை அதன் கடந்த நிலையில் காப்பதாகும். ஆயினும் சிந்திக்க வொண்ணாத பேதாபேத முறையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களைப் பெற்றுப் பிரமத்தை உலகத்தோடு ஒன்றாவதாகவும் இது கருதுகின்றது.

*



புலவர் த.கோ. அவர்கள்தான் வாரம் தவறாமல் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அவருக்கு ஆயிரம் வேலைகள் இருந்தபோதிலும் திருக்குறள் வகுப்பு, கம்பராமாயணப் பாடல்கள் உரையோடு படித்தல், சங்க இலக்கியங்களை சீர் பிரித்து அன்வயப்படுத்தி எப்படி உரைகளைப் படிப்பது என்று 25 ஆண்டுகளுக்கு மேல் எனக்கு ஆசானாக அமைந்து வழிகாட்டியதை நினைந்து நினைந்து உருகுகின்றேன்.

அரசியலில் தீவிரவாதம் போல தமிழ் எழுச்சியின் தீவிரவாதியாகவே தன்னை எப்போதும் அமைத்துக் கொண்டவர் புலவர் கோவேந்தன்.

டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்